

சோழ நிலா
மு.மேத்தா
கவிதா வெளியீடு

# சோழ நிலா

கவிஞர் மு. மேத்தா

ஆனந்த விகடன் பொன்விழா இலக்கியப் போட்டியில் முதற் பரிசு பெற்ற சரித்திர நாவல்

# படையல்

தந்தைக்கும்
தாய்க்கும்
அவர்கள்
என்மீது
வைத்துள்ள
தளராத
நம்பிக்கைகளுக்கும்

# வாழ்த்துரை

## தமிழர்களின் இதய வீடுகளில்
## வீற்றிருக்கும் விகடனுக்கு
## பொன்விழாக் கண்டு
## புகழ் கோபுரம் கட்டிய
## ஆனந்தவிகடன் ஆசிரியர்
## திரு. எஸ். பாலசுப்ரமணியம்
## அவர்கள்

சென்ற ஆண்டு, விகடன் பொன்விழா சரித்திர நாவல் போட்டியில் நடுவர்களால் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது திரு. மு. மேத்தாவின் 'சோழ நிலா.' சரித்திரக் கதைகளிலும் சஸ்பென்ஸ் வைக்க முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில் விரைந் தோடும் நீரோடை போல விறுவிறுப்பாகத் தன் கை வண்ணத்தை அந்த நாவலில் காட்டியிருந்தார் மேத்தா. குறிப்பாகப் பெருமான் நம்பிப் பல்லவராயர் பாத்திரத்தை அவர் சித்தரித்திருந்தவிதம் நாவலின் சிறப்பான அம்சம். வாசகர்களிடையே சிறப்பிடம் பெற்ற இந்த நாவலைப் புத்தக வடிவில் முழுசாகப் படிக்கும் போது சுவை கூடும் என்பதில் ஐயமில்லை. திரு. மேத்தாவிற்கு என் மனப்பூர்வமான வாழ்த்துகள்.

சென்னை – 2 தங்கள் அன்புள்ள,
18.12.1981 எஸ். பாலசுப்ரமணியன்

# தீர்ப்புரைகள்

ஆனந்த விகடனின் பொன்விழாவில் சரித்திர நாவல் போட்டிக்கு நீதிபதிகளாக இருந்து, தமிழ் இலக்கிய வானத்தில் இந்த நிலாவை உலா வரச் செய்த பெருந்தகையாளர்கள் – தங்கள் பேனா உதடுகளால் பேசுகிறார்கள்..

## தமிழ் உரைநடைக்குக் கவிதைக் கண் கொடுத்த டாக்டர் கலைஞர் அவர்கள்

பொன் விழா கண்ட ஆனந்தவிகடன் சரித்திரத் தொடர்கதைப் போட்டியொன்றில் என்னையும் நடுவராக ஆக்கி நட்சத்திரங்களுக்கு மத்தியில் ஒரு நிலாவைக் காட்டச் சொன்னது! அதுவென்ன கடினமான காரியமா? நடுவர்களாக இருந்த நாங்கள் எளிதாகப் பெற்ற வெற்றியின் அடையாளம்தான் இந்த சோழ நிலா!

வரலாற்றுக் கதை வானில் சோழ நிலாவைப் பவனிவரச் செய்திருப்பவர் தமிழர்களின் உள்ளங்களில் தனது திருப்புமுனைக் கவிதைகளின் வாயிலாக ஏற்கனவே இடம் பெற்றிருக்கும் நண்பர் மு. மேத்தா அவர்களாவர்.

பனிமலர்ப் பாடல்களையும்- எரிமலைக் கவிதைகளையும்- கவிஞர் மேத்தா தமிழ் உலகிற்கு வழங்கியவர்.

ஆழமான கருத்துகள்- அற்புதமான கற்பனைகள் அவரது கவிதைத் தோட்டத்துப் பூக்களாக மணம் வீசிக் கொண்டிருப்பதை நான் பலமுறை பாராட்டியிருக்கிறேன்.

எதையும் புதிய கோணத்தில்- முற்போக்குச் சிந்தனையோடு- அணுகுவதில் அவர் வல்லவர்.

கவிதையில் அவர் பெற்றுள்ள வெற்றியினைப் போலவே இந்த வரலாற்றுக் கதையிலும் அவர் வெற்றி பெற்றுள்ளார்.

வரலாற்றுத் துளிகளை இழையாக மாற்றி கதைக் கேற்ற கற்பனை மணிகளைக் கோத்திடுவது என்பது எல்லார்க்கும் எளிதில் கைகூடும் கலையல்ல!

சிலரே, அந்தச் சோதனையில் வெற்றியீட்டியுள்ளனர். அவர்களில் ஒருவராகத் திகழ்கிறார் கவிஞர் மேத்தா. அவரது எழுத்தாற்றலை இந்தச் சோழ நிலாவின் வெளிச்சத்திலே நன்கு காண முடிகிறது.

சோழர் புகழ், கடல் கடந்தும் கொடிகட்டிப் பறந்தது! சோழ நிலாவின் புகழும்

அவ்வாறே உலகம் முழுதும் பரவிக் கிடக்கும் தமிழர்களின் மத்தியிலே நிலைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

பந்தயத் திடலுக்கு இந்தக் கதை வந்த போதே முழுவதும் படித்து முடித்துவிட்டேன்.

தேர்ந்தெடுத்தவர்களில் நானும் ஒருவன் என்பதால் கதையின் சிறப்புக்களை விரிவாகச் சொல்ல வேண்டியதில்லையல்லவா?

உங்கள் கையில் வைரமணி! அது எப்படியெல்லாம் ஒளிகொட்டும் என்பது நான் கூறாமலே நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

வாழ்க மேத்தா!

வளர்க அவர் தமிழ்த் தொண்டு!!

அன்புள்ள

மு.கருணாநிதி

## தமிழ் நாவலுக்கு ஞான பீடம் தந்த அகிலன் அவர்கள்

வெறும் வரலாற்று நிகழ்ச்சிகளை அப்படியே சொல்லிவிட்டால் அது வரலாற்று நாவலாகாது. அவ்வாறே வரலாற்று நாவல் என்ற பெயரில் வரலாற்றைப் புறக்கணித்துவிட்டு, முற்றிலும் கற்பனைக் கதையைப் படைத்தாலும் அது எடுபடாது. எந்த அளவுக்கு வரலாற்று ஆதாரங்களைத் தேடிப் பிடித்துப் பயன்படுத்திக் கொள்வது, எந்த அளவுக்குக் கற்பனையைப் படரவிடுவது என்ற ரசவாத வித்தை ஒரு வரலாற்று நாவலாசிரியருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

வரலாற்றுப் பாத்திரங்களைக் கதை மாந்தர்களாக்கும் போது, அந்தப் பாத்திரங்களுக்கு இயைந்த பண்புகளுடன் அவர்களை உலவவிட வேண்டும். அவர்களது நினைப்பு, பேச்சு, செயல் இவையாவும் கூடுமானவரை அவர்கள் காலத்துக்கும் தன்மைக்கும் ஏற்றவையாக இருக்க வேண்டும். “அந்தக் காலத்தில் இவர்கள் இப்படித்தான் நடந்து கொண்டிருப்பார்கள்” என்று கதை படிப்போர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கவிஞர் மு.மேத்தாவின் இந்த நாவலில் வரலாற்றின் அடித்தளமும் இருக்கிறது; சிறப்பான கதை அம்சத்துக்கு வேண்டிய கற்பனையும் இருக்கிறது. வரலாற்று நிகழ்ச்சிகளையும் கற்பனை நிகழ்ச்சிகளையும் வரலாற்று மாந்தர்களையும் கற்பனை மாந்தர்களையும் ஆசிரியர் அளவோடு பின்னிப் பிணைத்திருக்கிறார்.

திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பிப் பல்லவராயரையே நாம் இதன் கதைத் தலைவர் என்று கூறலாம். அவரும் மற்றும் கங்க நாட்டரசன் ஆகவமல்லன், மோகனசுந்தரி, இலங்காபுரி தண்டநாயகன், ஜெகத்விஜயன் முதலியோரும் அவரவர்க்குரிய தனிப் பண்புகளோடு விளங்குகிறார்கள்.

ஆசிரியருடைய நடை – உயிர்த் துடிப்புள்ள கவிதை நடை. பாத்திரங்களிடையே நடைபெறும் உரையாடல்கள் – அளவில் மிகாமல் கதையை நடத்திச் செல்லக் கூடியவையாக இருக்கின்றன. கதை அமைப்பு – தொடர்ந்து படிக்கும் ஆவலைத் தூண்டும் வகையில் அமைந்திருக்கிறது.

எனவேதான் 'ஆனந்தவிகடன்' பொன் விழாப் போட்டிக்கு வந்த வரலாற்று நாவல்களில் இதைச் சிறந்ததெனத் தேர்ந்தெடுத்தோம். தேர்ந்தெடுத்த போது இதன் ஆசிரியர் யார் என்பது எங்களுக்குத் தெரியாது. கருத்து வேறுபாடின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற நாவல் இது.

கவிஞரான ஆசிரியர் இதன் வாயிலாக நாவலாசிரியராகவும் வெளிப்படுகிறார். இவருடைய எழுத்தாற்றல் மேன்மேலும் வளர வாழ்த்துகிறேன்.

அகில இந்திய வானொலி, அகிலன்
சென்னை – 4

# தமிழுக்கு இலக்கிய 'தீபம்' ஏந்தி வைத்த நா.பா. அவர்கள்

கண்ணீர்ப்பூக்கள் கவிஞர் மு.மேத்தாவின் சோழ நிலா இப்போது நூல் வடிவில் மலர்கிறது. ஆனந்தவிகடன் பொன்விழா இலக்கியப் போட்டிக்கு வந்திருந்த வரலாற்று நாவல்களில் நீதிபதிகளாகிய நாங்கள் மூவரும் (நான், கலைஞர், அகிலன்) விகடன் ஆசிரியரும் ஒருமித்த கருத்துடன் இந்த நாவலையே பரிசுக்குத் தேர்ந்தெடுத்தோம் என்றால் இதன் சிறப்பைப் பற்றித் தனியே சொல்ல வேண்டுவதில்லை.

மேத்தாவின் கவிதைத் திறன் உரையாடலிலும் தனி நடையிலும் அங்கங்கே பளிச்சிடுவதைக் காணலாம். உயர்தரமான செண்ட் பாட்டிலைத் தொட்டுவிட்டுப் பின் எதைத் தொட்டாலும் கையிலிருக்கும் வாசனை அதையும் பற்றி மணக்க வைப்பதைப் போலக் கவிதையின் நறுமணம் உரைநடையிலும் பரவியிருப்பது இந்நாவலின் பெருமை ஆகும்.

மேத்தாவுக்கு ஏற்கெனவே இருக்கும் இரசிகர்களின் எண்ணிக்கையை இந்நாவல் அதிகப்படுத்தவே செய்யும். கவிதை மணக்கும் நடையின் துணையைக் கொண்டு ஒரு வரலாற்றுக் கதையை எப்படிப் பரிமளிக்கச் செய்ய முடியும் என்பதற்கு இக்கதை சரியான எடுத்துக்காட்டாயிருக்கும்.

'கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது' என்று இந்த நாவல் தொடங்குகிறது. தமிழில் வெளிவந்துள்ள நாவல்களின் தொகையில் நடைக்காகக் கிழக்கு வெளுக்கத் தொடங்கிய கதை இது. பாராட்டுக்கள்.

"இலட்சியங்களோடு புறப்படுகிற எந்த மனிதனையும் கடமைகள் தொடர்ந்து அழைத்துக் கொண்டுதான் இருக்கும்" —என்று நாவல் நிறைகிறது.

ஆம்; சில நல்ல இலட்சியங்களோடு கதையுலகிற்குப் புறப்பட்டு வந்து, பரிசும் பாராட்டும் பெற்று முன்னேறிவரும் நண்பர் மேத்தாவுக்கும் கடமைகள் காத்திருக்கின்றன. அவற்றை நிறைவேற்றுவதற்கான அழைப்புகளும் கூடக் காத்திருக்கின்றன.

தீபம் – இலக்கியக் குடும்பத்தில் வளர்ந்து உருவான அவரை வாழ்த்தி மகிழ்கிறேன். இலக்கிய உலகின் நம்பிக்கைகளையும், அவருடைய தன்னம்பிக்கைகளையும் சேர்த்தே கொண்டாடி மகிழ வேண்டும் என்பது என் விருப்பம்.

சென்னை – 2 தீபம் நா. பார்த்தசாரதி
15–4–1982

# நெஞ்சில் நிற்கும் நினைவுகள்

## மு. மேத்தா

### (முதற் பதிப்பின் முன்னுரை)

என் இலக்கிய வாழ்க்கையில் ஓர் இனிய திருப்பத்தை ஏற்படுத்திய ஆனந்தவிகடனுக்கும் அதன் ஆசிரியர் திரு. எஸ். பாலசுப்ரமணியம் அவர்கள் என் மீது காட்டிவரும் அன்பிற்கும்

நடுவர்களாக இருந்து இந்த நாவலைத் தேர்ந்தெடுத்ததுடன், இந்நூலுக்கு அழகிய தம்முடைய அணிந்துரைகளையும் நல்கி, என்னையும் என் எழுத்துக்களையும் தங்கள் கவிதை நயம் செறிந்த சொற்களால் கௌரவித்திருக்கும் இலக்கிய நீதிபதிகள் டாக்டர் கலைஞர், திரு. அகிலன், தீபம் நா. பா. ஆகியோருக்கும்

இந்த நாவலை எழுதுவதற்குத் துணையாகவும் தூண்டுகோலாகவும் இருந்ததோடு தேவையான வசதிகளையும் செய்து கொடுத்த ராசிபுரம், சேலம், செங்கோட்டை, சிவகெங்கை, திருவனந்தபுரம் (களியக்காவிளை), வால்பாறை – உபாசி, தர்மபுரி, சென்னை, பெரியகுளம் நகரங்களைச் சேர்ந்த என் அன்பான இதயங்களுக்கும்

என் புதுமைக் கவிதைகளைத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தி எனக்குப் புகழ் சேர்த்துத் தந்த 'தீபம்' இலக்கிய இதழிற்கும், என்னோடு சேர்ந்து சிறகடித்த 'வானம்பாடி'களுக்கும்

இந்த நாவல் தொடர்கதையாக வந்து கொண்டிருந்த போது – ஒவ்வொரு வாரமும் என் கதாபாத்திரங்களுக்கு உருக்கொடுத்து, உயிரோவியம் தீட்டி ஏராளமான வாசகர்களின் இதயங்களைக் கவர்ந்த ஓவியர் லதா அவர்களுக்கும்

ஆனந்தவிகடன் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த அன்பு நெஞ்சங்களுக்கும்

கல்வெட்டுகளிலும் சரித்திரத்திலும் தம்மைக் கரைத்துக் கொண்டு, இந்த நாவலுக்கான ஆதாரப் புதையல்களை – ஏற்கனவே தங்கள் எழுத்து மேடைகளில் எடுத்து வைத்திருந்த தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், T.A.ராஜரத்தினம் பிள்ளை (Tamil History of Ceylon), நீலகண்ட சாஸ்திரியார் போன்ற ஆய்வுலகப் பெருந்தகைகளின் ஆராய்ச்சிப் பணிக்கும்

அவ்வப்போது – வரலாற்றுக் குறிப்புகளையும், தன்னுடைய அரிய ஆராய்ச்சிப் புத்தகங்களையும் அனுப்பியுதவிய கும்பகோணத்துச் சகோதரர் வரலாற்றறிஞர் N.சேதுராமன் அவர்களுக்கும்

வேண்டாம் வேண்டாம் – என்று நான் மறுத்த போதும், பரிசு பெற்ற இந்த நாவலுக்கும் எனக்கும் பாராட்டு விழா நடத்திய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறை, கோயம்புத்தூர், சேலம், வேலூர், புதுக்கோட்டை இலக்கிய இதயங்களுக்கும்

தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும், கடல் கடந்த நாடுகளிலுமிருந்து ஆயிரக்கணக்கான கடிதங்களாலும், தந்திகளாலும், அன்பு மிகுந்த உபசரிப்புகளாலும் என் ஒவ்வொரு நாளையும் விழா நாளாக்கி என்னுடைய எழுத்துப் பணியை உற்சாகப்படுத்திய உற்சாகப்படுத்தி வரும் தமிழ் அன்பர்களுக்கும், இனிய நண்பர்களுக்கும்

என் இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வார்த்தைகளால் மட்டுமல்ல –

வாழ்க்கையாலும்!

அன்புடன்,
மு.மேத்தா.

# நாவல் பிறந்த கதை

அன்புள்ளம் கொண்டோரே!

வணக்கம்.

தேசப்பிதாவுக்கு ஓர் ஆவேசமான அஞ்சலி செலுத்திய தெருப் பாடகனாக இலக்கிய உலகின் கவனத்தை ஈர்த்தவன் நான்.

இங்கே—

வரலாற்றின் தலைவன் ஒருவனுக்கு வந்தனம் செலுத்துகிற சரித்திரக் கதாசிரியனாக உங்களைச் சந்திக்கிறேன்.

ஏழை எளிய இதயங்களின் எண்ணப் பெருமூச்சுகளைத் தூக்கிக் கொண்டு ஒரு சோகச் சுமைதாங்கியாய் வலம் வந்த என்னுடைய சொற்கள்—

இங்கே— பட்டுத் திரைகள் கட்டப்பட்ட பல்லக்கிலும் தேரிலும் பவனி வருவதைப் பார்க்கிறீர்கள்.

புதுக் கவிதைகள் எழுதுகிறவனாக மட்டுமே என்னைப் பலரும் அறிவார்கள். நான் கதைகளும் எழுதுகிறவன் என்று வெகுசிலரே அறிந்திருக்கக் கூடும். அதுவும் சரித்திர நாவல் எழுதுகிறவனாக என்னைச் சந்திக்கிற போது, விழிகள் பல வியப்பில் விரிவதை நான் அனுமானிக்க முடிகிறது.

சம காலத்தைப் பற்றிய விமரிசனங்களில் மிகுதியும் ஈடுபடுவதால், ஒரு கவிஞனுக்குச் சரித்திரத்தோடு சம்பந்தமில்லாமல் போய்விடுமா? மனித வாழ்க்கையே ஒரு சரித்திரம்தானே!

சொல்லப் போனால்—

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு சரித்திரம் உண்டு— அவன் எத்தனை சாதாரணமானவனாய் இருந்தாலும். 'ஹீரோ' என்று ஒரு தனி ஜாதி கிடையாது. அவனவனுடைய வாழ்க்கையில் அவனவன் ஹீரோதான்.

&&&

சரித்திர நாவல் ஒன்று எழுத வேண்டும் என்ற எண்ணத்துடன் வரலாற்றுப் புத்தக நதிகளில் நான் நீந்திய போது, அவை மெல்ல மெல்ல கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டை நோக்கி என்னை இழுத்துச் சென்றன.

அங்கே—

சோழ, பாண்டிய, சிங்கள வரலாற்றுக் கடல்கள் மூன்றும் சங்கமித்துக் கொள்ளும் ஒரு கன்னியாகுமரியைக் கண்டேன்.

கதையை உருவாக்க வேண்டிய அவசியமே இல்லாமல் அங்கு சரித்திரமே ஒரு கதையாக இருந்தது.

கதை சரித்திரமாக இருப்பதைவிட, சரித்திரமே கதையாக இருப்பது சுவையானதுதான்.

உண்மை அழகாகவும் இருப்பது உன்னதமல்லவா?

&&&

பாண்டிய மண்டலத்தின் முழுமையான ஆட்சியுரிமை யாருக்குரியதென்று பாண்டிய மன்னர் இருவர் தமக்குள் மோதிக் கொண்டனர்.

ஈழத்துப் படைத்தலைவர் இருவர் இடையே குறுக்கிட்டுத் தமிழ் நிலத்துக்கே நடுக்கத்தை நன்கொடையாய் வழங்கினர்.

மதுரையின் சிம்மாசனம் ஓர் இசை நாற்காலியாய் (Musical chair) இருந்தது.

குலசேகர பாண்டியனும் வீரபாண்டியனும் மாறி மாறி அரச பீடத்தில் அமர்ந்து கொண்டிருந்தனர்.

பாண்டிய நாட்டுக்கு அப்போது ஒரு பரிதாப நிலைமை. அரசர் யார் என்பதை அவ்வப்போது அறிக்கைப் பலகையைப் பார்த்து அறிந்து கொள்ள வேண்டிய அவலச் சூழல்.

இலங்காபுரித் தண்டநாயகன், ஜெகத்விஜயத் தண்டநாயகன் என்ற பெயர்களே தமிழ் நிலத்தைப் பெரும் புயலாய்த் தாக்கின.

சொந்தக் குழப்பங்களெனும் சூறாவளியில் சிக்கியிருந்த சோழ நாட்டுக்கு— இந்தப் புதிய புயலையும் விரட்டியடிக்க வேண்டிய பொறுப்பு வந்து சேர்ந்தது.

இணையற்ற ராஜதந்திரமும், ஈடற்ற வீரமும், இதயமெலாம் தேச பக்தியும் நிறைந்த சோழர் படைத்தலைவன்— திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பிப் பல்லவராயன் என் எதிரே தோன்றினான்.

சோழகுல தீபமாய்— ஆத்திமாலையின் ஆத்மாவாய்— காவிரியின் காவலனாய் விளங்கிய அந்தச் சேனை நாயகனுக்கு அரசர்கள்

யாரும் நினைவு மண்டபம் கட்டவில்லை. மாறாக, அவன்தான், தன் சொந்த ஊரில் தன்னுடைய மன்னனின் நினைவாக ஒரு மண்டபம் கட்டினான்.

சரித்திரத்தின் தாள்களில் நம் விழிகளில் படாமல் இத்தகைய வீர விளக்குகள் எவ்வளவோ விழித்துக் கொண்டிருக்கின்றன.

பல்லவராயனைப் பற்றி நானொன்றும் பாராட்ட வேண்டியதில்லை.

விளம்பரத்துக்குத்தான் வெளிச்சம் போட வேண்டும். வெளிச்சத்துக்கு யாரும் விளம்பரம் போட வேண்டியதில்லை.

&&&

ஈழத்தின் மாதண்ட நாயகர்கள் இலங்காபுரித் தண்டநாயகனும், ஜெகத்விஜயனும் அன்னை பூமியில் அத்துமீறல் நடத்தியவர்களாய் இருந்த போதும், அம்ஜத்கானைப் போல் கவர்ச்சி வில்லன்களாகவே காட்சியளிக்கின்றனர்.

அரச பதவியை ஒரு முள்முடியாய் அணிந்திருந்த இராசாதிராசன்—

சொந்த நலனுக்காக எந்த நலனையும் விலை கூறத் தயாராயிருக்கும் ஆகவமல்லன்—

தேகத்தைக் களங்கப்படுத்திக் கொண்ட போதும் தன்னுடைய தேசத்தைக் களங்கப்படாமல் காப்பாற்ற வேண்டுமென்பதில் தீவிரம் காட்டிய ஆடல் அழகி மோகனசுந்தரி—

விளையாட்டுப் பிள்ளையாய் வீரபாண்டியன்—

தேரில் வந்த தேவதை தியாகவல்லி—

அந்தத் தென்றலைத் தீண்டியதால் புயலோடு போராடுவதற்கும் புது வலிமை பெற்ற விக்கிரமன்—

சோழ குலத்தின் சூரிய தீபமாய்ச் சுடர்விடுவதற்காகக் குடத்திலிட்ட விளக்காய்க் காத்துக் கொண்டிருந்த குலோத்துங்கன்—

இப்படி இன்னும் பலர்—

&&&

காலத்தின் யாத்திரையில் காணாமற் போய்விடாத இந்தக் கதாபாத்திரங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதில் நான் ஆனந்தமடைகிறேன்.

பத்து வருடங்களுக்கு முன் ‘கிழித்த கோடு’ என்ற என் சிறுகதைக்கு ஆயிரம் ரூபாய் முதற் பரிசளித்துப் பாராட்டிய

ஆனந்தவிகடனின் பொன் விழாக் கொண்டாட்டத்தில் இன்னொரு பரிசினை எனக்குப் பெற்றுத் தந்த என் கதாபாத்திரங்களும் கலந்து கொண்டு கௌரவிக்கிறார்கள்.

இந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக இவர்கள் புரவியிலும் பல்லக்கிலும் தேரிலும் ஏறிப் புறப்பட்டு வருகிறார்கள்.

கடந்த காலத்தின் கம்பீரமான கற்பனைகளாவது நிகழ்காலத்தில் நம்மை நிமிர்ந்து நிற்க வைக்கட்டும்!

சென்னை
29–10–1980

அன்புடன்
மு. மேத்தா

(ஆனந்தவிகடன் 9 – 11–1980 பொன்விழாச் சிறப்பிதழில் மு.மேத்தா எழுதிய முன்னுரை)

# 01. புரவி முற்றுகை!

கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது. பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடையில் தன் பயணத்தை நடத்திக் கொண்டிருந்த வெள்ளாறு, ஆற்றுப்படைப் பாடலைப் போல் நீண்டு நீண்டு போய்க் கொண்டிருந்தது.

அழகு நிறைந்த அந்த ஆற்றின் வடக்குப் பகுதியில் சோழ நாடும், தெற்குப் பகுதியில் பாண்டிய நாடும் அமைந்திருந்தன. யாரோ திறமை வாய்ந்த ஓவியன் ஒருவன், பாண்டிய நாட்டையும் சோழ நாட்டையும் வரைந்து முடித்த பின்னர், இரண்டையும் வேறுபடுத்திப் பிரித்துக் காட்டுவதற்காக இரண்டிற்கும் இடையில் இழுத்து வளைத்துவிட்டிருந்த தடித்த கோடு போல் வெள்ளாறு காட்சியளித்தது.

வெள்ளாற்றங்கரையில் விலைமதிக்க முடியாத அந்த விடிகாலைப் பொழுதில், அவிழ்ந்து மலர்ந்த பூக்களின் நறுமணத்தையும், இதமான மெல்லிய குளிரையும் ஏந்தி வீசிக் கொண்டிருந்த காற்றைக் கிழித்துக் கொண்டு ஒரு வெள்ளைப் புரவி விரைந்து வந்து கொண்டிருக்கும் காட்சி கண்களில்படுகிறது.

ஆற்றின் தெற்குக் கரை ஓரமாகவே கிழக்கு முகமாகச் சிறிது தூரம் சென்ற பின்னர் குதிரை தென் திசையில் திரும்புகிறது. மதுரைக்குச் செல்லும் இராஜபாட்டையோடு இணைவதற்காக நீண்டு கொண்டிருந்த அந்தத் தென்திசைச் சாலையில் திரும்பிக் குதிரை விரைந்த போது, கதிரவன் தன் பொற்கரங்களை நீட்டிப் பூமாதேவியைத் தொட முயன்று கொண்டிருந்தான்.

குதிரையின் மீது அமர்ந்து அதைச் செலுத்திக் கொண்டிருந்தவனைப் பார்த்தால்— அப்படியொன்றும் சாதாரண மனிதனாகத் தெரியவில்லை. 'புஜபல பராக்கிரமம்' என்பார்களே— அத்தகைய வீர இலக்கணங்களெல்லாம் ஒருசேர அமைந்திருந்த மாவீரன் போல அவன் காட்சியளித்தான். குதிரை மீது வெகு கம்பீரமாக ஆரோகணித்து அவன் அதை அநாயசமாகச் செலுத்திக் கொண்டு வந்ததானது— 'குதிரையின் மீது இப்படித்தான் அமர வேண்டும்— குதிரையை இவ்வாறுதான் ஓட்ட வேண்டும்' என்று இலக்கணம் கற்றுக் கொடுப்பது போல் இருந்தது. அவனுடைய கையசைவையும் விரல்களின் வருடலையும் கூடப் புரிந்து கொண்டு

அவற்றிற் கேற்றபடி நின்றும் நிதானித்தும் விரைந்தும் திரும்பியும் அந்த வெண் புரவி வந்து கொண்டிருந்தது.

நடுத்தர வயதைக் கடந்து கொண்டிருந்த அவனுடைய தாடி செழித்த முகத்தில் கம்பீரமும், விழிகளில் கூர்மையும் குடிகொண்டிருந்தன. வல்வில் ஆண்மையாளன் ஒருவனுடைய கையிலிருந்து புறப்பட்டுத் தன்னுடைய இலக்கைத் தேடிப் பயணம் செய்யும் கூர்மையான அம்பு போல் அவனுடைய பார்வை நீண்ட சாலையையும், சாலையின் இருபுறங்களிலுமிருந்த மரங்களையும் புதர்களையும் துளைத்துக் கொண்டே வந்தது. அவனுடைய பார்வை தான் சுற்றிச் சுற்றிப் படர்ந்து கொண்டிருந்ததேயன்றி அவனது முகத்தில் எந்தவிதமான பரபரப்பும் தென்படவில்லை.

ஒரு நாழிகை நேரப் பயணத்திற்குப் பின் அவனுடைய குதிரை— சாலையின் ஓரத்தில் பிரும்மாண்டமாக வளர்ந்து விழுதுகள்விட்டிருந்த ஒரு பெரிய ஆலமரத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது, சாலையின் கோடியில் வலதுபுறத்தில் உள்ளடங்கியிருந்த ஒரு பாழடைந்த மண்டபம் தென்பட்டது. அந்த மண்டபத்தை அவன் உற்றுப் பார்த்த அதே நேரத்தில் பக்கத்திலிருந்த புதர்கள் அசைந்தன. எங்கிருந்தோ நரி ஊளையிடுவது போல் சத்தம் கேட்டது.

குதிரையின் வேகத்தைக் குறைத்துவிட்டுப் பக்கவாட்டில் திரும்பிப் பார்ப்பதற்குள் திடீரென்று நாலைந்து குதிரை வீரர்கள் உருவிய வாள்களுடன் வந்து அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் அவனுடைய நெஞ்சுக்கு நேரே நீட்டிக் கொண்டிருந்த வாள்கள் கதிரவனின் பட்டொளிபட்டுப் பளபளத்தன. அந்த வாள்களின் கூரிய நுனிகள் அவனுடைய தோள்களையும் மார்பையும் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தன.

முன்னங்கால்களைத் தூக்கிப் பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு, சுற்றிலும் முற்றுகை செய்து கொண்டிருந்த மற்ற குதிரைகளின் மீது மோதிப் பாய்ந்து புறப்படத் தயாரான அவனுடைய குதிரை, அவன் தனது இடது கையால் இலேசாகத் தட்டிக் கொடுத்தபோது— அதில் எதையோ புரிந்து கொண்டு அப்படியே அசையாமல் நின்றது.

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்துவிட்ட இந்த நிகழ்ச்சியால் சற்றும் கலக்கமடையாமல்— தன்னைச் சூழ்ந்து வளைத்துக்

கொண்டிருந்த குதிரை வீரர்களைப் பார்த்து அவன் கேட்டான். "நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?"

அவர்கள் பதில் சொல்லவில்லை. அவர்களைப் பார்த்தால் வழிப்பறிக்காரர்களைப் போல் தெரியவில்லை. அவர்கள் அமர்ந்திருந்த கொழுத்த முரட்டு ஜாதி அரபுக் குதிரைகளும், அவர்கள் அணிந்திருந்த உடைகளும், அவர்களுடைய கைகளில் மின்னிக் கண்களைக் கூச வைத்துக் கொண்டிருந்த வாள்களும்— அவர்களை ஏதோ ஒரு படைப்பிரிவைச் சேர்ந்த வீரர்கள் என்று விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன. இருந்தாலும் அவர்களைப் பார்த்து அவன் கிண்டலாகக் கேட்டான்.

"பாண்டிய மண்டலத்தின் வடக்கு எல்லையைக் குலசேகரப் பாண்டியன் கொள்ளைக்காரர்களுக்கு வழங்கிவிட்டானா? நீங்களெல்லாம் வெள்ளாற்றங்கரையின் வழிப்பறி வீரர்களா?"

மான உணர்வைத் தூண்டி அவர்களுடைய வாயைக் கிளற வேண்டுமென்ற எண்ணத்தில் அவன் கேட்ட இந்தக் கேள்விக்கும் அவர்களிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. ஒன்றுமே சொல்லாமல், ஊமைகளைப் போல்— அதே நேரத்தில் அவனுடைய ஒவ்வோர் அசைவையும் கண்காணித்தபடி அவர்கள் அவனை வாளின் நுனிகளால் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய குதிரைகள் சற்றே அசைந்து கொடுத்த போது அவன் தனது வலது கையை இடுப்புக் கச்சைக்குப் பக்கத்தில் கொண்டு போனான். உடனே ஒரு வாளின் நுனி அவனது இடுப்புக் கச்சைக்கும் அவனது வலது கரத்திற்கும் குறுக்கே நீண்டு கச்சையைக் குத்திக் கிழித்துக் கொண்டு நின்றது.

அவன் மெல்லச் சிரித்துவிட்டுச் சொன்னான்.

"வாளை உருவிக் கொண்டு உங்களோடு சண்டை செய்யப் போகிறேன் என்று நினைத்தாயா? பாவம்— வயிற்றுக்கு வழியில்லாத காரணத்தால் வழிப்பறி செய்ய வந்திருக்கும் உங்களுடன் போராடத்தானா என் வாள் பயன்பட வேண்டும்? இந்த வாளுக்கு வேறு வேலைகள நிறைய இருக்கின்றன அப்பனே! உங்களுக்குக் கொடுப்பதற்கு இடுப்புக் கச்சையில் ஏதேனும் *மதுராந்தகத் தேவன் மாடைகளோ, ஆணைப் பொற்கழஞ்சுகளோ அகப்படுமா என்று பார்த்தேன். என்னை வழிமறித்துக் கொண்டு உங்கள் நேரத்தை

வீணாக்குவதைக் காட்டிலும் யாராவது **‘எட்டிப்’ பட்டம் பெற்றவர்களுடைய ***‘வணிகச் சாத்துக்காரர்களை வழிமறித்தால் உங்களுக்கு ஏராளமான பொற்கழஞ்சுகள் கிடைக்குமே! கையிலொரு காணமுமில்லாத இந்த ஏழை வீரனிடம் கழஞ்சுகளா கிடைக்கப் போகின்றன?”

அவனுக்கு இப்போதும் அவர்களிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. கேள்விகளுக்கு எவ்விதமான மறுமொழியும் சொல்லாமல், அடுத்த நடவடிக்கையிலும் உடனடியாக ஈடுபடாமல், ஆடாமல் அசையாமல் புரவி முற்றுகை செய்து கொண்டிருந்த அவர்களின் மீது அவனுக்குக் கோபம் வந்தது. அவனுடைய கோபம் வார்த்தையாகவோ செயலாகவோ வெளிப்படுவதற்கு முன், பின்புறத்திலிருந்து ஒருவன் பேசினான்.

“அவர்கள் பேசமாட்டார்கள். வீரம் விளைவிக்கப் புறப்பட்டிருப்பவர்கள் வெறும் பேச்சுப் பேசிக் கொண்டிருக்கமாட்டார்கள்.”

“அப்படியா? அதுவும் சரிதான். குலசேகரப் பாண்டியனிடம் தோற்றுப் போய் ஓடி ஒளிந்துவிட்ட வீரபாண்டியனின் ஏழகப் படை வீரர்கள் பேச்சிழந்து நிற்பதில் ஆச்சரியமில்லைதான்!”

அவனுடைய ஏளன வார்த்தைகள் சுற்றி வளைத்துக் கொண்டிருந்த படை வீரர்களிடம் சலசலப்பை ஏற்படுத்தின. குதிரைகள் அசைந்தன. நான்கு வாள்கள் ஒரே சமயத்தில் நடுவில் நின்று கொண்டிருந்த அவனுடைய உடலைக் குத்திக் கிழித்துவிட முனைந்தன.

“வீரபாண்டியரை இகழ்ந்து பேசும் வீணனே, நீ யார்?” என்று பின்புறத்திலிருந்து கர்ண கடூரமான குரலில் ஒரு கர்ஜனை கேட்டது.

---

*மதுராந்தகத் தேவன் மாடை, ஆணைக் காசு என்பன கல்வெட்டுகளில் குறிக்கப்படும் நாணயங்களின் பெயர்கள். 10 பொன் = 1 காசு, 10 காணம் = 1 கழஞ்சு, ஒரு பொன் ஒரு காணம் எடையுள்ளது.

**எட்டிப்பட்டம்–வாணிகர்களில் சிறந்தவருக்கு மன்னவரால் வழங்கப்பட்ட பட்டம்.

***‘வணிகச்சாத்து’– வாணிகத்திற்காகப் பெருவழிகளில் பயணம் செய்யக் கூடிய வாணிகர்களின் பெருங்கூட்டம்.

அதைக் கேட்டுச் சுற்றியிருந்த வீரர்களே ஒரு நொடி நடுங்கிச் செயலிழந்து போனார்கள். ஆனால் அவன் மட்டும் கொஞ்சமும் அஞ்சாமல், உறுதி தொனிக்கும் குரலில் கூறினான்:

"நேருக்கு நேர் நின்று நிமிர்ந்து பேசும் துணிவு எவனுக்கு இருக்கிறதோ அவனுக்குத்தான் எதிராளியை 'நீ யார்' என்று கேள்வி கேட்கும் உரிமையுண்டு. மூன்று நான்கு குதிரைகளையும், குதிரைகளின் மீது வீரர்களையும் வீரர்களின் கையில் உருவிய வாள்களையும் சுற்றிப் பாதுகாப்பாக வைத்துவிட்டு, முதுகிற்குப் பின்னால் ஒளிந்து நின்று கொண்டு கேள்வி கேட்கும் வீராதி வீரனுக்கு– எதிராளியை 'நீ யார்' என்று கேள்வி கேட்கும் உரிமை கிடையாது!"

சாவின் வாயிலில் நின்று கொண்டிருந்த அந்த நேரத்தில் கூடச் சற்றும் கலங்காமல், சாமர்த்தியமும் கேலியும் கலந்து பேசப்பட்ட அவனுடைய வார்த்தைகள் சுற்றியிருந்தவர்களை பிரமிக்க வைத்தன. பின்புறத்திலிருந்து 'நீ யார்' என்று கர்ஜித்தவன், தன்னுடைய கோபத்தை அடக்கிக் கொண்டு குதிரையைத் திருப்பி நகர்த்தி முன்புறத்தில் வந்து, "விலகுங்கள்" என்று கட்டளையிடவே சுற்றியிருந்தவர்கள் தங்கள் குதிரைகளைச் சற்றுப் பின்புறமாக நகர்த்தி விலகி வழிவிட்டுவிட்டு முற்றுகையைப் பழையபடியே நீடித்தார்கள்.

நேருக்கு நேர் வந்து பார்வையில் படுமாறு நின்று கொண்டு, "இப்போது சொல், நீ யார்?" என்று அவன் மீண்டும் உறுமினான்.

"நான் சோழ நாட்டு வீரன். என்னுடைய பெயர் மானவர்மன்."

"எங்கே போகிறாய்?"

"மதுரைக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்."

"எதற்காக?"

"..."

"எதற்காக?"

"..."

"பதில் சொல்.. எதற்காக மதுரைக்குப் போய்க் கொண்டிருக்கிறாய்?"

"பதில் சொல்ல விரும்பாத கேள்வி— எத்தனை முறை கேட்கப்பட்டாலும், எப்படிக் கேட்கப்பட்டாலும் மானவர்மன் மௌனமாகிவிடுவான் என்பது ஈழ நாட்டு *மறப்படையின் உபசேனாதிபதிக்குத் தெரியாது போலிருக்கிறது" என்று மானவர்மன் கூறி நிறுத்தியதும், எதிரே நின்றிருந்தவன் ஆச்சரியத்திற்கும் பரபரப்பிற்கும் உள்ளானான்.

"என்னை உனக்குத் தெரியுமா?"

"உன்னை மட்டுமல்ல— உன்னையும் இந்த வீரர்களையும் இங்கே அனுப்பி வைத்துவிட்டு அந்தப் பாழடைந்த மண்டபத்தில் காத்திருக்கிற உங்களுடைய தலைவனையும் எனக்குத் தெரியும். அதுமட்டுமல்ல— இன்றைக்கு இந்த நேரத்தில், இந்த இடத்தில் யாருடைய வருகைக்காக நீங்களெல்லாம் காத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அந்தப் பெரிய மனிதனையும் எனக்கு மிக நன்றாகத் தெரியும்."

மானவர்மன் கூறிய பதில் ஈழநாட்டு மறப்படையின் உபசேனாதிபதியை மேலும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. சொல்லி வைத்தது போல் எல்லா விவரங்களையும் ஒன்றுவிடாமல் மானவர்மன் தெரிந்து வைத்திருந்ததை அறிந்த போது, அவனை ஒரு சாதாரணப் படைவீரனாக மதிப்பிட அவனால் முடியவில்லை. அதோடு, எதற்கும் அஞ்சாத அவனுடைய போக்கும், எல்லாரையும் ஏகவசனத்தில் பெயர் சொல்லிக் குறிப்பிடுகிற அவனுடைய பேச்சும் உபசேனாதிபதிக்குச் சந்தேகத்தை உண்டாக்கின. தன்னுடைய அய்யத்தைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக மானவர்மனைப் பார்த்து அவன் கேட்டான்.

"இவையெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?"

"என் தலைவருடைய கவனத்தை மீறி, அவருக்குத் தெரியாமல் இங்கே எந்தக் காரியமும் நடந்துவிட முடியாது."

---

*படைகளை இரு பெரும் பிரிவாகப் பிரித்திருந்தனர். அவை அகப்படை, மறப்படை எனப்பட்டன.

அகப்படை -Internal Defensive Force, மறப்படை – Expeditionary Force.

"உன் தலைவர் யார்?"

இந்தக் கேள்விக்கு மானவர்மன் உடனே பதில் சொல்லிவிடவில்லை. சற்றுத் தயங்கிவிட்டுப் பின்னர் ஏதோ தீர்மானத்திற்கு வந்தவன் போலச் சொன்னான்.

"என் தலைவர்— சோழ மண்டலத்தின் பிரதம தளபதியும் முதன் மந்திரியுமான திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பிப் பல்லவரா‌யர்."

மானவாமன கூறிய இந்தப் பெயர் அங்கிருந்தவர்களுக்கு மத்தியில் பெரிய மந்திரம் போல வேலை செய்தது. முற்றுகை செய்து கொண்டிருந்த புரவிகள் பின் வாங்கின. தோளையும் மார்பையும் தொட்டுக் கொண்டிருந்த வாள்கள் விலகின. ஒரு வீரனுடைய நடுங்கிய கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்த வாள் 'டணார்' என்ற ஓசையைக் கிளப்பியது.

ஈழநாட்டு மறப்படையின் உபசேனாதிபதி கோபத்தால் விழிகள் சிவக்க உறையிலிருந்து தன்னுடைய வாளை உருவிக்கொண்டு திரும்பினான்.

# 02. இளமைத் தூது

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்ந்திருந்த எழில் அரசி மோகனசுந்தரியின் கண்களாகிய வண்டுகள் அடிக்கடி வாயிற்புறத்திற்குச் சென்று வட்டமடித்தன. சாளரத்தின் வழியே வீதியைப் பார்ப்பதும் திரும்புவதுமாக நடந்து நடந்து கால்கள் வலித்தன. யாரையோ எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த அவள் கண்களில் காமரசம் ததும்பிக் கொண்டிருந்தது. மெல்லிய பஞ்சணையில் ஒருக்களித்துப் படுத்தவள், தொலைவிலிருந்து வந்த குதிரையின் காலடிச் சத்தத்தைக் கேட்டுவிட்டுத் துள்ளியெழுந்தாள்.

சாளரத்தின் வழியே எட்டிப் பார்த்தவள், எதிர்பார்த்தவரைக் காணாத ஏமாற்றத்துடன் திரும்பிக் கட்டிலில் வந்து விழுந்தாள். ஒரு தலையணையை எடுத்துத் தன் மார்போடு சேர்த்து அவள் இறுக அணைத்துக் கொண்ட போது தலையணையின் ஒரு மூலையில் துருத்திக் கொண்டிருந்த இலவம் பஞ்சுகூட 'என்ன சேதி?' என்று எட்டிப்பார்த்தது.

"சுந்தரி! சுந்தரி!" என்று கீழேயிருந்து அவளுடைய அம்மாவின் குரல் கேட்டது. "என்னம்மா!" என்று அலுப்போடு கேட்டவள், மாடிப்படிகளில் யாரோ ஏறி வரும் சத்தத்தைக் கேட்டுத் திரும்பினாள். அவளுடைய நாட்டியக் குழுவைச் சேர்ந்த பெண்ணொருத்தி அங்கு நின்றிருந்தாள்.

"அக்கா.. கங்க நாட்டிலிருந்து ஒரு வீரர் ஓலை கொண்டு வந்திருக்கிறார். ஆகவமல்லர் அனுப்பியிருக்கிறாராம்."

"ஓகோ! அவர் வரவில்லை, ஓலை மட்டும். வந்திருக்கிறதாக்கும்..!" —மோகனசுந்தரியின் குரல் எரிச்சலோடு வெளிப்பட்டது. "ஓலையை வாங்கி வா!" என்று உத்தரவிட்டவள் சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, நகரத் தொடங்கிய பெண்ணிடம், "வேண்டாம். அந்த வீரனையே கொண்டு வரச் சொல்" என்றாள்.

அந்த இளம் வயது வீரன் காலணிகள் சரக்சரக்கெனச் சப்தமிட மாடிப்படிகளில் ஏறி அறைக்குள் நுழைந்த போது, மோகனசுந்தரி பஞ்சணையில் ஒருக்களித்துப் படுத்திருந்தாள். சயன நிலையில் அவள் இருந்த கோலத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பிச் செல்ல

முற்பட்ட வீரனை "நில்" என்ற அவளுடைய கட்டளை தடுத்து நிறுத்தியது.

ஆண்களின் ஆசைகளைக் கிளறிவிடக் கூடிய அலங்கார தேவதையாகவும், பார்ப்பவரை மோகவசம் கொள்ளச் செய்யும் பருவப் பாவையாகவும் திகழ்ந்த அவளை அந்த வாலிபன் சிறிது கூச்சத்துடனேயே பார்த்துக் கொண்டு நின்றான்.

படுத்திருந்த நிலையிலேயே கையை நீட்டி ஓலையை வாங்கிக் கொண்டவள், ஓலைக் குழலின் மீதிருந்த முத்திரையை அகற்றிவிட்டு உள்ளிருந்த ஓலை நறுக்கை உருவிப் படிக்கத் தொடங்கினாள்.

'நாட்டிய கலாராணி மோகனசுந்தரிக்குக் கங்கச் சிற்றரசன் ஆகவமல்லன் எழுதிக் கொள்வது,

எதிர்பார்த்துக் காத்திருப்பாய் என்று தெரியும். இருந்தாலும் அவசரமான ராஜகாரியமாக வெள்ளாற்றங்கரைக்கு விரைகிறேன். வெளிதேசத்திலிருந்து வந்திருக்கிற விருந்தினர் ஒருவரைச் சந்திக்க வேண்டும். சோழ தேசத்திலும் பாண்டிய மண்டலத்திலும் பெரிய பெரிய அரசியல் மாற்றங்கள் நடக்கப் போகிற முக்கியமான கால கட்டம் இது. ஆகையால்தான் கட்டாயமாகச் செல்லும்படி கடமை என்னைத் துரத்துகிறது.

ஏமாற்றிவிட்டேன் என்று எண்ண வேண்டாம். இன்னும் ஒரு சில தினங்களில் வந்து சந்திக்கிறேன்.'

ஓலையைப் படித்து முடித்த பிறகு அவள் இதழ்களில் ஓர் ஏளனப் புன்னகை தவழ்ந்தது. எதிரே நின்று கொண்டிருந்த வீரனை நோக்கியபடியே 'ஏமாற்றிவிட்டேன் என்று எண்ண வேண்டாம்' என்ற சொற்களை வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாள். வீரனோ அந்த அழகியின் சந்நிதானத்தில் நாணிக் கோணி நின்று கொண்டிருந்தான். அவளுடைய கண்கள் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதையும், அவளது பவள இதழ்கள் ஏதோ முணுமுணுப்பதையும் கண்டு அவனுடைய கூச்சம் அதிகமாகியது.

பஞ்சணையில் எழுந்து உட்கார்ந்த மோகனசுந்தரி எதிரே இருந்த ஆசனத்தைக் காட்டி அவனை அமரச் செய்தாள். தயங்கியபடியே மெல்ல அமர்ந்தவன் அவளது கண்களாகிய மன்மத அம்புகள் தன்னைத் தாக்கத் தொடங்குவதைக் கண்டு திகைத்தான்.

“வீரனே! முன்பொருமுறை கங்கச் சிற்றரசரோடு இங்கு வந்திருக்கிறாய் என்று ஞாபகம்.”

“ஆம் அம்மா.”

கலகலவென்று சிரித்தாள் மோகனசுந்தரி.

“அம்மாவா? யாருக்கு அம்மா? என்னைப் பார்த்தால் அம்மா மாதிரியா தெரிகிறது?” என்றாள். அவனுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை.

“அம்மா என்று கூப்பிட்டு என்னை அவமானப்படுத்தியதாக ஆகவமல்லரிடம் சொல்லட்டுமா?” என்று மீண்டும் கேட்டாள்.

அவன் பரபரப்போடு கூறினான்: “வேண்டாம் தேவி. ஏற்கனவே அவர் என் மீது கோபமாயிருக்கிறார்.”

“அப்படியா? பரவாயில்லை. அவருடைய கோபத்திலிருந்து உன்னைக் காப்பாற்றுகிறேன். நான் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையைக் கூறுவாயா?”

‘ஆகட்டும்’ என்பதற்கு அடையாளமாக அந்த இளம் வீரன் தன் தலையை அசைத்தான். தான் விளையாடுவதற்குச் சரியான பொம்மை கிடைத்துவிட்டது என்று சந்தோஷப்படுகிற குழந்தையைப் போல் மோகனசுந்தரி குதூகலமடைந்தாள்.

“உன் பெயர் என்ன?”

“இளந்தேவன்.”

“ஆகவமல்லர் யாரைச் சந்திப்பதற்காக வெள்ளாற்றங்கரைக்குப் போயிருக்கிறார்?”

“ஓலையில் எழுதியிருக்குமே” என்று கூறிவிட்டு இந்தப் பெண்மணியின் கேள்விகளுக்குப் பதில் சொல்லலாமா, கூடாதா என்று இளந்தேவன் சிறிது நேரம் தயங்கினான்.

“வெளிநாட்டு விருந்தினரைச் சந்திக்கப் போவதாக எழுதியிருக்கிறது. அந்த விருந்தினர் யார்? என்னைப் போல் ஓர் இளம் பெண்ணா?”

அவளுடைய கேள்வியில் பொறாமை தொனிப்பதாக நினைத்த இளந்தேவன் சற்று தைரியமடைந்து பேசத்தொடங்கினான். அவளைச் சமாதானப்படுத்துவது எளிது என்ற நம்பிக்கை வந்தது.

“இல்லை, ஒரு படைத்தலைவர்” என்றான்.

“எந்த நாட்டுப் படைத் தலைவர்?”

“தெரியாது தேவி!”

“இளந்தேவா..! ஆகவமல்லர் எந்த அரசியல் ரகசியத்தையும் என்னிடம் மறைப்பதில்லை. சோழ தேசத்தின் பிரதம சேனாதிபதி பல்லவராயரை எதிர்த்து அவர் கலகம் செய்வதுகூட எனக்குத் தெரியும்.”

“எனக்குத் தெரியாது.”

“அப்படியா? போகட்டும். ஆகவமல்லர் உன் மீது கோபமாக இருப்பதாகக் கூறினாயே. என்ன கோபம் என்று சொல். அதைப் போக்கி வைக்கிறேன்” என்று சொல்லிவிட்டு அவள் மெல்லச் சிரித்தாள்.

அந்த விஷயத்தைப் போய் அவளிடம் எவ்வாறு சொல்வது என்று இளந்தேவன் திகைத்தான். அவளோ விடுவதாகத் தெரியவில்லை.

“உங்களைப் போன்ற ஒரு பெண்ணிடம் சொல்லக் கூடியதல்ல தேவி.”

“பெண்ணிடம் சொல்லக் கூடாததா? அப்படியானால் வெகு சுவாரஸ்யமாக இருக்குமே! விவரமாகச் சொல்.”

எவ்வளவோ மறுத்துப் பார்த்தும் அவள் மீண்டும் மீண்டும் கேட்கவே, கூச்சத்துடன் இளந்தேவன் கூறினான்.

“நீங்கள் வற்புறுத்திக் கேட்பதால் சொல்கிறேன். கங்க நாட்டுப் பெண் ஒருத்தியிடம் நான் தகாத முறையில் நடந்து கொண்டேன் என்று ஒரு புகார், கங்கச் சிற்றரசர் காது வரைக்கும் போய்விட்டது.”

“ஓகோ..!” மோகனசுந்தரி குலுங்கிக் குலுங்கிச் சிரித்துவிட்டுக் கூறினாள்:

“புகார் பொய்யாகத்தான் இருக்க வேண்டும். ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொள்ளவும் உன்னால் முடியுமா? பார்த்தால் சிறு பையனாட்டம் நாணிக் கோணிக் கொண்டிருக்கிறாயே!”

அவமான உணர்ச்சியோடு இளந்தேவன் தலைகுனிந்தான்.

“சரி. ஆகவமல்லருடைய கோபத்திலிருந்து உன்னைத் தப்புவிக்கிறேன். உண்மையைச் சொல். வெள்ளாற்றங்கரைக்கு யாரைச் சந்திப்பதற்காகப் போயிருக்கிறார்?”

“தேவி! பரம ரகசியத்தைச் சொல்லச் சொல்கிறீர்கள். இதை வெளியே சொன்னால் என் தலையே போய்விடும்.”

“இப்போது என்னிடம் சொல்லாவிட்டாலும் உன் தலை போய்விடும். ஓலை கொடுக்க வந்த போது நீ என்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டதாக ஆகவமல்லரிடம் கூறிவிடுவேன்.”

“ஆ..” இளந்தேவன் வாய்விட்டு அலறிவிட்டான். அவனுடைய அலறலைக் கேட்டுவிட்டுக் கீழேயிருந்து, மோகனசுந்தரியின் நாட்டியக் குழுவைச் சேர்ந்த பெண்மணி மேலே ஓடி வந்தாள்.

“என்ன அக்கா, என்ன நடந்தது? அம்மா பார்த்து வரச் சொன்னார்கள்.”

“ஒன்றுமில்லையடி. இந்த வீரன் சுத்த பயந்தாங்கொள்ளியாக இருக்கிறான். ஓர் அரசியல் ரகசியத்தைக் கேட்டதற்கு இப்படி அலறுகிறான். அரசியல்வாதிகளின் ரகசியங்களில் நமக்குத் தெரியாதது என்ன இருக்கிறது? அம்மாவிடம் போய் ஒன்றுமில்லையென்று சொல். போகும் போது கதவைத் தாழிட்டுக் கொண்டு போ.”

அவள் போன பிறகு மோகனசுந்தரி இளந்தேவனிடம் கூறினாள்:

“வீரனே! என்னைப் போன்ற இளம்பெண் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள என்ன வேண்டுமானாலும் கூறுவாள். எவர் மீது வேண்டுமானாலும் பழி போடுவாள். சொல். யாரைச் சந்திக்கப் போயிருக்கிறார்?”

“தேவி! இன்றைக்கு நான் விழித்தவேளை சரியில்லை போலிருக்கிறது. தயவு செய்து யாரிடமும் இந்த ரகசியத்தைக் கூறிவிடாதீர்கள். இலங்கையிலிருந்து தன் படைகளோடு வந்து முகாமிட்டிருக்கிறார் இலங்காபுரித் தண்டநாயகர். அவரைச் சந்திக்கத்தான் ஆகவமல்லர் போயிருக்கிறார்.”

“ஒகோ..!” என்று சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்த மோகனசுந்தரி, “கவலைப்படாதே.. நான் யாரிடமும் சொல்லமாட்டேன்” என்றபடி பஞ்சணையில் சரிந்து மெல்லச் சாய்ந்து

கொண்டாள். கைகளைச் சோம்பல் முறிப்பது போல் தூக்கி உடலை மெல்ல வளைத்தாள்.

அந்தச் சமயத்தில் அவள் படுத்திருந்த விதமும் மேலாடை வெகு தொலைவிற்கு விலகிப் போனதால் குமுறிக் கொந்தளித்துத் திமிறிக் கொண்டிருந்த அவளது இளமையின் செழுமையும் இளந்தேவனை மதி மயங்க வைத்தன. பார்க்கவிடாமலும் பார்வையைத் திருப்பவிடாமலும் அவனுடைய மனம் அவனைப் படாதபாடு படுத்தியது.

அவளுடைய மனத்தில் என்ன ஒளிந்து கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்ள முடியாமல் அவன் தடுமாறினான். அவளோ திடீரென்று பஞ்சணையைத் தன் கைகளால் இறுக்கிப் பற்றியபடி இளந்தேவனை நோக்கிக் குறும்பாகப் பார்த்தாள். அந்தப் பார்வை இளமையின் அழைப்பா அல்லது ஏளனமா என்று அவனுக்குத் தெரியவில்லை. அவள் மோகினியா அல்லது பிசாசா என்பதும் புரியவில்லை. இப்போது என்ன செய்வது என்றும் புலப்படவில்லை.

ஆகவமல்லன் தன்னை இங்கு அனுப்பியிருக்கக் கூடாது என்று நினைத்தபடி எழுந்து கொண்ட இளந்தேவன், "தேவி! எனக்கு விடை கொடுங்கள். நான் புறப்படுகிறேன்" என்று திரும்பி நடந்து கதவருகில் சென்றான். "நில்" என்ற அவளுடைய கட்டளையைக் கேட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

"கதவு வெளியே தாழிடப்பட்டிருக்கிறது" என்று அவள் கூறவும், "தட்டட்டுமா?" என்று கேட்டான். "வேண்டாம்" என்றுரைத்த மோகனசுந்தரி, பஞ்சணையில் இப்படியும் அப்படியுமாகத் தன் உடலைத் திருப்பி காம தேவனின் கைவசமிருந்த பானங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக இளந்தேவன் மீது ஏவத் தொடங்கினாள்.

அவனுடைய உடல் மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய வாலிபத்தின் பூரிப்பு அவனைக் கிறங்க அடித்தது. அந்த இளமையின் செழுமையெல்லாம் ஆகவமல்லனுடைய அந்தரங்கமான உரிமை என்பதை நினைத்தபடி அவன் நிதானம் தவறிவிடாதிருக்க முயன்று கொண்டிருந்தான்.

"இங்கு வா!" என்ற மோகனசுந்தரியின் சொற்கள் எங்கோ வானுலகத்திலிருந்து கேட்பதைப் போல் உணர்ந்தான்.

அவளது பஞ்சணையை நோக்கி மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல் மெதுவாக நடந்து அருகில் நெருங்கினான்.

"உட்கார்!" என்று அவள் கூறவும் அவனது கை கால்கள் உதறலெடுத்தன.

தான் விரித்த மோக வலையில் அகப்பட்டுக் கொண்ட அந்தச் சின்னப் புறாவை அவள் மெல்லத் தீண்டினாள்.

"இப்படி நடுங்குகிறாயே! நீ எப்படி ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டிருக்க முடியும்? அவள் தான் உன்னிடம் தகாத முறையில் நடந்திருக்க வேண்டும்" என்றபடி அவனைப் பஞ்சணையில் தன் அருகில் உட்கார வைத்தாள்.

அவனுடைய அவஸ்தையைக் கொஞ்ச நேரம் ரசித்துக் கொண்டிருந்தவள், பின்னர் உஷ்ணமான மூச்சுக் காற்று தகிக்க இரகசியமான குரலில் கேட்டாள்.

"ஆமாம். தகாத முறையில் நடந்து கொள்வதென்றால் என்ன? தகாத முறையில் நடப்பது எப்படி?"

இளந்தேவன் சிறிது சிறிதாகச் சுயநினைவை இழந்த தேவனாகிக் கொண்டிருந்தான்.

# 03. தயவல்ல... தலையீடு

'திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பிப் பல்லவராயர்' என்ற பெயர், சுற்றிலுமிருந்த வீரர்களிடம் அதிர்ச்சியையும் அச்சத்தையும் உண்டாக்கியதைப் பார்த்து ரசித்துத் தனக்குள் நகைத்துக் கொண்டிருந்த மானவர்மன், அந்த வீரர்களில் ஒருவன் மிதமிஞ்சிய அச்சத்தால் கை நடுங்கி வாளைக் கீழே நழுவவிட்டதையும், அப்படி நழுவவிட்டவன் மீது ஆத்திரம் கொண்டு உபசேனாதிபதி தன்னுடைய உறைவாளை உருவிக் கொண்டு பாயப் போனதையும் கவனித்தான்.

தன் மீது காட்ட முடியாத கோபத்தை உபசேனாதிபதி அந்த அப்பாவி வீரன் மீது காட்டியது மானவர்மனுக்குப் பிடிக்கவில்லை. அவன் குறுக்கிட்டுச் சொன்னான். "உபசேனாதிபதி! வலிமை மிக்க எதிரிகளிடம் காட்டி வாகை சூடக்கூடிய கோபத்தைத்தான் வீரம் என்று சொல்லுவார்கள். வேண்டியவர்களிடமும் பணியாளர்களிடமும் நண்பர்களிடமும் காட்டுகின்ற கோபம் வீரம் என்ற சந்தையில் விலை போவதில்லை."

வாளை உருவிக் கொண்டு பாயப்போன உபசேனாதிபதி மானவர்மனுடைய வார்த்தைகளைக் கேட்டுவிட்டுத் திரும்பினான். அவனுடைய ஆத்திரம் திசை மாறியது. மானவர்மன் மீது அவனுக்குச் சொல்ல முடியாத கோபம் வந்தது. கண்களை உருட்டி மானவர்மனை முறைத்துப் பார்த்து, "போதும் நிறுத்து" என்று கத்தினான். 'வழியோடு போன சனியனைத் தடுத்து வழி மறித்து நிறுத்தி அவமானப்படுமாறு நேர்ந்துவிட்டதே' என்று நினைத்த போது உபசேனாதிபதியின் உடலெல்லாம் எரிந்தது. மானவர்மனை அப்படியே குத்திக் கிழித்துக் கூறு போட்டுவிட வேண்டும் போல் ஆத்திரம் பிறந்தாலும் அப்படிச் செய்ய முடியாதபடி அவனை ஏதோ ஒன்று தடுத்தது.

திடீரென்று தன்னுடைய வலிமையும் ஆற்றலும் தன்னைவிட்டுப் போய்விட்டதைப் போல் அவன் உணர்ந்தான். அந்தத் தாழ்வுணர்ச்சியுடன் அவன் மறுபடியும் தன்னுடனிருந்த வீரர்களை நோக்கிச் சீறினான். "கோழைகளே! உங்களைப் போன்றவர்களையெல்லாம் ஏழகப்படை வீரர்களாக வைத்திருந்ததனால்தான் வீரபாண்டிய மன்னர் மகுடத்தைப் பறிகொடுத்துவிட்டு மலை வெளியில் ஒளிந்து கொண்டிருக்கிறார்.

சோழ மண்டலத்தின் சேனாதிபதி என்ன பேயா, பிசாசா? பெயரைக் கேட்டுவிட்டே இப்படி நடுங்குகிறீர்களே. உங்களுக்கு வெட்கமாக இல்லை?” என்று கூறி நிறுத்திவிட்டு, வாளைக் கீழே நழுவவிட்டவனைப் பார்த்து, “இன்னும் ஏன் நடுங்கிக் கொண்டிருக்கிறாய்? உன்னுடைய நடுக்கம் நீ அமர்ந்திருக்கும் குதிரைக்கும் தொற்றிக் கொண்டுவிடப் போகிறது. கீழே இறங்கி வாளை எடுத்துக் கொள்” என்று கட்டளையிட்டான். பின்னர், “ஜாக்கிரதை! இவனைத் தப்பவிட்டுவிடாதீர்கள். தண்டநாயகரிடம் கொண்டு வாருங்கள்” என்று எல்லாருக்கும் சேர்த்துச் சொல்லிவிட்டுத் தன்னுடைய புரவியை மண்டபத்தை நோக்கி ஓட்டினான்.

மானவர்மனுக்குப் பக்கத்தில் இன்னும் சிறிது நேரம் இருந்தால் தன்னுடைய மானம் படகில் ஏறிப் பாய்மரம் விரித்து ஈழத்தை நோக்கிப் பறந்து போய்விடுமோ என்று அவன் பயங்கொண்டு ஓடுவது போல் இருந்தது.

அப்பாவி வீரர்களின் மீது அனுதாபம் கொண்டவன் போல் மானவர்மன் அவர்களிடம் எந்த வம்பும் செய்யாமல் தப்பிப் போவதற்கு எவ்வித முயற்சியிலும் ஈடுபடாமல் அவர்களுடன் பாழடைந்த மண்டபத்தைப் போய் அடைந்து குதிரையிலிருந்து கீழே இறங்கினான்.

அதற்குள் மண்டபத்தின் உள்ளே சென்று தன்னுடைய தலைவனைச் சந்தித்துச் செய்தியைச் சொல்லிவிட்டு வெளியே வந்திருந்த உபசேனாதிபதி மண்டபத்தின் வெளி வாயில் முகப்பில் நின்றபடி, “உள்ளே எங்கள் தலைவர் இலங்காபுரித் தண்டநாயகர் உங்களுக்காகக் காத்திருக்கிறார். உங்களுடன் தனித்துப் பேச விரும்புகிறார். மண்டபத்தைச் சுற்றிலும் வீரர்கள் காவல் இருப்பார்கள். தப்பிச் செல்ல முயற்சி செய்ய வேண்டாம்” என்று கொஞ்சம் மரியாதையை வரவழைத்துக் கொண்ட குரலில் கூறிவிட்டுக் காவல் ஏற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கினான். புன்னகையை மட்டுமே ஒரு பதிலாக வழங்கிய மானவர்மன் மண்டபத்தினுள்ளே நுழைந்தான்.

பாண்டிய மண்டலத்தின் மக்களுக்கும், படை வீரர்களுக்கும், கொற்றவன் குலசேகர பாண்டியனுக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கிக் கொண்டிருந்த ஈழப் படைத்தலைவன் இலங்காபுரித் தண்டநாயகன், மண்டபத்தின் உட்புறத்தில் உடைந்து போயிருந்த

கருங்கல் தூண் மீது உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனெதிரே சில ஓலை நறுக்குகள் கிடந்தன. அவன் உட்கார்ந்து கொண்டிருந்த தோற்றம் கரிய வலிய குன்றொன்று சிறிய தூண் மீது உட்கார்ந்து கொண்டிருப்பது போல் இருந்தது. அப்படிப்பட்ட பெரிய ஆகிருதியும் உடலும் அவனுக்கு வாய்த்திருந்தன. இவ்வளவு பெரிய சதை மலையை இந்தச் சின்னஞ்சிறு கல் தூண் எப்படித் தாங்கிக் கொண்டிருக்கிறது என்று நினைத்துச் சிரித்துக் கொண்ட மானவர்மனைத் தண்டநாயகன் தன்னுடைய கரகரத்த குரலில் வரவேற்றான்.

“வாருங்கள் மானவர்மரே, வாருங்கள். இந்த உபசேனாதிபதி உதயசேனன் இருக்கிறானே, அவனுடைய தலையில் மூளைக்குப் பதிலாக வாளும் வேலும்தான் இருக்கின்றன. இல்லாவிட்டால் வரவேற்று அழைத்துக் கொண்டு வரவேண்டிய உங்களை இப்படிச் சிறைப் பிடித்து இழுத்துக் கொண்டு வருவானா?”

“என்ன சொல்கிறீர்கள் தண்டநாயகரே? நான் மானவர்மன். நீங்கள் வேறு யாரையோ நினைத்துக் கொண்டு என்னிடம் பேசுகிறீர்கள்.”

“என்னை ஏமாற்றிவிட்டுத் தப்பிச் செல்ல எவராலும் முடியாது மானவர்மரே! உதயசேனனையும் பாண்டிய நாட்டு முட்டாள்களையும் நீங்கள் மானவர்மன் என்ற பெயரைச் சொல்லி ஏமாற்றலாம். ஆனால் உண்மையில் நீங்கள் யார் என்பது எனக்குத் தெரியும்.”

“என்னைப் பற்றிய உண்மையான விவரம் உமக்குத் தெரியும் என்பது எனக்கும் தெரியும். நான் தப்பிச் செல்ல நினைத்திருந்தால் இந்நேரம் என்னுடைய குதிரை மதுரை இராஜபாட்டையில் கால் காத தூரத்தைக் கடந்து சென்றிருக்கும். உம்மைச் சந்திக்க வேண்டிய அவசியம் எனக்கு இருந்தது. அதனால்தான் நானே உமது வீரர்களிடம் வலிய அகப்பட்டுக் கொண்டு இங்கே வந்திருக்கிறேன்” என்று கூறிவிட்டு இலங்காபுரித் தண்டநாயகனுக்கு எதிரே உடைந்து கிடந்த மற்றொரு கல் தூணில் கம்பீரமாக அமர்ந்து கொண்டு, மண்டபத்தை முழுக்க ஒருமுறை தன் கண்களால் அளந்து முடிந்தபின் நிமிர்ந்து தண்டநாயகனுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தான் மானவர்மன்.

“எப்படியிருந்தாலும் உங்களைச் சந்திக்க நேர்ந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்” என்று இலங்காபுரி கூறிய போது மானவர்மன் சிரித்தான்.

“எதற்காகச் சிரிக்கிறீர்கள்?”

“ஒன்றுமில்லை. ஆயிரத்து இருநூறு வருடங்களுக்கு முன் எங்கள் திருவள்ளுவர் பெருமான் எழுதி வைத்த திருக்குறள் இந்த நேரத்தில்கூட எப்படிப் பொருந்தி வருகிறது என்பதை நினைத்தேன். அந்தக் குறளினுடைய பொருளை நினைத்துப் பார்த்த போது சிரிப்பு வந்துவிட்டது.”

“அதை நானும் தெரிந்து கொள்ளலாமா?”

“ஓ! தாராளமாகத் தெரிந்து கொள்ளலாம்.

‘உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.’

என்பதுதான் அந்தக் குறள்.”

“இதன் அர்த்தம் என்ன?”

“சேரும் போது மகிழ்ந்து, பிரியும் போது வருந்துவதே கற்றறிவாளர் இயல்பு!”

“இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?”

“என்னைச் சந்திக்க நேர்ந்ததில் நீங்கள் மகிழ்ச்சியடைவதாகக் கூறினீர்கள். நான் பிரிந்து செல்லும் போது நீங்கள் வருந்த வேண்டியிருக்குமே என்பதை நினைத்துத்தான் சிரித்தேன்.”

“என்னை வருந்த வைத்துவிட்டு நீங்கள் பிரிந்து சென்றுவிட முடியாது மானவர்மரே! வருந்துவதானால் நீங்கள் மட்டும்தான் வருந்த வேண்டியிருக்கும்.”

“நான் மட்டும் வருந்துவதென்பது நட்புக்கு அடையாளமல்ல தண்டநாயகரே.”

“நம்முடைய நட்பை நீங்கள் அங்கீகரித்துக் கொள்வீர்களேயானால் நம்மில் ஒருவரும் வருந்த வேண்டிய அவசியமில்லை.”

“என்ன சொல்கிறீர்கள்?”

“இந்தச் சந்திப்பின் முடிவில் நாம் இருவருமே மகிழ்வதா? அல்லது நீங்கள் ஒருவர் மட்டும் வருந்துவதா என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறேன்.”

“தண்டநாயகர் என்னைப் பயமுறுத்த முயற்சி செய்ய வேண்டாம்!”

“எங்கள் பாதையில் நீங்கள் குறுக்கிட்டு எங்களைப் பயமுறுத்த வேண்டாம் என்றுதான் உங்களை வேண்டிக் கொள்கிறேன்.”

“இப்போது இந்த மண்டபத்தில் நீங்களும் நானும் தனியாகத்தான் இருக்கிறோம். மனத்தில் நினைப்பதை வார்த்தைகளுக்குள் மறைத்து வைத்துக் கொண்டு வீண்வாதம் புரிந்து கொண்டிருக்க வேண்டியதில்லை. சொல்ல நினைப்பதை வெளிப்படையாகவே சொல்லலாம்” என்று கூறிவிட்டுத் தண்டநாயகனுடைய முகத்தில் தன்னுடைய கூர்மையான விழிகளைப் பதித்தான் மாணவர்மன்.

தண்டநாயகன் சிறிது நேரம் எதுவுமே பேசவில்லை. எழுந்து நின்று குறுக்கும் நெடுக்குமாகக் கொஞ்ச நேரம் நடந்தான். பின்னர், மானவர்மனுக்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டிருந்தான். எதையோ தீவிரமாக ஆலோசனை செய்வது போலிருந்தது. அப்படி அவன் நின்று கொண்டிருந்த நேரத்தில் மானவர்மனுடைய பார்வை தூரத்திலிருந்த ஓலை நறுக்குகளைக் கவனித்துவிட்டு, இலங்காபுரித் தண்டநாயகனுடைய இடுப்புக் கச்சையில் வந்து ஒரிரு கை நொடிப்பொழுது தாமதித்தது. மானவர்மனுடைய பார்வை எங்கே தாமதித்ததோ அந்த இடத்தில் இலங்காபுரித் தண்டநாயகனுடைய இடுப்புக் கச்சையில் ஒரு நீளமான ஓலை நறுக்கின் மேற்பகுதி நீட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது.

இலங்காபுரித் தண்டநாயகன் மானவர்மனுக்கு எதிரே அமர்ந்து கொண்டு தனது பேச்சைத் தொடங்கினான்.

“உங்களிடம் நீட்டி நீட்டிப் பேசி நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. நேரடியாகவே ஓர் உதவி கேட்கப் போகிறேன்.”

“கேளுங்கள்.”

“பாண்டிய தேசத்துக் குடிமக்களுடைய நன்மையை உத்தேசித்து, நிலையானதொரு ஆட்சியில்லாமல் தொல்லைப்படும் அவர்களுடைய நிலைமையை மனதில் கொண்டு எங்கள் சிங்கள தேசத்தின் மன்னர் பராக்கிரமபாகு சில நடவடிக்கைகள் எடுக்குமாறு நேர்ந்திருக்கிறது.”

"..."

"இந்த நடவடிக்கையானது மதுரையின் பழைய மன்னர் வீரபாண்டியருக்கு ஆதரவாகவும், புதிய மன்னர் குலசேகர பாண்டியருக்கு எதிராகவும் எடுக்கப்படும் நடவடிக்கையாகும்."

மானவர்மன் குறுக்கிட்டுக் கேட்டான்.

"வீரபாண்டியரை ஆதரிப்பதற்கும் குலசேகர பாண்டியரை எதிர்ப்பதற்கும் என்ன காரணம் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?"

"குலசேகர பாண்டியனுக்கு மதுரையின் ஆட்சியில் எந்தவிதமான பாத்தியதையும் கிடையாது. அவன் பாண்டிய தேசத்தின் தென்பகுதியைத் திருநெல்வேலியிலிருந்து ஆண்டு வந்தவன். பாண்டிய தேசத்தின் வடபகுதிக்கும் மதுரைக்கும் பரம்பரை உரிமை உடையவர்கள் வீரபாண்டியரும் வீரபாண்டியரது தந்தையாகிய பராக்கிரம பாண்டியருமே."

"..."

"தென் பகுதியை ஆட்சி செய்து கொண்டிருந்ததோடு திருப்தியடையாத குலசேகர பாண்டியன், திடீரென்று ஒரு நாள் படையெடுத்து வந்து மதுரை மாநகரை முற்றுகையிட்டான். மதுரையை அப்போது ஆண்டு கொண்டிருந்த பராக்கிரம பாண்டியர் எங்கள் சிங்கள தேசத்தின் மன்னர் பராக்கிரமபாகுவின் உதவியை வேண்டி ஓலை அனுப்பினார். பிறருக்கு உதவுவதையே பெருங்குணமாகக் கொண்ட எங்கள் மாமன்னர் என்னுடைய தலைமையில் பெரும் படை ஒன்றை இலங்கையிலிருந்து அனுப்பி வைத்தார். ஆனால் நான் படையுடன் வந்து சேர்வதற்குள், குலசேகர பாண்டியன் மதுரையைக் கைப்பற்றிக் கொண்டு, மன்னர் பராக்கிரம பாண்டியரையும் அவருடைய மனைவி மக்களையும் அநியாயமாகக் கொலை செய்துவிட்டான்."

"இந்தப் பழைய கதைகளெல்லாம் எனக்குத் தெரியும். இப்போது எதற்காக இவற்றையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்?"

"குலசேகர பாண்டியனுக்கு எதிராகவும் வீரபாண்டியருக்கு ஆதரவாகவும் நாங்கள் நடவடிக்கை எடுக்க நேர்ந்ததற்குரிய காரணத்தை உங்களுக்கு விளக்க வேண்டும் அல்லவா?

அதற்காகத்தான் கொலை செய்யப்பட்ட பராக்கிரம பாண்டியரின் குலத்தில் எஞ்சியிருக்கும் கடைசிக் கொழுந்துதான் வீரபாண்டியர். பாண்டிய தேசத்தின் ஆட்சியை வீரபாண்டியரிடம் ஒப்படைக்குமாறு எங்கள் மாமன்னர் பராக்கிரமபாகு எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

ஏற்கெனவே குலசேகரனை முறியடித்து ஆட்சியை வீரபாண்டியருக்கு அளித்தேன். பாண்டிய நாட்டுத் தலைவர்களில், கண்டதேவ மழவராயனும் மழவச் சக்கரவர்த்தியும் நான் *செய்த நன்றியை மறந்துவிட்டுத் துரோகிகளாக மாறிக் குலசேகரனுடன் சேர்ந்து கொண்டு வீரபாண்டியரை மதுரையைவிட்டே விரட்டிவிட்டார்கள்.

எனவே இந்த முறை மிகச் சரியாகத் திட்டமிட்டுக் குலசேகர பாண்டியனை வேரறுக்கப் போகிறேன். இது இறுதித் தாக்குதல்! இந்த தாக்குதலில் குலசேகர பாண்டியனுடைய தலையை வெட்டி மதுரைக் கோட்டையின் வாயிலில் வைக்கப் போகிறேன். வீரபாண்டியரை எதிர்ப்பவர்களுக்கு அது ஓர் எச்சரிக்கையாக இருக்கும்."

"தண்டநாயகரே ஆட்சியுரிமைக்காகத் தங்களுக்குள் அடித்துக் கொள்பவர்கள் இருவரும் பாண்டியர்கள். இது பாண்டிய நாட்டின், பாண்டிய நாட்டு மக்களின் தனிப்பட்ட பிரச்சினை. இதில் ஈழத்திலிருந்து வந்த நீங்கள் எதற்காகத் தலையிட வேண்டும்? பாண்டிய நாட்டையோ பாண்டிய நாட்டின் ஊர்களையோ வழங்குவதற்கும் கொடுப்பதற்கும் ஆட்சியுரிமை அளிப்பதற்கும் நீங்கள் யார்? சிங்கள தேசத்தைச் சேர்ந்த உங்களுக்குப் பாண்டிய மண்டலத்தைப் பாகம் போட்டுக் கொடுப்பதற்கு என்ன உரிமை இருக்கிறது?" —கண்களில் கனல் தெறிக்க மானவர்மன் இலங்காபுரித் தண்டநாயகனை வினவினான்:

---

*குலசேகர பாண்டியனை முறியடித்து வீரபாண்டியனிடம் ஆட்சியை ஒப்படைத்த இலங்காபுரித் தண்டநாயகன், கீழை மங்கலம் மேலை மங்கலம் முதலிய ஊர்களைக் கண்டதேவ மழவராயனுக்கும், தொண்டி, கருந்தங்குடி முதலிய ஊர்களை மழவச் சக்கரவர்த்திக்கும் கொடுத்து, அதற்கான ஆட்சி உரிமையையும் அவர்களுக்கு வழங்கியிருந்தான்.

“பாண்டிய மக்களின் துயரத்தைப் பக்கத்திலிருந்து கொண்டே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் உங்களைக் காட்டிலும், உங்கள் சோழ நாட்டுப் புலிகளைக் காட்டிலும்— உதவி செய்வதற்காக ஒடோடி வந்திருக்கும் எங்களுக்கு, எங்கள் *சிறகுச் சிங்கங்களுக்கு அதிக உரிமை இருக்கிறது. எங்களுடைய தயவு மனப்பான்மையும் தயாள சிந்தையும் எங்களுக்கு அந்த உரிமையை வழங்கியிருக்கிறது.”

“இது தயவல்ல தண்டநாயகரே— தலையீடு!”

“உங்கள் சோழ நாட்டில் எங்களுடைய செயலுக்கு இப்படித்தான் விளக்கம் கொடுக்கிறீர்களா?”

“வேறு எப்படி விளக்கம் கொடுப்பது? ஆடு நனைகிறதாம்; அதற்காக ஓநாய் அழுகிறதாம் என்று விளக்கம் கொடுக்கலாமா?”

“ஜாக்கிரதை! அளவுக்கு மீறிப் பேச வேண்டாம். எங்கள் மாமன்னர் பராக்கிரமபாகுவின் கட்டளையை நிறைவேற்றி வீரபாண்டியருக்கு முடிசூட்டிக் குலசேகர பாண்டியனுடைய தலையைப் பறித்துக் கோட்டை வாயிலில் வைக்கும்வரை நான் ஓயப்போவதில்லை. யார் தடுத்தாலும் என்னுடைய எண்ணத்தை மாற்றிக்கொள்ளப் போவதில்லை.”

“அப்படியானால் என்னிடம் இவ்வளவு நேரம் எதற்காகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?”

“எங்களுடைய காரியத்திற்குக் குறுக்கே நீங்களும் உங்களுடைய சோழ நாடும் தலையிடக் கூடாதென்று வேண்டிக் கொள்வதற்காகத்தான்.”

“வெகு அழகாயிருக்கிறது உங்கள் வேண்டுகோள்! பாண்டியர்களுடைய உள்நாட்டுப் பூசலில் வெளிநாட்டிலிருந்து வந்து நீங்கள் தலையிடலாம். பக்கத்திலிருக்கும் நாங்கள் இதையெல்லாம் பார்த்துச் சகித்துக் கொண்டு கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டும். அப்படித்தானே?”

---

*சிங்கள வேந்தர்கட்குக் கொடியாகவும் இலச்சினையாகவும் விளங்கியது மூன்று சிறகுகளுடைய சிங்கம்.

"எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு எனக்கு நீங்கள் வாக்குறுதி தரவேண்டும்."

மானவர்மன் சிறிது நேரம் யோசித்துவிட்டுக் கேட்டான்.

"வேண்டுகோள் மறுக்கப்பட்டால்..?"

"நீங்கள் இங்கிருந்து வெளியேற முடியாது! கோட்டை வாயிலில் பறித்து வைக்கப் போகிற குலசேகரனுடைய தலைக்கு இப்போதே ஒரு கூட்டுத் தலை தயாராகிவிடும்" என்று கூறிவிட்டு அப்போதே மானவர்மனுடைய தலையைக் கழற்றித் தனியாக வைத்துவிடப் போகின்றவனைப் போல் எழுந்து நின்று இரண்டு கைகளையும் சேர்த்தபடி பயங்கரமாகச் சிரித்தான் இலங்காபுரித் தண்டநாயகன். திடீரென்று அவனுக்கு வெறி பிடித்துவிட்டது போல் இருந்தது. தானும் எழுந்து கொண்ட மானவர்மன் அவன் சிரித்து முடிக்கும் வரை பொறுத்திருந்துவிட்டுக் கேட்டான்.

"வேண்டுகோள் ஏற்கப்பட்டால்..?"

"உங்களை மார்புறத் தழுவிக் கொண்டு என்னுடைய மதிப்பிற்குரிய நண்பராக இப்போதே ஏற்றுக் கொள்வேன்."

"எப்படி?"

மானவர்மன் கேட்ட கேள்விக்கு உணர்ச்சியின் உச்சகட்டத்தில் நின்று கொண்டிருந்த தண்டநாயகன் செயல் முறையோடு விளக்கினான்.

"இப்படி" என்று சொல்லிவிட்டு மானவர்மனைத் தன்னுடைய இரும்புக்கரங்களால் மார்போடு சேர்த்துத் தழுவிக் கொண்டான்.

அப்படித் தழுவிக் கொண்ட நேரத்தில் மானவர்மன் வெகு லாவகமாக ஒரு காரியம் செய்தான். இலங்காபுரித் தண்டநாயகனின் இடுப்புக்கச்சையிலிருந்த ஓலை நறுக்கை இலேசாக உருவித் தன்னுடைய இடுப்பில் செருகிக் கொண்டான். கைநொடிப் பொழுதில் இந்தக் காரியம் நடந்து முடிந்தது. மானவர்மன் வழிக்கு வந்துவிட்டதாக நினைத்து மகிழ்ந்த இலங்காபுரித் தண்டநாயகன் மறுபடியும் பேச்சைத் தொடர்வதற்காக மானவர்மனை உட்காருமாறு கையமர்த்திவிட்டு, உடைந்த கல்தூணில் உட்காரப் போன போது அவ்வாறு உட்கார்வதற்கு முன்பாகத் தூணோடு சேர்த்து மானவர்மன் அவனைக் கீழே தள்ளினான்.

தூணிலிருந்து தலைகீழாக விழுந்த தண்டநாயகனுடைய தலையில் பலமாக அடிபட்டது. அவன் சமாளித்துக் கொண்டு எழுந்து சத்தமிடுவதற்குள்ளாக உள்வாயிலைத் தாண்டி வெளியில் வந்த மானவர்மன், வெளிவாயிலில் நின்று கொண்டிருந்த உபசேனாதிபதியைப் பார்த்து, “உதயசேனரே! தண்டநாயகர் உம்மை அவசரமாகக் கூப்பிடுகிறார்” என்றான். உதயசேனன் உள்ளே போகத் தொடங்கினான்.

மரத்தடியில் நின்று கொண்டிருந்த மாணவர்மனது குதிரை, மானவர்மனைப் பார்த்ததும் தன்னைப் பிடித்துக் கொண்டிருந்த வீரனை உலுப்பிக் கீழே தள்ளிவிட்டு மண்டபத்தின் வாயிலை நோக்கி ஓடி வந்தது.

இதற்குள், “விடாதீர்கள்.. பிடியுங்கள்” என்று கத்திக் கொண்டே தண்டநாயகன் உள்வாயிலைத் தாண்டி ஓடி வந்தான். சுற்றியிருந்த காவல் வீரர்களும், தண்டநாயகனுடைய சத்தத்தைக் கேட்டுவிட்டு இடையிலேயே திரும்பி ஓடிவந்த உபசேனாதிபதியும் நெருங்குவதற்குள்ளாகத் தன்னுடைய குதிரையின முதுகில் தாவி அமர்ந்த மானவர்மனை நோக்கிக் கூரிய வேலை ஓங்கிக் கொண்டு ஒரு முரட்டு வீரன் ஓடிவந்தான். அப்படியே குதிரையின் முதுகில் மார்பு படுமாறு படுத்துக் கொண்டு அந்த வீரனுடைய இடுப்பில் கைகொடுத்துத் தூக்கி, விரைந்து நெருங்கிக் கொண்டிருந்த வீரர்களின் மீது வீசியெறிந்தான் மானவர்மன்.

அடுத்த நொடியில் அவனுடைய குதிரை பறந்து கொண்டிருந்தது. மண்டபத்தின் வெளிவாயிலுக்கு வந்து சேர்ந்திருந்த தண்டநாயகன் அடிபட்ட புலிபோல் ஆத்திரம் பொங்கத் தன்னுடைய இடுப்புக் கச்சையில் இருந்த கத்தியை எடுத்து மானவர்மனுடைய முதுகைக் குறிவைத்து வேகமாக வீசினான்.

இலங்காபுரித் தண்டநாயகனுடைய கத்திக்கு எப்போதுமே இரண்டு சிறப்புக் குணங்கள் உண்டு. ஒன்று– மலை முகட்டில் வெகு வேகமாகப் பறக்கும் பறவையைக் கூடக் குறி தவறாமல் குத்தி வீழ்த்தக் கூடியது. மற்றொன்று– உடலில் பட்ட உடனேயே உயிரைக் குடிக்கக் கூடிய கொடிய நஞ்சு தோய்ந்தது.

# 04. மதுரையில் மந்திராலோசனை

மதுரைக் கோட்டையின் பிரதான வடக்கு வாயிலின் பெரிய கதவுகள் இரண்டும் பெருஞ்சத்தத்தை உண்டாக்கிக் கொண்டு திறந்தன. பேரிகைகள் முழங்கின. கோட்டை மதிலின் மீது நின்று கொண்டிருந்த வீரர்கள் துந்துபியும் சங்கும் ஊதினார்கள். மதிலின் உச்சியில் பறந்து கொண்டிருந்த மீன்கொடி காற்றில் அசைந்து வரவேற்புக் கூறியது. வீரர்களின் ஜயகோஷம் காதுகளைச் செவிடாக்கிவிடுவது போல் கேட்டது.

“மதுரையின் மாமன்னர்— பாண்டி மண்டலத்தின் ஏகச் சக்கரவர்த்தி— பராக்கிரம பாண்டியனின் குலகாலர்— வீரபாண்டியனைப் போரில் புறங்கண்ட வேந்தர்—கோச்சடையவன்மர்— திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலசேகர பாண்டிய தேவர்— வாழ்க! வாழ்க!”

தன்னுடைய பரிவாரங்களுடன் கோட்டைக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்த மன்னர் குலசேகர பாண்டியர், கட்டியங் கூறுபவன் மறுபடியும் ஏதோ சொல்லப் போவதைக் கவனித்துவிட்டு அவனைச் சாடை காட்டித் தடுத்தார். பேரிகை, கொம்பு, சங்கு, ஜயகோஷம் முதலிய ஆரவாரங்களைக் கையமர்த்தி அடக்கிவிட்டுக் கோட்டையின் உட்புறத்தில் தன்னுடைய குதிரையைச் செலுத்திக் கொண்டு போனார். மன்னரைத் தொடர்ந்து அவரது பரிவாரத்து வீரர்களும் சென்ற பின்னர் கோட்டையின் கதவுகள் படார் படாரென்று மறுபடியும் சத்தத்தை எழுப்பிவிட்டு மூடிக்கொண்டன.

மன்னரும் அவரது பரிவாரமும் சென்ற பின், கோட்டைக் காவல் வீரர்கள்— மன்னர் கோட்டைக்குள் பிரவேசித்த போது நடந்து கொண்ட விதத்தைப் பற்றித் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். சாதாரணமாக, மன்னர் வருகை புரியும் போது எழுப்பப்படுகின்ற வாழ்த்து முழக்கங்களையும் வாத்திய முழக்கங்களையும் அவர் எதற்காகத் கையமர்த்தித் தடுத்து நிறுத்தினார் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் ஆச்சரியப்பட்டார்கள்.

“மன்னருடைய முகத்தில் மகிழ்ச்சி காணாமல் போய்விட்டதைக் கவனித்தாயா?” என்றான் ஒருவன்.

"கொஞ்ச நாளாகவே அவருடைய முகத்தில் கவலை குடிகொண்டுவிட்டதைக் கவனித்தாயா?" என்றான் வேறொருவன்.

"கவலை குடியேறியதற்குப் பிறகு மகிழ்ச்சி காணாமல் போய்விட்டதா? அல்லது மகிழ்ச்சி காணாமல் போய்விட்டதற்குப் பிறகு கவலை குடியேறிக் கொண்டதா?" என்று கேட்டான் ஒரு குறும்புக்காரன்.

"பேசாமலிரு. உன்னைப் போன்ற ராஜ விசுவாசமற்றவர்களையெல்லாம் கோட்டைக் காவலுக்குப் போட்டால்—கோட்டைக்குள் குழப்பமும் கவலையும்தான் மிஞ்சும். குதூகலமா குடிகொள்ளப் போகிறது?" என்று அவன் மீது எரிந்து விழுந்தான் இன்னொருவன்.

"கோட்டைக் காவலிலிருந்து என்னை மாற்றிவிடும்படி நீதான் கொஞ்சம் சிபாரிசு செய்யேன். கோட்டைக் காவல் தலைவர் இராசகம்பீர அஞ்சுகோட்டை நாடாழ்வார்தான் உன்னுடைய இடுப்புக் கச்சைக்குள் இருப்பவர் ஆயிற்றே" என்று அவனை வம்புக்கிழுத்தான் குறும்புக்காரன்.

"ஆமாம், உன்னை மாற்றிவிடுவதால்தான் இந்தக் கோட்டை வாழ்ந்துவிடப் போகிறதாக்கும்? அரசர்களும் அதிகாரிகளும் மாறி மாறி வந்தும்கூட இந்தக் கோட்டையில் இன்னும் நிம்மதி ஏற்படவில்லை. இன்னும் யார் யார் மாறப் போகிறார்களோ? யார் யார் வரப் போகிறார்களோ? இதன் ராசி இப்படியிருக்கிறது. இந்தக் கோட்டையை இடித்துத் தூள் தூளாக்கிவிட்டுப் புதிதாக வேறொன்றைக் கட்டுமாறு மன்னரிடம் சொல்ல வேண்டும். அப்போதுதான் பாண்டிய தேசத்தின் அரசியல் உருப்படும்" என்று கிண்டிவிட்டான் வேறொருவன்.

"உங்களுக்கெல்லாம் நாக்குக் கொழுத்துத் தடித்துவிட்டது—அஞ்சுகோட்டை நாடாழ்வாரிடம் சொல்லி அறுக்கச் சொல்ல வேண்டும்" என்று கடிந்து கொண்டான் அந்த இராஜபக்தன்.

"கோட்டைக் காவல்தலைவர், வள்ளுவருடைய திருக்குறளை நன்றாகப் படித்தவர் அப்பனே! 'யாகாவாராயினும் நாகாக்க' என்பது அவருக்கு அவசியம் தெரிந்திருக்கும். அவர் வேறு எதைக் காக்காமல் போனாலும் எங்களுடைய நாக்குகளையாவது தவறாமல் காப்பாற்றுவார்" என்று கூறிவிட்டுச் சிரித்தான் குறும்புக்கார வீரன்.

"விளையாட்டுப் பேச்சுப் போதும். வேறு யாருடைய காதிலாவது விழுந்துவிடப் போகிறது" என்று எச்சரித்துவிட்டு, மன்னர் பெருமான் கோட்டைக்குள் நுழைந்த போது வாழ்த்து முழக்கங்களையும் வாத்திய முழக்கங்களையும் ஏன் தடுத்து நிறுத்தினார் என்ற ஆராய்ச்சியில் இறங்கத் தலைப்பட்டான் இரண்டாவதாகப் பேசியவன்.

"ஆரவாரங்களை நம் அரசர் இப்போதெல்லாம் விரும்புவதில்லை."

"ஏன்?"

"மறுபடியும் இலங்காபுரித் தண்டநாயகன் படையெடுப்பு நடத்தக்கூடும் என்று எதிர்பார்த்துக் கவலை கொண்டிருக்கிறார். வீரபாண்டியரை விரட்டிவிட்டு நம் அரசர் மதுரையைக் கைப்பற்றிக் கொண்டதை அறிந்து இலங்காபுரித் தண்டநாயகன் சீறிக்கொண்டிருக்கிறானாம். அடிபட்ட நாகம் சும்மாவிடுமா?"

"அப்படியானால் மீண்டும் போர் வருவது உறுதிதானா?"

"ஒரு போர் வந்துவிட்டுப் போய்விட்டால்தான் பரவாயில்லையே! அடுத்தடுத்துப் பல போர்கள் வந்து கொண்டேயிருக்கும்."

"ஒன்றன்பின் ஒன்றாக நடந்த இரண்டு மூன்று போர்களால் மக்கள் இப்போதே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எப்போதும் போர் மயமாக இருந்தால் என்ன செய்வார்கள்?"

"யுத்தமென்றால்– கொற்றவர்களுக்கு வீர விளையாட்டு. குடிமக்களுக்கோ வேதனை."

"இது உனக்கும் எனக்கும் தெரிந்து என்ன பயன்? ஆட்சியுரிமைக்காகப் போராடுகின்ற அரசர்களுக்கல்லவா தெரிய வேண்டும்?"

"எல்லாம் அந்தச் சிங்கள தேசத்துக்காரர்களால் வந்த வினை. யாரோ எப்படியோ போகிறார்கள் என்று அவர்களுடைய வேலையைப் பார்த்துக் கொண்டு போக வேண்டியதுதானே..! தாயத்தினராகிய பாண்டிய மன்னர்களுக்குள் நடக்கும் உள்நாட்டுப் பூசலில் அவர்கள் எதற்குத் தலையை நீட்ட வேண்டும்..?"

இதை ஆமோதிப்பது போல் எல்லோரும் சிறிது நேரம் அமைதியாக இருந்தார்கள். இந்த நேரத்தில் கோட்டைக்கு வெளியே வெகுதூரத்தில் ஒரு குதிரை வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

“யாரோ வருகிறார்கள்” என்று ஒருவன் கூறவே, அனைவரும் கலைந்து அவரவர் இடங்களுக்குச் சென்று நின்று கொண்டார்கள்.

குதிரை கோட்டையை நெருங்கி ஆழமும் அகலமும் மிக்கதாகவும், போர்க்காலத்தில் திறந்து விடுவதற்காகக் கூண்டுக்குள் அடைக்கப்பட்ட கொடிய முதலைகள் வாயைப் பிளந்து கொண்டிருக்கும் அகழியின் மேல் பொருத்தப்பட்ட மரப்பாலத்தைக் கடந்து பிரதான வாயிலின் முன்வந்து நின்றது. தன்னுடைய கம்பீரமான தோற்றத்துடன் மானவர்மன் அக்குதிரையின் மேல் ஆரோகணித்திருந்தான்.

கோட்டையின் கீழ்ப்புறத்தில் நின்று கொண்டிருந்த வீரர்கள் மானவர்மன் காட்டிய முத்திரை மோதிரத்தைப் பார்த்துவிட்டு அவனுக்காகக் கோட்டையின் பெரிய கதவுகளில் ஒன்றை அவசர அவசரமாகத் திறந்துவிட்டார்கள். கதவு முழுக்கத் திறக்கப்படுவதற்கு முன்னரே– ஏற்பட்டிருந்த இடைவெளியின் வழியே தன்னுடைய வெள்ளைப் புரவியை விரைந்து செலுத்திய மானவர்மன் கோட்டையின் உட்புறத்திலும் தன் குதிரையின் வேகத்தைக் கொஞ்சமும் குறைக்காமல் கொண்டு போய், அரண்மனை அரச மண்டபத்தின் வாயிலில் நிறுத்திவிட்டுக் கீழே குதித்தான்.

அவனையும் அவனுடைய கயல் இலச்சினை பொறித்த *காவிதி முத்திரை மோதிரத்தையும் நன்கு பரிசோதித்துப் பார்த்த பின்னர் அவனை உள்ளே அழைத்துச் சென்ற வீரர்கள், இரண்டு மண்டபங்களைக் கடந்து மூன்றாவது மண்டபத்தை நெருங்குகின்ற போது கூப்பிடு தொலைவில் நின்று கொண்டு “இந்த மண்டபத்தின் கோடியில் திரும்பினால் வலதுபுறத்திலிருக்கும் அந்தரங்க மண்டபத்தில் அரசர் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்” என்று கூறிவிட்டு அங்கேயே தங்கிவிட்டார்கள். மானவர்மன் உள்ளே சென்று வலப்புறமாகத் திரும்பிய சிறிது நேரத்தில் அந்தரங்க மண்டபத்தின் கதவுகளில் பொருத்தப்பட்டிருந்த **‘கதவ மணி’கள் கலகல வென்று ஒலித்துவிட்டு ஓய்ந்தன.

---

*காவிதி என்பது தலைசிறந்த அதிகாரிகட்குப் பாண்டிய மன்னர்கள் அளித்த பட்டமாகும். காவிதிப் பட்டம் பெறுவோர்– காவிதிப் பூவும், காவிதி மோதிரமும், காவிதிப் புரவும் பெறுவர்.

ஒரு நாழிகை நேரம் கழிந்த பின், மீண்டும் அந்தரங்க மண்டபத்துக் 'கதவமணி'கள் ஒலித்த போது மன்னர் குலசேகர பாண்டியரும், மானவர்மனும் தங்களுடைய அந்தரங்க ஆலோசனைகளை முடித்துவிட்டு வெளியேறி வந்து கொண்டிருந்தார்கள். வீரர்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு முப்பது பாக தூரத்தில் வந்த போது, "யாரங்கே?" என்று மன்னர் குரல் கொடுத்தார்.

வீரர்கள் விரைந்து சென்று அவரை அணுகி வணக்கத்துடன் நின்றதும், "நீ போய் திருமுக ஒலையாளையும், திருமுக ஒலை நாயகனையும் அழைத்து வா! நீ போய் அஞ்சுகோட்டை நாடாழ்வாரையும், தளபதியையும் அவசரமாக அழைத்ததாகத் தெரியப்படுத்து" என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கட்டளையிட்டு அவர்களை அனுப்பி வைத்தார். பின்னர் மானவர்மனைப் பார்த்துச் சொன்னார்.

"எப்போதெல்லாம் நான் சோர்ந்து தெம்பிழந்து போகிறேனோ— அப்போதெல்லாம் நீங்கள் வந்து, ஆறுதல் கூறி அரிய வழி காட்டுகின்றீர்கள். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை மானவர்மரே!"

"வேந்தே! நான் செய்து வரும் காரியங்கள் உங்களுக்காகவோ உங்கள் பாண்டிய தேசத்திற்காகவோ மட்டும் அல்ல. தன்னிகரற்ற இந்தத் தமிழ் மண்ணில் அந்நியரின் ஆதிக்கம் தலைப்பட்டுவிடக் கூடாதென்பதற்காகத்தான் என்னுடைய தலைவரின் கட்டளைப்படி இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். வெகு காலமாகவே சோழப் புலிகளுக்கு அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த சிங்களத்துச் சிறகுச் சிங்கங்கள், அதிராசேந்திரரின் காலத்திற்குப் பிறகு தலையெடுத்து அட்டகாசம் புரிந்து வருகின்றன. இப்போது பாண்டிய நாட்டின் உள்நாட்டுப் பூசலில் சிங்களர்கள் வெற்றி பெறுவார்களேயானால்— மெல்ல மெல்ல இந்தத் தமிழ் பூமி மாற்றாரின் கொள்ளைக்கு

---

**வாயிற்கதவுகளில் பொருத்தப்பட்டிருந்த 'கதவ மணிகள்' கதவு திறக்கப்படும் போதும், மூடப்படும் போதும் ஓசையை எழுப்பி, ஆட்கள் நுழைவதையும், வெளியேறுவதையும் அறிவித்துவிடக்கூடியவை.

ஆளாகிக் குலைந்து போய்விடும். தமிழரின் அமுத மொழியும், அழகுக் கலையும் அற்புதமான நாகரிகமும் அடிச்சுவடற்று அழிந்து போய்விடும். அந்த அழிவு ஏற்பட்டுவிடாமல் இந்தத் தமிழ் மண்ணைக் காப்பாற்றித் தீரவேண்டும் என்று என்னுடைய தலைவர் சூளுரைத்திருக்கிறார். அவர் இட்ட கட்டளைக்கு ஏற்ப நான் சுற்றி வந்து கொண்டிருக்கிறேன்."

"இந்தப் புனிதமான பணியில் ஈடுபட்டிருக்கும் உங்களையும் உங்களுடைய தலைவரையும் இன்னாரென்று நான், தெரிந்து கொள்ளக் கூடாதா?"

"நேரம் வரும்போது நான் யார் என்பதும் என்னுடைய தலைவர் யார் என்பதும் உங்களுக்குத் தானாகவே தெரிந்துவிடும். அந்த நாளில் அந்த நேரத்தில் நீங்கள் அடையப் போகிற பேராச்சரியத்திற்காகவும் பெரு மகிழ்ச்சிக்காகவும் அது வரை நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறிக் கொண்டே மன்னருடன் நடந்து மண்டபத்தின் வாயிலுக்கு வந்து சேர்ந்திருந்த மானவர்மன், "வேந்தே, நான் விடைபெற்றுக் கொள்ள வேண்டிய வேளை வந்துவிட்டது" என்றான். "நான் கூறியதெல்லாம் நினைவிருக்கிறதல்லவா? பாசத்தின் காரணமாக உங்கள் புதல்வரை உங்கள் பக்கத்திலேயே வைத்துக் கொண்டிருக்கமாட்டீர்களே?" என்று கேட்டான்.

"இல்லை மானவர்மரே! விக்கிரமனைத் தென்னவன் ஆபத்துதவிகளோடு இப்போதே அனுப்பி வைத்துவிடுகிறேன். மற்ற காரியங்களையும், நீங்கள் கூறியபடியே செய்துவிடுகிறேன்."

"நான் கொடுத்த கணையாழியைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். கங்கைகொண்ட சோழபுரத்தின் கதவுகளைத் தட்ட வேண்டிய அவசியம் உங்களுக்கு எப்போதாவது ஏற்படுமானால் அது உதவும்."

"சிங்கத்தின் வாயிலிருந்து தப்பிப் புலியின் வாய்க்குள் தலையைவிட நான் தயாராக இல்லை மானவர்மரே."

"நல்லது, நான் புறப்படுகின்றேன்."

"நீங்கள் நெடுங்காலம் வாழ வேண்டும். நிச்சயமாக நெடுங்காலம் வாழ்வீர்கள்! இலங்காபுரித் தண்டநாயகனுடைய குத்துக்

கத்தியிலிருந்தே தப்பி வந்திருக்கக்கூடிய உங்களை நெருங்குவதற்கு எமனுக்குக்கூடத் தைரியம் வராது" என்று கூறி அரச மண்டபத்தின் நுழைவாயில் முகப்புவரை உடன் நடந்து மாணவர்மனுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டுத் திரும்பினார் மன்னர்.

சிறிது நேரத்தில் கோட்டைக் காவல் தலைவரும், தளபதியும் அவசரமாக வந்து சேர்ந்தார்கள். மன்னரை வணங்கிவிட்டு அவருடைய கட்டளைக்காகக் காத்திருந்தவர்கள், "ஜெகத்விஜயத் தண்டநாயகன் பெரும் படையோடு புறப்பட்டு வருகிறானாம். இலங்காபுரித் தண்டநாயகனுக்கு ஈழத்திலிருந்து திருமுக ஒலை வந்திருக்கிறது" என்று கூறி மன்னர் நீட்டிய ஒலை நறுக்கினை வாங்கிப் படித்துப் பார்த்தார்கள். படித்து முடித்துவிட்டு நிமிர்ந்த போது அவர்களுடைய முகம் வேர்த்திருந்தது. ஒலையைப் பிடித்திருந்த கரங்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.

ஒலையைப் பிடித்திருந்த கரங்கள் மட்டுமா நடுங்கிக் கொண்டிருந்தன? மன்னரின் உயிரும், இளவரசன் விக்கிரமனின் உயிரும், பாண்டிய மண்டலத்தின் எதிர்காலமும் ஒன்றாகச் சேர்ந்தல்லவா, அந்த ஒலையின் உள்ளே நடுங்கிக் கொண்டிருந்தன!

# 05. மறுபடியும் நீதானா?

நெடுந்தூரம் ஓடிக் களைத்த புரவி அருகில் தென்பட்ட நீரோடையைப் பார்த்துச் சற்றுத் தயங்கவே, அதன் மேல் அமர்ந்திருந்த கங்கச் சிற்றரசன் ஆகவமல்லன் தன் பயணத்தை நிறுத்திக் கொண்டு கீழே இறங்கினான். சில்லென்ற குளிர்ச்சியுடன் ஓடிக்கொண்டிருந்த நீரை அள்ளிப் பருகிவிட்டு நிமிர்ந்த போது அந்த அழகிய காட்சி அவனுடைய கண்ணில்பட்டது.

அங்கே– சிறிது தொலைவில், கரை ஓரத்தில் நின்ற புளியமரத்தின் மறைவில், குளித்து முடித்துவிட்டு வந்திருந்த ஓர் இளம் பெண் தலையைக் கோதிவிட்டுக் கொண்டிருந்தாள்.

அவளது ஈரம் படிந்த புடவையின் கட்டுக்காவலை அவளது சொந்த அழகுகளே மீறிக்கொண்டிருந்தன.

ஓடையிலிருந்து அப்போதுதான் எழுந்து வந்திருந்த அவளது உடம்பிலிருந்து நீர்த்திவலைகள் சொட்டுச் சொட்டாய் உதிர்ந்து கொண்டிருந்தன.

அந்த இளமையின் அழகு– காண்பவரின் இதயத்தையும் சொட்டுச் சொட்டாய் உருகி உதிர்ந்துவிடுமாறு செய்யக் கூடியதாய் இருந்தது.

ஆகவமல்லன் தன் கண்களை அக்காட்சியிலிருந்துவிடுவித்துக் கொள்ள முற்பட்டான். சோழ தேசத்தின் அந்தஸ்துமிக்க ஒரு சிற்றரசன் நீரோடையில் குளித்துவிட்டு நிற்கும் எவளையோ பார்த்துக் கொண்டு நிலை தடுமாறி நிற்பதா? யாராவது பார்த்தால் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

தண்ணீர் குடித்து முடித்துவிட்டு நின்றிருந்த தன் குதிரையை நோக்கி நடந்தான். தற்செயலாக அவனுடைய கண்கள் மீண்டும் அவள் பக்கம் திரும்பின. அப்போது அவள் அவனைப் பார்த்துப் புன்னகை செய்து கொண்டிருப்பது போல் தெரிந்தது.

குளித்துவிட்டு ஈரத்துகிலுடன் நிற்கும் தன்னை ஓர் அந்நிய ஆடவன் உற்றுப் பார்ப்பதைக் கண்டு கூச்சமடையாமல், என் செயலுக்காக நானே கூச்சப்படும்படி ஏளனப் புன்னகை பூக்கிறாளோ?

காவிரிக் கரையில் வளர்ந்த பெண்களுக்கே குறும்பும் நெஞ்சுரமும் கொஞ்சம் அதிகம்தான்.

குதிரையின் மீது தாவியமர்ந்து புறப்பட்டவன் அந்தப் பெண் தன்னை நோக்கிச் சத்தமிட்டபடி ஓடி வருவதைக் கண்டான். ஈரப்புடவையாதலால் அவளால் வேகமாக ஓடிவர இயலவில்லையென்பதையும் அறிந்தான். அவள் எதற்காகத் தன்னை நோக்கி ஓடிவர வேண்டும் என்று புரியாமல் திகைப்படைந்தான்.

புறப்படத் தயாரான குதிரையை நிறுத்திக் கொண்டு அவள் அருகில் வரும்வரை காத்திருந்த ஆகவமல்லன் கேட்டான்.

"பெண்ணே! ஆண்கள்தான் பெண்களைத் துரத்துவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இதென்ன ஆச்சரியம்!"

அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு நாணமுற்ற அவள், தலையைக் குனிந்து கொண்டபடி, ஓடி வந்ததால் அங்கங்கே ஒதுங்கிக் கிடந்த தன் புடவையை ஒழுங்கு செய்தாள்.

மூச்சு வாங்க ஓடி வந்ததால் அவளுடைய உடல் மேலும் கீழுமாய் எழும்பித் தணிந்து கொண்டிருந்தது. உடலுடன் ஒட்டிக் கிடந்த புடவையின் கட்டு எந்தச் சமயத்தில் விட்டுவிடப் போகிறதோ என்ற அச்சமும் அவளிடம் தோன்றியது.

அவளைக் கிண்டல் செய்வது போல் ஆகவமல்லன் கேட்டான்: "பெண்ணே! இத்தகைய சூழ்நிலையில், சாதாரணமாக ஆடவன்தான் தனக்கு ஏதாவது வேண்டுமென்று பெண்ணிடம் கெஞ்சியும் கொஞ்சியும் கேட்டுக் கொண்டிருப்பான்.. நான் உன்னைக் கேட்கிறேன். உனக்கு என்ன வேண்டும்?"

அவள் வெட்கப்பட்டுக் கொண்டே பதிலுரைத்தாள்.

"ஐயா! அருகிலிருக்கிற விக்கிரம சோழவிடுதியில் மோகனா அக்காள் தங்கி இருக்கிறார்கள்."

"யார்? நடன கலாராணி மோகனசுந்தரியா?"

"ஆமாம். கங்கைகொண்ட சோழபுரத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம். நான் அவர்களுடைய நாட்டியக் குழுவைச் சேர்ந்தவள்."

"நல்லவேளை, உன்னைச் சந்திக்காதிருந்தால் சதுர்வேதி மங்கலத்திற்குப் போய்த் தேடிவிட்டு மோகனாவைக் காணாத ஏமாற்றத்துடன் திரும்பியிருப்பேன்" என்று கூறிய ஆகவமல்லன், "உன்னை இந்த நிலைமையில் இப்படிப் பார்த்ததானது உடனடியாக

மோகனசுந்தரியைச் சந்திக்க வேண்டிய அவசியத்தையும் உண்டாக்கியிருக்கிறது” என்று சொல்லிச் சிரித்துவிட்டுப் புரவியை விக்கிரம சோழவிடுதியை நோக்கித் திருப்பினான்.

“கண்களை நம்ப முடியவில்லையே! கங்கச் சிற்றரசரா வந்திருக்கிறார்?” என்று வியப்புடன் கேட்டாள் மோகனசுந்தரி.

“நானும்தான் நம்பவில்லை. நாட்டிய ராணியை இப்படி நடுக்காட்டிலே சந்திக்க வாய்ப்புக் கிடைக்குமென்று” என்று நின்று கொண்டே பதிலுரைத்தான் ஆகவமல்லன்.

“உட்கார்ந்து பேசக்கூட ஒய்வில்லை போலிருக்கிறது.”

“உட்கார்ந்து பேசிவிட்டு மட்டும் போய்விடுவதாக உத்தேசமில்லை மோகனா.”

“அடேயப்பா! ஆளும் குலத்தில் பிறந்தவர்களுக்கு— ஆசை காட்டும் கலைதான் அரிச்சுவடி போலிருக்கிறது.”

“ஆளும் குலத்தில் பிறந்து என்ன பயன்? பெண்கள் அல்லவா ஆளும் குலத்தையும் “ஆளும் குலமாக இருக்கிறார்கள்!”

“ஆமாம். வெறும் வார்த்தைகளில் மட்டும்..” என்று மோகனசுந்தரி சிணுங்கினாள்.

“கோபித்துக் கொள்ளாதே மோகனா! அவசரமான அரசியல் காரணங்களால்தான் இதுநாள் வரை உன்னை வந்து சந்திக்க முடியவில்லை.”

“பரவாயில்லை. நாட்டைக் கவனிக்க வேண்டிய பெரிய மனிதர்கள் நாட்டியக்காரியைக் கவனித்துக் கொண்டிருக்க முடியுமா?”

“நாட்டியக்காரியைக் கவனித்துக் கொண்டிருப்பதும் பெரிய மனித லட்சணங்களில் ஒன்றுதான்” என்றான் ஆகவமல்லன்.

“நாட்டியக்காரியைக் கவனிக்கத்தானே இப்போது வந்திருக்கிறேன்” என்று மீண்டும் கூறியபடியே அவளை மேலும் கீழுமாய் உற்றுப் பார்த்தவன், திடீர் என்று தன் கைகளை நீட்டி அவளை அருகில் இழுத்து இறுக அணைத்துக் கொண்டான்.

ஆளும் குலம்— ஆடும் குலம்— என்ற பேதங்கள் மறைந்து அங்கே ஒன்றே குலம்— என்ற உயர்ந்த தத்துவம் உருவாகிக் கொண்டிருந்தது.

விக்கிரம சோழவிடுதியின் அறை ஒன்றில், மோகனசுந்தரியின் நறுமணம் மிகுந்த கூந்தலை வலது கரத்தால் வருடிவிட்டபடி, இடது கரத்தால் அவளைத் தன்னோடு சேர்த்து இறுகத் தழுவிக் கொண்டிருந்தான் ஆகவமல்லன்.

அவனது அகன்ற மார்பில் பதிந்திருந்த தன் முகத்தை மெதுவாக உயர்த்தி, அவனது கன்னத்தில் தன் கன்னங்களை மாற்றி மாற்றி இழையவிட்டபடி மோகனசுந்தரி கேட்டாள்.

“அன்பரே! உங்களிடம் ஒன்று கேட்பேன். கோபித்துக் கொள்ளமாட்டீர்களே?”

தன் வலது கரத்தைக் கூந்தலிலிருந்து சரியவிட்டு வழவழப்பான அவளது முதுகுப்புறங்களைத் தடவியபடி, கீழே கீழே இன்னும் கீழே தன் கையை இறங்கவிட்டுக் கொண்டிருந்த ஆகவமல்லன் இடது கையால் அவளைத் தன்னுடன் சேர்த்து இறுக்கிக் கொண்டே கேட்டான்.

“உன்னோடு கோபித்துக் கொள்ள எனக்கு மனம் வருமா? அதுவும் இத்தகைய சந்தர்ப்பங்களில் கோபித்துக் கொண்டால் எனக்குத்தானே இழப்பு?”

தன் பழ இதழ்களை அவன் கன்னத்தில் பரவவிட்ட மோகனசுந்தரி, “இல்லை, இத்தகைய சந்தர்ப்பங்களில் கோபித்துக் கொண்டாலும்கூட ஆண்களுக்கு இழப்பு ஏற்படுவதில்லை” என்றாள்.

“எப்படி?” என்று கேட்டான் ஆகவமல்லன், தன் கைகளுக்குக் கொஞ்சமும் கட்டுப்பாடு விதிக்காமலே.

“கோபத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காகப் பெண்கள் இன்னும் அதிகமாகக் குழையத் தொடங்கிவிடுவார்கள்” என்று சொல்லி முடித்த மோகனசுந்தரி குறுகுறுவென்று கூச்சத்தில் நெளிய நேர்ந்தது.

“குழையத் தொடங்கிப் பயனில்லை. கொடுக்கத் தொடங்க வேண்டும்” என்று கூறியபடியே ஆகவமல்லன், வலது கையைத் தன் இச்சைப்படியே செயல்பட விட்டுவிட்டு இடது கையால் மட்டுமே அவளை இறுக்கித் தூக்கினான்.

“தாமதமாகக் கிடைக்கிற பெரிய பயனைவிடத் தக்க சமயத்தில் கிடைக்கிற சிறிய பயனே சிறந்தது” என்றபடி அவளை மஞ்சத்தில் கிடத்தினான்.

“அரசியலிலும் சரி—அந்தப்புரத்திலும் சரி— எதிலுமே நீங்கள் அவசரக்காரர்தான்.”

“ஆகட்டும் அம்மணி! கொஞ்ச நேரத்துக்குக் கொஞ்சாமல் இருக்கிறேன். கோபிக்காமலும் இருக்கிறேன். கேட்க விரும்பிய கேள்வியைக் கேள்” என்று சிரித்தான் அவன்.

“எதற்காக நீங்கள் பல்லவராயரை எதிர்க்கிறீர்கள்?”

அகழியைத் தூர்த்து, மதிலை நெருங்கி ஏணியில் ஏறிக் கோட்டையின் உச்சியைப் போய் அடையவிருந்த நேரத்தில், பகை வீரனைச் சட்டென்று பற்றித் தூக்கித் தலைகீழாய் வீசிவிட்டெறிந்த மதிற்பொறியைப் போல் வெளிப்பட்டது அவளது கேள்வி.

ஆகவமல்லனை மோக லாகிரியிலிருந்து மீட்ட அந்தக் கேள்வி, அவனைக் கசப்பான ஞாபகங்களில் காலூன்ற வைத்தது.

மஞ்சத்தில் கிடந்த மோகனசுந்தரியை ஒருமுறை பார்த்துவிட்டு மௌனமாகத் திரும்பிக் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். சிறிது நேரம் கழித்துக் குரோதம் பொங்கும் குரலில் கூறினான்.

“அந்தக் கிழட்டுச் சேனைநாயகனால்தான் என் அரசியல் எதிர்காலமே அஸ்தமித்துக் கொண்டிருக்கிறது.”

“ஏன்— சிற்றரசர்களிலேயே இப்போது உங்களுக்குத்தானே அந்தஸ்தும் செல்வாக்கும் அதிகம்?”

“முழு வல்லமை படைத்த சோழ சாம்ராஜ்யத்திற்கே முதலமைச்சராக வந்திருக்க வேண்டியவன் நான். சின்னச் சிற்றரசனுக்கு இருக்கும் செல்வாக்கில் எப்படித் திருப்தி கொள்ள முடியும்? என்னைவிடப் பன்மடங்கு கீழே இருந்தவர்களெல்லாம் எங்கெங்கோ போய்விட்டார்கள்.” —ஆகவமல்லன் பெருமூச்சுவிட்டான்.

“அதற்குச் சேனைநாயகர் என்ன செய்வார்?” என்று கேட்டாள் ஆடலழகி.

"அந்தக் கிழவன் செய்த சதிதான் என்னைக் கீழே இறக்கிவிட்டது. காலஞ்சென்ற மன்னர் பெரியதேவர் இராசராசரிடத்தில் எனக்கு இருந்த செல்வாக்கு எப்படிப்பட்டது தெரியுமா? அவரது அந்திம காலத்தில் அவர் அருகிலேயே இருந்தவன் நான். இப்போது மன்னராகி மகுடம் தரித்து இராசாதிராசர் என்று பெயர் சூட்டிக் கொண்டு வீற்றிருக்கிறாரே இந்த எதிரிலிப் பெருமாளைப் பெரியதேவரின் கட்டளைப்படி கங்கைகொண்ட சோழபுரம் சென்று கையோடு அழைத்து வந்ததே நான்தான்."

"எதிரிலிப் பெருமாளா?"

"ஆம், அதுதான் இன்றைய சக்கரவர்த்தி பூர்வஜன்மத்தில் பூண்டிருந்த பெயர். அவருடைய தந்தையின் பெயர் நெறியுடைப் பெருமாள். பெரிய நாயனார் விக்கிரம சோழருக்குப் பெண் வயிற்றுப் பேரர்தான் இந்த எதிரிலிப் பெருமாள்."

"அப்படியா?"

"ஆமாம். எதிரிலிப் பெருமாளுக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிட்டு மன்னர் இராசராசர் மரணமடைந்தார். காலியாக இருந்த முதலமைச்சர் பதவி எனக்கே கிடைக்கும் என்று பெரிய அதிகாரிகளெல்லாம் பேசிக் கொண்டார்கள். ஆனால் நடந்தது என்ன தெரியுமா? சேனைநாயகனாக இருந்த பல்லவராயனே அந்தப் பதவியையும் அபகரித்துக் கொண்டான்."

"ஒருவரே இரண்டு பதவிகள் வகிக்க மற்றவர்கள் எவ்வாறு உடன்பட்டார்கள்?"

"என்ன மாயம் செய்தானோ தெரியவில்லை. மந்திரி மண்டலத்தாரும் மற்றவர்களும் அந்த இக்கட்டான சூழ்நிலையில் சேனைநாயகரே முதலமைச்சராகவும் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். மறுப்பது போல் மறுத்துவிட்டுக் கடைசியில் பல்லவராயனும் எனக்குக் கிடைக்க வேண்டிய பதவியைத் தானே பறித்துக் கொண்டான். அத்தனை அதிகாரங்களும் படிப்படியாக அவனிடம் வந்துவிட்டன. அரசனும் அவனுடைய கைப்பாவையாகிவிட்டான்."

"அரசரை நீங்கள் தானே கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து அழைத்து வந்ததாகக் கூறினீர்கள்?"

"ஆமாம். ஆனால் உயர்ந்த பதவிகளுக்குப் போய்விட்டால்—மனிதர்கள் வெகு சீக்கிரம் வந்த வழியை மறந்துவிடுகிறார்களே! கிடைத்த பதவியைக் காப்பாற்றிக் கொள்வதில்தானே அவர்களுடைய கவனமும் காலமும் செல்கிறது" என்று இரங்கிய குரலில் வருத்தத்தோடு கூறினான் ஆகவமல்லன்.

"பல்லவராயருக்கு உங்கள் மீது என்ன வன்மம்?"

"என்னவென்றே தெரியவில்லை. அறிமுகமான நாளிலிருந்தே அந்த கிழவனுக்கு என்னைப் பிடிக்கவில்லை. எப்படிக் கிழவர்களைத் திருப்திப்படுத்துவதென்று எனக்கும் தெரியவில்லை."

"எனக்குத் தெரியும்" என்று இளநகை பூத்தாள் மோகனசுந்தரி.

"ரசனையற்ற கிழவன் அவன். அவனிடம் உன் ரசவாதம் எடுபடாது" என்ற ஆகவமல்லன், "எங்கேயோ கிடந்த எதிரிலிப் பெருமாள் இராசாதிராசனாகிவிட்டான். நானோ.." என்று பொருமினான்.

"இப்போதைய மன்னருக்கு இந்த ஆட்சியில் உண்மையான உரிமை கிடையாதா?"

"கிடையாது. உண்மையான உரிமையுடைய இளவரசன் குலோத்துங்கனைப் பல்லவராயன் எங்கேயோ பதுக்கி வைத்திருக்கிறான்."

"குலோத்துங்கனுக்கு முடிசூட்டாமல் இராசாதிராசரே இன்னும் ஆட்சியில் இருப்பது ஏன்?"

"அப்படிக் கேள்! அதைத்தான் நானும் என் சகாக்களும் கேட்கிறோம். ஆட்சியை எதிர்ப்பதாக எங்கள் மீது அவதூறு சொல்கிறார்கள்."

"நாடெங்கும் கலகங்கள் நடந்தனவே.."

"உதிரியாக நடக்கும் கலவரங்களால் என்ன பயன்? ஒட்டு மொத்தமாகத் திரண்டு எதிர்த்தாலன்றிப் பல்லவராயன் பணியமாட்டான்."

"பல்லவராயரையோ அரசரையோ நீங்கள் எதிர்ப்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் உங்கள் கலகங்களால் நாம் பிறந்த இந்த நாடு சிதைந்து போய்விடக் கூடாது. அத்தகைய

காரியங்களில் மட்டும் நீங்கள் ஒரு போதும் ஈடுபடக்கூடாது" என்றாள் மோகனசுந்தரி.

தீவிரமான சிந்தனையோடு பேசிக் கொண்டிருந்த ஆகவமல்லன், அவளது திடீர் வேண்டுகோளைக் கேட்டுச் சிரித்துவிட்டான்.

"பெண்ணே! சாதாரண நாட்டியக்காரி நீ. நாட்டுப் பற்று உனக்கெதற்கு? நாடாளும் மன்னர்களிடம் நாட்டுப் பற்று இருந்தால் அது அவர்களுக்கு அதிகாரத்தையும் ஆட்சி உரிமையையும் கொடுக்கும். உனக்கென்ன கொடுக்கும்?"

"அன்பரே பெற்றெடுத்த நாடு பெருமையுடன் இருந்தால்தானே நாமும் பெருமையோடு நடமாட முடியும்?"

"அது அரசியல் தெரியாத அப்பாவிகளின் பேச்சு. பிறந்த வீட்டின் மீதும் பிறந்த நாட்டின் மீதும் பெண்களுக்குக் கண்மூடித்தனமான பற்று இருப்பதால்தான் தாய் வீடு என்றும் தாய்நாடு என்றும் சொல்கிறார்கள் போலிருக்கிறது" என்று கூறிய ஆகவமல்லன், மெதுவாகச் சிரித்துக் கொண்டே மஞ்சத்தை நெருங்கினான்.

"பற்றுகளையெல்லாம் கடந்தவன் நான். எனக்கு இப்போதிருக்கும் ஒரே பற்று உன்னைப் பற்றித் தழுவிக் கொள்கிற பற்றுத்தான்" என்றபடி அவள் பக்கத்தில் அமர்ந்தான்.

மெல்ல மெல்ல அவள் மேனியில் படர்ந்து தன் ஆசைக்குரிய அந்த அழகுப் பிரதேசத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தன் ஆளுகைக்குள் கொண்டுவர முயன்று கொண்டிருந்தான்.

விடுதியின் வாயிற்புறத்தில் திடீரென்று சில குதிரைகளின் குளம்போசை கேட்டது. சிறிது நேரத்தில் அவர்களிருந்த அறையின் கதவு தடதடவென்று தட்டப்பட்டது. விருட்டென்று தன்னைவிடுவித்துக் கொண்டு எழுந்த ஆகவமல்லன், "மோகனா! என்ன செய்தியென்று விசாரித்துக் கொண்டு வந்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியேறினான்.

கலைந்திருந்த கூந்தலையும் உடைகளையும் சீர்படுத்திக் கொள்ள நினைத்த மோகனசுந்தரி, அவை மீண்டும் கலையத்தானே போகின்றன என்று எண்ணிச் சோம்பல் கொண்டவளாய் அப்படியே மஞ்சத்தில் கிடந்தாள். ஆகவமல்லன் திரும்பி வருவதற்குச் சற்று நேரமாகியது.

பரபரப்போடு திரும்பியவன், கோபங் கொண்ட குரலில் கூறினான்: "தலைநகரிலிருந்து செய்தி வந்திருக்கிறது மோகனா! சேந்தன் ஆதித்தனைப் பதவியிலிருந்து நீக்கியிருக்கிறாராம் அரசர். மறுபடியும் கலவரம் தொடங்குகிறது. இந்த ஆட்சியின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள எனக்கொரு புதிய காரணம் கிடைத்திருக்கிறது. இவர்களை நான் சும்மாவிடப் போவதில்லை. அவசரமான காரியங்கள் எனக்கு இருக்கின்றன. உடனே புறப்படுகிறேன். உனக்கும் உன் நாட்டியக் குழுவிற்கும் பாதுகாப்பாக என் வீரர்கள் இருவரைவிட்டுச் செல்கிறேன். கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வந்து சேர். அங்கு சந்திக்கலாம்."

இடியென முழங்கிவிட்டுப் புயலென வெளியேறினான் ஆகவமல்லன். இவன் தானா மதிமயங்கிப் போய் மஞ்சத்தில் கிடந்தவன் என்று மோகனசுந்தரி திகைத்தாள். அதிகாரம்தான் மனிதர்களுக்கு அதிக போதை தரும் போலிருக்கிறது என்று நினைத்தாள்.

அவன் சென்ற சிறிது நேரத்தில் குதிரைகளின் காலடியோசை கேட்டது. கொஞ்சங் கொஞ்சமாய் அது குறைந்து மறைந்துவிடவே, ஆகவமல்லன் புறப்பட்டுப் போய்விட்டான் என்பதை மோகனசுந்தரி அறிந்து கொண்டாள். மனத்தில் ஏதேதோ யோசனைகள் வட்டமிட மஞ்சத்தையே குனிந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

"தேவி! பகல் போஜனத்துக்குப் பிறகு புறப்படுமாறு கங்கச் சிற்றரசர் கட்டளையிட்டுள்ளார். இதைத் தங்கள் நாட்டியக் குழுவைச் சேர்ந்தவர்களுக்கும் அறிவித்து ஆயத்தப்படுத்தட்டுமா?" என்ற குரலைக் கேட்டுவிட்டுத் தலை நிமிர்ந்தவள், அப்படிக் கேட்ட வீரனை ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

"மறுபடியும் நீதானா?" என்ற சொற்கள் அவள் வாயிலிருந்து வெளிப்பட்டன.

எதிரே— இளந்தேவன் நின்று கொண்டிருந்தான்.

# ௧௬. கங்கைகொண்ட சோழபுரத்தில் கலவரம்

கங்கைகொண்ட சோழபுரத்தின் அரண்மனை அன்று காலைப் பொழுதிலிருந்தே கலகலத்துக் கொண்டிருந்தது. சோழ தேசத்தின் சில பகுதிகளில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த சிற்றரசர்களும், அரசாங்கத்தில் உயர்பதவி வகித்து வந்த சில அதிகாரிகளும், வாரியப் பெருமக்கள், ஆளுங்கணத்தார் இவர்களில் செல்வாக்குமிக்க தலைவர்கள் சிலருமாகப் பல்வேறு ஊர்களிலிருந்து புறப்பட்டு அரண்மனை விருந்தினர் மாளிகையில் வந்து கூடியிருந்தார்கள்.

விருந்தினர் மாளிகையில் அவர்களுடைய விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், அரண்மனையில்—சக்கரவர்த்தி இராசாதிராசர், சோழ நாட்டின் தனாதிகாரியான வேதவனமுடையான் அம்மையப்பனுடன் ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார். இராசாதிராசருடைய ஆட்சிக்கு ஏற்பட்டிருந்த புதிய நெருக்கடியைப் பற்றி வேதவனமுடையான் விவரித்துக் கொண்டிருந்தான்.

“வேந்தே! சேந்தன் ஆதித்தனை மறுபடியும் நாடு காவல் அதிகாரியாக நியமிக்க வேண்டுமென்று தங்களை வேண்டிக் கொள்வதற்காகத்தான் அவசரமாகப் புறப்பட்டு வந்திருக்கிறார்களாம்.”

வேதவனமுடையான் கூறிய வார்த்தைகளைக் கேட்டுச் சக்கரவர்த்தி வருத்தம் தொனிக்கும் குரலில் மெல்லச் சிரித்துவிட்டுச் சொன்னார்:

“இந்தப் பொய்யான காரணத்தை நீங்களுமா நம்புகிறீர்? ஒரு சாதாரண நாடுகாவல் அதிகாரியாக இருந்த சேந்தன் ஆதித்தனுக்குப் பரிந்து பேசுவதற்காகவா இவ்வளவு பேரும் ஒன்றாகத் திரண்டு வந்திருக்கிறார்கள்? இல்லை, எனக்கும் என்னுடைய ஆட்சிக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு இவர்களுக்கெல்லாம் ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அவ்வளவுதான்.”

வேதவனமுடையான் எதுவும் பேசாமல் நின்று கொண்டிருந்தான். மாமன்னர் மேலும் தொடர்ந்தார். "பல்லவராயருடைய கண்காணிப்பில் இயங்கும் *ஒற்றர் படையும், *சாரணர் படையும் அவ்வப்போது எல்லாச் செய்திகளையும் அனுப்பிக் கொண்டுதான் இருக்கின்றன. சிம்மாசனத்தையும், செங்கோலையும் விட்டுவிட மனமில்லாமல் நான் விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருப்பதாய் மற்றவர்கள் நினைக்கிறார்கள். பெரிய தேவர் இராசராசர் தன்னுடைய மரணப்படுக்கையில் எனக்கிட்ட கட்டளையும் ***சேனைநாயகர் பெருமான் நம்பிப் பல்லவராயரது வேண்டுகோளும்தான் என்னைத் தடுத்துக் கொண்டிருக்கின்றன. இல்லாவிட்டால் இந்தப் பெரிய தேசத்தைக் குலோத்துங்கனுடைய பிஞ்சுக் கரங்களில் ஒப்படைத்துவிட்டு, தேவாரத்தையும் திருவாசகத்தையும் கைகளில் எடுத்துக் கொண்டு எப்போதோ தேசாந்திரம் போயிருப்பேன். மனத்தை இளக்கி உள்ளத்தை உருக்கி எண்ணங்களை இலேசாக்கிவிடும் தேவாரம், திருவாசகம் போன்ற தெய்வீகப் பாடல்களைக் காட்டிலும், ஆணவத்தை உண்டாக்கி அதிகாரப் போதை தந்து, மனத்தை இரும்பாக்கும் சிம்மாசனமும் செங்கோலுமா உயர்ந்தவை?"

மாமன்னரது வார்த்தைகள் வேதவனமுடையானது மனத்தை நெகிழ வைத்தன.

"அரசே! இந்த நெருக்கடியான நேரத்தில் சேனைநாயகர் கூடத் தலைநகரில் இல்லை. அவர் இருந்தாலாவது.."

"ஆமாம்; பல்லவராயர் இருந்தால் இந்த நெருக்கடியைச் சமாளித்துவிடுவார். என்ன செய்வது? வரக்கூடாத நேரம் வருகிற போது– வரக்கூடியவர்கள் கூட வராமல் போய்விடுகிறார்கள். அவர் தலைநகரைவிட்டுப் போய் ஒரு திங்களுக்கு மேலாகிறது. எங்கிருக்கிறார், என்ன செய்கிறார் என்பது பற்றி எதுவுமே தெரியவில்லை. அவரைத் தேடி அழைத்து வருவதற்காக என்னுடைய

---

*ஒற்றர்– உருமாறிப் பகைநாடெலாம் சென்று உளவு அறிபவர்.

**சாரணர் நாடெலாம் சுற்றித் திரிந்து செய்தி கொணர்வோர்.

***சேனைநாயகர் நாற்படைத் தலைவர்.

அந்தரங்க ஒற்றனைக் கூட அனுப்பி வைத்தேன். இதுவரை எந்தத் தகவலும் இல்லை.”

“வேந்தே! தாங்கள் தவறாக நினைக்காமலிருந்தால் நான் ஒரு யோசனை சொல்கிறேன்.”

“சொல்லலாம்.”

“சக்கரவர்த்தியவர்கள் ஓர் அவசர காரியமாகத் தலைநகரைவிட்டுப் புறப்படுவதாகத் தெரிவித்து, நடைபெறவிருக்கும் அரசவைக் கூட்டத்தைத் தள்ளி வைத்துவிடலாம். சேனைநாயகர் வந்த பிறகு அவருடன் கலந்து கொண்டு முடிவு செய்யலாம்.”

“அது முடியாது. பிரச்சனைகளைத் தள்ளி வைத்துக் கொண்டு போவது சில சமயங்களில் மட்டும்தான் நன்மை தரும். பல சமயங்களில் அதுவே நம்மை எதிர்ப்பவர்களுக்கு— அவர்களுடைய சக்தியையெல்லாம் ஒருமித்து ஒன்று கூட்டி முன்னிலும் பன்மடங்கு ஆற்றலோடு நம்மை எதிர்ப்பதற்குரிய வசதியைக் கொடுத்துவிடும். கங்க நாட்டுச் சிற்றரசன் ஆகவமல்லன் சோழ நாட்டுச் சிற்றரசர்களையும் அதிகாரிகளையும் தலைவர்களையும் மெல்ல மெல்ல எனக்கு எதிராகத் திருப்பி வருகிறானாம். இந்த நிலையில் இதைத் தள்ளி வைப்பது எவ்வகையிலும் நல்லதல்ல. அதோடு தனிப்பட்ட முறையில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வலிமையற்ற கோழையைப் போல் விலகிச் செல்வதை நான் விரும்பவில்லை. முடிவு எதுவானாலும் எதிர்கொள்ளவே விரும்புகிறேன். முடிந்தால் பிரச்சினைகளை நான் விழுங்குகிறேன். இல்லாவிட்டால் பிரச்சினைகள் என்னை விழுங்கட்டும்.”

அரசவை மன்றத்தில் சிற்றரசர்களும், ஆளுங்கணத்தார், வாரியப் பெருமக்கள், அரசியல் அதிகாரிகள் முதலியோரும் அவரவர்களுக்கு உரிய இருக்கைகளில் அமர்ந்திருந்தார்கள். *திருமந்திர ஓலைக்காரர்கள் மாமன்னரது செம்பொன் சிங்காதனம் இருந்த மேடையின் கீழ்ப்புறத்தில் வலது ஓரத்தில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுடைய கைகளில் ஓலை நறுக்குகளும் எழுத்தாணிகளும் காணப்பட்டன. திருமந்திர ஓலைக்காரர்கள் அமர்ந்திருந்த வரிசையில் முதலாவதாக **திருமந்திர ஓலை நாயகனும் அமர்ந்திருந்தான். மன்றத்தின் உள்ளே ஓங்கியிருந்த தூண்களில் அழகிய சிற்ப

வேலைப்பாடுகளும், மேல்விதானத்தில் அற்புதமான வண்ணத்தில் அமைந்த சித்திர வேலைப்பாடுகளும் காட்சியளித்தன.

சிற்ப, சித்திர வேலைப்பாடுகளிலெல்லாம் சிந்தையைப் பறிகொடுக்காத சிற்றரசர்களும் மற்றவர்களும் ஆகவமல்லனுடைய சூழ்ச்சித் திறம் வாய்ந்த சொல் வேலைப்பாடுகளில் சொக்கிக் கொண்டிருந்தார்கள்.

மன்னரை எதிர்ப்பதற்குக் கால்வாசிப் பேரையாவது திரட்டிவிட்ட மகிழ்ச்சியுடன், காலியாக இருந்த இருக்கைகளின் மீது கண்களைத் திருப்பினான் ஆகவமல்லன்.

அந்தக் காலி இருக்கைகளில்— ஆரவாரங்களும் ஆவேசங்களும் அமர்ந்து கொண்டிருந்தன!

"கோனேரின்மை கொண்டார், திரிபுவனச் சக்கரவர்த்திகள், கோவிராசகேசரி இராசாதிராச தேவராகிய கரிகால சோழ தேவர் வருகிறார்" என்ற வாயிற்காவலனின் அறிவிப்பைத் தொடர்ந்து, மாமன்னர் இராசாதிராசர் மன்றத்தினுள் பிரவேசித்தார். அவரைத் தொடர்ந்து அவரது மெய்க்காவல் வீரர்களும், தனாதிகாரி முதலிய முக்கியமான சில அதிகாரிகளும் வந்தார்கள். மன்னரது வருகைக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் அனைவரும் எழுந்து நின்று அவர் சிம்மாசனத்தில் அமர்ந்த பிறகு— அவரவர்களுடைய ஆசனங்களில் உட்கார்ந்தார்கள்.

மாமன்னரது பார்வை சிற்றரசர்களையும் மற்றவர்களையும் ஒருமுறை வலம் வந்தது. அப்படி வலம் வந்த போது சிற்றரசர்களுக்கு மத்தியில் நடுநாயகமாக வீற்றிருந்த கங்க நாட்டுச் சிற்றரசன் ஆகவமல்லன் மீது ஓரிரு கைநொடிப் பொழுது தாமதித்துவிட்டு அகன்றது. மன்றத்தில் கூடியிருந்த அனைவரையும் ஒருமுறை பார்த்து முடித்துவிட்டுக் கடைசியில் ஓலை நாயகனைப் பார்த்து சக்கரவர்த்திகள் சைகை செய்யவும் அவன் எழுந்து நின்றான்.

---

*திருமந்திர ஓலைக்காரன்— அரசரது வாய்மொழிக் கட்டளைகளையும் செய்திகளையும் நேரில் கேட்டு ஓலையில் வரைபவன்.

**திருமந்திர ஓலைநாயகன்— திருமந்திர ஓலைக்காரர் வரைந்ததை மேற்பார்த்துக் கையெழுத்திடுபவர்; செய்திகளை ஆராய்பவர்; அரசருக்கு அறிவுரை கூறவும் உரிமை பெற்றவர் அரசாங்கத்தின் தலைமைச் செயலாளர்.

அமைதி குடிகொண்டிருந்த அரசவை மன்றத்தில் ஓலை நாயகனின் கணீரென்ற குரல் ஒலித்தது.

"மாமன்னர் திருவடிகளுக்கு வணக்கம். பெண்ணாடகத்திற்கும் அதைச் சூழ்ந்த நிலப்பரப்பிற்கும் நாடு காவல் அதிகாரியாகச் சக்கரவர்த்தியவர்களால் நியமிக்கப்பட்டிருந்த கடந்தை சேந்தன் ஆதித்தனான இராசராச வங்கார முத்தரையன், சோழ மண்டலத்தின் அரசியல் முறைக்கும் மரபிற்கும் மாறாக— குடிமக்களிடத்துப் பெறப்படும் வரிப் பொருள்களை, அரசாங்கப் பண்டாரத்திற்கு அனுப்பாமல் நேரடியாகத் தனக்கே அனுப்பி வைக்க வேண்டுமென்று *நிலவரிக் கழகத்தாருக்குத் தன்னுடைய இலச்சினை பொறித்த ஆணை அனுப்பவும், அவ்வாறு அனுப்பப் பெற்ற ஆணையால் இன்னது செய்வதென்று புரியாமல் நிலவரிக் கழகத்தாரின் தலைவர் புரவளித் திணைக்கள நாயகம் மாமன்னர் சமூகத்திற்கு விண்ணப்பஞ் செய்து விளக்கம் கேட்கவும், இத்தகைய ஆணை அனுப்பப்பட்டதானது சோழப் பேரரசை அவமதித்ததாகும் என்று கருதிய மாமன்னர் சேந்தன் ஆதித்தனை நாடுகாவல் அதிகாரிப் பதவியிலிருந்து நீக்கி வைக்கவும், இது கேட்ட சோழ மண்டலத்துச் சிற்றரசர்கள், அதிகாரிகள், வாரியப் பெருமக்கள், ஆளுங்கணத்தார்— இவர்களுள் சிலர், சேந்தன் ஆதித்தனை மீண்டும் நாடு காவல் அதிகாரியாக நியமிக்குமாறு சக்கரவர்த்திகளது சமூகத்திற்கு விண்ணப்பித்துக் கொள்வதற்காக அரசவை மன்றத்தைக் கூட்டுமாறு கேட்டுக் கொள்ளவும், இது காரணங் கருதி மாமன்னரது முன் அனுமதியோடு இந்த மன்றம் கூட்டப்பட்டிருக்கிறது" என்று முழங்கிவிட்டு ஓலைநாயகன் உட்கார்ந்தான்.

சக்கரவர்த்தி இராசாதிராசர் கனிவு ததும்பும் குரலில் பேசினார்.

"சோழப் பேரரசைக் கட்டிக் காக்கும் உங்களையெல்லாம் நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திக்க நேர்ந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். உங்களுடைய விருப்பங்களும் விண்ணப்பங்களும் நியாயமானவையாகவும், இந்தப் பேரரசை எந்த வகையிலும்

---

*நிலவரிக் கழகத்தார்— நிலத்தை அளந்து வரிவசூல் செய்து அரசாங்கப் பண்டாரத்திற்கு (கஜானா) அனுப்பி வைப்பவர்கள். இவர்களைப் புரவுவரித்திணைக் களத்தார் என்றும் அழைப்பர்.

பாதிக்காதவையாகவும் இருக்குமேயானால் அவற்றை எந்த நேரத்திலும் ஏற்று நிறைவேற்ற நான் தயாராக இருக்கிறேன். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு இந்தப் பெரிய தேசத்தின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, உங்களுடைய வேண்டுதலை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொருவராக உங்கள் கருத்தைக் கூறலாம்.”

மாமன்னர் பேசி முடித்து வெகுநேரம் வரைக்கும் மன்றத்திலிருந்து எவரும் வாய் திறக்கவில்லை.

“நான் அழைக்காமல் நீங்களாகவே புறப்பட்டுப் பல்வேறு ஊர்களிலிருந்து என்னைச் சந்திப்பதற்காக இங்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். சந்திப்பு நடைபெறும் வேளையில் மௌனம் சாதிப்பதில் பயன் இல்லை” என்று மன்னரே மறுபடியும் கூறிய போது, மன்றத்தில் அமர்ந்திருந்தவர்கள் தங்களுக்குள் மெல்லிய குரலில் பேசிக்கொள்ளத் தொடங்கினார்கள். முன் வரிசையின் நடுவில் அமர்ந்திருந்த கங்க நாட்டுச் சிற்றரசன் பின்புறம் திரும்பி மற்றவர்களைப் பார்த்து ஏதோ கடுமையாகப் பேசிக் கொண்டிருந்தான். அதைக் கவனித்த மாமன்னர், “ஆகவமல்லரே! அவர்களை ஏன் ஏவிக் கொண்டிருக்கிறீர்? சொல்ல வேண்டியதை நீரே சொல்லலாமே!” என்றார்.

“அம்புகள் அமர்ந்தே இருக்கட்டும்! வில் எழுந்து விவாதிக்கட்டும்!” என்று தொடர்ந்து கூறிவிட்டுப் புன்னகை பூத்தார்.

சினத்துடன் கங்கச் சிற்றரசன் எழுந்து நின்று கூறினான்.

“சக்கரவர்த்தியவர்களே! இங்கு கூடியுள்ள அனைவரும் ஒருமித்த முடிவுடன் ஒன்று கூடியிருக்கிறோம்.”

“அதுதான் பார்த்தாலே தெரிகிறதே! மேலே சொல்லுங்கள்.”

“கடந்தை சேந்தன் ஆதித்தனைப் பதவி நீக்கியதைக் குறித்து முத்தரையர் குலத்தினர் மனவருத்தம் கொண்டிருக்கிறார்கள். முத்தரையர்கள் இந்த சோழ தேசத்தின் நன்மைக்காக வெகுகாலமாகப் பாடுபட்டு வருகிறவர்கள். அவர்களுடைய அதிருப்திக்கு ஆளாவது நல்லதல்ல.”

“அவர்களுடைய அதிருப்தி இருக்கட்டும்; உம்முடைய நிலை என்ன?”

“எனக்கும் இங்கே கூடியுள்ள அத்தனை பேருக்கும் இந்தக் காரியம் அதிருப்தியையே அளிக்கிறது” என்று கூறிவிட்டு, “இல்லையா மலையரையரே?” என்று தன்னுடனிருந்த மலையமான் நாட்டுச் சிற்றரசனை வினவினான் ஆகவமல்லன். உடனே மலையரையன் எழுந்து, “ஆம் வேந்தே! சேந்தன் ஆதித்தனைப் பதவி விலக்கியது எங்களுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை” என்று கூறிவிட்டு உட்கார்ந்தான்.

“நல்லது! சேந்தன் ஆதித்தனைப் பதவி விலக்கியது உங்களுக்கெல்லாம் பிடிக்கவில்லை என்பதையும், அவனை மீண்டும் நாடுகாவல் அதிகாரியாக நியமிப்பதுதான் உங்களுக்கெல்லாம் பிடிக்கும் என்பதையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இந்தப் பெரிய தேசத்தில் எல்லாக் காரியங்களையும் எல்லோருக்கும் பிடிக்கக்கூடிய விதத்தில் செய்ய இயலாதென்பதை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?” என்று கேட்டார் மாமன்னர்.

“எல்லோருக்கும் பிடிக்கக்கூடிய விதத்தில் காரியம் செய்யாவிட்டாலும், பெரும்பாலோர் ஒத்துக் கொள்ளக் கூடிய விதத்திலாவது செயல்பட வேண்டுமல்லவா? செய்யும் செயல்களில் நியாயம் இருக்க வேண்டும் அரசே!” என்றார் வாரியப் பெருமக்களில் வயது முதிர்ந்த ஒரு பெரியவர்.

“அரசாங்கப் பண்டாரத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய வரிப் பொருள்களைத் தனக்கே அனுப்பி வைக்க வேண்டுமென்று— நிலவரிக் கழகத்தாருக்கு ஒரு நாடு காவல் அதிகாரி தன்னுடைய இலச்சினை பொறித்த ஆணையை அனுப்பலாம். அது நியாயம். வரம்புமீறி நடந்து கொண்டதற்காக அவனைப் பதவி நீக்கம் செய்வது மட்டும் அநியாயம். அப்படியானால் நியாயத்திற்கும் அநியாயத்திற்கும் பொருள் என்ன பெரியவரே?” என்று கேட்டார் அரசர்.

“வரிப்பொருளைத் தனக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையிட்டது— அவற்றையெல்லாம் தனக்கே உரிமையாக்கிக் கொள்வதற்காக அல்ல அரசே! வரித்தண்டல்— தன்மூலம் தன் வழியாக நடைபெற்றால், விரைவாகவும் ஒழுங்காகவும் வசூலிக்கப்பட்டு, அரசாங்கப் பண்டாரத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்க ஏதுவாகும் என்பதற்காகத்தான்” என்று விளக்கம்

சொன்னான் திருமுனைப்பாடி நாட்டின் நாடு காவல் அதிகாரி ஜனநாத கச்சிராயன்.

"அப்படியா? தன் மூலம், தன் வழியாக நடைபெற்றால் ஆட்சி இன்னும் சிறப்பாக நடைபெறும் என்பதற்காக ஒரு நாடு காவல் அதிகாரி— சக்கரவர்த்தியுடைய சிம்மாசனத்தையும் செங்கோலையும் மகுடத்தையும் தனக்கே அனுப்பிவிடும்படி கட்டளையிடலாமா ஜனநாதரே?" என்று சீற்றத்துடன் கேட்டார் இராசாதிராசர்.

இத்தகைய சந்தர்ப்பத்திற்காகவே காத்துக் கொண்டிருந்தவன் போல கங்கச் சிற்றரசன் இடையில் குறுக்கிட்டுச் சொன்னான்:

"இப்படிப் பேசுவதற்காகப் பேரரசர் என்னை மன்னிக்க வேண்டும். இன்னொருவர்க்குச் சேர வேண்டிய ஆட்சியின் மீது பாசம் வைக்கும் பழக்கம் எங்களில் யாருக்கும் கிடையாது."

இந்த வார்த்தைகளைக் கேட்டு மாமன்னர் மனம் அதிர்ந்தார். குலோத்துங்கனுக்குச் சேர வேண்டிய சிம்மாசனத்தில் தான் அமர்ந்திருப்பதாகக் கோடிட்டுக் காட்டிய கங்கச் சிற்றரசனுடைய சொற்கள், புண்பட்டுப் போயிருந்த அவருடைய மெல்லிய இதயத்தில் கூரிய வேல்களைப் போல் பாய்ந்து குத்திக் கிழித்தன. இதற்குப் பிறகு இராசாதிராசர் வாயடைத்துப் போனார்.

சிற்றரசர்களும் பிறரும் ஒருவர் பின் ஒருவராகப் பலவாறு பேசிக் கொண்டிருந்தார்கள். சில சமயங்களில் இரண்டு பேர் மூன்று பேர் சேர்ந்து ஒரே சமயத்தில் சத்தமிட்டார்கள். சக்கரவர்த்தியிடம் நம்பிக்கை வாய்ந்த தனாதிகாரி வேதவனமுடையான் முதலியோரும் இத்தகைய சூழ்நிலையில் என்ன செய்வதென்று புரியாமல் திகைத்துப் போய் இருந்தார்கள்.

குழப்பமும் கூச்சலுமாக அரசவை மன்றம் முழுக்க அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. எதையோ நினைத்துக் கொண்டு எதற்காகவோ சத்தமிட்டுக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து இராசாதிராசர் இடிந்து போய் அமர்ந்திருந்தார். அந்தச் சூழ்நிலையில் அவர்களுடைய கோரிக்கையை, அது எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று பட்டது. அதே நேரத்தில் விளையாட்டுத் தனமான— பொறுப்பற்ற அவர்களுடைய கோரிக்கையை ஏற்பதன் மூலம் சோழ தேசத்தின் பிற்கால வாழ்வில் ஏற்படக்கூடிய விபரீத விளைவுகளையும் அவர் எண்ணிப் பார்த்தார்.

சேந்தன் ஆதித்தனை மறுபடியும் நாடு காவல் அதிகாரியாக நியமித்து அப்போதே கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தினார்கள். அவர்களுடைய வற்புறுத்தலுக்குக் கட்டுப்படுவதைத் தவிர வேறு வழி இல்லை என்று அறிந்து கொண்டவராகத் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவிக்க இராசாதிராசர் எழுந்து நின்றார். மன்றத்தில் சற்றே அமைதி பிறந்தது. திருமந்திர ஓலைக்காரர்கள் அரச கட்டளையைக் குறித்துக் கொள்வதற்காக எழுத்தாணியை வலது கரத்தில் ஏந்தி ஓலை நறுக்கை இடது கரத்தில் தயாராக வைத்துக் கொண்டிருந்தார்கள்.

"என்னுடைய முடிவை நான் தெரிவித்துவிடுகிறேன்" என்றார் இராசாதிராசர். மாமன்னரின் மனமாற்றத்தைப் புரிந்து கொண்ட அவர்கள் அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை, ஆர்வத்தோடும் வெற்றிக் கொண்டாட்டத்தோடும் எதிர்பார்த்தார்கள்.

அவர் அடுத்த வார்த்தையைச் சொல்வதற்குள்— அரசவை மன்றத்தினுள்ளே அவரது அந்தரங்க ஒற்றன் வெகுவேகமாக நுழைந்து அவரை அணுகி அவரிடம் மெல்லிய குரலில் ஏதோ ஒரு செய்தியைச் சொன்னான். அதைக் கேட்கக் கேட்க மாமன்னரின் முகத்திலிருந்த கவலை மறைந்து மகிழ்ச்சி மலரத் தொடங்கியது.

அதற்குப் பிறகு அவருடைய பேச்சில் புதிய தெம்பு பிறந்திருந்ததை அனைவரும் கவனித்தார்கள். "என்னுடைய முடிவைச் சொல்லிவிடுகிறேன்" என்று கொஞ்ச நேரத்திற்கு முன் கூறியிருந்த மன்னர்— தன்னுடைய முடிவைச் சொல்லாமல் வேறு எதையெதையோ சொல்லிக் கொண்டு போனார். சோழ அரசியலைப் பற்றிய வேறு பல விவரங்களை அக்கறையோடு விவரித்தார். நேரம் நீண்டு கொண்டிருந்தது. ஆர்வத்துடன் முடிவை எதிர்பார்த்துச் சலித்துப் போன கங்கச் சிற்றரசன், "அரசே! நேரத்தை ஏன் நீட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? முடிவைச் சொல்லுங்கள்" என்று எரிச்சலோடு கேட்டான்.

"அவசரப்படாதீர் ஆகவமல்லரே! முக்கியமான ஒருவரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறிவிட்டு அரசவை மன்றத்தின் வாயிலைப் பார்த்தார் இராசாதிராசர்.

தாங்க முடியாத கோபத்தோடு, "யார் அந்த முக்கியமான மனிதர்?" என்று சீறினான் ஆகவமல்லன்.

அப்போது அரசவை மன்றத்தின் வாயிலில் ஏதோ சத்தம் கேட்டது. "சேரனை வென்று திறை கொண்டவர், சோழ மண்டலத்துச் சேனைநாயகரும் முதலமைச்சருமாகிய திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பிப் பல்லவராயர் வருகிறார்" என்று வாயிற்காவலன் அறிவிப்புச் செய்தான்.

அந்த மண்டபமே இடிந்து தன்னுடைய தலையில் விழுவது போல ஆகவமல்லன் அதிர்ச்சியடைந்தான்.

# 07. அபாய அறிவிப்பு

சோழ தேசத்துக் குடிமக்களின் பேரன்பிற்குப் பாத்திரமானவரும், அரசியல் அதிகாரிகள், படைத்தலைவர்கள், சிற்றரசர்களுடைய பெருமதிப்பினைப் பெற்றவரும், இளவரசன் குலோத்துங்கனையும் அவனது தங்கை தியாகவல்லியையும் கண்ணுக்குக் கண்ணாய்க் காப்பாற்றிப் பாதுகாத்து வருபவரும், இராசாதிராசரது ஆட்சிக்கு நாடும் உடன்கூட்டமும் ஒத்து ஒன்றுபட்டுச் செல்லுமாறு செய்து ஆட்சியை நிர்வகித்து வரும் சோழ மண்டல முதல் மந்திரியும், பெயர் கேட்ட அளவில் பகைவர் நடுங்கக் கூடிய பெருமையும் வீரமும் மிக்க சேனைநாயகருமான திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பிப் பல்லவராயர் அரசவை மன்றத்தினுள் நுழைந்த போது— அங்கே அதுவரை நடந்த ஆரவாரம், குழப்பம், கலவரம் எல்லாம் திடீரென்று அடங்கிப் போய்ச் சில நொடிகள் அமைதி நிலவியது.

ஆச்சரியமான அந்த நொடிகளைப் படைத்த சேனைநாயகர் மன்றத்தினுள் வெகு கம்பீரமாக நடந்து இராசாதிராசரின் அருகில் சென்ற போது மாமன்னர் அவரை மகிழ்ச்சிப் பரவசத்துடன் வரவேற்றார். "வரவேண்டும் சேனைநாயகரே! வரவேண்டும். அமருங்கள்."

பல்லவராயர், சக்கரவர்த்திக்கு வணக்கம் செலுத்திவிட்டு, தந்தத்தால் செய்யப்பட்டு அழகிய வேலைப்பாடுகள் அமைந்த தனியாசனத்தில் அமர்ந்தார். மன்றத்தை முழுக்க ஒருமுறை தன் கண்களால் அளந்தார். அவர் உள்ளே நுழைந்து நடந்து வந்த போது ஒன்றும் புரியாமல் சற்று நேரம் நின்று கொண்டிருந்துவிட்டுப் பின்னர் தயங்கிய வண்ணம் உட்கார்ந்திருந்த கங்கச் சிற்றரசன் ஆகவமல்லன் மீது அவருடைய பார்வை சிறிது தாமதித்தது.

அவரது பார்வை தன் மீது தாமதித்த போது ஆகவமல்லனுடைய உடல் மெல்லச் சிலிர்த்து அடங்கியது. வஜ்ரம் பாய்ந்த அவருடைய தேகமும், சிந்தனை படிந்த அவருடைய முகமும், உள்ளத்தை ஊடுருவி உள்ளே இருக்கக்கூடிய ரகசியங்களையெல்லாம் வெளியே கொண்டு வந்துவிடும் ஆற்றலும் கூர்மையும் வாய்ந்த அந்தக் கண்களும் அவனை அச்சுறுத்தின. எதிரில் அவர் இல்லாத போது, அவரை எடுத்தெறிந்து பேசும் இயல்புடைய ஆகவமல்லன், நேருக்கு

நேர் அவரைச் சந்திக்க நேர்ந்த போது, ஒரு மான்குட்டியைப் போல் மருண்டான்.

திருமந்திர ஓலைநாயகன் எழுந்து வந்து பல்லவராயருக்குப் பக்கத்தில் பணிவுடன் நின்றான். வழக்கம் போல் மன்றத்தின் முன் நடவடிக்கைகளைப் பற்றி அவரிடம் கூறிவிடுவதற்காகத் தன் வாயை வலது கையால் மெல்ல மூடி அவரது செவிகளை நோக்கிக் குனிந்து நெருங்கிய போது, "ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. எல்லாவற்றையும் நான் அறிவேன்" என்பது போல அவர் தலையை மெதுவாக அசைத்து, இடது இமையை நெறித்து உயர்த்தினார். ஓலை நாயகன் அதனைப் புரிந்து கொண்டு தன் இடத்தில் போய் அமர்ந்தான்.

இராசாதிராசர் பல்லவராயரின் பக்கம் திரும்பிக் கேட்டார். "தலைநகரைவிட்டு நீங்கள் புறப்பட்டுப் போய் ஒரு திங்களுக்கு மேலாகிறது. இப்போது எந்தவித முன்னறிவிப்புமின்றித் திடீரென்று அரசவை மன்றத்திற்கே நேரடியாக விஜயம் செய்திருக்கிறீர்கள். அப்படியானால்.."

"ஆம் வேந்தே! உடனடியாகத் தீர்வு காண வேண்டிய மிக முக்கியமான செய்திகள் இருக்கின்றன. இந்த மன்றத்தின் பிற நடவடிக்கைகள் அனைத்தையும் தள்ளி வைத்துவிட்டு உடனே முடிவெடுக்க வேண்டிய காரியங்கள் இருக்கின்றன."

"அத்தனை அவசரத்திற்குரிய காரியங்களா?"

"ஆமாம் அரசே! இதோ இங்கே கொஞ்ச நேரத்திற்கு முன் கூடிக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்களே! அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அவசரமும் அவசியமும் மிகுந்த தலையாய காரியங்கள் காத்திருக்கின்றன" என்று பதில் உரைத்துவிட்டுப் பல்லவராயர் மன்றத்தில் கூடியிருந்தவர்களைச் சீற்றத்துடன் உறுத்துப் பார்த்தார்.

அந்தப் பார்வை சிலரை நெளிய வைத்தது. சிலரை வளைய வைத்தது. சிலரது தலைகளைக் கவிழ வைத்தது.

ஆகவமல்லனுடைய பேச்சைக் கேட்டு அநாவசியமான வம்பில் அகப்பட்டுக் கொண்டோமே என்று நினைத்து வருந்திய மலையரையர், சமாதானமாக ஏதாவது சொல்லலாமென்று எழுந்து நின்றபோது பல்லவராயர் அவரைக் கையமர்த்திச் சாடை செய்து உட்கார வைத்தார்.

“இப்போது உங்களில் யாரும் எந்தச் சமாதானமும் சொல்ல வேண்டியதில்லை. இதற்குமேல் வேறெதைப் பற்றியும் நாம் விவாதித்துக் கொண்டிருக்க வேண்டியதுமில்லை. நம்முடைய கவனத்தையெல்லாம் ஒருமித்துத் திருப்ப வேண்டிய கட்டாயம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. சரியாக இதே நேரத்தில், நம்முடைய தமிழ் மண்ணை நோக்கி அபாயம் கடல் கடந்து வந்து கொண்டிருக்கிறது. நம்முடைய சோழ தேசத்திற்கு இது ஒரு சோதனைக் காலம். இதில் வெற்றி பெறாவிட்டால் எதிர்கால வரலாறு நம்மை ஏளனம் செய்யும். அவசரமாகச் செய்ய வேண்டிய அரச காரியங்கள் இருக்கின்றன. அது பற்றி மன்னருடன் தனித்துப் பேச வேண்டியிருக்கிறது. நாளை இரவு இரண்டாம் ஜாமத்தில், நாற்படைத் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்ட ஏற்பாடு செய்திருக்கிறேன். நாளை மறுதினம் மந்திரி மண்டலத்தாருடைய கூட்டம் நடைபெறும். அது நடைபெற்ற இரண்டு நாள் கழித்து, சோழ தேசத்தின் மந்திராலோசனை மகாசபையைக் கூட்டுமாறு மாமன்னரைக் கேட்டுக் கொள்ளப் போகிறேன். அதில் நீங்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டியிருக்கும். உங்களைத் தவிர மந்திராலோசனை மகாசபைக்கு வந்து சேர வேண்டிய அனைவருக்கும் உடனடியாக ஓலை அனுப்பி வைக்கப்படும். எல்லாரும் வந்து கூடிய பிறகு, பிற எல்லாச் செய்திகளையும் பற்றிப் பேசி ஒரு முடிவிற்கு வரலாம்.”

பெருமான் நம்பிப் பல்லவராயர் பேசி முடித்ததும் மன்றத்தில் ஒரு கலகலப்பு ஏற்பட்டது. அதுவே சிறிது நேரத்தில் பரபரப்பாக மாறியது. சேந்தன் ஆதித்தனுக்காகக் கட்சி கட்டிக் கொண்டு வந்ததற்குச் சேனைநாயகரிடமிருந்து வெளிப்படப் போகும் கண்டிப்பின் கடுமையிலிருந்து, தற்காலிகமாகவாவது சில நாட்களுக்குத் தப்பித்துக் கொண்டு ஊருக்குப் போய்ச் சேரலாம் என்ற மகிழ்ச்சி ஒருபுறமும், சோழ தேசத்திற்கு வரப்போகும் சோதனை என்ன— கடல் கடந்து வரக்கூடிய அபாயம் எது என்ற கவலை ஒருபுறமுமாக அங்கே கூடியிருந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் மெல்லிய குரலில் பேசிக் கொண்டார்கள். எப்படியிருந்தாலும், சேனைநாயகரிடமிருந்து தப்பித்துக் கொண்டு தலைநகரைவிட்டு வெளியேறிச் செல்வதில் அனைவரும் ஆர்வம் காட்டினார்கள்.

ஆகவமல்லனோ மகாசபை கூடுவதற்கு இடையிலிருந்த நான்கு நாட்களில் வேறு யார் யாரைத் தன் பக்கம் சேர்க்க முடியும் என்று மனதிற்குள் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மகாசபை உறுப்பினர்களில் பெரும் பகுதியினைத் தன் பக்கம் திருப்பிவிட்டால், பிறகு பல்லவராயரைக் கூடத் தன்னால் தைரியமாக எதிர்க்க முடியும் என்று அவன் நம்பினான்.

சேனைநாயகர் தலைநகரில் இல்லாத சமயம் பார்த்து, அரசரை எப்படிப் பணிய வைக்கலாம் என்று அவன் தீட்டிய திட்டம், திடீரென்று அவர் வந்து சேர்ந்ததும், அப்படியே கெட்டுக் குட்டிச்சுவராகிவிட்டது. அவன் ஆவேசமூட்டிக் கொண்டு வந்திருந்த ஆட்கள் அனைவரும் எதிர்பாராதவிதமாகச் சேனைநாயகர் வந்து சேரவே, பேச்சிழந்து வாய்மூடி மௌன விரதம் மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். சேந்தன் ஆதித்தனுடைய பிரச்சினை அங்கே சீந்துவாரற்றுப் போயிற்று.

எனவே, அடுத்த மகாசபைக் கூட்டத்திற்கு இடையிலிருந்த நாட்களில் இன்னும் நிறையப் பேரைத் தன் பக்கம் சேர்த்து, சேனைநாயகரையும் மீறிச் செயல்படுவதற்குத் தயாராகிவிட வேண்டும் என்று அவன் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். இவை எல்லாவற்றிற்கும் வசதியாக, உடனே தலைநகரைவிட்டுப் புறப்படுவது நல்லதென்று அவனுக்குத் தோன்றியது.

இராசாதிராசர் கேட்டார். "அப்படியானால் அரசவை மன்றத்தை இத்துடன் கலைத்து இவர்களை அனுப்பி வைத்துவிடலாமா சேனைநாயகரே?"

இந்தக் கேள்விக்குப் பல்லவராயர் ஒரு குறும்புச் சிரிப்புடன் பதில் சொன்னார்: "அரசவை மன்றத்தை இத்துடன் கலைத்துவிடலாம். ஆனால் இவர்களை அனுப்பி வைப்பதில் மட்டும் ஒரு நிபந்தனையிருக்கிறது அரசே!"

"என்ன நிபந்தனை..?"

"நாளை நாற்படைத் தலைவர்களின் கூட்டமும் மறுநாள் மந்திரி மண்டலத்தாருடைய கூட்டமும் நடைபெறவிருப்பதால்— தேசத்தின் பல்வேறு பகுதிகளின் நிலைமைகளும் விவரங்களும் தேவைப்படலாம். ஆதலால், மந்திராலோசனை மகாசபைக் கூட்டம் முடியும்வரை இவர்கள் அனைவரும் தலைநகரிலேயே தங்கியிருப்பது நல்லது."

"நல்லது சேனைநாயகரே!" என்று கூறிய பின், இராசாதிராசர் அவையினரைப் பார்த்துக் கூறினார். "மகாசபைக் கூட்டம் முடியும்

வரை நீங்கள் தலைநகரைவிட்டு வெளியேற வேண்டாம். வேதவனமுடையான் நீங்கள் தங்கியிருப்பதற்கு வேண்டிய வசதிகளை அரண்மனை விருந்தினர் மாளிகையிலேயே ஏற்பாடு செய்வார். மற்ற செய்திகளையெல்லாம் மகாசபைக் கூட்டத்திலேயே பேசிக் கொள்ளலாம். மன்றம் இத்துடன் கலைகிறது."

செம்பொன் சிங்காதன மேடையைவிட்டுக் கீழிறங்கிய மாமன்னர், சேனைநாயகருடன் சேர்ந்து நடக்கத் தொடங்கினார். அவர்களைத் தொடர்ந்து வேதவனமுடையான் அம்மையப்பனும் வேறு சில முக்கிய அதிகாரிகளும் நடந்தனர்.

மன்றத்தில் கூடியிருந்தவர்களெல்லாம், தலைநகரைவிட்டு வெளியேறக் கூடாதென்ற கட்டளையைக் கேட்டு அயர்ந்து போய் அவரவர் இடங்களிலேயே நின்று கொண்டிருந்தார்கள். ஆகவமல்லனுக்கோ பிரமை பிடித்துவிடும் போலிருந்தது.

சேனைநாயகர் அவனுடைய அண்மையில் வந்த போது "மகாமண்டலாதிபதியவர்களே! நலமாக இருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

ஆகவமல்லன் சிற்றரசர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றவன். மற்றவர்களால் 'மகாமண்டலாதிபதி' என்று அழைக்கப்படும் அளவிற்குப் பெருமை கொண்டவன். ஆனால் சேனைநாயகர் அவனை ஒருநாளும் அப்படி அழைத்ததில்லை. இப்போது இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் அவ்வாறு அழைத்த போது, அவருடைய குரலில் கலந்திருந்த இகழ்ச்சியையும், அவரது மனத்தில் பொங்கிக் கொண்டிருந்த கோபத்தையும் அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. அவருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் குழம்பியவனாக அவன் நின்று கொண்டிருந்தான்.

"அம்மையப்பரே! விருந்தினர் மாளிகையில் தங்கியிருப்பது அசௌகரியமாக இருக்கும் என்று ஆகவமல்லர் யோசிக்கிறார் போலிருக்கிறது. கங்கச் சிற்றரசர் தங்குவதற்கு ஒரு தனி மாளிகையை ஏற்பாடு செய்யுங்கள். கவனிப்பு கொஞ்சம் பலமாகவே இருக்கட்டும்" என்று தனாதிகாரியிடம் சொல்லிச் சிரித்துவிட்டு நடந்தார் பல்லவராயர்.

தனக்குத் தனி மாளிகை ஒதுக்கிக் கொடுக்குமாறு கூறியதற்கும், 'கவனிப்பு கொஞ்சம் பலமாகவே இருக்கட்டும்' என்று

குறிப்பிட்டதற்கும் பொருள் புரியாமல் விழித்த ஆகவமல்லன்—அவனுக்காக ஒதுக்கப்பட்ட தனி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போதுதான், சேனைநாயகர் கூறிய வார்த்தைகளின் உள்ளர்த்தங்களையும் உள்நோக்கங்களையும் உணர்ந்து கொள்ள முடிந்தது.

வசதி செய்து கொடுக்கும் சாக்கில் தனக்கு ஒதுக்கப்பட்ட தனி மாளிகையானது தன்னை மற்றவர்களிடமிருந்து பிரித்து வைக்கவும், தான் வேறு யாரோடும் தொடர்பு கொள்ளாதவாறு தடுக்கவும் செய்யப்பட்ட ஏற்பாடென்பதை அறிந்து கொண்டான்.

உதவியாளர்கள் என்ற பெயரில் ஒற்றர்களையும் பாதுகாப்பாளர்கள் என்ற பெயரில் கண்காணிப்பாளர்களையும் அந்த மாளிகையின் உள்ளும் புறமும் ஏற்படுத்தியிருப்பதனை அடுத்தடுத்து நடந்த சில நிகழ்ச்சிகளின் மூலம் அவன் உறுதி செய்து கொண்டான். எங்கு சென்றாலும் அவனை இரண்டு பேர் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். எவரையும் தனித்துச் சந்திக்க அவனால் இயலாமற் போய்விட்டது.

இவ்வளவு தந்திரமாகத் தன்னுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தித் தன்னைச் செயலிழக்கச் செய்துவிட்ட அந்தக் கிழப்புலியின் மீது அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

அடுத்த இரண்டு நாட்களும் கங்கைகொண்ட சோழபுரத்தின் அரசாங்க வட்டாரத்தில் மிக முக்கியமான பரபரப்பான நாட்களாக இருந்தன. சோழ தேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் 'திருமுக ஒலை'யுடன் வீரர்கள் சென்றார்கள். நாற்படைத் தலைவர்களது கூட்டமும், மந்திரி மண்டலத்தாருடைய கூட்டமும் வெகு ரகசியமாக நடந்து முடிந்தன.

தன்னுடைய மாளிகைக்குச் சிற்றரசர்கள், ஆளுங்கணத்தார், வாரியப் பெருமக்கள், அரசியல் அதிகாரிகள் ஒவ்வொருவரையும் தனித்தனியே வரவழைத்து ஒவ்வொருவரோடும் பல்லவராயர் அந்தரங்கப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

இராசாதிராசரது ஆட்சிக்கு எதிராக ஆகவமல்லனால் கிளப்பிவிடப்பட்டிருந்தவர்களெல்லாம் சேனைநாயகருடைய மாளிகைக்குப் போய்விட்டு வெளியே வரும் போது—இராசாதிராசருக்கு ஆதரவாளர்களாகவும் விசுவாசிகளாகவும் மாறித் திரும்பினார்கள். தனிமையில் அவரைச் சந்தித்த போதே சிலருடைய மனம் மாறிவிட்டது. அவரது கூரிய பார்வை மட்டுமே சிலரை

மாற்றிவிட்டது. சிரிப்பு, பேச்சு, கோபம்— இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஆயுதமாக மாறி ஒவ்வொருவரையும் மாற்றியது.

சேனைநாயகரிடமிருந்து தனக்கு அழைப்பு எப்போது வரப் போகிறதோ என்று ஆகவமல்லன் ஒவ்வொரு நொடியும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். தந்திரம் மிகுந்த அந்தக் கிழட்டு மனிதரைத் தனிமையில் சந்திக்கும் போது— அவரிடம் என்னென்ன பேச வேண்டும்.. எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் கூடத் திட்டமிட்டு வைத்திருந்தான்.

ஆனால்— கடைசி வரைக்கும் அவரிடமிருந்து அவனுக்கு அழைப்பு வரவேயில்லை.

மந்திராலோசனை மகாசபை கூடிய நாளன்று, மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அவன் புறப்பட்டான். சபை கூடுவதற்குச் சற்று முன்னதாகவே அரசவை மன்றத்திற்குச் சென்று, அங்குள்ளவர்களைச் சந்தித்துப் பேசி மகாசபைக் கூட்டத்தில் ஒரு சிறிய குழப்பத்தையாவது உண்டாக்கிவிட வேண்டுமென்று அவன் முடிவு கட்டியிருந்தான்.

மற்றவர்களிடமிருந்து தன்னைத் தனிமைப்படுத்தி வைத்ததோடு, மற்றவர்களையெல்லாம் அழைத்துப் பேசிவிட்டுத் தன்னை மட்டும் அழைக்காமல் அவமானப்படுத்திய பல்லவராயரை எந்த வகையிலாவது பழிவாங்க வேண்டுமென்று அவன் நினைத்தான்.

இந்த நினைவுகளோடு புறப்பட்ட ஆகவமல்லன் தன்னுடைய மாளிகையின் வாயிலை அடைந்த போது— வாயிலில் இருந்த காவல் வீரர்கள் திடீரென்று வேல்களைக் குறுக்கே நீட்டி அவனுக்கு வழிவிடாமல் மறைத்தார்கள்.

விழிகள் சிவக்க, அந்த வீரர்களைப் பார்த்துக் கோபித்து அவன் சத்தமிடத் தொடங்கிய போது, வேதவனமுடையான் அங்கே வந்து சேர்ந்தான்.

“மகாமண்டலாதிபதியவர்களே! மகாசபைக் கூட்டத்தில் நீங்கள் கலந்துகொள்ள வேண்டியதில்லையென்றும், உங்கள் மனநிலையும் உடல் நிலையும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறதென்றும், எல்லாம் சரியாகும் வரை நீங்கள் இந்த மாளிகையிலேயே தங்கிப் பரிபூரண ஓய்வெடுத்துக் கொள்ளுமாறும் சேனைநாயகர் கட்டளையிட்டுள்ளார்” என்று கூறிவிட்டுப் பதிலை எதிர்பாராமல் திரும்பி நடந்தான்.

அந்த அறிவிப்பு ஆகவமல்லனுக்குச் சாதாரண அறிவிப்பாகத் தோன்றவில்லை. அதை ஓர் அபாய அறிவிப்பாகக் கருதினான்.

# ௰௨. தேரில் வந்த தேவதை

இராசராசபுரம் என்று வழங்கப்படும் பழையாறை நகரின் வடகீழ்ப்பகுதியில் *இராசராசேச்சுரம் என்ற அழகிய சிவாலயம் ஒன்று அமைந்திருந்தது. அந்த ஆலயத்தில் இராசராசேச்சுரமுடையார் எழுந்தருளியிருந்தார்.

அவரைத் தரிசித்து வழிபடுவதற்காக யாரோ அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அன்று வந்திருந்தார்கள். ஆலயத்தின் வாயிலில், அவர்கள் ஏறி வந்த தேர் நின்று கொண்டிருந்தது. தேரோட்டி மட்டும் அதில் அமர்ந்திருந்தான். குதிரைகளைப் பூட்டிப் புறப்படுவதற்குத் தயார் செய்துவிட்டு உட்கார்ந்திருந்த அவனுடைய கண்கள் ஆலயத்தின் வாயிலை நோக்கிக் கொண்டிருந்தன.

அந்த ஆலயத்தினுள் நுழைபவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். அதாவது— கண் ஆலயத்திலும், கருத்து— திரும்பச் செல்ல வேண்டிய காரியத்திலுமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால்— அங்கிருந்து மீள்வது அரிது. ஏனெனில் காண்பவரையெல்லாம் கவர்ந்து இழுத்துக் கொள்ளக் கூடிய சிற்ப, சித்திர விசித்திரங்கள் அங்கே ஏராளமாக இருந்தன.

அக்கோயிலின் கர்ப்பக்கிரகத்தின் புறச்சுவரில் சிவனடியார் தம் திருவரலாறுகளைத் தெரிவிக்கும் படிமங்களும், திருச்சுற்று மாளிகையின் வடபுறத்தில்— சைவாச்சாரியார்களின் அழகிய படிமங்களும் அமைந்திருந்தன.

---

*இராசராசேச்சுரம்— இரண்டாம் இராசராச சோழனால் கட்டப்பட்டது. தக்கன் யாகத்தை அழித்து முடித்த பிறகு, உமாதேவிக்குப் போர்க்களத்தைக் காட்டி, அங்கே இறந்தவர்க்கெல்லாம் அருள் புரிவதற்காக இராசராசபுரி ஈசர் எழுந்தருளினார் என்று குறிப்பிட்டுக் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரால்,

‘ஒரு மருங்குடைய மூலநாயகியொ டொற்றை வெள்விடை ஊர்திமேல்

இருமருங்குமறை தொழு வெழுந்த ருளி இராசராசபுரி ஈசரே’

என்று பாடிப் பாராட்டப்பட்ட பெருமைமிக்க மாடக்கோயில் அது.

காலஞ்சென்ற வேந்தர் இராசராச சோழரது நினைவாய் அங்கிருந்த இராசகம்பீரன் திருமண்டபம்— அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் நெஞ்சில் பழைய நினைவுகளைக் கிளறிவிடக் கூடியது.

உள்ளே சென்றவர்கள் அங்கேதான் லயித்துவிட்டார்களா? அல்லது சிற்ப சித்திர விசித்திரங்கள் கவர்ந்திழுத்துக் கொண்டனவா? இல்லை— இராசராசபுரி ஈசரோடு ஒன்றிவிட்டார்களா?— தேரோட்டி பலவாறு நினைத்துக் கொண்டிருந்தான்.

பகலெல்லாம் உழைத்துக் களைப்படைந்து போயிருந்த சூரியன், மலைப்பெண்ணின் பத்திரமான மடியையும் மார்பையும் தேடி, ஓய்வு கொள்வதற்காக ஓட்டமெடுத்துக் கொண்டிருந்தான். அப்படி ஓட்டமெடுத்துக் கொண்டிருந்த அந்த நேரத்திலும் தன் கடமையை மறந்துவிடாமல் தன் கையைக் குவித்துப் பின்புறமாக நீட்டி, விரல்களின் வழியே ஒளிக்கற்றைகளை வழியவிட்டு உலகிற்கு வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தான்.

கன்னியின் நினைவில் கடமையைப் புறக்கணித்துவிட்டான் என்ற அவச்சொல் தன் மீது வந்துவிடக் கூடாது என்ற அச்சம் அவனுக்கு இருந்தது.

தேரின் வெளித்தட்டில் உட்கார்ந்து குதிரைகளின் லகானைக் கையில் இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த தேரோட்டி, இருட்டுவதற்கு முன் இராசராசபுரத்து அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமே என்று அவசரப்பட்டுக் கொண்டிருந்தான். இருட்டிய பிறகு அரச குடும்பத்தினர் ஏறிக் கொண்டிருக்கக் கூடிய தேர் அரண்மனைக்கு வெளியில் ஓடிக் கொண்டிருக்கக் கூடாது— என்பது பல்லவராயர் அவனுக்கிட்டிருந்த கட்டளை.

ஆலயத்திலிருந்து பதினான்கு பதினாறு பிராயம் மதிக்கத்தக்க ஓர் இளம் வாலிபன் வெளியே வந்து கொண்டிருந்தான். ராஜகளை என்று சொல்வார்களே— அது அவனுடைய முகத்தில் வாசம் செய்து கொண்டிருந்தது.

இன்னும் மீசை அரும்பாத இளம்பருவம் ஆண்மையின் வீரமும், பெண்மையின் அழகும் அவனிடத்தில் போட்டி போட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவனைத் தொடர்ந்து, அவனைக் காட்டிலும் ஒன்றிரண்டு பிராயம் குறைவாக மதிக்கத்தக்க ஓர் அழகிய இளம் பெண் வந்தாள்.

வானத்திலிருந்து நட்சத்திரப் படிக்கட்டுகளின் வழியே நடந்து வந்த தேவதையைப் போல் அவள் விளங்கினாள். 'இந்த பூமிக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. நான் தேவலோகப் பெண்' என்று தெரிவிப்பதைப் போல் பாதங்கள் மண்ணில் பட்டும் படாமலும் அவள் நடந்து வந்தபோது– உலகத்தின் அழகுகளையெல்லாம் பின்னடையச் செய்துவிட்டு, அந்த அணிவகுப்பிற்குத் தலைமை தாங்கி முன்னே நடந்து வரும் அழகுலகின் அரசியைப் போல் அவள் தோன்றினாள்.

இருவரும் வந்து தேரின் உட்புறத் தட்டில் உட்கார்ந்து கொண்ட பின், தேரோட்டி எடுத்த எடுப்பிலேயே தேரை விரைவாகச் செலுத்தத் தொடங்கினான். குதிரைகளை வேகமாகத் தட்டிவிட்டான்.

தேரோட்டியைப் பார்த்து அந்த வாலிபன் கேட்டான்.

"அனந்தபாலா! என்ன, வேகம் அதிகமாக இருக்கிறது! நேரமாகிவிட்டதா?"

"ஆமாம் இளவரசே! இருட்டுவதற்குள் அரண்மனைக்குப் போய்விட வேண்டும்."

"ஓகோ! நான் மறந்தே போய்விட்டேன். இருட்டுக்கும் உனக்கும்தான் ஏழு ஜென்மப் பகையாயிற்றே. இருட்டு உன்னைப் பார்த்துவிட்டால் கடித்துச் சாப்பிடாமல்விடாதே" என்று சொல்லித் தேரோட்டியைக் கேலி செய்தான் அந்த வாலிபன். அப்போது அவனோடு சேர்ந்து சிரித்துவிட்டு, அவனருகில் அமர்ந்திருந்த அழகிய இளம் பெண் கூறினாள்:

"அண்ணா! நேரத்தோடு போகவில்லையென்றால் வீட்டிற்குள் நுழையவிடாமல் நம் சாரதியின் தர்மபத்தினி கதவுகளைச் சாத்திவிடுவாள் போலிருக்கிறது."

"அப்படியா? கதவுகளை அடைத்துவிட்டால் என்ன? நம் அரசவைக் கவிஞருள் யாராவது ஒருவரை அனுப்பிக் 'கடை திறப்பு' பாடச் சொன்னால் போகிறது!"

"அதெல்லாம் இந்தக் காலத்துப் பெண்களிடம் நடக்காது அண்ணா! கடைதிறப்புப் பாடினால் கதவிற்கு இரட்டைத் தாழ்ப்பாள் போடுவார்கள். அல்லது கதவையும் தாழ்ப்பாளையும் கழற்றி எடுத்துக்

கணவனின் தலையில் போடுவார்கள்” என்று சொல்லி அந்தப் பெண் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

“நீங்கள் எப்போது பார்த்தாலும் இப்படித்தான்” என்று இளவரசியைப் பார்த்துச் சிணுங்கினான் அனந்தபாலன்.

“அடடே..! வருத்தப்படாதே அனந்தபாலா! பெண்களைப் பற்றிப் பெண்களுக்குத்தானே தெரியும்! ஒரு மனைவி கணவனுக்கு என்னென்ன மரியாதைகள் செய்ய வேண்டுமென்பதைத் தியாகவல்லி இவ்வளவு நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறாளே! கல்யாணத்திற்கு நாள் பார்க்க வேண்டியதுதான். திருமணம் செய்து வைப்பதற்குரிய முழுத் தகுதியும் இவளுக்கு வந்துவிட்டது” என்று கூறிச் சிரித்தான் இளவரசன்.

“நீங்கள் எப்போது பார்த்தாலும் இப்படித்தான்..” என்று அண்ணனைப் பார்த்து இப்போது அவள் சிணுங்கினாள்.

அவர்களுடைய உரையாடல் நடந்து முடிந்த போது இடது ஓரத்தில் ஒரு நீரோடை ஓடிக் கொண்டிருந்த சாலையில் தேர் விரைந்து கொண்டிருந்தது. நீரோடையை அடுத்துத் தென்னை மரங்கள் செழித்தோங்கி வளர்ந்திருந்த தோப்புகளும் வலதுபுறத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் போர்வையை விரித்துப் பரப்பியதைப் போல் பசிய நெல் வயல்களும் காணப்பட்டன.

அந்த நெடுஞ்சாலையில் தன்னை மறந்து தேரை விரைந்து செலுத்திக் கொண்டிருந்த அனந்தபாலன், திடீரென்று “நிறுத்து” என்று இளவரசர் கட்டளையிடவே, தேரை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

“அனந்தபாலா! அந்தத் தோப்பில் ஏதோ சத்தம் கேட்டதே. யாரோ சிலர் ஓடுவது போல் இருந்ததே. கவனித்தாயா?”

“ஒரு சத்தமும் கேட்கவில்லையே இளவரசே!”

“நீ இங்கேயே இரு. நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்.”

இளவரசன் தேரிலிருந்து கீழே குதித்தான்.

தியாகவல்லி அவனைத் தடுத்தாள். “அண்ணா! வழியில் இதென்ன வீண் வம்பு? யாரோ ஓடுகிற சத்தம் கேட்டால் அதைத் தேடி நீங்கள் ஏன் ஓட வேண்டும்? தேரில் ஏறுங்கள்!”

“தியாகவல்லி! நாளைக்கு இந்தப் பெரிய தேசத்தைப் பரிபாலனம் செய்ய வேண்டியவன் நான். தாத்தா பல்லவராயரோ என்னைத் தலைநகருக்குக்கூட வரவிடாமல் இராசராசபுரத்து அரண்மனையிலேயே அடைத்து வைத்திருக்கிறார்கள். இளவரசன் குலோத்துங்கனுக்கு இந்த தேசத்தின் நடப்பைப் பற்றி எதுவுமே தெரியாது என்று மற்றவர்கள் சொல்லும் நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. என் நாட்டில் நடக்கும் எந்த ஒரு சிறு சம்பவத்தைப் பற்றியும் கவனம் செலுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதோ வந்துவிடுகிறேன்” என்று கூறிவிட்டு, நீரோடையில் இறங்கித் தென்னந் தோப்பை நோக்கிச் சென்றான் குலோத்துங்கன்.

மாலை வெயில் மறைந்து, பொழுது மயங்கிக் கொண்டிருந்தது. முழுமையான ஒளியும் இல்லாமல், முழுமையான இருளுமில்லாமல் தோன்றிய அந்த இரண்டுங்கெட்டான் நேரத்தில், தோப்பிற்குள் கேட்ட ஏதோ ஒரு சத்தத்தைத் தேடி இலக்கில்லாமல் ஓடியிருக்கிற அண்ணனை நினைத்துத் தவித்து, அவனுக்கு ஆபத்து எதுவும் நேர்ந்துவிடக் கூடாதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள் தியாகவல்லி.

“அண்ணனை இன்னும் காணவில்லையே அனந்தபாலா! நீயும் போய்ப் பார்” என்று அவள் கூறிய போது— அந்த நேரத்தில் அந்த இடத்தில் அவளைத் தனிமையில் விட்டுவிட்டுப் போவது உசிதமாகாதென்று நினைத்துத் தயங்கினான் அனந்தபாலன். ஆனாலும் இளவரசியின் கட்டளையை மீற முடியாமல் குலோத்துங்கன் சென்ற பாதை வழியே அவனும் போனான்.

அண்ணன் மீது கொண்ட அக்கறையால் தன்னை தைரியசாலியாகக் காட்டிக் கொண்ட தியாகவல்லி, அனந்தபாலன் சென்ற சிறிது நேரத்தில் தன்னுடைய தனிமையை எண்ணித் தானே கலக்கம் கொள்ளத் தொடங்கினாள்.

பூமியைப் பற்ற முயன்று கொண்டிருந்த இருட்டின் கரங்கள் அவளைப் பயமுறுத்தின. ‘ஓ’வென்று வீசிய காற்றில் மரங்களும் கீற்றுகளும் அசைந்து ஆடிய போது, யாரோ முகமும் உருவமும் புலப்படாத சிலர் அவளைப் பார்த்துப் பேய்ச்சிரிப்புச் சிரித்துக் கொண்டு நெருங்கி வருவது போல் தோன்றியது. திடீரென்று பின்புறத்திலிருந்து ஏதோ ஒன்று தன்னைத் தொட்டுவிடப் போவதைப் போல் எண்ணி அவள் மருண்டாள். உதிர்ந்து கிடந்த இலைச்

சருகுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் காற்றின் கரங்களால் உருட்டப்பட்ட போது, அண்ணன் குலோத்துங்கனால் தேடப்பட்டுக் கொண்டிருந்த ஏதோ ஒன்று, அவனிடமிருந்து தப்பித் தன்னைப் பிடித்துக் கொள்ள ஓடி வருவது போல் தோன்றியது. உடல் புல்லரித்துச் சிலிர்த்தது.

சாலையின் எதிர்த் திசையில் குதிரைகளின் குளம்பு ஒலி கேட்கவே, தியாகவல்லி சற்றுத் தைரியமடைந்தாள். தன்னுடைய அரண்மனை வீரர்கள் யாராவது வரக்கூடும் என்று நினைத்தாள். ஒரு சமயம், வருபவர்கள் பகைவர்களாக இருந்தால்..? பரவாயில்லை. பகைவர்களாக இருந்தாலும் மனிதர்கள்தானே! உருவமற்ற, புரிந்து கொள்ள முடியாத ஏதோ ஒன்றிற்குப் பயந்து கொண்டிருப்பதைக் காட்டிலும் பகைவர்களை எதிர்கொள்வது அப்படியொன்றும் கடினமானதல்ல.

தியாகவல்லி தேரிலிருந்து கீழே இறங்கிச் சாலையைப் பார்த்தாள். இரண்டு குதிரைகள் வந்து கொண்டிருந்தன. நெருங்கி வந்த போது அந்தக் குதிரைகளிலிருந்த வீரர்கள் அவளுக்கு அறிமுகமானவர்கள் அல்ல என்பதோடு அவர்கள் சோழ தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியாதென்றும் தோன்றியது.

தேருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த அவளை நெருங்கியதும் குதிரைகள் நின்றன.

ஒரு வாலிபன் அவளைக் குறும்புத்தனமாகப் பார்த்துச் சிரித்துவிட்டுப் பக்கத்திலிருந்த குதிரை வீரனிடம் கூறினான்.

"தேவதைகள் தேரில் வருவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்படிப் புழுதி படிந்த சாலையில், பாதங்கள் தரையில்படக் கால் நோக நின்று கொண்டிருப்பார்கள் என்று நான் கேள்விப்பட்டதில்லை."

மற்றொரு வீரன் இதற்குப் பதிலேதும் சொல்லாமல், பேச வேண்டாமென்று தடுத்து ஏதோ சைகை செய்தான். அதை முதலில் பேசியவன் கவனிக்கவில்லை.

ஒரு பெண்ணின் அழகு— பல சமயங்களில்— ஒரு நல்ல அறிவாளியை முட்டாளாகவும், ஒரு முட்டாளை அடிமுட்டாளாகவும் ஆக்கிவிடுகிறது. அதை நிரூபிப்பது போல் அவன் மறுபடியும் பேசினான்.

“எங்கள் நாட்டில் தாமரைப் பூக்கள் குளத்தில் மட்டும்தான் பூப்பதுண்டு. ஆனால் உங்கள் தேசத்தில் நிலத்தில் கூடத் தாமரை பூக்கும் போலிருக்கிறதே.”

பகைவர்களிடம் அகப்பட்டுக் கொண்டிருந்தால்கூடப் பரவாயில்லை. இப்போது சரியான பைத்தியக்காரர்களிடம் அகப்பட்டுக் கொண்டோம் போலிருக்கிறது என்று நினைத்தபடி, தியாகவல்லி குறும்புத்தனமாகப் பேசிய அந்த வாலிபனை நிமிர்ந்து சுட்டெரித்துவிடுவது போல் பார்த்தாள். அவள் தன்னைப் பார்க்கக் கூடிய சந்தர்ப்பத்திற்காகவே காத்திருந்தவன் போல் அவனும் அவளை விழுங்கிவிடுவது போல் பார்த்தான். பக்கத்திலிருந்த குதிரைவீரன் அவனுடைய தோளைத் தட்டி ஏதோ கூறினான்.

இந்தச் சமயத்தில் வயலும் வரப்புமாய்க் காணப்பட்ட பகுதியிலிருந்து ஒரு பாடல் கேட்டது:

‘யானே பொய் என் நெஞ்சம் பொய்
  என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
  உன்னைப் பெறலாமே
ஆனால் வினையேன் அழுதால்
  உன்னைப் பெறலாமே.”

இறைவனை நினைத்து உருகி உருகி, மாணிக்கவாசகரின் ஆனந்தப் பரவசத்தைப் பாடிக் கொண்டு ஒரு சிவனடியார் வெளிப்பட்டார். குதிரை வீரர்கள் சொல்லாமல் கொள்ளாமல் இடத்தைக் காலி செய்துவிட்டு விரைந்தார்கள்.

தியாகவல்லி சிவனடியாருக்கு வணக்கம் செய்தாள். சிவனடியார் அவளை “நீடு வாழ்க, நீடு வாழ்க, மங்கலம் பெருகி மகிழ்ந்து வாழ்க” என்று சொல்லி ஆசீர்வதித்துவிட்டு, “மகளே, உன் மனத்தை வருத்தும் கவலையைவிடு. உன் அண்ணன் குலோத்துங்கன் ஒருவித ஆபத்துமின்றித் திரும்பி வருவான். ஆனால் அவன் தேடிப் போயிருப்பது கிடைக்காது” என்றார்.

காவி உடையும். கையில் கமண்டலமும், கழுத்தில் ருத்திராட்ச கண்டிகையும், தாழ்வடங்களும், காதுகளில் ருத்திராட்ச குண்டலங்களுமாய் விளங்கிய அந்தச் சிவனடியாரின் நெற்றியில்

பூசியிருந்த திருநீறு— இருளின் யாத்திரை தொடங்கியிருந்த அந்த நேரத்திலும் ஒளி வீசிக் கொண்டிருந்தது. பொய்ம்மையின் பிடியில் சிக்குண்ட போதும் மங்கிவிடாத சத்தியத்தின் பிரகாசத்தைப் போல் அது விளங்கியது.

அந்தச் சிவனடியார் அவளுக்கொரு திரிகால ஞானியாகத் தென்பட்டார். குலோத்துங்கனைப் பற்றி அவர் கூறிய செய்தி அவளுக்கு ஆறுதலைக் கொடுத்தது. அண்ணனைப் பற்றித் தெரிந்து கொண்டதன் பின் அவளுக்கு வேறொருவனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

“சுவாமி! நீங்கள் முக்காலமும் உணர்ந்த ஞானி. இப்போது சற்று நேரத்திற்கு முன் இந்தப் பாதையில் சென்ற வீரர்கள் யாரென்பதை எனக்குக் கூறுவீர்களா?” என்று கேட்டாள்.

“பெண்ணே! இரண்டு பேரில் ஒருவன் மானவர்மனது ஒற்றர் படையைச் சேர்ந்தவன். இன்னொருவன்— கோட்டையையும் நாட்டையும் அடிக்கடி கோட்டைவிட்டுக் கொண்டிருக்கும் குலசேகரப் பாண்டியனுடைய மகன் விக்கிரமன்.”

அவள் அந்தப் பெயரைத் தனக்குள் ஒருமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

“விக்கிரமனா?”

“ஆமாம். அழகிய பெண்களையும் அழகான கவிதைகளையும் தவிர வேறெதையும் பற்றிக் கவலைப்படாதவன். ஆட்சியைப்பற்றி எதுவுமறியாத ஓர் அப்பாவி. இன்னும் சில நாட்களுக்கு மதுரை இளவரசன்.”

“சில நாள் இளவரசனா?”

“ஆமாம் பெண்ணே! இன்னும் சில நாளில் மதுரையின் ஆட்சி மாறப் போகிறது.”

“சுவாமி, தங்களிடம் ஒரு முக்கியமான ரகசியத்தைப் பற்றிக் கேட்பேன், சொல்வீர்களா?”

“கேள்..”

“என் அண்ணன் குலோத்துங்கன் எப்போது ஆட்சிக்கு வருவார்? அவர் முடிசூட்டிக் கொள்வதற்கு இன்னும் எவ்வளவு காலம் ஆகும்?”

இந்தக் கேள்விக்குச் சிவனடியார் உடனே பதில் சொல்லவில்லை. சற்று நேரம் யோசித்துக் கொண்டிருந்தார். வானத்தை ஊடுருவிப் பார்த்தார்.

குரலைத் தணித்துக் கொண்டு மெதுவாகத் தியாகவல்லியின் காதோடு சொன்னார்:

"பெண்ணே! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். இது பரம ரகசியம். உன்னுடைய அண்ணன் ஆட்சிக்கு வருவதென்பது அவ்வளவு சாதாரணமாக நடக்கக்கூடியதல்ல. பெரிய போராட்டங்களுக்குப் பிறகுதான் குலோத்துங்கன் முடிசூட்டிக் கொள்ள முடியும். அவனைக் கொன்றுவிடுவதற்குப் பலவிதமான சூழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்த நேரத்திலும் அவனுக்கு எதுவும் ஏற்படலாம். உங்களுடைய தாயாதிகள் மட்டுமல்ல, சோழ நாட்டின் மிகப்பெரிய அரசியல் தலைவர்களே குலோத்துங்கனைத் தொலைத்துவிடச் சூழ்ச்சி புரிந்து வருகிறார்கள். நீங்கள் பெரிதும் யாரை நம்பிக் கொண்டிருக்கிறீர்களோ அவர்கூட இந்தச் சதியில் ஈடுபட்டிருக்கிறார்."

"சுவாமி யார் அவர்?"— தியாகவல்லி பரபரப்புடன் கேட்டாள்.

சிவனடியார் குரலை இன்னும் தாழ்த்திக் கொண்டு சொன்னார். "அவர்தான் சோழ நாட்டில் இதுவரை இல்லாத வழக்கமாக— சேனைநாயகர் பதவியையும் முதலமைச்சர் பதவியையும் ஒரே சமயத்தில், ஒருவரே வகிக்கக்கூடிய அளவு சிறப்புப் பெற்றிருக்கும் திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பிப் பல்லவராயர்."

"யார்?— பல்லவராயர் தாத்தாவா?"

தியாகவல்லியின் தலை சுற்றியது.

தொலைவில் நீரோடையின் பக்கத்தில் ஆளரவம் கேட்டது. குலோத்துங்கனும் அனந்தபாலனும் வந்து கொண்டிருந்தார்கள். சிவனடியார் விடைபெற்றுக் கொண்டு வயல்வெளியில் இறங்கி மறைந்தார்.

தியாகவல்லி திடுக்கிட்டுப் போய் நின்ற இடத்தில் நின்றபடியே நின்று கொண்டிருந்தாள்.

# 09. பேதையின் வேதனை!

இருளென்னும் மாயமோகினி உலகத்தின் ஆட்சியைப் பூரணமாகக் கைப்பற்றி முடிசூட்டிக் கொண்டிருந்த நேரத்தில், நீரோடையைத் தாண்டிக் குலோத்துங்கன் அனந்தபாலனுடன் வந்து சேர்ந்தான். திகைத்துப் போய் நின்றிருந்த தங்கையோடு தேரில் ஏறிக்கொண்டான்.

குலோத்துங்கன் வந்து சேர்ந்ததும், அவளை ஏதோ கேட்டதும், தான் தேடிச் சென்றவர்களைப் பற்றி அவளிடம் கூறியதும், தேரில் அவர்கள் மறுபடியும் புறப்பட்டு இராசராசபுரத்து அரண்மனையை வந்து அடைந்ததும் எதுவுமே தியாகவல்லியின் மனத்தில் பதியவில்லை. மங்கிய தெளிவில்லாத ஞாபகங்களாகவே அவையனைத்தும் இருந்தன.

தெளிவான ஒரே ஒரு ஞாபகம் மட்டும் அவளுக்கு இருந்தது.

'யானே பொய் என் நெஞ்சம் பொய்
என் அன்பும் பொய்.'

– சிவனடியார் பாடிய அந்தப் பாடல் அவளுடைய செவிகளில் கேட்டுக் கொண்டிருந்தது. சிவனடியார் கடைசியில் கூறிய அந்த வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளுடைய மனத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

'யானே பொய் என் நெஞ்சம் பொய் என் அன்பும் பொய்' –எது பொய்? எது மெய்? மூன்று காலத்தையும் முற்றுமுணர்ந்து தெளிந்த சிவனடியார் பொய்யா? அல்லது இத்தனைக் காலமும் தன்னையும் தன் அண்ணனையும் காத்துக் காப்பாற்றி வரும் சேனைநாயகர் பொய்யா?

இந்த உலகத்தில் பொய்யானவர்களையும் மெய்யானவர்களையும் தனித்தனியே பிரித்து அடையாளம் கண்டு கொள்ள வசதியில்லாமல் போய்விட்டதை நினைத்துத் தியாகவல்லி வருந்தினாள். நல்லவர்கள், பொல்லாதவர்கள், உயர்ந்தவர்கள், கயவர்கள் எல்லோரும் ஒன்று போலவே காணப்படுகிறார்கள். ஒரே மாதிரிதான் இருக்கிறார்கள். யாரிடம் பழகுவது, யாரிடமிருந்து விலகுவது என்பதைக் கண்டுபிடிக்க முடிந்தால் இந்த உலகில் எவ்வளவு துயரங்களைத் தடுத்திருக்க முடியும்

வாழ்க்கையில் எந்தவிதப் பற்றும் இல்லாமல் பரமசிவனின் பாத கமலங்களைத் தேடிப் பயணம் செய்து கொண்டிருக்கக் கூடிய ஒரு சிவனடியாரின் வார்த்தைகளை அவளால் அலட்சியப்படுத்திவிட முடியவில்லை.

இதற்குமுன் நடந்திருந்த சில சம்பவங்களை நினைத்துப் பார்த்த போது, தியாகவல்லியின் நெஞ்சமாகிய நிலத்தில் விழுந்திருந்த சந்தேக விதை பழைய நினைவுகளாகிய நீரைக் குடித்து, வெறுப்பு வேர்விட்டுக் கோபச் செடியாக வளர்ந்து பகைமை முட்களைப் படரவிட்டுக் கொண்டிருந்தது. அவளுடைய மெல்லிய இதயம் கூர்மையான அந்தக் கொடிய முட்களைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தவித்தது.

இடையடையே அவளுக்கு விக்கிரமனுடைய ஞாபகமும் வந்து போய்க் கொண்டிருந்தது.

அன்றைக்கு— தனிமையும் அச்சமும் தன்னைப் பற்றிக் கொண்டிருந்த அந்தச் சூழ்நிலையில் தனக்குப் பக்கத்தில் குதிரையைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டு, மானவர்மனின் ஒற்றர் படையைச் சேர்ந்தவன் தடுத்தும் கேளாமல், தைரியமாகத் தன்னைப் பார்த்து வர்ணித்த விக்கிரமனுடைய அழகிய வார்த்தைகள் அவள் நினைவிற்கு வந்தன.

‘உங்கள் தேசத்தில் தாமரை— நிலத்தில்கூடப் பூக்கும் போலிருக்கிறதே’ என்று அவன் அவளைப் புகழ்ந்து கூறிய வார்த்தைகள்— ஓர் ஆடவனுக்கும் பெண்ணிற்கும் இடையே உள்ள தடைகள், திரைகள் எல்லாவற்றையும் தாண்டி அவளுடைய இதயத்தின் மிக நுண்ணிய பகுதியை மிக நெருக்கத்தில் தொட்டுப் பார்த்திருந்தன.

அதுவரை தன்னையொரு சின்னஞ்சிறு சிறுமியாகவே கருதிக் கொண்டிருந்த அவள், தன்னிடம் பூத்துப் பொலிந்து கொண்டிருந்த இளமைக்கும், புதிது புதிதாய்ப் பொங்கிக் கொண்டிருந்த அழகுகளுக்கும் அந்த ஆண் மகனுடைய கண்கள் அங்கீகாரம் தந்த போது, திடீரென்று விவரம் தெரிந்த பெண்ணாக மாறி அவனைச் சினந்து நோக்கினாள். அப்படி நோக்கிய போது அதற்காகவே காத்துக் கொண்டிருந்தவன் போல், அன்பும் குறும்பும் ஆர்வமும் கலந்து கனிந்த தன் கண்களை அவளுடைய கண்களோடு அவன் கலந்தான்.

ஏற்கனவே மலர்ந்திருந்த அவளை, அந்த நேரத்தில் அவனுடைய அந்தப் பார்வை மறுபடியும் ஒருமுறை மலர வைத்தது.

அவனைப் பற்றி அவளுக்குள் ஒரு சந்தேகமும் இருந்தது.

மானவர்மனது ஒற்றர் படைக்கும் மதுரை இளவரசனுக்கும் என்ன சம்பந்தம்? பாண்டிய குமாரனுக்குப் பழையாறைப் பக்கத்தில் என்ன வேலை?

பல்லவராயர் தாத்தாவின் மீது ஏற்பட்டிருந்த பகைமை உணர்வுக் கிடையில், விக்கிரமன் மீது அந்தப் பேதையின் நெஞ்சில் கொஞ்சம் பரிவும் வளர்ந்து கொண்டிருந்தது. அதே நேரத்தில் எதற்காகவோ அவனைக் கோபித்துக் கொள்ள வேண்டும் போலவும் தோன்றியது.

திடீரென்று எதிர்ப்பட்ட ஒரு பெண்ணை 'தேவதை' என்றும், 'தாமரை' என்றும் வர்ணிக்கக்கூடிய ஒரு வாலிபன் எப்படிப்பட்டவனாக இருப்பான்? அறிமுகமில்லாத ஒரு கன்னிப் பெண்ணைத் தைரியமாக நெருங்கி அவளைப் புகழக் கூடிய சொற்களைத் தாராளமாக அள்ளி வீசும் ஆடவனை எப்படி நம்ப முடியும்? ஒருவேளை பாண்டிய நாட்டில் பெண்களைப் புகழ்வதை ஒரு கலையாகவே கற்றுக் கொடுக்கிறார்களோ என்னவோ!

விக்கிரமனைப் பற்றிச் சிவனடியார் கூறிய வார்த்தைகளை அவள் நினைத்துக் கொண்டாள்.

அழகிய பெண்களையும் அழகான கவிதைகளையும் தவிர வேறெதையும் பற்றிக் கவலைப்படாதவராமே! ஆட்சியைப் பற்றி அவருக்கு எதுவுமே தெரியாதாமே!

சே! ஓர் ஆண்மகன் தனக்குரிய கடமைகளிலிருந்து தவறலாமா?

வினைதானே ஆடவர்க்கு உயிர்

அதுவும்— ஒரு நாட்டின் இளவரசன் இப்படி இருக்கலாமா?

தன் அண்ணன் குலோத்துங்கனையும், பாண்டிய இளவரசன் விக்கிரமனையும் அவள் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டாள்.

குலோத்துங்கனும் பாண்டிய குமாரனைப் போல் ஓர் இளைஞன்தான்!

ஆனால்— அன்றைக்கு அந்தக் காட்டு வழியில், தோப்பிற்குள் கேட்ட ஏதோ ஒரு சத்தத்தைக் கவனித்துவிட்டு அண்ணன் எப்படிக்

குதித்துக் கொண்டு ஓடினான்! 'என்னுடைய தேசத்தில் நடக்கக்கூடிய எந்தச் சிறு சம்பவத்தைப் பற்றியும் கவனம் செலுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்' என்று எவ்வளவு பொறுப்புணர்ந்து பேசினான்! அந்தப் பொறுப்புணர்ச்சியில் அணுவளவாவது பாண்டிய குமாரனிடம் இருக்க வேண்டாமோ?

ஒரு தேசத்தின் இளவரசன் பெண்களின் அழகுகளைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்தால்— அப்புறம் அந்த தேசம் எப்படி உருப்படும்?

சேனைநாயகரைப் பற்றிக் கேள்விப்பட்டதை மறப்பதற்காக விக்கிரமனுடைய ஞாபகத்தை வளர்த்துப் பார்த்தாள். அந்த ஞாபகமும் கடைசியில் வெறுப்பில் போய் முடியவே, அவளுடைய நினைவுகள்விட்ட இடத்திலேயே மறுபடியும் தொடங்கிப் பல்லவராயர் மீது குரோதத்தை வளர்ப்பதில் சென்று நின்றன.

இரண்டு மூன்று நாட்களாகவே அவளுடைய மாறுதல்களைக் கவனித்துக் கொண்டிருந்த குலோத்துங்கன், அன்று அரண்மனை உப்பரிகையில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது அவளை அதுபற்றித் தூண்டித் தூண்டிக் கேட்டான். மனத்தில் வைத்துப் புழுங்கிக் கொண்டிருப்பதை அண்ணனிடம் சொன்னாலாவது கொஞ்சம் பாரம் குறையும் என்று கருதிய தியாகவல்லி, சிவனடியாரிடம் கேள்விப்பட்டதைச் சொல்லிவிடலாமென்று முடிவு கட்டினாள்.

அதற்குமுன் குலோத்துங்கனை நோக்கி ஒரு கேள்வி கேட்டாள்.

"அண்ணா! தாத்தா பல்லவராயரைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

இதைக் கேட்டுக் குலோத்துங்கன் சிரித்தான். "தியாகவல்லி! இதென்ன கேள்வி? அவரைப் பற்றி அபிப்பிராயம் கூறக்கூடிய அளவு நான் பெரிய மனிதனாகிவிட்டேனா?"

இந்தப் பேச்சை இதற்குமேல் தொடராமல் விட்டுவிட்டு, இராசராசேச்சுரத்திற்குப் போய்த் திரும்பிய நாளன்று— காட்டு வழியில் தேர் நிறுத்தப்பட்டதிலிருந்து சிவனடியார் கூறிய கடைசி வார்த்தை வரைக்கும் அவள் அவனிடம் விளக்கமாகக் கூறினாள்.

நடந்ததையெல்லாம் கூறிய அவள், விக்கிரமன் என்ற அந்தப் பாண்டிய குமாரனைப் பற்றிய செய்தியை மட்டும் மிகக் கவனமாக அண்ணனிடமிருந்து மறைத்துவிட்டாள்.

வீட்டிலிருக்கும் பொருட்களில் ஏதேனும் ஒன்றை எடுத்து இது என்னுடையது— என்று கூறி யாருக்கும் தராமல் மறைத்து வைத்துக் கொள்ளும் குழந்தையைப் போல், விக்கிரமனைப் பற்றிய செய்தியை மட்டும் தனியே வெட்டி எடுத்து, ‘இது என்னுடையது’ ‘எனக்கு மட்டும் அந்தரங்கமானது’ என்று நினைத்துக் கொண்டவளாக அண்ணனிடம் சொல்லாமல் மறைத்துவிட்டாள்.

தியாகவல்லி கூறியதையெல்லாம் மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டு வந்த குலோத்துங்கனின் கண்களில் சிவனடியார் கடைசியாகக் கூறிய வார்த்தைகளைக் கேட்டபோது கோப நெருப்புக் கொழுந்துவிட்டது. திடீரென்று ஒரு துள்ளுத் துள்ளி எழுந்தவன், “தியாகவல்லி! என்ன காரியம் செய்துவிட்டாய் அம்மா! இதை ஏன் அப்போதே என்னிடம் சொல்லவில்லை? சொல்லியிருந்தால் அந்த ருத்திராட்ச வேஷதாரியைக் கையோடு பிடித்து வந்து அவனுடைய தாடியைப் பிய்த்து வேடத்தை வெளிப்படுத்தியிருப்பேன்!” என்றான்.

“அண்ணா! தாத்தாவிடம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறாய். அரசியலில் இருப்பவர்கள் யாரும் யாரையும் முழுக்க நம்பிவிடக் கூடாது.”

“தியாகவல்லி! யாரைப்பற்றி நீ இந்த வார்த்தைகளைப் பேசுகிறாய்? பல்லவராயர் தாத்தா மட்டும் இல்லாமலிருந்திருந்தால் இன்றைக்கு நீயோ நானோ உயிருடனாவது இருந்திருக்க முடியுமா? நம்முடைய கடந்த காலத்தைப் பற்றிக் கொஞ்சம் யோசித்துப் பார்.

“நம்முடைய தந்தை நோய்வாய்ப்பட்டிருக்கிறார். ராஜ மருத்துவர்கள் கையை விரித்துவிட்டார்கள். அப்போது நீ ஒரு வயதுக் குழந்தை. எனக்கு இரண்டு வயது. கங்கைகொண்ட சோழபுரத்திற்கு ஆளனுப்பி இராசாதிராசரை வரவழைத்து, அவருக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிட்டு, நாட்டின் அரசியல் நிர்வாகத்தையும், உன்னையும் என்னையும் படைத்தலைவராக இருந்த பல்லவராயர் தாத்தாவின் கைகளில் ஒப்படைத்துவிட்டு அவர் காலமாகிவிட்டார்.

"அதற்குப் பிறகு இந்தப் பெரிய தேசத்தின் அரசியலையும், நம்மையும் காப்பாற்றுவதற்குத் தாத்தா என்ன பாடுபட்டார் என்பதை நீ மறந்துவிட்டாயா?

"தாயத்தினர்க்குள் ஆட்சியுரிமைக் கலகம் வந்து நாடெங்கும் கொந்தளிப்பு ஏற்பட்ட போது– அதைத் தடுத்து இந்தப் பேரரசை நிலைநிறுத்த அவர் செய்த முயற்சிகள் எத்தனை? உன்னையும் என்னையும் கொலை செய்துவிட முயற்சிகள் நடந்த போது, நம்மையும் நம்முடைய தாய்மாரையும் ஆயிரத்தளி அரண்மனையிலிருந்து பாதுகாப்பு மிக்க இராசராசபுரத்து அரண்மனைக்குக் கொண்டு வந்து சேர்த்து, இன்றுவரை நம்மைக் காப்பாற்றுவதற்கு அவர் ஏற்றுக் கொண்ட இன்னல்கள் எத்தனை?

"தானே ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டிருந்தால் அதற்குத்தானா சந்தர்ப்பம் கிடைத்திருக்காது?

"அன்பில் நெகிழ்ந்து நெகிழ்ந்து நம்மோடு கலந்துவிட்ட ஒருவரை– யாரோ ஒரு வேடதாரி சொன்ன வார்த்தைகளைக் கேட்டுச் சந்தேகித்துவிட்டாயே! எனக்கு எப்போது முடிசூட்டுவது, ஆட்சியை எந்தச் சூழ்நிலையில் என்னிடம் ஒப்படைப்பது என்பதெல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும். எதை எப்போது செய்ய வேண்டுமோ அதை அப்போது செய்து முடிப்பவர் அவர். இந்த உலகத்தில் அவர் அதிக அன்பு வைத்திருப்பது உன்னிடமும் என்னிடமும்தான். நமக்கு அடுத்தபடியாகத்தான் அவருக்கு மனைவி, மக்கள், மன்னர்– எல்லாம்.

"யாரைப்பற்றி மனதில் கூடத் தவறாக எண்ணிவிடக் கூடாதோ– அவரைப் பற்றி நீ என்னவெல்லாம் பேசிவிட்டாய்! இதைத்தான் 'பெண்புத்தி' என்று சொல்கிறார்கள் போலிருக்கிறது."

– குலோத்துங்கன் குமுறிவிட்டு ஓய்ந்தான்.

கண்களில் நீர் ததும்ப, "என்னை மன்னித்துவிடுங்கள் அண்ணா!" என்று சொல்லிவிட்டுத் தியாகவல்லி எழுந்து நடந்தாள்.

என்றுமில்லாமல் அன்று தன் அன்புத் தங்கையைக் கடிந்து கொண்டதற்காக வருத்தப்பட்டாலும், அவன் அவளுக்கு ஆறுதல் சொல்ல விரும்பவில்லை.

எழுந்து நடந்த அவளைத் தடுத்து உட்காரச் சொல்லவுமில்லை.

அதே சமயத்தில் அங்கிருந்த மறைவிடத்திலிருந்து யாரோ ஒருவர் வெளியேறிச் சென்றதையும் அவன் கவனிக்கவில்லை.

உப்பரிகையிலிருந்து தன் அந்தப்புரத்தினை வந்தடைந்த தியாகவல்லி, அழுது அழுது ஓய்ந்த பிறகு நிதானமாக யோசித்துப் பார்த்தாள். அண்ணன் கூறியது அனைத்தும் உண்மை என்று பட்டது. பல்லவராயர் தாத்தாவைப் பற்றித் தான் நினைத்ததெல்லாம் தவறு என்பதை உடனே அண்ணனிடம் போய்ச் சொல்லி, சிரிக்கச் சிரிக்க அவனிடம் ஒரு வார்த்தையாவது பேசிவிட்டு வந்துவிட வேண்டுமென்று நினைத்து அவள் புறப்பட்டாள்.

அப்போது இரவு இரண்டாம் ஜாமம் கழிந்து மூன்றாம் ஜாமம் ஆரம்பமாகியிருந்தது.

குலோத்துங்கன் நல்ல நித்திரையில் ஆழ்ந்திருப்பான்.

ஆனாலும் பரவாயில்லை. தூக்கத்தைக் கலைத்தாவது பேசிவிட்டு வந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அவளுடைய இதயம் வெடித்துவிடும்!

தியாகவல்லி கையில் ஓர் அகல் விளக்கை எடுத்துக் கொண்டாள். அந்தப்புரத்துத் தாதிமார்கள், பெண்கள் யாரும் விழித்துவிடக் கூடாதே என்ற எச்சரிக்கையோடு மெல்ல நடந்து வெளியேறிக் குலோத்துங்கன் துயில் கொள்ளும் மண்டபத்தின் வாயிலை அடைந்தாள். வெளிவாயிலில் காவலர்கள் இல்லையாதலால் அவளை யாரும் கவனிக்கவில்லை. படிகளில் ஏறியவள், அப்படியே திகைப்படைந்து போய்ச் சுவரை ஒட்டி ஒதுங்கி நின்று கவனித்தாள்.

உள்ளே— சேரத்துத் தந்தக் கட்டிலில் மலர் பரப்பிய பஞ்சணையில் குலோத்துங்கன் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருக்கிறான்.

கதவுகளுக்குப் பக்கத்தில் யாரோ நின்று கொண்டிருக்கிறார்களே— யார் அது? பல்லவராயர் தாத்தாவா?

இவர் எப்போது தலைநகரிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார்? வருவதாகத் தகவலே இல்லையே! இந்த இரவு நேரத்தில் இங்கே இவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? இவருடைய கையில் இருப்பது என்ன? இருட்டிலும் பளபளக்கிறதே— ஆ— கத்தி கூர்மையான கத்தி!

சத்தியமே சதி செய்கிறதா? சந்தேகம் உறுதிப்படுகிறதா?

தான் கண்டுகொண்டிருப்பது கனவா? புத்தி பேதலித்துத் தனக்குப் பிரமை பிடித்துக் கொண்டதா?— தியாகவல்லி கன்னத்தைத் தேய்த்துப் பார்க்கிறாள். கை விரலால் கிள்ளிப் பார்க்கிறாள்.

கனவில்லை; உண்மைதான்.

இது கனவில்லை— என்று அவள் நிச்சயப்படுத்திக் கொள்வதற்குள், பல்லவராயர் கையில் பிடித்திருந்த கத்தியை ஓங்கிக் கட்டிலில் படுத்திருக்கும் குலோத்துங்கனைக் குறிபார்த்து வீசினார். அலறிக் கொண்டு ஓடிப் போய்த் தியாகவல்லி அவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். உடலை மெல்ல விசும்பி அவளை உதறிவிட்டு, விரைந்து நடந்து பக்கத்திலிருந்த ஏதோ ஒரு வழியில் புகுந்து மறைந்தார் பல்லவராயர். தியாகவல்லி மூர்ச்சித்துத் தரையில் சாய்ந்தாள்.

# 10. வாழ வழி கண்டவள்

காலைக் கதிரவன் கனவுகளிலிருந்து விழித்துக் கண்ணிமைகளைத் திறந்த போது, சோழ அரண்மனையின் சோகத் தோற்றத்தைக் கண்டான். இரவுப் பொழுதில் அதிர்ச்சிக்காளாகி உணர்விழந்த இளவரசியைச் சுற்றி அரச மருத்துவரும், அந்தப்புரத்துப் பெண்மணிகளும், குலோத்துங்கனும் கவலை படிந்த முகத்தோடு காத்திருந்தார்கள்.

பொழுது புலர்ந்து ஒரு நாழிகை நேரம் கழித்துத் தியாகவல்லி தன் உணர்வு பெற்றுக் கண்விழித்த போது, அரச வைத்தியர் அரும்பாக்கக் கிழாருக்குப் பக்கத்தில் தன் அண்ணன் கவலை படிந்த முகத்துடன் நின்று கொண்டிருப்பதைக் கவனித்தாள். அவனுக்கு எதுவும் ஆபத்து ஏற்படவில்லை என்பதை அறிந்த போது அவள் முகத்தில் அந்த அசௌக்கியமான நிலையிலும்கூட ஒரு மலர்ச்சிதென்பட்டது.

அவள் கண் மலர்த்தியதைப் பார்த்துவிட்டு அரும்பாக்கக் கிழார், "இதோ!" என்று மகிழ்ச்சிக் குரல் எழுப்பினார். குலோத்துங்கன் வேகமாக வந்து தன் தங்கை படுத்திருக்கும் கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த ஆசனத்தில் அமர்ந்து, புத்துயிர் பெற்ற தன் குழந்தையைப் பார்க்கும் ஒரு தாயின் ஆவலோடு அவளைப் பார்த்தான்.

படுக்கையிலிருந்து எழுந்து உட்கார அவள் முயற்சி செய்த போது, "பரவாயில்லை, எழுந்திருக்க வேண்டாம் அம்மா" என்று தடுத்துவிட்டு, "இப்போது எப்படியிருக்கிறது?" என்றான். பரவாயில்லை— என்பது போல் அவள் தலையசைத்தாள்.

தியாகவல்லி ஏதோ பேச முயற்சி செய்தாள். இந்தச் சமயத்தில் அரச வைத்தியர் குறுக்கிட்டார்.

"இளவரசே! உங்கள் தங்கைக்கு ஓய்வு தேவை. இப்போது பேச்சுக் கொடுப்பது நல்லதல்ல."

குலோத்துங்கன் எழுந்தான்.

"ஆகட்டும் அரும்பாக்கக் கிழாரே. நான் புறப்படுகிறேன். நீங்கள் பக்கத்திலிருந்து பார்த்துக் கொள்ளுங்கள்" என்றவன், தங்கையின்

பக்கம் திரும்பி, "தியாகவல்லி! பல்லவராயர் தாத்தா வந்திருக்கிறார். இவ்வளவு நேரமும் இங்குதான் இருந்தார். மயக்கம் தெளிந்ததும் உன்னிடம் சொல்லிக் கொண்டு இராசராசேச்சுரத்திற்குப் போய் வருவதாகப் பேசி வைத்திருந்தோம். திடீரென்று கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து அவசர ஓலை வந்ததால் இப்போதுதான் இங்கிருந்து போனார். அவரை அழைத்து வரச் சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

அரும்பாக்கக் கிழார் மறுபடியும் குறுக்கிட்டுச் சொன்னார்:

"இளவரசே! இப்போதைக்கு யாரும் வந்து பார்க்காமல் இருப்பதே நல்லது. பார்த்தால் பேசுமாறு நேரிடலாம். அல்லது உணர்ச்சி வயப்படலாம். அப்படி ஏதாவது நேர்ந்தால் மறுபடியும் மயக்கம் வந்துவிடும்."

"அப்படியா?" என்று வைத்தியரைப் பார்த்துக் கேட்ட குலோத்துங்கன், "இராசராசேச்சுரத்திற்குப் போய் வந்த பிறகு நானும் தாத்தாவும் வந்து பார்க்கிறோம். அதுவரை நன்றாக ஓய்வெடுத்துக் கொள்" என்று தியாகவல்லியைப் பார்த்துக் கூறினான். அவள் அவனைத் தடுப்பது போலக் கையை நீட்டி, "அண்..ணா!" என்று ஏதோ சொல்லத் தொடங்கவே, "வைத்தியர் கூறியதைக் கேட்டாயல்லவா? எல்லாவற்றையும் பிறகு வந்து பேசிக் கொள்ளலாம்" என்று கூறிவிட்டு வேகமாகத் திரும்பி வெளியேறினான்.

இரவில் நடந்த கொலை முயற்சியைப் பற்றித் தனிமையில் தன் அண்ணனிடம் கூறி எச்சரித்துவிட வேண்டுமென்றும், பல்லவராயர் தாத்தாவுடன் இராசராசேச்சுரத்திற்குப் புறப்படாமல் அவனைத் தடுத்துவிட வேண்டுமென்றும் தியாகவல்லி விரும்பினாள். வைத்தியருடைய கட்டளையும், உடலின் பலவீனமும், குலோத்துங்கனின் அவசரமும் சேர்ந்து அவள் நினைத்ததைச் சொல்ல முடியாமல் செய்துவிட்டன.

குறி வைத்து வீசிய கத்தியிலிருந்து தப்பிவிட்ட குலோத்துங்கனைக் கொல்லும் வரைக்கும், அந்தக் கிழப்புலிக்குத் தூக்கம் வருமா? இராசராசேச்சுரத்திற்கு அழைத்துச் செல்வதில் ஏதாவது சூழ்ச்சி இருக்கும்! அண்ணனை வஞ்சகமாகக் கொலை செய்வதற்கு ஏதாவது திட்டமிருக்கும்

ஐயோ! அண்ணனை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமே!

'ஆ..!'

தியாகவல்லி மறுபடியும் மயக்கமடைந்துவிட்டாள்.

"அனந்தபாலனைக் கூப்பிட்டுத் தேரை ஆயத்தப்படுத்தச் சொல்லட்டுமா தாத்தா?"

தலைநகரிலிருந்து இராசாதிராசரது தூதுவன் கொண்டு வந்த ஓலைக்கு மறுமொழி எழுதிக் கொண்டிருந்த சேனைநாயகர், குலோத்துங்கனைத் திரும்பிப் பார்த்தார்.

"வேண்டாம். குதிரையிலேயே போகலாம். அப்போதுதான் வழி நெடுகப் பேசிக் கொண்டே போக முடியும். அரசியலில் இருப்பவர்கள் அந்தரங்கம் பேசிக் கொள்ளும் போது, அங்கே மூன்றாவது ஆளுக்கு இடம் இருக்கக் கூடாது."

"தாத்தா, அனந்தபாலன் மிகவும் நம்பிக்கையானவன்."

"இருக்கலாம். ஆனால் அரசியலில் இருப்பவர்கள் யாரும் யாரையும் முழுக்க நம்பிவிடக் கூடாது."

குலோத்துங்கனுக்குத் திகைப்பாக இருந்தது. தாத்தா கூறிய இதே வார்த்தைகளைத்தான் தாத்தாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது தியாகவல்லியும் தன்னிடம் கூறினாள். அப்படியானால் தங்கை சொன்னது சரிதானா? தாத்தாவைக் கூட நம்பிவிடக் கூடாதா?

இது என்ன அர்த்தமில்லாத அரசியல்!

பேசாமல் நின்று கொண்டிருந்த குலோத்துங்கனைப் பார்த்து மெல்லச் சிரித்துவிட்டு அவர் கூறினார்.

"ரத சாரதி அனந்தபாலன் மிகவும் நம்பிக்கைக்குரியவனாக இருக்கலாம். ஆனால் ராஜாங்கத்தின் பெரிய பெரிய ரகசியங்களெல்லாம் அவனைப் போன்ற சாமான்யமான அரச ஊழியர்களால்தான் அம்பலத்திற்கு வருகின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. குதிரைகளையே ஏற்பாடு செய்யச் சொல். இந்த ஓலையை எழுதி முடித்துத் தூதுவனை அனுப்பிவிட்டு வந்துவிடுகிறேன்."

"ஆகட்டும் தாத்தா!"

குலோத்துங்கன் வெளியேறினான்.

ஓலையை எழுதி முடித்து ஓலைக் குழலின் உள்ளே போட்டு அதன் மேல்வாயை மூடி முத்திரையும் வைத்து வாயிலில் காத்திருந்த தூதுவனிடம் தந்து, அவனுக்கு விடை கொடுத்து அனுப்பிய பிறகு, அரண்மனையின் பிரதான மண்டபத்தின் முகப்பிற்கு வந்து சேர்ந்தார் பல்லவராயர். அங்கே இரண்டு வீரர்கள் குதிரைகளைத் தயாராக நிறுத்திப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். குலோத்துங்கனும் காத்துக் கொண்டிருந்தான்.

படிகளில் இறங்கிக் கொண்டே பல்லவராயர் கேட்டார்:

"குலோத்துங்கா! தியாகவல்லி எப்படியிருக்கிறாள்? மயக்கம் தெளிந்துவிட்டதா? பார்த்துவிட்டுப் புறப்படலாமா?"

"வேண்டியதில்லை தாத்தா! இப்போது புறப்பட்டால்தான் உச்சியம் போதிற்குச் சற்று முன்னதாகவே திரும்பிவர முடியும். உணவு வேளைக்கும் சரியாக இருக்கும். தியாகவல்லியைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அவளுக்கு மயக்கம் தெளிந்துவிட்டது. ஓய்வு வேண்டுமென்றுதான் அரும்பாக்கக் கிழார் கூறினார்."

"ஆமாம். அவளுக்கு வேண்டியது ஓய்வுதான். ஆனால் உடலுக்கு அல்ல; உள்ளத்திற்கு" என்று கூறிவிட்டுப் பல்லவராயர் குதிரையில் ஏறிக் கொள்ளவே, குலோத்துங்கனும் மற்றொரு குதிரையில் தாவி ஏறி அவரைப் பின்தொடர்ந்தான்.

ஆரியப்படையூரைத் தாண்டி, முழையூர் என்ற சின்னஞ் சிறு கிராமத்தையும் கடந்து செல்லும் வரை பல்லவராயர் எதுவும் பேசவில்லை. பல்லவராயருடைய மௌனத்திற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கும் என்பது அவனுக்கு ஏற்கெனவே தெரிந்ததுதான். அவர் பேச விரும்பவில்லையென்றால் அவரைப் பேசச் செய்யவோ, அவர் பேசத் தொடங்கிவிட்டால் அதைத் தடுத்து நிறுத்தவோ யாராலும் முடியாது என்பதை அவன் அறிவான். ஆதலால் அவனும் அவரை எதுவும் கேட்காமல் தொடர்ந்து கொண்டிருந்தான்.

முழையூர் கிராமத்தைத் தாண்டிய போது– காவிரியின் கிளை ஆறான சிற்றாறு ஒன்று ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டுப் பல்லவராயர் கேட்டார்.

"குலோத்துங்கா! வாளால் காவிரிக்கு வழி கண்ட கதையை முன்பு எப்போதோ உன்னிடம் கூறினேனே, நினைவிருக்கிறதா?"

"நீங்கள் என்னிடம் கூறிய எதுவும் என் நெஞ்சைவிட்டு அகன்றதில்லை தாத்தா!"

"அதை எனக்கு ஒருமுறை கூறுகிறாயா?"

தனக்கு எப்போதோ கூறியிருந்ததைத் தன்னிடமே எதற்காக மீண்டும் கேட்கிறார் என்று நினைத்துக் குலோத்துங்கன் தயங்கினான்.

"பரவாயில்லை, சொல்."

"தாத்தா! இப்போது நினைத்தாலும் என் நெஞ்செல்லாம் பூரிக்கிறது. என் தந்தையும் உங்கள் நண்பருமாகிய பெரிய தேவர் சோழேந்திர சிங்க இராச கம்பீர இராசராச சோழ தேவரது ஆட்சிக் காலத்தில், கருணைப் பெருங்கடலாய்ப் பொங்கி வரும் காவிரியை, நடந்த இடமெல்லாம் நலங்கொடுக்கும் நதி மகளை, பண்பறியாத பகைவேந்தன்— மலையமலைப் பக்கத்தில் மறித்து அடைத்துவிட்டான். தண்ணீருக்குத் தடை போட்டான்! காவிரி கை விரித்தாள். ஆறற்று, ஆற்று நீரற்றுச் சோணாட்டின் வளம் சுருங்கிற்று. தூது பேசச் சென்ற போது வாது பேசினான் பகை மன்னன். சோழ மண்டலத்துக் குடிமக்கள் தம்மைக் காத்து, வாழ வழி செய்ய வாளெடுத்தார் இராசராசர். தோளில் வீரத்தையும், நெஞ்சில் நியாயத்தையும் தூக்கிச் சுமந்தபடி நீங்களும் புறப்பட்டீர்கள்.

"தடுத்துக் கொண்டிருந்த பகைவர்களின் தலைகளைப் பறித்து, அடைத்துக் கொண்டிருந்த சுவர்களை இடித்து, உடைத்துப் பெருகிக் கொண்டு காவிரி ஓட, நம் வீரப்படை வெற்றி கொண்டாட நாட்டு மக்களெல்லாம் விழாக் கொண்டாடினார்கள். என் தந்தையின் அரசவைக் கவிஞராக விளங்கித் தம் முதுமைக் காலத்தில் தளர்ந்த உடலோடும், தளராத புலமையோடும் திகழ்ந்த *கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இவ்வீரச் செயலைப் பாடிப் பாராட்டினார்.

"அதையெல்லாம் படிக்குந்தோறும் கேட்குந்தோறும் நினைக்குந்தோறும் என் நெஞ்சமெல்லாம் வீரம் விளைகிறது தாத்தா!" என்று உணர்ச்சி பொங்கப் பொங்க உரை செய்த அவனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பல்லவராயர், "ஆகா..!" என்று தலையை ஆட்டிப் பெரிதும் ரசித்துவிட்டுச் சொன்னார்.

"குலோத்துங்கா! வீர வாசகங்களைப் பேசினாய். நீ கூறிய வார்த்தைகளெல்லாம் சாதாரணமானவை அல்ல. ஒரு கவிதையின் அந்தஸ்திற்குரிய காவிய வார்த்தைகள்."

தான் உயர்வாகவும் பெரிதாகவும் மதித்துக் கொண்டிருக்கக் கூடிய ஓர் ஆடவன் தன்னைப் புகழ்ந்து பேசும் போது ஓர் இளம் பெண்ணிற்கு ஏற்படக்கூடிய நாணம் எத்தகையதோ அத்தகைய நாணம் இப்போது குலோத்துங்கனுக்கு ஏற்பட்டது.

"இளமைக்கும் கவிதைக்கும்தான் நிறையத் தொடர்பு இருக்கும் போலிருக்கிறது. கவிதையில் இளமையும் இளமையில் கவிதையும் கலந்தே காணப்படுகின்றன" என்று அவர் மறுபடியும் கூறிய போது, நாணத்திலிருந்துவிடுபட்டு அவரை நிமிர்ந்து பார்த்தான்.

அவரே மீண்டும் பேசினார்.

"இராசேந்திர சோழராகிய கங்கைகொண்ட சோழரை அவரது புலமை நலங் கருதிப் 'பண்டித சோழன்' என்று அப்போதிருந்த புலவர் பெருமக்கள் போற்றினார்களாம். அது போலவே உன் தந்தையார் இராசராச சோழரை நாங்களெல்லாம் 'இராச பண்டிதன்' என்றே வழங்கி வந்தோம். ஒட்டக்கூத்தரிடம் கல்வி பயின்று, அவரைப் போலவே தமிழிலும் வடமொழியிலும் சிறந்த தேர்ச்சி பெற்ற உன் தந்தை 'முத்தமிழ்க்கும் தலைவன்' என்று பாராட்டப்பட்டார்.

"புலவர்களின் மீது அவருக்கிருந்த அன்பினை அளவிட முடியாது. இராசராச சோழன் உலாவை ஒட்டக்கூத்தர் அரங்கேற்றிய போது பெருமகிழ்ச்சியடைந்த உன் தந்தை, ஒவ்வொரு கண்ணிக்கும் ஒவ்வோராயிரம் பொன் பரிசிலாக வழங்கி, அந்தக் கவிஞர் பெருமானைக் கௌரவித்தார்.

"உன்னைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு உன்னுடைய தந்தையின் ஞாபகம் வந்துவிடுகிறது. உன்னுடைய தந்தையைப்

---

*'மலைகொன்று பொன்னிக்கு வழி கண்ட கண்டன்
வரராச ராசன்கை வாளென்ன வந்தே.'

— தக்கயாகப் பரணி.

'சுழியிட்ட காவிரிக்குச் சோனாடு வாழ
வழியிட்ட வாள்கான வாரீர்.'

— இராசராச சோழன் உலா

போலவே நீயும் புலமை மிக்கவனாகத் திகழ்கிறாய். அவரைப் போலவே காலஞ்சென்ற ஒட்டக்கூத்தர் மீதும், காலங்களைப் படைத்துக் காத்து அழித்துக் கொண்டிருக்கக் கூடிய உலகக் கூத்தர் மீதும் அளவிலாத அன்பு வைத்திருக்கிறாய்! உன்னைப் பார்க்கும் போது எனக்கே பெருமையாக இருக்கிறது."

குழைந்து நெகிழ்ந்த குரலோடு சேனைநாயகரது பேச்சின் இடையில் குறுக்கிட்டான் குலோத்துங்கன்.

"தாத்தா! என் தந்தையைப் போலவே நானும் வீரவேந்தனாக விளங்குவேனா? என்னுடைய முன்னோர் கரிகால் வளவரையும், இராசராசரையும், கங்கைகொண்ட சோழர் இராசேந்திரரையும் போலப் புலிக்கொடியை உலகெலாம் உயர்த்திப் புகழ் பெறுவேனா? கடலைக் கலங்க வைத்து, மலையை நடுங்க வைத்துக் காவிரி நாட்டுக்கு– நான் பிறந்த இந்த மண்ணுக்குப் பெருமை தேடிக் கொடுப்பேனா?

"முந்நீர்ப் பழந்தீவு பன்னிராயிரத்தையும் வெல்வேனா? பிளிறும் களிறுகளால் பாலங்கள் அமைத்துப் பெரிய பெரிய நதிகளையெல்லாம் கடந்து சென்று, ஆர்ப்பரிக்கும் பகைவர்களை அடக்கி வருவேனா? சொல்லுங்கள் தாத்தா, சொல்லுங்கள் சோழ தேசத்தின் பெருமையை உலகமெல்லாம் சொல்லிச் சொல்லி வியப்படையச் செய்வேனா, சொல்லுங்கள்!"

"இளைய நெஞ்சத்தின் வீரக்கனவுகள் என் இதயத்தையே சிலிர்க்கச் செய்கின்றன."

"அந்தக் கனவுகளெல்லாம் நனவுகளாக எனக்கு ஆசி தாருங்கள் தாத்தா."

"ஆசி தரும் விஷயத்தில் மட்டும் கொஞ்சம் யோசிக்க வேண்டியுள்ளது."

"தங்கள் ஆசியை நிறைவேற்றி வைத்துத் தங்களைப் பெருமைப்படுத்தும் அளவிற்கு எனக்குத் திறமையும் வீரமும் போதாதென்று நினைக்கிறீர்களா?"

"இல்லை குலோத்துங்கா, இல்லை. உன்னுடைய திறமையின் பெருமையையும் வீரத்தின் மேன்மையையும் சரியாகத் தெரிந்து,

கணித்து வைத்திருப்பதால்தான் நான் பெரிதும் யோசிக்க வேண்டியிருக்கிறது.”

“புரியவில்லையே தாத்தா!”

“புரிந்து கொள்வதற்கு முயற்சி செய். வாளால் காவிரிக்கு வழி கண்டதைப் பற்றிக் கூறினாயல்லவா? உன் தந்தையோடு சேர்ந்து பகைவரை வென்று, சோணாடு வாழ வழிகண்ட வாள் இதோ என்னிடம் இருக்கிறது. எந்த வாள் உன் தந்தையுடைய சிம்மாசனத்தின் மகத்துவத்தைக் காப்பதற்காகக் காவிரிக்கு வழி கண்டதோ— அதே வாள், இப்போது உன் தந்தையின் சிம்மாசனத்திற்கே வழி காணப் போகிறது.”

“புரியாமல் இருந்தது புதிராகிவிட்டதே தாத்தா!”

“புதிரை விடுவிப்பதற்குத்தான் உன்னைத் தனியே அழைத்து வந்திருக்கிறேன்” என்று சொல்லிவிட்டுப் பல்லவராயர் இடிக்குரலில் சிரித்தார். அந்தச் சிரிப்பு இயல்பான சிரிப்பாகக் குலோத்துங்கனுக்குத் தெரியவில்லை.

புதிரை விடுவிப்பதாகச் சொல்லும் பல்லவராயரே ஒரு புதிராகிவிட்டதை அந்தச் சிரிப்பு அவனுக்கு உணர்த்தியது.

# 11. கண்களும்... நெஞ்சமும்

குலோத்துங்கனுக்கு, நடந்ததெல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது. பல்லவராயருடைய பேச்சைக் காட்டிலும் ஆலயத்தில் நடந்த நிகழ்ச்சிகள் அவனுக்கு அதிக ஆச்சரியத்தைக் கொடுத்தன. 'அந்தரங்கம் பேசும் போது மூன்றாவது ஆளுக்கு இடமிருக்கக் கூடாது' என்று அரண்மனையில் கூறியிருந்த சேனைநாயகர்– இங்கே ஆலயத்தில் ஏற்கெனவே இரண்டு தடியர்களைத் தயார்படுத்தி நிறுத்தி வைத்திருந்தார்.

ஆலயத்தின் வாயிலில் குதிரைகள் சென்று நின்றவுடன் அந்தத் தடியர்கள் ஓடி வந்து சேனைநாயகருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு நின்றார்கள். குலோத்துங்கனும் பல்லவராயரும் குதிரையிலிருந்து இறங்கியதும் இரண்டு குதிரைகளையும் அவர்கள் பிடித்துக் கொண்டார்கள்.

பல்லவராயர் கேட்டார்.

"மானவர்மனிடமிருந்து ஆணை வந்ததா?"

"ஆம் ஐயா!"

"கட்டளைச் செய்திகள் யாவை?"

"இன்று இந்த நேரத்தில் இந்த இடத்தில் தங்களை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும் என்பதும், திருச்சத்தி முற்றத்து நாடு காவல் அதிகாரியிடம் ஆணை காட்டி, நூறாயிரம் ஆணைப் பொற்கழஞ்சுகளை, மூட்டையாகக் கட்டி முத்திரையிட்டுக் கொண்டு வந்துவிட வேண்டுமென்பதும், நெடுந்தூரப் பயணத்திற்குத் தயாராக இரண்டு உயர்ந்த ஜாதிக் குதிரைகளை ஏற்பாடு செய்து வைத்திருக்க வேண்டுமென்பதும்– கட்டளைச் செய்திகள் அய்யா!"

"மானவர்மனைக் கடைசியாக நேரில் சந்தித்தது எப்போது?"

"ஒரு திங்களுக்கு முன் மதுரையில்."

"அப்போது அவன் இட்ட கட்டளை யாது?"

"தென்னவன் ஆபத்துதவிகளிடம் காவிதி காட்டி, மதுரை விருந்தாளியை மணப்படையூர் மாளிகையில் சேர்ப்பது!"

"இடையில் ஏதேனும்..?"

“தடையில்லை அய்யா!”

“வஞ்சிச் செய்திகள்..”

“இன்று அல்லது நாளை இரவு வரலாமென்று எதிர்பார்க்கிறோம்.”

“மதுரைச் செய்திகள்..?”

“முடிந்து போய்விட்டன.”

பல்லவராயர் சில கண்ணிமைப் பொழுது பேசவில்லை. பிறகு கேட்டார்.

“மானவர்மனை மறுபடியும் எப்போது, எங்கே சந்திக்கப் போகிறீர்கள்?”

“தகவலைத் தங்களிடமே பெறுமாறு தலைவர் உத்தரவு அய்யா.”

“நல்லது. எல்லாம் தயாராக இருக்கிறதல்லவா?” என்று கேட்டுக் கொண்டே பல்லவராயர், குலோத்துங்கனுடன் ஆலயத்தினுள் நுழைந்தார்.

போகப் போக பல்லவராயருடைய பேச்சிலும் செயலிலும் புதிர்கள் வளர்ந்து கொண்டே போவதை உணர்ந்த போதிலும், குலோத்துங்கன் அவரை எதுவும் கேட்காமல்— ஊசியின் வழியே தொடரும் நூலைப் போல் அவரைப் பின்தொடர்ந்து சென்றான்.

இராசராசபுரி ஈசரை வணங்கி முடித்துவிட்டு, வேகமாகவும் விரைவாகவும் திருச்சுற்று மாளிகையை ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு இராசகம்பீரன் மண்டபத்திற்குள் வந்து சேர்ந்ததும் பல்லவராயர் சொன்னார்.

“நாம் பேச வேண்டியதையெல்லாம் இங்கேயே பேசிவிடலாம். இந்த மண்டபம் உன் தந்தையின் நினைவு மண்டபம். இந்த மண்டபத்திலேயே உன்னுடைய நினைவுகளுக்கும் முடிவு கட்டிவிடுவது நல்லது. அப்போதுதான் பக்கத்து மண்டபத்திற்கு உன் பெயர் வழங்க வசதியாக இருக்கும்.”

அருகில் வந்து அவனுடைய முதுகில் மெல்லத் தட்டிக் கொடுத்துவிட்டுத் தன்னுடைய கச்சையில் இருந்த வாளைத் தொட்டுக் காட்டி அவர் கூறினார்:

“இந்த வாள் சோணாடு முகமலர்ந்து வாழ காவிரிக்கு ஒரு காலத்தில் வழி கண்டது. இப்போது இதே வாள் நான் முடிசூடி

வாழ்வதற்காக உன் தந்தையின் சிம்மாசனத்திற்கு வழி காணப் போகிறது."

திடீரென்று பின்வாங்கி, மின்வெட்டும் நேரத்தில் உறையிலிருந்த வாளை உருவிக் குலோத்துங்கனுடைய நெஞ்சிற்கு நேரே நீட்டியபடி குரோதம் பொங்கும் குரலில் கூறினார்.

"கடமைக்காக வாழ்ந்து வாழ்ந்து எனக்கு அலுத்துவிட்டது. இனி என் களிப்பிற்காகவே வாழப் போகிறேன். நாட்டிற்காக எவ்வளவோ நான் செய்துவிட்டேன். நாடு எனக்காகச் செய்ய வேண்டியது மட்டுமே பாக்கியிருக்கிறது.

"மகுடத்தைத் தூக்கி மற்றவர்களுடைய தலைகளில் சூட்டுவதற்கென்றே தேர்ந்தெடுக்கப்பட்ட என் கைகள், இப்போது என்னுடைய தலைக்கே மகுடம் சூட்டிப் பார்க்க ஆசைப்படுகின்றன.

"என்னைப் போன்ற ஏழை வீரர்களும், சாதாரணத் தளபதிகளும் உழைத்துப் போராடி உருவாக்குகின்ற வெற்றியையும் புகழையும், உன்னைப் போல் ஆடம்பரத்திலும் சுகத்திலும் வளரும் அரசகுமாரர்கள் அபகரித்துக் கொண்டு சரித்திர நாயகர்களாகிவிடுவதை நான் இனியும் அனுமதிக்க முடியாது.

"இராசாதிராசனை நான் கொல்லப் போவதில்லை.

"ஏனென்றால்— அவனொரு கொலு பொம்மை!

"வீசி எறிவதற்கு வெகு நேரமாகாது. அவனை ஆதரிக்கவும் ஆள் கிடையாது. எதிர்ப்பும் அதிகம்.

"நீ அப்படியல்ல.

"முறைமையாக இந்த ஆட்சிக்கு உரிமையுடையவன். உன்னை எதிர்ப்பதற்கொரு கூட்டம் இருப்பதைப் போலவே, ஆதரிப்பதற்கும்— முட்டாள்களின் கூட்டமொன்று முன்னால் நின்று கொண்டிருக்கிறது. உன்னைக் கொல்லாமல்விட்டால் எனக்குத்தான் ஆபத்து."

குலோத்துங்கனுடைய நெஞ்சிற்கு நேரே பல்லவராயரின் வாள் மின்னிக் கொண்டிருந்தது. இன்னது செய்வதென்று அறியாதவனாகக் குலோத்துங்கன் பிரமை பிடித்துப் போய் நின்றிருந்தான்.

"கண்ணின் வலிமையும் ஆற்றலும் ஒரு பொருளின் வெளித்தோற்றத்தைக் காட்டுவதோடு முடிந்து போய்விடுகிறது.

ஆனால் மனத்தின் வலிமையோ அந்தப் பொருளின் வெளித் தோற்றத்தையும் துளைத்துக் கொண்டு போய், அதன் உள்ளுக்குள் இருக்கும் உண்மையை உணர்த்தும் வரை தொடர்கிறது" என்று அவனுக்கு ஞானகுருவாக விளங்கும் *சோமேஸ்வரர் சொல்லியிருந்த வார்த்தைகள் அந்தச் சூழ்நிலையில் குலோத்துங்கனுக்கு நினைவில் வந்தன.

பெருமைமிக்க அவருடைய வார்த்தைகளை இந்தக் கணத்தில் தன் எதிரில் பரீட்சித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் குலோத்துங்கன்.

'சமயத்தில் வந்து தடுத்தாட்கொள்வது எதுவோ அதைத்தான் ஞானம் என்று சொல்கிறார்கள் போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டவனாக, எதிரே வாளோடு நின்று கொண்டிருக்கும் பல்லவராயருடைய வெளித்தோற்றத்திற்கு அப்பால்— பாசமும் அன்பும் கனிந்த அவருடைய உள்ளத்தை ஊடுருவிப் பார்த்துவிட முயன்று கொண்டிருந்த குலோத்துங்கன் மெல்லச் சிரித்தான்.

அவனுடைய சிரிப்பு ஒலியாகி வெளியாகிய போது கோபம் கலந்த குரலில் பல்லவராயர் கேட்டார்:

"இறப்பைத் தழுவிக் கொள்ளப் போகும் இளையவனே, எதற்காகச் சிரிக்கிறாய்? இது ஒரு விளையாட்டு என்று நினைக்கிறாயா? இல்லை.. குலோத்துங்கா, இல்லை! இது வெறும் வீர விளையாட்டில்லை. சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்திற்கும் செங்கோலுக்கும் நான் பேசிக் கொண்டிருக்கும் பேர விளையாட்டு.

---

*ஈசுரசிவர் என்னும் சோமேஸ்வரரைப் பற்றிய குறிப்புகள் மூன்றாம் குலோத்துங்க சோழனது திரிபுவனக் கல்வெட்டில் தெளிவாகக் காணப்படுகின்றன. விக்கிரம சோழதேவருக்கு ராஜகுருவாக விளங்கிய ஸ்ரீ கண்டசம்பு என்பவருடைய குமாரர் சோமேஸ்வரர். அவர் அறியாதது எதுவுமே இல்லை. வித்வான்களில் அவர் தலைசிறந்தவர். பதினெட்டு சிவபுராணங்களையும் தெளிய அறிந்தவர்; பெருமானின் உயர்வைச் சொல்லும் உபநிடதங்களை விரிவாகச் சொல்பவர். 'சித்தாந்த ரத்னாகரம்' என்ற நூலை இயற்றியவர். அவர் ஒரு ஞானக் கடல். அதற்கு அளவோ ஆழமோ காண யாராலும் ஆகாது.

இதுவரை இந்த நாட்டைக் காக்க நான் காட்டியிருக்கும் வீரத்திற்கு விலை கேட்கும் விளையாட்டு!

"உன்னுடைய சவ ஊர்வலத்தை நடத்தி முடித்துவிட்டு, உன் தந்தை பெயரில் என் சொந்த ஊராகிய குளத்தூரில் நான் கட்டியுள்ள *கோயிலைப் போலவே, உனக்குமொரு கோயிலையோ, மண்டபத்தையோ நினைவுச் சின்னமாக்கிவிட்டு சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகி நான் படைக்கப் போகிற வீர சரித்திரத்தின் ஆரம்ப விளையாட்டு. வா! இந்த விளையாட்டில் நீயும் கலந்து கொள்! நிராயுதபாணியாக உன்னை நிறுத்திக் கொன்றுவிட்ட பழி எனக்கு வேண்டாம். உறையிலிருந்து வாளை உருவிக் கொள். வாள் பயிற்சி, வேல் பயிற்சி, மல்யுத்தம் இவற்றின் எல்லா நுணுக்கங்களையும் உனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். கற்ற வித்தையை என்னிடமே காட்ட வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. வா!"

இதற்குப் பிறகும் குலோத்துங்கன் உறைவாளை உருவவோ, தற்காத்துக் கொள்ளவோ எவ்வித முயற்சியிலும் ஈடுபடாமலிருக்கவே பல்லவராயர் மீண்டும் சீறினார்.

"போராட்டங்களையே சந்தித்துச் சந்தித்துப் பகை நெருப்புக்கு மத்தியிலேயே படுத்துப் பழகிவிட்ட ஒரு கிழப்புலியோடு, எவ்விதமான போராட்டத்தையும் இதுவரை சந்தித்திராத ஓர் இளஞ்சிறுவன் எப்படிச் சரிக்குச் சரியாக நின்று சண்டையிட முடியும் என்று நினைத்துத் தயங்குகிறாயா? வேண்டாம். அது என் வீரத்திற்கும் அழகல்ல. இதோ, இந்த முரட்டுக் கறுப்புத் துணியால் என் கண்களை மூடிக் கட்டிக் கொள்கிறேன். அதற்குப் பிறகு சண்டையிடலாம். முடிந்தால் நீ என்னைக் கொல். முடியாவிட்டால் உன் கதையை நான் முடித்துக் காட்டுகிறேன்."

– பல்லவராயர் தன் கண்களைக் கறுப்புத் துணியால் இறுக்கிக் கட்டிக் கொண்டார்.

---

*பெருமான் நம்பிப் பல்லவராயன் குளத்தூரில் தன் அரசனது பெயரில் கோயிலெடுப்பித்து அதற்கு இறையிலியாக நிலமும் அளித்த செய்தியை இரண்டாம் இராசராசனுடைய 10–ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

“நான் தயார் நீ தயார்தானா?”

“தயாராகிவிட்டேன் தாத்தா.”

“சண்டைக் களத்தில் தாத்தாவாவது பேரனாவது.. பைத்தியக்காரப் பையனே, வாளை உருவிக் கொள்!”

உறையிலிருந்த வாளை உருவிக் கொண்ட குலோத்துங்கன் அவரை நெருங்கினான்.

“வா குலோத்துங்கா, வா! வாழ்வின் முடிவு காண வா!”

கண்களை மூடிக் கட்டிக் கொண்டிருந்த நிலையில் எதிரிலிருப்பது எதுவும் தெரியாதவராய்— தான் நின்ற இடத்தையும், தன்னைச் சுற்றி இருக்கக்கூடிய மண்டபத்தின் பகுதிகளையும், குலோத்துங்கனின் காலடியோசை கேட்ட திசையையும் கூர்ந்து அனுமானித்தவராய்ச் சற்றே பின் வாங்கி, தன் கையிலிருந்த வாளைச் சுழற்ற ஆயத்தமானார் பல்லவராயர். குலோத்துங்கன் ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்து அவரை நெருங்கினான். அவரது வாள் சுழலத் தொடங்கியது.

# 12. அண்ணன் வென்றான்! தங்கை தோற்றாள்!

கண் இமைப்பதற்குள் பல்லவராயரே எதிர்பார்த்திராதபடி குலோத்துங்கன் ஒரு காரியம் செய்தான். 'கணீர்' என்று ஒலியெழத் தன் வாளை அவர் காலடியில் போட்டுவிட்டு, அவரது கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "என்னை ஆசீர்வதியுங்கள் தாத்தா!" என்றான்.

சுழன்ற வாள் நின்றது.

"குலோத்துங்கா! உன்னுடைய தந்திரத்தையெல்லாம் என்னிடமே காட்டுகிறாயா? ஆசீர்வாதம் கேட்பதைப் போல் என் காலை வாரிவிட்டு இந்தக் கிழவனைக் கொன்றுவிடச் சூழ்ச்சி செய்கிறாயா?"

"அத்தகைய நீசத்தனமான காரியத்தை நான் ஒருபோதும் நினைக்கவும் மாட்டேன் தாத்தா! உண்மையாகவே ஆசீர்வாதம் கேட்கிறேன்."

"பலே! நான் நினைத்ததைக் காட்டிலும் நீ பெரிய கைகாரனாக இருக்கிறாய்! என்னை வெற்றிபெறுவதற்கு என்னிடமே ஆசீர்வாதம் கேட்கிறாயா? நீ வெற்றிபெற வேண்டுமென்று வாழ்த்திவிட்டால், என்னுடைய வாழ்த்துப் பொய்யாகிவிடக் கூடாதென்பதற்காக நான் உனக்குத் தோற்றுக் கொடுப்பேன் என்று நினைக்கிறாய்—இல்லையா?"

"தாத்...தா..!" குலோத்துங்கன் குரல் நெகிழ்ந்தது.

"பரவாயில்லை. அப்படியே இருந்தாலும் உன்னை ஆசீர்வதிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.."

"போதும் தாத்தா, போதும்! நிறுத்துங்கள். உங்களை வெற்றி பெற வேண்டுமென்று எந்தக் காலத்திலும் என்னை ஆசீர்வதிக்க வேண்டாம். நீங்கள் இப்போது நடத்திக் கொண்டிருக்கிறீர்களே, இந்தச் சோதனையில் நான் வெற்றி பெற வேண்டுமென்று ஆசீர்வதியுங்கள்."

“சோதனையா? அடே குலோத்துங்கா! என்னிடம் விளையாடுகிறாயா?”

“எதற்காக இந்த நாடகமாடுகிறீர்கள் தாத்தா?”

“நாடகமாடுகிறேனா? இயல், இசை, நாடகம் மூன்றுக்கும் தானே தலைவன் என்று தலையைத் தூக்கி அம்பாரியில் வைத்துக் கொண்டு திரிந்தாரே உன் தந்தை– நாடகமாடி அவரா, நானா? சொல் உயிர் மீது உனக்கு ஆசையில்லையா? உன்னைக் கொல்ல வரும் வாளுக்கு நீ பதில் கூறப் போவதில்லையா?”

“அப்படியானால்– அந்தச் சிரமமும் பழியும் உங்களுக்கு வேண்டாம் தாத்தா!”

குலோத்துங்கன் வாளைக் கையிலெடுத்த ஓசையையும், அதன் பின் அவன் சற்றுத் தூரம் நடந்து செல்லும் ஓசையையும் உற்றுக் கேட்டுவிட்டு அவசர அவசரமாகத் தன் கண் கட்டை அவிழ்த்துப் பார்த்தார் பல்லவராயர்.

தன்னுடைய வாளைத் தன் மார்பிலேயே பாய்ச்சிக் கொள்ளக் குலோத்துங்கன் தயாராக நின்றிருந்தான்.

குறுக்கேயிருந்த கல் மேடையை ஒரே தாவாகத் தாவியோடி அவனது கையைப் பிடித்துத் தடுத்தார் பல்லவராயர்.

“சுத்த வீரன் எவனாவது போர்க்களத்தில் வந்து தற்கொலை செய்து கொள்வானா? இது என்ன காரியம்? வாளைக் கீழே போடு.”

குலோத்துங்கன் வாளைக் கீழே போட மறுக்கவே, அவனுடைய தோள்புறத்தில் அவர் மெதுவாக ஒரு தட்டுத் தட்டினார். அவன் கையிலிருந்த வாள் துள்ளிக் கொண்டு போய்த் தூரத்தில் விழுந்தது.

“நீங்கள் என்னைத் தடுப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். என் உடலில் இயங்கிக் கொண்டிருப்பது உங்களுடைய உயிர்!”

அவனுக்காகக் கழிவிரக்கம் கொண்டவராகப் பல்லவராயர் கடைசியில் கூறினார்:

“நீ இவ்வளவு அப்பாவியாக இருப்பாய் என்று நான் நினைக்கவில்லை. என்னுடன் சண்டையிட முன்வராத உன்னைக் கொல்வதும் எனக்குத் தகாது. என் முன் நீ தற்கொலை செய்து கொள்வதையும் நான் அனுமதிக்க முடியாது. போகட்டும். ஒரு காலத்தில் உன் மீது அபாரப் பிரேமை வைத்திருந்ததை முன்னிட்டு

உன்னை உயிருடன்விடுகிறேன் ஒரு நிபந்தனையோடு” என்று கூறிய பல்லவராயர், மண்டபத்தின் வாயிலில் சென்று, “காடவராயா! கழஞ்சு மூட்டையைக் கொண்டு வா!” என்று குரல் கொடுத்தார்.

முத்திரை கலையாத மூட்டை ஒன்றினைக் கொண்டு வந்து அவர் முன்னே வைத்தான் காடவராயன் என்று அழைக்கப்பட்ட அந்தத் தடியன்.

“போ.. குதிரைகளைப் பிரயாணத்திற்கு ஆயத்தப்படுத்து” என்று அவனுக்குக் கட்டளையிட்ட பல்லவராயர், அவன் வெளியேறியதும் குலோத்துங்கனிடம் பேசினார்:

“இதோ இந்த மூட்டையில் நூறாயிரம் ஆணைப் பொற்கழஞ்சுகள் இருக்கின்றன. வெளியே நெடுந்தூரப் பயணத்திற்கு ஏற்றதாக இரண்டு உயர்ந்த ஜாதிக் குதிரைகள் தயாராய் உள்ளன. இந்தச் சோழ தேசத்தின் எல்லையைத் தாண்டி வேறு எங்காவது போய்விடு. எல்லையைத் தாண்டும் வரை உனக்கு உதவியாகவும், உன்னைக் கண்காணிப்பதற்காகவும் காடவராயன் உன்னுடன் வருவான். ஆணைப் பொற்கழஞ்சுகளைச் சோழ நாட்டுடன் வர்த்தகம் நடத்தும் பெருவணிகர் எவரிடமும் மிக எளிதில் மாற்றி, மாற்று நாணயங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இதை வைத்துக் கொண்டு எங்காவது வெளிதேசத்தில் போய்ப் பிழைத்துக் கொள். சோழ தேசத்திற்குள் மட்டும் எப்போதும் காலெடுத்து வைக்காதே, என்ன சொல்கிறாய்?”

குலோத்துங்கள் பதில் சொல்லவில்லை.

“புறப்படுகிறாயா?”

மறுபடியும் குலோத்துங்கள் மௌனம் சாதிக்கவே, பல்லவராயர் அவனைக் கடைசி முறையாக எச்சரித்தார்.

“இதோ பார். உன்னை வளர்த்த பாசமும் சிறிது இருப்பதால்தான் இந்தச் சலுகையை உனக்குத் தரச் சம்மதிக்கிறேன். இதையும் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிடாதே. நேற்றிரவு எனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தைப் போலவே மறுபடியும் எப்போதாவது ஏற்படும். அப்போது உன் உயிர் விளக்கு அணைவது உறுதி. நீ நேற்றே மடிந்திருக்க வேண்டியவன். கொஞ்சம் குறி தவறிவிட்டது.”

“நேற்றே மடிந்திருக்க வேண்டியவனா?”

“ஆமாம். தியாகவல்லி உன்னிடம் எதுவும் சொல்லவில்லையா? நேற்றிரவு மூன்றாம் ஜாமத்தில், நீ தூங்கிக் கொண்டிருக்கும் போது உன்னைக் கொலை செய்வதற்காகக் குத்துக் கத்தியை வீசி எறிந்தேன். அதைப் பார்த்துவிட்டுத்தான் உன் தங்கை மூர்ச்சித்து விழுந்துவிட்டாள்.”

“அப்படியா..?” குலோத்துங்கன் எதையோ நினைவுபடுத்திக் கொண்டான்.

“ஆமாம். என் மீது எனக்கே நம்பிக்கையில்லை. இப்போது என்ன சொல்கிறாய்?”

“தாத்தா! உங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கையில்லாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு உங்களிடம் அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.”

குலோத்துங்கனுடைய வார்த்தைகள் தெளிவான குரலில் உறுதிமிக்கனவாக ஒலித்தன.

“அப்படியானால் வா போகலாம்”— பல்லவராயர் அவனுடைய கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு இராசகம்பீர மண்டபத்தைவிட்டு வெளியே வந்தார். இராசராசேச்சுரத்தின் வாயிலில் காத்துக் கொண்டிருந்த காடவராயனிடம் கூறினார்.

“கழஞ்சு மூட்டையை அரசாங்கப் பண்டாரத்துக்கு அனுப்பிவிட ஏற்பாடு செய். குதிரைகளை மாற்றிக் கொண்டு நாங்கள் புறப்படுகிறோம். இன்றிரவு மானவர்மனிடம் ஒரு முக்கியமான காரியத்தை ஒப்படைக்கப் போகிறேன். நாளை மாலை சதுர்வேதி மங்கலத்தில் அவன் உன்னைச் சந்திப்பான். வஞ்சியிலிருந்தோ மதுரையிலிருந்தோ அவசரத் தகவல் வந்தால் வழக்கம் போல் அனுப்ப வேண்டிய இடத்திற்கு உடனே அனுப்பு.”

பல்லவராயரும் குலோத்துங்கனும் ஏறிக்கொண்ட புரவிகள் வெயிலின் சூட்டால் வெப்பமேறிக் கொண்டிருந்த சாலையில் இராசராசபுரத்து அரண்மனையை நோக்கி விரைந்தன.

வழியில் பல்லவராயர் குலோத்துங்கனிடம் எதுவுமே பேசவில்லை. விடுவிடுவென்று தன் குதிரையை முன்னால்விட்டுக் கொண்டு சென்றார். அவரைத் தொடர்ந்து தன் குதிரையைச் செலுத்திச் செல்வதற்கே குலோத்துங்கன் சிரமப்பட வேண்டியிருந்தது.

அரண்மனையை அவர்கள் வந்தடைந்த போது சூரியன் பூமிப் பெண்ணுக்குச் சூடு போட்டுக் கொண்டிருந்தான். உச்சியம் பொழுதையும் தாண்டி ஒன்றரை நாழிகை கடந்திருந்தது.

குதிரைகளிலிருந்து இறங்கிப் புலிக்கொடி பறந்து கொண்டிருக்கும் அரண்மனையின் பிரதான மண்டபப் படிக்கட்டுகளில் ஏறத் தொடங்கிய போது, ரத சாரதி அனந்தபாலன் எதிரே வந்து அவர்களை வணங்கிவிட்டுப் பல்லவராயரிடம் கூறினான்:

"அய்யா! தங்களைக் காண வந்திருக்கும் ஓர் இளைஞர் காலையிலிருந்து காத்திருக்கிறார். மணப்படையூர் மாளிகையிலிருந்து வந்திருப்பதாகக் கூறுகிறார். அவருடைய பேச்சும் நடவடிக்கைகளும் எங்களுக்குச் சந்தேகத்தை உண்டாக்குகின்றன. இந்த அரண்மனையை முழுக்கச் சுற்றிப் பார்த்துவிட வேண்டுமென்று வந்ததிலிருந்தே துடித்துக் கொண்டிருக்கிறார். தங்களுடைய அனுமதியோ, இளவரசர் அனுமதியோ இல்லாமல் அரண்மனையைச் சுற்றிப் பார்க்க யாரையும் அனுமதிப்பதில்லை என்று கூறி அவரைத் தடுத்திருக்கிறோம். தாங்கள் ஓய்வு கொள்ளும் மாளிகையின் முகப்பு மண்டபத்தில் அவரைத் தங்க வைத்திருக்கிறோம்."

"முட்டாள்! சந்தர்ப்பம் தெரியாமல் இங்கேயும் வந்துவிட்டானா? ஒரு பெண்ணின் ஞாபகம் வந்துவிட்டால் இந்தக் காலத்து இளைஞர்கள் தேசத்தைக் கூட மறந்துவிடுவார்கள் போலிருக்கிறது."

பல்லவராயர் கோபித்துக் கொண்டார்.

தன்னைக் கோபித்துக் கொண்டதைப் போல் தலைகுனிந்தான் அனந்தபாலன்.

"சரி! அவனுக்கும் எனக்கும் அங்கேயே உணவு கொள்ள ஏற்பாடு செய். இதோ வருகிறேன்."

அனந்தபாலன் விரைந்தான்.

"குலோத்துங்கா! தியாகவல்லி உன்னை உயிருடன் பார்த்தால் மிகவும் மகிழ்ச்சியடைவாள். அவளைப் போய்ப் பார். நான் மாலையில் வந்து சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டுத் திரும்பிய பல்லவராயர், "நில். இது நேற்றிரவு உன் மீது வீசப்பட்ட கத்தி. இதைக் கொண்டுப் போய்க் கொடு. தியாகவல்லி இதைத் தேடித் தேடிச் சிரமப்பட்டுக் கொண்டிருப்பாள்" என்று சொல்லித் தன் இடுப்புக் கச்சையில்

செருகி வைத்திருந்த குத்துக் கத்தியை எடுத்துக் குலோத்துங்கனிடம் கொடுத்துவிட்டு நடந்தார்.

மறுபடியும் அவளைச் சந்திக்கும் போது, தன்னை அந்தக் குத்துக் கத்தியைக் கொண்டே அவள் வரவேற்க வேண்டுமென்று பல்லவராயர் திட்டமிட்டிருந்தாரோ?

அன்று மாலையில் அந்த அரண்மனையில் அதற்கு முன் எப்போதுமே நடந்திராத அதிசயங்கள் நடந்தன.

திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பிப் பல்லவராயர் என்கிற சோழப் பேரரசின் இணையற்ற மாவீரரை, ஈடு சொல்ல முடியாத அரசியல் தந்திரியை, சேனைநாயகரும் முதலமைச்சருமாய் விளங்கி சிறந்த முறையில் நாட்டின் நிர்வாகத்தை நடத்தி வந்த தேசச் சிற்பியை— தியாகவல்லி என்ற சின்னஞ்சிறு பெண்ணொருத்தி குத்திக் கொலை செய்ய முயற்சி செய்தாள்.

அந்தப்புரத்திற்குள் நுழைந்து அவர் அவளைச் சந்திக்கப் போன போது அது நடந்தது.

திடீரென்று கத்தியை ஓங்கிக் கொண்டு தியாகவல்லி தன் மீது பாய்ந்த போது— சேனைநாயகர் அவளைத் தடுக்காமலும், பின்வாங்காமலும் சிரித்துக் கொண்டே நின்றதும், அதே சமயத்தில் அங்கிருந்த குலோத்துங்கன், விட்டெறிந்த வேலைப் போல் விரைந்து பாய்ந்து தியாகவல்லியைத் தடுத்து அவளுடைய கையிலிருந்த கத்தியைப் பிடுங்கி வீசி எறிந்ததும் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்தன.

அதற்குப் பிறகு அங்கே நடந்த உள்ளங்களின் உணர்ச்சிப் போராட்டங்கள் முடிவு பெறத்தான் வெகுநேரமாயிற்று.

தியாகவல்லி பஞ்சணையில் போய் விழுந்து குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள். குலோத்துங்கன் அதிர்ச்சிக்கும், திகைப்பிற்கும் ஆளாகி மீள முடியாமல் நின்றிருந்தான்.

பல்லவராயர் சிரித்தார். வாய்விட்டுச் சிரித்தார். தொடர்ந்து பலத்த குரலில் சிரித்தார்.

“அண்ணன் வென்றான். தங்கை தோற்றாள்!” என்றார்.

அவரது வார்த்தைகளின் முழுமையான அர்த்தத்தையும் அதன் ரகசியங்களையும் அறிந்து கொள்வதற்காக ஆவலோடும் ஆர்வத்தோடும் நான்கு விழிகள் அவர் பக்கம் திரும்பின.

‘இந்த மர்மத்தையெல்லாம் தெரிந்து கொண்டே போய்விடுவோம்’ என்று நினைத்துக் கொண்டவனாக மலை வெளியில் மறையப்போன கதிரவனும் சற்றே தயங்கி நின்று, சாளரத்தின் வழியே தன் விழியொளியைச் செலுத்தி வேடிக்கை பார்த்தான்.

# 13. நம்பிக்கை நாடகம்

'அண்ணான் வென்றான். தங்கை தோற்றாள்!' —என்று ஏதோ உட்பொருளோடு பல்லவராயர் கூறிய வார்த்தைகளைக் கேட்டு அவரைத் திரும்பிப் பார்த்த தியாகவல்லியின் கண்களில் அப்போதும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. இன்னும் அவள் தேம்பிக் கொண்டிருந்தாள். பல்லவராயர் அவளைச் சமாதானப்படுத்துவதற்காக அருகில் வந்த போது புலியை எதிரே கண்ட மான்போல் அவள் மருண்டாள்.

"பயப்படாதே தியாகவல்லி! நான் உன்னுடைய பல்லவராயர் தாத்தாதான்!"

"திடீரென்று உன் தாத்தாவைச் சந்தேகிக்க உனக்கு எப்படி மனம் வந்ததம்மா? இருட்டுகின்ற நேரத்தில் ஒரு திருட்டுச் சாமியார் சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடன் என்னைப் பற்றி எப்படி எப்படியோ நினைத்துவிட்டாயே! இதோ, உன் அண்ணனைப் பார். இவனை நான் எப்படியெல்லாம் சோதித்தேன் தெரியுமா? இவனைச் சந்தேகம் கொள்ளச் செய்ய என்னென்ன நாடகமெல்லாம் ஆடினேன் தெரியுமா? ஆனால்— இம்மியளவுகூட இவனை அசைக்க, இவன் என் மீது கொண்டுள்ள நம்பிக்கையைத் தகர்க்க என்னால் முடியவில்லை. என்னிடம் நீ தோற்றாய்! இவனிடம் நான் தோற்றேன்!" என்று கூறிவிட்டு அருகில் வந்து நின்றிருந்த குலோத்துங்கனை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டார் பல்லவராயர்.

சற்றே தைரியமடைந்து தன்னை உற்று நோக்கிய தியாகவல்லியை அவர் கேட்டார்:

"இந்த நாடகம், சோதனை— இவையெல்லாம் எதற்காக என்று கேட்க நினைக்கிறாய்— இல்லையா?

"உங்களிடம் எல்லா விவரங்களையும் சொல்லிவிட வேண்டிய வேளை வந்துவிட்டது. என் அன்புக் குழந்தைகளே! இப்படி உட்காருங்கள்."

தியாகவல்லியும், குலோத்துங்கனும் பஞ்சணைக் கட்டிலில் அமர்ந்து கொள்ள எதிரே இருந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு பல்லவராயர் பேசினார்:

"தலைநகரில் எனக்கு எவ்வளவோ முக்கியமான காரியங்களெல்லாம் காத்திருக்கின்றன. இருந்தாலும் நான் இங்கே தாமதித்துக் கொண்டு இந்த நம்பிக்கைச் சோதனைகளை ஏன் நடத்திக் கொண்டிருக்கிறேன் தெரியுமா..?

"ஈழத்திலிருந்து படை கொண்டு வந்த ஜெகத்விஜயனும் இலங்காபுரித் தண்டநாயகனும் சேர்ந்து பாண்டிய மண்டலத்தைச் சூறையாடித் துவம்சம் செய்து கொண்டிருக்கிறார்களாம். இராமேஸ்வரத்தையும் குந்தூரகாலத்தையும் கைப்பற்றிக் கொண்டு குந்தூரகாலத்தில்— சிங்கள வேந்தன் பராக்கிரமபாகுவின் பெயரால் கோட்டை கட்டியிருக்கிறார்களாம்.

"மீனை விழுங்குவதோடு அவர்கள் திருப்தியடையமாட்டார்கள். புலியைப் புசிக்கும்வரை அவர்களுடைய பசியடங்காதென்பது எனக்குத் தெரியும். குலசேகர பாண்டியனுக்கு எதிராகச் சிங்களத்தார் தூக்கியிருக்கும் போர்க்கொடியானது, உண்மையில் சோழப் பேரரசிற்கு எதிரான சோதனைக் கொடியாகும்.

"வல்லமை படைத்த சோழ சாம்ராஜ்யத்தை வென்று வாகை சூடிவிட்டால், தமிழ் வழங்கும் இப்பெருநிலமெங்கும் சிங்கள ஆட்சியைச் செழித்தோங்கச் செய்துவிடலாமென்று அவர்கள் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். விவேகமில்லாத வீரபாண்டியனும் அவர்களை நம்பி அவர்களோடு சேர்ந்திருக்கிறான். அவர்களுடைய கனவுகளைக் கலைத்துக் கடல் கடந்து ஓடுமாறு அவர்களை விரட்டியடிக்க வேண்டியது நம் கடமை.

"இன்னும் கொஞ்ச காலத்தில் ஜெகத்விஜயத் தண்டநாயகனையும் இலங்காபுரித் தண்டநாயகனையும் எதிர்த்து நம்முடைய சத்திய யுத்தம் ஆரம்பமாகப் போகிறது.

"இந்த நிலையில் சோழ தேச அரசியல் நிலைமையின் லட்சணம் என்ன தெரியுமா?

"சிற்றரசர்களும் அரசியல் அதிகாரிகளும் இராசாதிராசனோடு சிண்டுபிடி சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சாம்ராஜ்யத்தையே *அழித்துவிடக்கூடிய தனி மனப்பான்மையும் அதிகார ஆசையும் சிற்றரசர்களிடம் தலைதூக்கியிருக்கின்றன.

"குலோத்துங்கனுக்கு உடனே முடிசூட்டி வைக்க வேண்டுமென்று ஒரு கூட்டமும், குலோத்துங்கனைத் தொலைத்துக்கட்ட வேண்டுமென்று இன்னொரு கூட்டமும் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன.

"உள்நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பத்திற்கும் கொந்தளிப்பிற்கும் மத்தியில்தான் நாம் மிகப் பெரிய இந்த யுத்தத்தை எதிர்கொள்கிறோம். இந்த நேரத்தில்— ராஜாங்கத்தின் தலைமையிலிருப்பவர்கள் தங்களுக்குள் மிகுந்த உடன்பாட்டோடும் நம்பிக்கையோடும் இருக்க வேண்டும் குலோத்துங்கா! இராசாதிராசரும், நீயும் நானும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஒருவர் மீதொருவர் முழுமையான நம்பிக்கையோடு செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் தலைமையில் ஏற்படும் குழப்பம் தேசத்தையே தரைமட்டமாக்கிவிடும்.

"எனக்கும் வயதாகிவிட்டது. என் காலம் முடிவதற்குள் உனக்கு முடிசூட்டி தியாகவல்லிக்குத் திருமணமும் செய்து வைத்துவிட வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்குவதற்காக, முதலில் இந்த உள்நாட்டுக் குழப்பங்களை ஒடுக்கி வெளிநாட்டு அபாயத்திலிருந்து இந்த தேசத்தை விடுவிக்க வேண்டுமென்று நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

"யாருக்காக நான் உழைக்கிறேனோ— அவர்கள் எத்தகைய சந்தர்ப்பத்திலும் என்னை முழுக்க முழுக்க நம்ப வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

"என் ஆசை நியாயமானது. தேசம் முழுக்கத் தன்னை நம்பிப் பின் தொடர்கிறது— என்ற எண்ணமே ஒரு தேசத் தேரை இழுத்துச் செல்பவனுக்குத் தேவையான மனஉறுதியையும், வலிமையையும் வழங்க முடியும். அந்த மனஉறுதியும் வலிமையும் எப்போதுமில்லாமல் இப்போது எனக்குத் தேவைப்படுகிறது. இதுவரை என் அறிவையும்

---

*சிற்றரசர்களுடைய இத்தகைய மனப்பான்மைகளும் செயல்களுமே கி.பி. 13—ஆம் நூற்றாண்டில் சோழசாம்ராஜ்யம் வீழ்ச்சியடைவதற்கு அடிகோலின. சதாசிவப் பண்டாரத்தார்.

வலிமையையும் மட்டுமே நம்பிக் கொண்டிருந்த நான், இப்போது என் மீது பிறர் கொண்டுள்ள நம்பிக்கைகளை மட்டுமே பெரிதும் நம்பிச் செயல்பட வேண்டிய அளவிற்குப் பலவீனப்பட்டுவிட்டேன் குலோத்துங்கா!

“அவசரமான காரியங்கள் எவ்வளவோ இருந்தும் அதையெல்லாம் விட்டுவிட்டு— நான் இங்கே இந்த நாடகங்களை நடத்திக் கொண்டிருந்ததற்கு இப்போது உனக்குக் காரணம் புரிகிறதல்லவா?” என்று கேட்டவர் மறுபடியும் எழுந்து குலோத்துங்களை எடுத்து மார்போடு தழுவிக் கொண்டு கூறினார்.

“நீ என் மீது கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை— என் உடலில் ஆயிரம் யானைகளுடைய பலத்தைக் கொடுத்துவிட்டது. என் மனத்தில் ஆயிரம் அறிவாளிகளுடைய பலத்தைச் சேர்த்துவிட்டது. இன்னும் ஒரு தலைமுறைக்கு உழைக்கக்கூடிய வலிமை எனக்கு உண்டாகிவிட்டது.”

பல்லவராயர் இத்தனை நெகிழ்ந்து இவ்வளவு மனந்திறந்து எப்போதுமே பேசியதில்லையாதலால் தியாகவல்லியும் குலோத்துங்கனும் ஆச்சரியமும் திகைப்பும் கொண்டு அப்படியே அவர் பேச்சில் லயித்துப் போயிருந்தார்கள்.

உணர்ச்சிப் போராட்டங்களிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு, சுற்றுச் சூழ்நிலைகளை ஒருவாறு அனுமானித்துக் கொண்ட குலோத்துங்கன்,

“தாத்தா! உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொண்டதற்காகத் தியாகவல்லியை மன்னித்துவிடுங்கள்” என்றான். அவனுடைய குரல் தழுதழுத்தது.

“என்னை மன்னித்துவிடுங்கள் தாத்தா!” என்று சத்தமிட்டுக் கொண்டு தியாகவல்லி எழுந்து அவரது பாதங்களில் விழுந்து வணங்கினாள்.

பாசம் கனியத் தியாகவல்லியையும் குலோத்துங்கனையும் எடுத்துத் தன் இரண்டு தோள்களிலும் தழுவிக் கொண்டவராய்ப் பல்லவராயர் கூறினார்:

“என்னுடைய தலை— இந்த தேசம்! இதன் கண்கள் குலோத்துங்கனும் தியாகவல்லியும்! காரியம் செய்யும் கைகள்

இராசதிராசன்! கடமையைத் தேடி நடக்கும் கால்கள்தான் படைத்தலைவன் பல்லவராயன்!"

குலோத்துங்கன் உணர்ச்சிவயமாகக் குறுக்கிட்டுச் சொன்னான்: "இல்லை தாத்தா, இல்லை! இந்த தேசம்— இதன் சிந்தனை— இதன் ஆன்மா எல்லாமே நீங்கள்தான் சகலமும் நீங்கள்தான்!"

பொழுது இருட்டியிருந்தது. அங்கேயிருந்த மூவருடைய உள்ளங்களும் உள்ளும் புறமும் ஒளிவீசிக் கொண்டிருந்த போது, அந்தபுரத்து மண்டபத்தின் உள்ளும் புறமும் இருட்டுச் சூழ்ந்திருந்தது. அது தகாது— அது பொருத்தம் இல்லை என்று கருதுவதைப் போல், அந்தப்புரத்துப் பணிப்பெண்கள் அங்கே விளக்கேற்றி வைக்க வந்தார்கள். வாயிலில் நின்றபடி அனுமதி எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவர்களை வரச்சொல்லித் தலையசைத்தார் பல்லவராயர்.

பணிப்பெண்கள் விளக்கேற்றி வைத்துவிட்டு வெளியேறிய பின், தியாகவல்லி பல்லவராயரைப் பார்த்து, "விளக்கேற்றப்பட்டுவிட்டது. வெளிச்சம் வந்துவிட்டது தாத்தா!" என்று எதையோ குறிப்பிட்டாள்.

"பெண்ணே ஓர் அழகிய விளக்குத்தான். ஆனால் தன்னைச் சுற்றிலும் ஒளியைப் படரவிடுகின்ற அவள், தன்னை மட்டிலும் இருட்டுக்குள்தான் வைத்திருக்கிறாள்" என்று குலோத்துங்கன் வேறெதையோ குறிப்பிட்டான்.

"அதுதான் தியாகமயமான பெண்மைக்கு அடையாளம் குலோத்துங்கா!" என்று மற்றெதையோ குறிப்பிட்டு, அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தார் பல்லவராயர்.

சற்று நேரம் கழித்துத் தியாகவல்லி கேட்டாள்:

"தாத்தா! அப்படியானால் சிவனடியார் வேடத்தில் வந்து தங்களைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாகக் கூறியது யார்? நீங்களேதானா?"

"இல்லை. நானில்லை! என்னுடைய நம்பிக்கைச் சோதனை நாடகத்தில் மற்றவை எல்லாம் நான் ஏற்கெனவே எதிர்பார்த்துத் திட்டமிட்டவை. ஆனால் சிவனடியார் நிகழ்ச்சி மட்டும் தற்செயலாக நடந்தது. பார்த்துக் கொண்டிருந்த அந்த நிகழ்ச்சியைப் பின்னால் நான் பயன்படுத்திக் கொண்டேன்."

"சிவனடியார் என்னுடன் பேசிக் கொண்டிருந்ததை நீங்கள் பார்த்தீர்களா?"

"ஆமாம் தியாகவல்லி! அந்தச் சிவனடியாரைத் தேடிக் கொண்டுதான் நான் பழையாறைப் பக்கம் வந்தேன். தேரை நிறுத்திவிட்டுக் குலோத்துங்கன் குதித்தானே, அப்போதே நான் அங்கு வந்து சேர்ந்துவிட்டேன். நாட்டின் அரசியலில் பங்குகொள்ள உன் அண்ணனுக்கு இருக்கும் ஆர்வத்தையும் என் காதுபடக் கேட்டு மகிழ்ந்தேன். அதன் பிறகுதான், ஆட்சியுரிமைக் கலகங்கள், தாயாதிகள் தகராறு இவற்றைப் பற்றி இனியும் அஞ்சிக் கொண்டிருக்காமல், குலோத்துங்கனைத் தலைநகருக்கு வரவழைத்து, அரசியல் அலுவல்களில் பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்தேன். அதற்காகவே இந்த நம்பிக்கைச் சோதனை நாடகத்தையும் நடத்தினேன்."

தன்னைத் தலைநகருக்கு அழைத்துச் சென்று அரசியலில் ஈடுபடுத்தப் போவதாகப் பல்லவராயர் கூறிய வார்த்தைகளில் மகிழ்ந்து உள்ளம் துள்ளிய போதும், அந்த மகிழ்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் குலோத்துங்கன் கேட்டான்:

"தாத்தா! தோப்பிற்குள் கேட்டதே அந்தச் சத்தம்..?"

"சிவனடியாரைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த என்னை மானவர்மனுடைய ஒற்றர் சிலர் பின்தொடர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஓடிய சத்தத்தைத்தான் நீ கேட்டாய்."

"தாத்தா! மானவர்மன் என்ற மாவீரரைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். அவரை எப்போதாவது எனக்கு அறிமுகப்படுத்தி வைக்கமாட்டீர்களா?"

பல்லவராயர் சிரித்துக் கொண்டார்.

"யாரும் யாருக்கும் தன்னை அறிமுகப்படுத்தி வைப்பதை அவன் விரும்பமாட்டான். சந்தர்ப்பம் நேரும் போது தானாகவே உன்னிடம் அறிமுகமாகிவிடுவான்" என்ற பல்லவராயர், "அந்தச் சிவனடியாரைப் பற்றி ஏதோ சொன்னேனே..." என்றார்.

"அந்தப் போலிச் சிவனடியார் பிடிபட்டுவிட்டாரா? எங்கிருக்கிறார் என்று சொல்லுங்கள். தாடியைப் பிய்த்து, வேடத்தைக் கலைத்து

உங்களைப் பற்றி அவதூறு கூறிய நாக்கை அறுத்துவிட்டு வருகிறேன்" —குலோத்துங்கன் துள்ளியெழுந்தான்.

"இல்லை குலோத்துங்கா. அணுவளவு நேர்ந்த பிழையால், அவர் தப்பிப் போய்விட்டார். அவரைத் தொடர்ந்து அவரது ஆட்கள் வரலாமென்று சந்தேகித்து, அவர்களால் உனக்கோ தியாகவல்லிக்கோ அபாயம் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதற்காக, மானவர்மனுடைய ஆட்களை எச்சரிக்கை செய்ய வேண்டுமென்று சற்றுத் தாமதித்தேன். அதற்குள் அந்த மர்மச் சாமியார் மாயமாகிவிட்டார்" என்று இரங்கிய குரலில் கூறிவிட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தார் பல்லவராயர்.

அடங்காத ஆவலுடன் தியாகவல்லி கேட்டாள்:

"தாத்தா! அந்தச் சாமியார் யார்?"

பல்லவராயர் குரலைத் தணித்துக் கொண்டு அவர்களுடைய காதோடு சொன்னார்:

"அவர்தான் சிங்கள நாட்டின் ஈடிணையற்ற வீரவேந்தரும், என்னைப் போலவே அரச தந்திரத்தில் தேர்ந்தவருமான பராக்கிரமபாகு."

"என்ன..?"

"ஆ..!"

குலோத்துங்கன் ஆச்சரியப்பட்டான். தியாகவல்லி அதிர்ச்சியடைந்தாள்.

"அசல் சிவனடியாரைப் போலவே இருந்தாரே! தெளிவாகத் தமிழ் பேசினாரே! மாணிக்கவாசகருடைய ஆனந்தப் பரவசத்தைப் பிழையில்லாமல் பாடினாரே! அது எப்படி முடிந்தது தாத்தா?" என்று கேட்டாள் தியாகவல்லி.

"அவருக்குத் தெரியாத கலையில்லை. அவர் போடாத வேடமில்லை. சாமர்த்தியமும் சாதுரியமும் வாய்ந்தவர். தமிழையும் நன்கு அறிந்தவர். நான்கு அரசர்களின் கையில் அகப்பட்டு நலிந்து போயிருந்த இலங்கையைத் தனியொரு தலைவனாகித் தலை தூக்கச் செய்தவர்" என்றார் பல்லவராயர்.

"தாத்தா! எதற்காக அவர் இங்கு வந்தார்?" என்று கேட்டான் குலோத்துங்கன்.

"சோழதேசத்தின் நிலையையும் படை வலிமையையும் அறிந்து கொள்வதற்காக வந்தார். அதோடு மதுரையிலிருந்து தப்பி வந்த இளவரசன் விக்கிரமனைத் தேடிப்பிடித்துச் சிறை செய்து கொண்டு செல்வதற்காகவும் வந்தார்" என்று கூறிவிட்டுத் தியாகவல்லியின் மீது தன் விழிகளைப் பதித்துப் புன்னகை பூத்தார் பல்லவராயர்.

தாத்தா தன் இதயத்தோடு சங்கேத பாஷை பேசுவதைத் தியாகவல்லி புரிந்து கொண்டாள். விக்கிரமன் தன்னோடு பேசிவிட்டுச் சென்றபோதுதான் சிவனடியார் வந்தார் என்பது அவளுக்கு நினைவிற்கு வந்ததும்— அந்தப் பாண்டிய குமாரருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்று அவள் இதயம் துடித்தது.

"மதுரை இளவரசன் சோழ நாட்டிலா இருக்கிறான்?" என்று குலோத்துங்கன் கேட்டான்.

"பாண்டிய குமாரனை அந்தச் சாமியார் சிறை செய்துவிட்டாரா தாத்தா?" என்று எதிலும் சம்பந்தமில்லாமல் பொதுவாகக் கேட்பது போல் தியாகவல்லி கேட்டாள்.

அவளுடைய ஆர்வத்தை இன்னும் கொஞ்ச நேரம் வளர்த்து, தன் உள்ளத்தை மறைத்து வைப்பதில் ஒரு பெண்ணுக்கு இருக்கக்கூடிய அக்கறையைப் பெரிதும் ரசித்த பல்லவராயர், "விக்கிரமன் பிடிபடவில்லை. இங்கேதான் இருக்கிறான். இப்போது இந்த அரண்மனையில்தான் இருக்கிறான். நான் போய் அவனை அனுப்பி வைக்கட்டுமா?" என்று கூறிவிட்டு எழுந்தார். ஆச்சரியம் தவழும் குலோத்துங்கனின் முகத்தைப் பார்க்காமல், மகிழ்ச்சி மலர்ந்து கொண்டிருக்கும் தியாகவல்லியின் முகத்தைக் குறும்புத்தனமாகப் பார்த்துச் சிரித்தார்.

அவள் தலை கவிழ்ந்தாள்.

இராசராசபுரத்து அரண்மனை நந்தவனத்தில், அழகுமயமான வசந்தமண்டபத்தில்— வெண்பளிங்கு மேடையில், தண்ணிலவு கதிர்பரப்பும் தளிர் இரவு நேரத்தில், கொத்துக் கொத்தாய்ப் பூத்துக் குலுங்கும் பவழமல்லிகைப் பூக்களின் கொஞ்சலையும் கெஞ்சலையும் சட்டை செய்யாமல்— தொட்டு விளையாடிக் கொண்டிருந்த இதமான காற்றின் இனிமையான சூழ்நிலையில், கையில் யாழோடு கண்களை மூடிக் கொண்டு— அந்தக் கன்னிப் பெண் கனவுகளில் லயித்திருந்தாள்.

"தியாகவல்லி!"

விக்கிரமன் அவளை அழைத்தான். அவன் அப்படி அழைத்த போது தன்னுடைய பெயருக்கே புதிது புதிதான அழகுகளும், அர்த்தங்களும் வந்து சேர்ந்துவிட்டதாக அவள் நினைத்தாள்.

இன்னதென்று சொல்ல முடியாத ஓர் உணர்விற்கு ஆளாகித் தன் இதயம் துடிப்பதை அவள் உணர்ந்தாள். மெல்லிய அவளுடைய உடல் சிலிர்த்தது.

கண்களைத் திறக்காமல் இருந்துவிடுவதே ஒரு சுகம் போலிருந்தது. அதே நேரத்தில் கண்களைத் திறந்து எதிரே வீற்றிருக்கும் அந்தக் கட்டழகனைக் கண்டால்— அது இன்னும் சுகமாக இருக்கும் போலவும் தோன்றியது.

அந்தச் சூழ்நிலையில் சுவாசிப்பதுகூட அவளுக்குச் சிரமமாகப்பட்டது.

"தியாகவல்லி!"

தேனைக் குழைத்த குரலில் அவன் மறுபடியும் அழைத்தான்.

ஒரு கரத்தால் தன்னுடைய தாமரை முகத்தை மூடிக்கொண்டாள்; விரல் இடுக்குகளின் வழியே முதலில் வெண்ணிலவைப் பார்த்தாள். பிறகு விக்கிரமனைப் பார்த்தாள்.

"பாடு— தியாகவல்லி!"

அந்தச் சுகமான வேண்டுதலில் அவள் நெகிழ்ந்தாள்.

சற்று நேரத்தில் யாழின் இசையோடு கலந்த ஒரு வீணையின் பாடல் மெல்லிய காற்றில் கலந்து பரவியது.

*"என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்னடியாள் என்று அறிதலும்
தன்னை நானும் பிரான் என்று அறிந்தனே!"

*'தன்னடியான்' என்பது 'தன்னடியாள்' என்ற மாற்றத்தோடு —நாவுக்கரசர் பாடல்.

# 14. காவிரிக் கரையில்...

காவிரிப் பெண்ணின் அழகிற்கு மயங்காத கவிகளே இல்லை. எந்தக் கவியாவது அவளுடைய பொன்மயமான புன்னகையில் மயங்கி வசப்படவில்லையென்றால் அவன் ஓர் அசல் கவியாக இருக்க முடியாது.

நீண்டு நீண்டு போய்க் கொண்டிருக்கும் வெள்ளித்தட்டில் தங்கத்தையும், வைரம், வைடூரியம், கோமேதகம், மரகதம் போன்ற நவரத்தினங்களையும் ஓர் ஒழுங்கில்லாமல், அதே சமயத்தில் அழகு குறையாமல் பரப்பி வைத்திருப்பது போல், அந்தக் காவிரிப் பெண்ணின் தளிர்நீர் மேனியெங்கும்— தாமரை, நீலோற்பலம், செங்கழுநீர், செந்தாமரை, மல்லிகை, முல்லை, செண்பகம், சூரியகாந்தி— இப்படிப் பல்வேறு வண்ணத்துப் பூக்களும் மிதந்து அசைந்து கொண்டிருக்கும் காட்சியானது— ஒரே சமயத்தில் பல்வேறு நிறத்து மென்துகில்களை மாற்றி மாற்றி, களைந்து களைந்து கட்டிக் கொண்டிருக்கும் ஓர் இளம் பெண்ணின் ஞாபகத்தைத் தோற்றுவித்து எவரையும் போதை கொள்ளச் செய்யாமல் இருக்காது.

அவளுடைய மலர்ந்த முகங்கண்டு வளர்ந்து செழித்ததுதான் சோழ மண்டலம். அவள் பூத்த முகத்தால் பொலிவு பெற்றவர்கள்தான் சோழ நாட்டுக் குடிமக்கள். அந்தப் பருவப் பாவையின் பாதங்கள்பட்ட இடத்திலெல்லாம் தங்கம் விளைந்து தரணியைக் கொழிக்க வைக்கும் என்று அவர்கள் நம்பியதால், அந்தப் புன்னகைப் பெண்ணுக்குப் 'பொன்னி' என்று பெயரிட்டுப் போற்றினார்கள்.

மைந்தனும் மணவாளனும் இருபுறமும் வர— மத்தியில் நடந்து வரும் மங்கைநல்லாளைப் போல் அழகிய தன் கரங்களினால் இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு, புகுந்த இடமெல்லாம் பூமிதேவனின் உடலைப் புல்லரிக்க வைத்து, அங்கே பயிர்ச்சிலிர்ப்பை உண்டாக்கிப் பசி தணித்துச் சோழ நாட்டின் உயிர்ச்சிரிப்பாய் உலவி வந்தாள் அவள்.

'நடந்தாய் வாழி காவேரி' என்று இளங்கோவடிகளால் பாராட்டப்பட்ட தன் அழகிய நடையில் நாணமும் பெருமிதமும் நழுவிச் சரியக் காவிரிப் பெண் அப்போதும் நடந்து கொண்டிருந்தாள். அந்த

நடையைப் பெரிதும் ரசித்துக் கொண்டு ஒரு மரத்தின் உச்சியில்— கிளைகளின் மறைவில் உட்கார்ந்து கொண்டிருந்தான் மானவர்மன்.

காவிரியின் ஒரு கரையை ஒட்டி, இராசேந்திர சோழ சதுர்வேதி மங்கலம் மாடமாளிகைகளோடும் கூட கோபுரங்களோடும் காட்சியளித்துக் கொண்டிருந்தது. ஆடலுக்கும் பாடலுக்கும் பெயர் பெற்று அழகுக் கலைகளின் இருப்பிடமாய் விளங்கிய அவ்வூரின் எல்லையைத் தாண்டி ஓர் ஆடற்கணிகையின் நடனக் குழுவினர் வெளியேறி வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் தூரத்தில் வரும்போதே அவர்கள் எழுப்பிய பிரயாண கால இன்னிசைக் கருவிகளின் இனிமையானது மரக்கிளைகளின் மத்தியில் மறைந்து கொண்டிருந்த மானவர்மனது செவிக் கதவுகளை வந்து மெல்ல வருடியது. அந்த வருடலில் கவனம் சிதறிப் போன மானவர்மன் இசையோசை வந்த திசையில் திரும்பிப் பார்த்தான்.

இரண்டு அழகிய பல்லக்குகள் வந்து கொண்டிருந்தன. பல்லக்குத் தூக்கிகளைத் தவிர, முன்புறத்தில் வாத்தியக் கருவிகளையும் திருச்சின்னங்களையும் தூக்கிச் சுமந்த வண்ணம் சிலர் வந்து கொண்டிருந்தனர். பல்லக்குகளைத் தொடர்ந்து வேல்களைக் கையிலேந்திய *வழித்துணை வீரர்களிருவர் பின்புறத்தில் வந்து கொண்டிருந்தனர்.

வழித்துணை வீரர்கள் தொடர்ந்து வந்ததிலிருந்து, பல்லக்கில் வருபவர்கள் நிறைந்த பொருளும் உயர்ந்த வசதியும் படைத்தவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

வந்து கொண்டிருந்தவர்களைப் பார்வையிடுவதற்கு, வசதியாக மானவர்மன் தானிருந்த மரத்தில் ஒரு கிளை மாறி உட்கார்ந்த போது,

---

*வழித்துணை வீரர்கள் ஒவ்வொருவரும் ஐந்து பேரை அடித்து வீழ்த்தக் கூடிய ஆற்றலும் வலிமையும் மிக்கவர்கள். நெடுந்தூரப் பயணம் செய்யும் பொருள் வசதிமிக்கவர்க்குப் பயண வழியில் பாதுகாப்பாக வருபவர்கள். பெருந்தொகையைக் கூலியாகப் பெற்றுக் கொண்டு கூடவே வருகின்ற இந்த முரட்டு வீரர்கள்— தங்களைக் காவலுக்கு அழைத்துச் செல்பவர்களை உயிர் கொடுத்தேனும் காப்பாற்றுவார்கள். வழி நெடுக வாய் திறவாமல், காப்புக் கடமையிலேயே கருத்தாய் இருக்கக் கூடிய இவர்கள் மிகவும் நம்பிக்கையானவர்கள்.

அவன் தலையோடு சுற்றிக் கட்டியிருந்த தலைப்பாகை நெகிழ்ந்து கீழே நழுவியது. அதைப் பிடிக்கப் போனவன் சட்டென்று வேறெதையோ நினைத்துக் கொண்டவனாகக் கையை இழுத்துக் கொள்ளவே– அந்த முண்டாசு கீழே தரையில் சாலையின் ஓர் ஓரத்தில் விழுந்தது.

வந்து கொண்டிருந்தவர்கள் நெருங்க நெருங்கப் பல்லக்குகளும், பல்லக்குத் தூக்கிகளும், முன்புறத்தில் வாத்தியக் கருவிகளோடு வந்தவர்களும், பின்புறத்தில் கூரிய வேலோடு வந்து கொண்டிருந்த வழித்துணை வீரர்களும் அடங்கிய காட்சியானது தெளிவாகப் புலப்படத் தொடங்கியது.

மானவர்மன் மற்றவற்றையெல்லாம் விட்டுவிட்டு இரண்டு பல்லக்குகளில் முதலில் வந்து கொண்டிருந்த முத்துப் பல்லக்கையே உற்றுக் கவனித்தான்.

இரண்டாவதாக வந்த பல்லக்கைக் காட்டிலும் அது அழகிலும் அலங்காரத்திலும் சிறந்து விளங்கியது. தந்தத்தால் இழைக்கப்பட்ட அப்பல்லக்கில், முத்துக்கள் பதிக்கப்பட்டு ஒளிவீசிக் கொண்டிருந்தன. பல்லக்கின் உள்ளே உட்கார்ந்து கொண்டிருந்தவர்களை வெளியே தொங்கிக் கொண்டிருந்த வெண்பட்டுத் திரைச் சீலைகள் மறைத்துக் கொண்டிருந்தன.

அந்த பல்லக்கு மானவர்மனுக்கு எப்போதோ அறிமுகமான பல்லக்காகத் தோன்றியது. யோசித்துப் பார்த்தான்.

ஆ..! நினைவிற்கு வந்துவிட்டது.

அந்த முத்துப் பல்லக்கு ஆடற்கணிகை மோகனசுந்தரிக்கு உரிமையானது.

இரண்டாவதாக வந்து கொண்டிருந்த பல்லக்கு.. அழகோ, அலங்காரமோ, தந்த இழைப்போ, முத்துப்பதிப்போ இல்லாமல் எளிமையாக விளங்கியது. அதனுடைய திரைச்சீலைகள் முரட்டுத் துகிலால் அமைந்திருந்ததோடு காற்றில்கூட அசையாதபடி இழுத்துக் கட்டப்பட்டிருந்ததனை மானவர்மன் உன்னிப்பாகக் கவனித்தான்.

இந்தப் பல்லக்குகளின் உள்ளே யார் இருக்கிறார்கள்?

இவை எங்கே போய்க் கொண்டிருக்கின்றன?

ஆடற்குழுவினர் தானிருந்த மரத்திற்கு நேர் கீழே வந்த போது திடீரென்று மானவர்மன் சத்தமிட்டான் "நில்லுங்கள்! அய்யோ! நில்லுங்கள்!"

பல்லக்குகளின் முன்புறத்தில் வந்து கொண்டிருந்தவர்கள் வாத்தியக் கருவிகளின் இசையைத் திடீரென்று நிறுத்திவிட்டு, சத்தம் எங்கிருந்து வருகிறதென்று சுற்றிப் பார்த்தார்கள். இசையும், இசைக் குழுவினரும் நின்றுவிடவே பல்லக்குத் தூக்கிகளும் அப்படியே நின்றார்கள். பல்லக்குகளும் நகராது நின்றுவிட்டன. என்ன நடக்கிறது என்பதைக் கவனிப்பதற்காகப் பின்னாலிருந்த வழித்துணை வீரர்கள் வேலொடு விரைந்தார்கள்.

மானவர்மன் தன்னுடைய தலையையும் உடலையும் கிளைகளுக்குள்ளே இழுத்துக் கொண்டான். சற்று நேரம் சுற்றிப் பார்த்துவிட்டு யாரும் தென்படாமற் போகவே— வழித்துணை வீரர்கள் மேலே நடக்குமாறு முன்புறத்திலிருந்தவர்களுக்குச் சைகை செய்தார்கள்.

அவர்கள் மறுபடியும் நடக்கத் தொடங்கிய போது மானவர்மன் தலையை வெளியே நீட்டி மீண்டும் அலறினான்.

"அய்யோ! நில்லுங்கள், நில்லுங்கள்!" —இந்தச் சமயத்தில் பல்லக்குகள் தெளிவாகப் புலப்படுமாறு அவனது பார்வைக்குப் பக்கத்தில் வந்திருந்தன.

சத்தம் வந்த திசையையும், மரக்கிளைகளின் நடுவே தாடியும் மீசையுமாய் நீண்டிருந்த மானவர்மனது தலையையும் கவனித்துவிட்டுக் கோபம் கொண்ட வழித்துணை வீரர்கள் அவனை நோக்கி வீசுவதற்காகத் தங்கள் வேல்களை ஓங்கினார்கள்.

"என்னைக் கொன்றுவிடாதீர்கள். அய்யோ! என்னைக் கொல்லாதீர்கள்" உயிருக்குப் பயந்தவனாக மானவர்மன் உரத்த குரலில் அலறினான். அதே சமயத்தில் அவனுடைய கண்கள் பல்லக்குகளையே கவனித்துக் கொண்டிருந்தன. அவன் எதிர் பார்த்தது நடந்தது. முத்துப் பல்லக்கின் மெல்லிய திரைத் துகில்களை விலக்கிக் கொண்டு முழு நிலவின் உதயம் போல் ஒரு மோகன முகம் வெளிப்பட்டது. ஆடற்கணிகை மோகனசுந்தரியின் அழகு முகம்தான் அது.

இரண்டாவது பல்லக்கின் திரைத் துகில் இரண்டு கண்களுக்கு மட்டுமே இடம் தரும் வகையில் அளவாக விலகியது. முகம்

வெளிப்படவில்லை. ஒரு முரட்டுக் கரம் வெளிப்பட்டுவிட்டு உடனே மறைந்து கொண்டது. மானவர்மனின் கண்களுக்கு இந்தக் காட்சி தப்பவில்லை.

வேல் வீரர்களைத் தடுத்துவிட்டுக் கீழே இருந்தவர்களில் ஒருவன் மானவர்மனை நோக்கிக் கூவினான்.

“ஏய்! அங்கே மரத்தின் மேல் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?”

“நான் என்னவோ செய்து கொண்டிருக்கிறேன்—உனக்கென்ன? கீழே சாலை ஓரத்தில் என் தலைப்பாகை விழுந்துவிட்டது. அதை எடுத்து இப்படிப் போடு” —மானவர்மன் பதிலுரைத்தான்.

“ஏன்— நீ இறங்கி வந்து எடுத்துக் கொண்டால் உன் வால் அறுந்து போய்விடுமா?”

“இல்லை, நான் இறங்கி வந்தால் உங்களுக்கெல்லாம் வால் முளைத்துக் கொள்ளும். அதுதான் பயமாக இருக்கிறது.”

பொற்கழஞ்சுகளைக் குலுக்கியது போல் மோகனசுந்தரி கலகலவென்று நகைத்துவிட்டுக் கூறினாள்:

“வழியில் ஏன் இந்த வம்பு..? அந்தத் தலைப்பாகையை எடுத்து அவனை நோக்கி எறிந்துவிடுங்கள்.”

கீழே இருந்தவர்களில் ஒருவன் சாலையோரத்தில் கிடந்த தலைப்பாகையை எடுத்து, “பிடித்துக்கொள்” என்று கூறிவிட்டு மானவர்மனை நோக்கி மேலே வீசினான். அந்தத் தலைப்பாகையைப் பிடித்துக் கொண்டு, பிரித்துக் கலைத்துக் கலைத்துப் பார்த்துவிட்டு, “அய்யோ! என் ஓலையைத் திருடிக் கொண்டான். ஓலையைக் கொண்டு போய்ச் சேர்க்காவிட்டால் பல்லவராயன் என் தலையைப் பத்தாக உடைத்துவிடுவானே, அய்யோ!” என்று மானவர்மன் கூக்குரலிட்டான்.

இந்த நேரத்தில் பின்புறத்திலிருந்த இரண்டாவது பல்லக்கின் *சிவிகைமணி இரண்டுமுறை மெதுவாக ஒலித்தது. வழித் துணை வீரர்களில் ஒருவன் அதன் அருகில் சென்று திரைத்துகில்களுக்குள்ளே காதுகளை மட்டும் நீட்டிவிட்டு வந்து, முத்துப் பல்லக்கிலிருந்த மோகனசுந்தரியின் காதோடு ஏதோ கூறினான்.

பல்லக்குகளை இறக்கி வைக்கச் சொல்லுமாறு கட்டளையிட்டுவிட்டு மோகனசுந்தரி அதிலிருந்து இறங்கிக் கொண்டாள். அதே சமயத்தில் மரத்திலிருந்து கீழே குதித்த மானவர்மன், தலைப்பாகையை எடுத்து வீசியவனைப் பிடித்துக் கொண்டு, "திருட்டுப் பயலே! என்னுடைய ஓலையைக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால் இந்த இடத்திலேயே உனக்குப் **பள்ளிப்படை கட்டிவிடுவேன்" என்றான்.

மோகனசுந்தரி அவனுக்குப் பக்கத்தில் வந்ததும் பிடித்துக் கொண்டிருந்தவனை விட்டுவிட்டு, வாலிபத்தின் வசந்த விழாவைப் போல் வந்து நிற்கும் அவளை நோக்கித் திரும்பினான் மானவர்மன்.

மதர்த்த இளமையும் மயக்கும் விழிகளும் அவளுக்கு மோக சாம்ராஜ்யத்தில் முடிசூட்டு விழா நடத்திக் கொண்டிருப்பதைக் கண்டான்.

அருகில் நெருங்கிய மோகனசுந்தரி, "அய்யா! இதென்ன வழியில் வந்து வம்பு செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள். எளிய தோற்றம் கொண்ட அப்படை வீரனுடைய இடுப்புக் கச்சையில் ஓலைக்குழல் ஒன்று செருகிக் கச்சையோடு சேர்த்துக் கட்டப் பட்டிருப்பதைக் கவனித்தாள்.

"இதோ ஓலைக் குழல் இருக்கிறதே! கச்சையில் கட்டி வைத்துவிட்டுத் தலைப்பாகையில் தேடினால் கிடைக்குமா?" என்று கேலியாகச் சிரித்தாள்.

கச்சையைத் தொட்டுப் பார்த்த மானவர்மன், "அம்மணி! நான் சின்னக் குழந்தையாக இருக்கும் போது என்னுடைய தாய் என்னைத் தொட்டிலில் கிடத்திவிட்டுக் கூரையில் தேடுவாளாம். அவளுடைய பழக்கம் அப்படியே எனக்கும் வந்துவிட்டது. மன்னித்துக் கொள்" என்றான். அதைக் கேட்டு அவள் சிரித்தாள். அப்போது

---

*சிவிகை மணி— பல்லக்கில் பயணம் செய்பவர்கள் உள்ளிருந்தவாறே பல்லக்குத் தூக்கிகளுக்குப் புறப்படுமாறோ வழித்துணை வீரர்களை அருகில் வரச்சொல்லுமாறோ ஆணை பிறப்பிக்கும் குறிப்பு மணி. பல்லக்கின் உட்புறம் அடித்தால் மட்டுமே ஓசையெழும் வகையில் அது அமைக்கப்பட்டிருக்கும்.

**பள்ளிப்படை— இறந்து போன வீரர்களின் நினைவாகக் கட்டப்படுவது.

சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் முணுமுணுத்துக் கொண்டு அவனைப் பார்த்து ஏதோ சத்தமிடத் தொடங்கவே, மோகனசுந்தரி அவர்களைத் தொலைவில் விலகியிருக்குமாறு கட்டளையிட்டாள். வழித்துணை வீரர்களை இரண்டாம் பல்லக்கின் பின்புறத்தில் நிற்குமாறு அனுப்பி வைத்தாள்.

தன்னை மானவர்மனோடு தனிமைப்படுத்திக் கொண்டாள்.

தன்னுடைய இடுப்புக் கச்சையில் கட்டப்பட்டிருந்த ஓலைக்குழலை அவிழ்த்து எடுத்து, அதன் மீது வைக்கப்பட்டிருந்த முத்திரையைப் பிய்த்துவிட்டு குழலைத் திறந்து ஓலையை வெளியே எடுத்துப் பார்த்தபின் மறுபடியும் உள்ளே வைத்து மூடிக் கச்சையில் செருகிக் கொண்ட மானவர்மனை மோகனசுந்தரி ஆச்சரியமாகப் பார்த்தாள். அவனுடைய விசித்திரமான பேச்சும் செயலும் அவளைப் பெரிதும் கவர்ந்தன.

அவள் கேட்டாள்:

“முத்திரை கலையாமலிருக்கும் போது ஓலை காணாமற் போய்விடுமா?”

“நடந்தாலும் நடக்கும் அம்மணி! எதையும் நம்ப முடியாது! அந்தக் கிழட்டுச் சேனைநாயகன் பல்லவராயனுடைய பாதுகாப்பிலிருந்தே ஆகவமல்லர் தப்பிப் போய்விட்டாராம். அப்படியிருக்கும் போது— குழலுக்குள்ளே இருக்கும் ஓலை, குதித்துக் கொண்டு ஓடிவிட எவ்வளவு நேரம் ஆகப்போகிறது?” என்று கூறிவிட்டுப் பரபரப்படைந்த அவள் முகத்தையும், எழும்பித் தணிந்த அவளது மார்பகங்களையும் குறும்புத்தனமான சிரிப்போடு கூர்ந்து கவனித்தான் மானவர்மன்.

ஏதோ கலவரத்தால் அவளுடைய முகத்தில் வியர்வை அரும்பியது. திடீரென்று பேச முடியாத திகைப்பிற்கு ஆளான அவள், இறுக்கிக் கட்டப்படாமல் நெகிழ்த்தி விடப்பட்டிருந்த தன் மார்புக் கச்சைகளுக் கிடையில் தன்னிச்சையாய்த் தலைப்பட்டுக் கொண்டிருந்த இளமையின் செழுமையை நோக்கி மானவர்மனது ஒரு மாதிரியான பார்வை படர்ந்ததைக் கவனித்துவிட்டு, அதையே தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, மேலாடையைச் சரி செய்வது போல் இன்னுங் கொஞ்சம் நழுவச் செய்துவிட்டுக் கேட்டாள்.

“பல்லவராயர் மட்டும்தான் கிழவர் என்பது உங்கள் அபிப்பிராயம் போலிருக்கிறது..!”

பார்வையைத் திருப்பிக் கொண்ட மானவர்மன், நரை படிந்து வெளுத்துக் கொண்டிருந்த தன்னுடைய தாடியை வருத்தத்துடன் தடவிவிட்டுக் கொண்டான். “என்னையும் அவனோடு சேர்த்துவிட்டாயா?” என்றான். பிறகு, “அவன் கிழவன், நான் ரசிகன். ரசிகர்கள் ஒருபோதும் கிழவர்களாவதில்லை. அவர்களுக்கு மூப்பும் கிடையாது” என்று உரைத்தபடியே அந்த அழகியை நெருங்கினான்.

# 15. அழகின் அழைப்பு

அவளின் அண்மையில் வந்து, தணிந்த குரலில் மானவர்மன் கூறினான்:

"அரண்மனையில் தூரத்திலிருந்தபடி கூட்டத்தோடு கூட்டமாக உன் நடனத்தைப் பார்த்து ரசித்தவன் நான். இப்போதுதான் உன்னைப் பக்கத்தில், நெருக்கத்தில் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது."

"பக்கத்தில் நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பது எனக்கும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது" என்று கூறினாள் ஆடல் அழகி.

"உனக்கென்ன மகிழ்ச்சி?" என்று கேட்டபடி அவளை இன்னும் நெருங்கி வந்து நின்றான் மானவர்மன்.

அவனுடைய ஆவேசமான மூச்சுக் காற்றின் வெப்பம் அவள் மீது பட்டது.

"பார்ப்பது மட்டுமல்ல— பார்க்கப்படுவதும் ஒரு பாக்கியம்தான்" என்று அவள் பதிலுரைத்தாள்.

"எப்படி?"

"மற்றவர்களால் ரசித்து விரும்பிப் பார்க்கப்படுகிறோம் என்பதே ஒருவருக்குப் பெருமிதத்தைத் தரக்கூடியது. அதனால் அவர்களுடைய அழகுகூட அதிகரித்துவிடும்."

"அப்படியானால் உன்னுடைய அழகை இன்னும் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்" என்று விநயமாகக் கூறியபடி அவளை உறுத்துப் பார்த்தான் மானவர்மன்.

அவனுடைய பார்வை எங்கெங்கெல்லாம் மோதி மோதி விழுகிறதென்பதைக் குறும்பு நகையுடன் கவனித்துக் கொண்டிருந்த மோகனசுந்தரி கூறினாள்:

"எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது."

"எதற்காகக் கவலைப்படுகிறாய்?" என்று அப்பாவியைப் போல் கேட்டான் மானவர்மன்.

"என் அழகை அதிகரிக்கச் செய்யும் முயற்சியில் உங்கள் கண்கள் காணாமற் போய்விடுமோ என்று கவலைப்படுகிறேன்" என்றபடி தன்

உடலையும் அவனையும் பார்த்துச் சிரித்துக் கொண்டாள் மோகனசுந்தரி.

"கண்டுபிடிக்க வந்தது காணாமற் போகாது" என்று உறுதியாகக் கூறினான் மானவர்மன்.

"கண்டுபிடிக்க வந்ததா?"

"ஆமாம். என் கண்கள் கண்டுபிடிக்கத்தான் வந்திருக்கின்றன" என்று கூறிய வண்ணம், அவளுடைய முகத்தில் படரும் பரபரப்பை ரசித்தான் மானவர்மன்.

கைகளைப் பிசைந்து கொண்டவளாக அவசரத்துடன் அவள் கேட்டாள்:

"எதைக் கண்டுபிடிக்க வந்தன உங்கள் கண்கள்?"

அவளுடைய முகம் குப்பென்று வியர்த்துவிட்டதையும் அவள் தடுமாற்றம் அடைவதையும் கவனித்தபடி மானவர்மன் நிதானமாகக் கூறினான்.

"அரண்மனையில் உன் நடனத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சமயங்களில் என் மனசு இங்கேதான் எங்கேயோ காணாமற் போய்விட்டது" என்று அவளுடைய அழகிய மதர்த்த உடலைத் தலையிலிருந்து கால்வரை சுட்டிக்காட்டிய பின் மானவர்மன் தொடர்ந்தான்:

"இங்கே எந்த இடத்தில் என் மனசு காணாமற் போனது என்பதைக் கண்டுபிடிக்கத்தான் என் கண்கள் இப்போது முயற்சி செய்து கொண்டிருக்கின்றன."

"நல்லவேளை— பயந்தே போய்விட்டேன்" என்று கூறிய மோகனசுந்தரி, ஏதோ தவறாகச் சொல்லிவிட்டவளைப் போலச் சட்டென்று சமாளித்தாள்

"துருதுருத்த உங்கள் கண்களாலேயே என்னைத் தூக்கிக் கொண்டு போக முயற்சி செய்கிறீர்களோ என்று பயந்துவிட்டேன்" என்றாள்.

"அழகாகப் பேசுகிறாய். இப்போதுதான் எனக்குப் புரிகிறது.." என்று கூறி நிறுத்தினான் மானவர்மன்.

"என்ன புரிகிறது?" என்று மறுபடியும் பதைபதைப்போடு கேட்டாள் மோகனசுந்தரி.

"அழகின் சாம்ராஜ்யத்தில் கண்டுபிடிக்க வந்தவர்களே காணாமற் போய்விடுவார்கள் என்பது புரிகிறது" என்று கூறிவிட்டு அவளை இன்னும் நெருங்கினான் மானவர்மன்.

ஆசையின் தீச்சுடர் அவனுடைய கண்களில் பற்றி எரிவதாக எண்ணிக் கொண்ட மோகனசுந்தரி, அவனுடைய விரிந்து பரந்த மார்பில் தன்னுடைய மெல்லிய விரல்களை நெளியவிட்டாள். பிறகு அவனுடைய செவிகளின் ஓரத்தில் தன்னுடைய பவள இதழ்களைப் பதிக்க முயன்றபடி அவள் கேட்டாள்:

"நீங்கள் பல்லவராயரது ஒற்றர்படையிலா பணியாற்றுகிறீர்கள்?"

மானவர்மன் அந்த இளம்பெண்ணின் நெருக்கத்தில் பேச முடியாதவனாய் 'ஆம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை மட்டும் அசைத்தான்.

"ஒற்று வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் இப்படிப் பெண்களின் அழகோடு ஒற்று வேலை நடத்த ஆசைப்படலாமா?" —பொய்யான கோபத்துடன் அவள் அவனிடமிருந்து விலகி நின்று கொண்டாள்.

"அம்மணீ..!" என்று தடுமாறிக் கொண்டு சுற்றிப் பார்த்த மானவர்மனுக்கு, "யாரும் நம்மைக் கவனிக்கமாட்டார்கள்" என்று சொல்லிச் சிரித்துத் தைரியமூட்டினாள் அவள்.

இப்போது அவன் அவளை நெருங்கி வந்து அவளுடைய கரத்தில் ஒன்றை எடுத்துத் தன்னுடைய கரங்களுக்குள் சிறைப் பிடித்துக் கொண்டு, "வயிற்றின் சுவைக்காக அந்த ஒற்று வேலை! வாழ்வின் சுவைக்காக.." என்று வார்த்தைகளை இழுத்தான்.

அவள் கலகலவென்று சிரித்தாள்.

"ஆமாம்— ஓலைக்குழலின் மூடியின் மேல் வைத்திருந்த முத்திரையைப் பிய்த்துவிட்டீர்களே— ஓலையைச் சேர்ப்பிக்கும் போது.."

"புதிய முத்திரை போட்டுக்கொள்ள எவ்வளவு நேரமாகப் போகிறது? அந்தப் பல்லவராயனுடைய கையொப்பம், இலச்சினை, முத்திரை எல்லாமே— எனக்குத் தலைகீழ்ப் பாடம்! பாதையில் ஓலையைப் பறி கொடுத்துவிட்டு, அந்தக் கடுகடுத்த

கிழவனிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக எத்தனை தடவை கள்ள ஓலைகள் தயாரித்திருக்கிறேன் தெரியுமா? இதற்காகவே எப்போதும் சில வெற்று ஓலை நறுக்குகளும், எழுத்தாணியும் கைவசம் வைத்திருப்பேன்" என்று வீரத்தனமாய்ச் சொல்லிவிட்டுத் தன்னுடைய மடியை அவிழ்த்து, மறைத்து வைத்திருந்த அவற்றை எடுத்துக் காட்டினான் மானவர்மன்.

"பார்த்தால் சாதாரணமான ஆளாகத் தெரிகிறீர்கள். பாமரனைப் போல் பேசுகிறீர்கள். உங்களிடம் இவ்வளவு சாமர்த்தியம் இருக்குமென்று நான் நினைக்கவே இல்லை" என்று கூறினாள் ஆடல் அழகி.

"எத்தனை திறமையிருந்து என்ன பயன்? உன்னை மாதிரி ஓர் அழகி பக்கத்திலிருந்து பாராட்டினால்தானே எந்தத் திறமையும் பெருமை பெறுகிறது!" என்றான் மானவர்மன்.

அவனுடைய வார்த்தைகளில் ஒளிந்து கொண்டிருந்தது பாராட்டா, கேலியா என்பதை அனுமானிக்க முடியவில்லை.

"உங்கள் திறமையை நான் நேரடியாகத் தெரிந்து கொண்டால் உங்களைப் பாராட்டுகிறவிதத்தில் பாராட்டுவேன்" என்று கண் சிமிட்டிவிட்டு மோகனசுந்தரி குழைந்தாள்.

"நீங்கள் வைத்திருக்கும் திருமுக ஓலையைப் போலவே என்னிடம் இன்னொன்றை எழுதிக் காட்டுகிறீர்களா?"

மானவர்மன் தயங்கினான்.

அவனை நோக்கி மெல்லச் சாய்ந்து அவள் கூறினாள்:

"பல்லவராயரிடம் உங்களைக் காட்டிக் கொடுத்துவிடுவேனென்று சந்தேகிக்கிறீர்களா? அந்தக் கிழவனை எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்காது. ரசிகத்தன்மை இல்லாத ஒரு வயோதிகர் அதிகாரம் செலுத்தும் தேசத்தில் என்னைப் போன்ற நடனப் பெண்களுக்கு வாழ்வு ஏது? அதனால்தான் நான் இப்போது மதுரைக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். அங்கே குலசேகரப் பாண்டியரைத் தோற்கடித்துவிட்டு வீரபாண்டியர் ஆட்சிக்கு வந்திருக்கிறாராம். அந்த மகாவீரர் பெரிய கலா ரசிகராம். அவருடைய அரச சபையில் ஆடுவதற்காகத்தான் இப்போது போய்க் கொண்டிருக்கிறேன். அங்கேயே தங்கிவிடுவதாகவும் உத்தேசம். நான் உங்கள்

திறமையைத் தெரிந்து கொள்வதால் பின்னால் உங்களுக்கு நிறையப் பயன் கிடைக்கலாம். பல்லவராயர் மீது உங்களுக்கு எவ்வளவு கோபம் உண்டோ அதைக் காட்டிலும் பன்மடங்கு எனக்கு உண்டு.”

மானவர்மன் அவளுடைய வார்த்தைகளைக் கேட்டுவிட்டுச் சிரித்தான்.

“அம்மணி! உன்னை நான் நம்புகிறேன். ஆனால்— போலி ஓலையை எழுதிக் காட்டுவதற்கு இது ஏற்ற இடமல்ல.”

“மறைவிடம் வேண்டும், அவ்வளவுதானே? வாருங்கள்— மானவர்மனைப் பின்தொடரச் செய்துவிட்டு மோகனசுந்தரி இறக்கி வைக்கப்பட்டிருந்த முத்துப் பல்லக்கை நோக்கி நடந்தாள். அதனருகில் வந்து சேர்ந்ததும், அடுத்திருந்த பல்லக்கைக் காட்டி, “அதற்குள் யார் இருக்கிறார்கள்?” என்று கேட்ட மானவர்மனுக்கு, “கவலைப்படாதீர்கள். அந்தப் பல்லக்கில் என் தங்கை அமர்ந்திருக்கிறாள். வேறு யாரும் இல்லை. அவளுக்கு வெட்கம் அதிகம். வெளியே வரமாட்டாள். நீங்கள் வாருங்கள்” என்று பதிலுரைத்துவிட்டுப் பல்லக்கிற்குள் ஏறிக்கொண்டாள் மோகனசுந்தரி.

பல்லக்கின் வெளியே நின்று கொண்டிருந்தவனைத் தன் வலது கரத்தால் தொட்டு உள்ளே இழுத்து உட்காரச் செய்தாள். உட்கார்ந்த பிறகும் அவன் தயக்கத்திலிருந்து விடுபடாமலிருக்கவே, பல்லக்கின் பட்டுத் திரைகளை இழுத்துவிட்டுவிட்டு, அவனுடைய கழுத்தைத் தன் கைகளில் கட்டிக் கொண்டு அவனது மார்பில் விழுந்து சுருண்டு புரண்டாள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் நடுங்காத மானவர்மனுடைய உடல் அந்தச் சந்தர்ப்பத்தில் நடுங்கத் தொடங்கியது. அவளுடைய இடுப்பில் தன் வலது கையை வைத்து, அவளை மெல்லத் தள்ளினான். சுண்டிவிடப்பட்ட பருத்திக்காய் போல் சிவிகையின் ஒரு மூலையில் போய் விழுந்தவள். ஆளைக் கிறங்க வைக்கும் அசட்டுச் சிரிப்போடு சொன்னாள்:

“அடேயப்பா! உங்களுக்குத்தான் எவ்வளவு பலம்! உங்களைப் போய்க் கிழவனென்று சொன்னால் யார் நம்புவார்கள்?”

“அங்கேயே இரு! இந்த ஓலையை எழுதி முடித்துவிடுகிறேன்.”

மானவர்மன் தன் ஓலைக் குழலின் உள்ளேயிருந்த ஓலையை எடுத்துப் பார்த்துக் கொண்டு, அதேபோல மற்றோர் ஓலையை எழுதி முடித்து, இரண்டையும் மோகனசுந்தரியிடம் ஒப்பிட்டுக் காட்டிய போது— அவள் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. இரண்டில் எது மெய்யான ஓலை, எது பொய்யாகத் தயாரிக்கப்பட்ட ஓலை என்று கண்டுபிடிக்க முடியாதபடி இரண்டும் ஒரே மாதிரி அமைந்திருந்தன. அதோடு அவற்றில் எழுதப்பட்டிருந்த செய்தியும் அவளுக்குப் பரபரப்பை ஏற்படுத்தியது.

இரண்டையும் கைகளில் வாங்கி மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்த மோகனசுந்தரி குழப்பமடைந்து போய், "இதில் எது நிஜமான ஓலை?" என்று கேட்டாள். மானவர்மன் தன்னுடைய திறமையைக் கண்ணெதிரே நிரூபணமாக்கிவிட்ட பெருமிதத்தோடு, "இனிமேல் அதைக் கண்டுபிடிக்க அந்தப் பல்லவராயனாலும் முடியாது. என்னாலும் முடியாது" என்றான். பின்னர், "பெண்ணே! இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றை இந்த இடத்திலேயே உன் கைகளாலேயே எரித்துச் சாம்பலாக்கிவிடு. ஒன்றை மட்டும் என்னிடம் கொடு!" என்று கூறினான்.

"இங்கே எரிக்க வேண்டாம். உட்புறத்தில் புகை படிந்தால் முத்துப் பல்லக்குப் பாழாகிவிடும்" என்று கூறிவிட்டு மோகனசுந்தரி பல்லக்கிலிருந்து இறங்கினாள். தொடர்ந்து இறங்கிய மானவர்மனிடம், "வீரரே! வேறு யாருக்கும் இது தெரிய வேண்டாம். வழித்துணை வீரர்களிடம் போய் ஒரு தீப்பந்தம் தயார் செய்து வாங்கி வாருங்கள்" என்று குழைந்தாள்.

மானவர்மன் நகர்ந்ததும்— பல்லக்கினுள் அவசரமாக நுழைந்து— கையிலிருந்த ஓலைகளில் ஒன்றைப் பத்திரப்படுத்திவிட்டு அதற்குப் பதிலாக வேறொரு புதிய ஓலையை எடுத்துக் கொண்டு திரும்பியவள், மானவர்மன் தீப்பந்தம் கொண்டு வந்ததும், சம்பந்தமில்லாத அந்தப் புதிய ஓலையை அவசர அவசரமாகத் தீக்கொளுத்தி எரித்தாள். அது முழுக்க எரிந்து சாம்பலாகி முடிந்த பிறகு— கையிலிருந்த ஓலையை மானவர்மனிடம் நீட்டி, "சரிபார்த்துக் கொண்டு ஓலையைக் குழலுக்குள் போடுங்கள்" என்றாள்.

மானவர்மன் அவள் கூறியபடியே செய்துவிட்டு அவளிடம் எதையோ எதிர்பார்ப்பவன் போல் நின்று கொண்டிருந்தான்.

மோகனசுந்தரி தன் விரலில் அணிந்திருந்த அழகிய கணையாழி ஒன்றைக் கழற்றி மானவர்மனுக்கு அணிவித்தாள்.

"மாவீரரே! நான் இப்போது அவசரமாக மதுரைக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். வாய்ப்புக் கிட்டும் போது என்னை வந்து சந்தியுங்கள். என்னிடம் வந்து நீங்கள் எது கேட்டாலும் நான் இல்லையென்று சொல்லமாட்டேன்" என்றாள்.

"எதைக் கேட்டாலுமா?" என்று சந்தேகத்துடன் கேட்டான் மானவர்மன்.

"ஆம், எது கேட்டாலும் இல்லையென்று சொல்லமாட்டேன்" என்று கூறி, ஆண்பிள்ளைகளைப் பித்துப் பிடிக்க வைக்கும் சாகசத்தோடு தன் உடலை நெளித்து வளைத்து வைத்துக் கொண்டு நின்றாள்.

"நீ தான் என்னைக் கிழவன் என்று கூறிவிட்டாயே" என்று வருத்தம் கலந்த குரலில் பெருமூச்சை வெளிப்படுத்தினான் மானவர்மன்.

அவனைத் தன் சின்ன விரல்களால் செல்லமாகத் தட்டிக் கொடுத்தபடி ஆதரவாக அவள் கூறினாள்:

"அழகை அனுபவிக்க வேண்டுமென்ற அவசரம் மட்டுமே வாலிபர்களிடம் உண்டு. அழகை— ஆராதனை செய்யும் நிதானம் வயதானவர்களிடத்தில்தான் உள்ளது. வயதாகிவிட்டதற்காக நீங்கள் வருத்தப்பட வேண்டாம். கட்டாயம் என்னை வந்து சந்தியுங்கள்" என்று சொல்லி ஒரு மன்மதச் சிரிப்பை உதிர்த்தபடி "கேட்டது கிடைக்கும்" என்று முடித்தாள்.

"ஆகட்டும். அவசியம் ஏற்படும் போது வந்து சந்திக்கிறேன்" என்று கூறிய மானவர்மன், "இப்போது இந்த ஏழை வீரனின் சிறு பரிசை ஏற்றுக் கொள்" என்ற வண்ணம் அவளது கைகளில் ஓர் அழகிய முத்து மாலையை வைத்தான். மோகனசுந்தரியின் முகம் முழு நிலாவின் பிரகாசத்தை வெளிப்படுத்தியது.

"உன் தங்கையின் தரிசனம் எனக்குக் கிடைக்காவிட்டாலும், அவளுக்குப் பரிசு கொடுக்கும் பாக்கியமாவது எனக்குக் கிட்டுமா?" என்று அவன் கேட்ட போது— சில கண்ணிமைப் பொழுது தாமதித்துத் தயங்கிய மோகனசுந்தரி, சட்டென்று தன்னைச்

சமாளித்துக் கொண்டு, “அதனாலென்ன, வாருங்கள்!” என்று அடுத்த பல்லக்கை நோக்கி அவனை அழைத்துச் சென்றாள்.

அலங்காரம் எதுவுமில்லாத அந்தப் பல்லக்கின் அருகில் சென்று நின்ற மோகனசுந்தரி, “அடியே, பூங்குழலி! இந்த மாவீரர் உனக்குப் பரிசளிக்க விரும்புகிறார். முகத்தைக் காட்டினால்தான் உன்னை வெட்கம் பிடுங்கி விழுங்கிவிடுமே, கரத்தை நீட்டியாவது பெற்றுக் கொள்” என்று சொல்லிச் சிரித்தாள்.

பல்லக்கின் முரட்டுத் திரை மெதுவாக விலகியது. உள்ளேயிருந்து ஒரு கை மட்டும் நீண்டது. அந்தக் கை ஒரு பெண்ணின் மெல்லிய கை போல் இல்லாமல், காய்த்துப் போய் வன்மை படிந்து காணப்பட்டதைக் கவனித்த மானவர்மன், முத்து மாலையைக் கொடுத்துவிட்டு, அதோடு சேர்த்து அந்தக் கையைத் தன் விரல்களால் மெல்லப் பற்றிக் கொண்டான். அவனுடைய விரல்களின் பிடியிலிருந்து தன் கையைவிடுவித்துக் கொள்வதற்காகப் பல்லக்கின் உள்ளேயிருந்து வேறொரு கை நீண்டது.

அப்படி நீண்ட கையில்— சுட்டு விரலுக்கு அடுத்த விரலில் காணப்பட்ட கணையாழியும், அக்கணையாழியில் பொறிக்கப்பட்டிருந்த கங்கநாட்டுச் சிற்றரசின் இலச்சினையும் மானவர்மனது கண்களுக்குத் தப்பவில்லை.

# 16. சிங்கங்கள் சீறுகின்றன!

பொதிகையில் பிறந்து நதிகளில் தவழ்ந்து, புலவர் தம் நாவில் பொருந்தி வளர்ந்து, மதுரை வீதிகளில் நடந்து கொண்டிருந்த தென்றற் காற்று, திருப்பரங்குன்றத்துப் *பாடி வீட்டின் மாளிகையை எட்டிப் பார்த்துவிட்டுத் திகைத்துப் பயந்து போய்த் திரும்பிக் கொண்டிருந்தது. ஏனென்றால், அங்கே தென்றலைக் கொன்று, தீயை உமிழ்ந்து, சுழன்றடிக்கும் சூறாவளியாய்ப் பூமியை நடுங்க வைக்கும் புயற்காற்று புறப்பட்டுக் கொண்டிருந்தது.

ஈழத்துப் படைத்தலைவர்கள் இலங்காபுரித் தண்டநாயகனும், ஜெகத்விஜயத் தண்டநாயகனும் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்தார்கள்.

குலசேகர பாண்டியனையும், அவனுடைய கொங்கு நாட்டு மாமனையும், அவர்களுடைய படைகளுக்குப் பக்கபலமாக வந்த கண்டதேவ மழவராயன், மழவச் சக்கரவர்த்தி ஆகியோரது படைகளையும் போரில் புறங்கண்டு மதுரையை மீண்டும் கைப்பற்றி— மறுபடியும் வீரபாண்டியனுக்கு மகுடம் சூட்டி வைத்த சிங்களத்து மறவர் படையில் ஒரு பகுதியினர் அங்கே திருப்பரங்குன்றத்துப் படைக்கோட்டத்தில் பாடி இறங்கியிருந்தனர்.

அன்றைக்குத் திருப்பரங்குன்றத்துப் படைக்கோட்டத்திலிருந்த ஈழநாட்டு வீரர்களிடையே மிகுந்த குதூகலம் காணப்பட்டது. ஏனென்றால், மாபெருந் தளபதிகளும் பகைவர்களைக் கலங்க வைக்கும் பராக்கிரமசாலிகளுமான ஜெகத்விஜயத் தண்டநாயகன், இலங்காபுரித் தண்டநாயகன் இருவரும் அன்று காலையில் ஒரே சமயத்தில் அங்கே வருகை புரிந்ததோடு படைகளின் அணிவகுப்பையும் பார்வையிட்டார்கள்.

பேரிகை முழங்க— எக்காளம் ஒலிக்க— வீரர்கள் அலையலையாய் நிற்க— அவர்களிடையே ஜெகத்விஜயத் தண்டநாயகனும் இலங்காபுரித் தண்டநாயகனும் நடந்து சுற்றி வந்த போது, வீரர்களின்

---

*பாடிவீடென்பது சமாதான காலத்தில் திருமணமாகாத வீரர்கள் தங்கியிருப்பது. அது— போர்க்காலத்தில் பிறர்க்கும், பிறவற்றிற்கும் பயன்பட்டது.

கூட்டத்தை இரண்டு வேங்கைகள் பார்வையிடுவது போலிருந்த அந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

அணிவகுப்பு, வீர நிகழ்ச்சிகள், வேடிக்கை நிகழ்ச்சிகள் எல்லாம் நடத்திக் காட்டப்பட்ட பிறகு ஜெகத்விஜயத் தண்டநாயகனும் இலங்காபுரித் தண்டநாயகனும் படைக்கோட்டத்தில் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பகுதிக்குப் போனார்கள்.

அன்று பிற்பகல் வரை அந்தப் படைக்கோட்டத்து வீரர்கள் அளவில்லாத உற்சாகத்துடன், ஆடியும் பாடியும் குடித்துக் கும்மாளமிட்டுப் பொழுது போக்கினார்கள். தண்டநாயகர்கள் இருவரும் அன்றைய தினத்தை உல்லாச நாளாக அவர்களுக்கு அறிவித்து அவர்களுடைய கொண்டாட்டங்களுக்கு அனுமதியும் வழங்கிவிட்டார்கள்.

வீரபாண்டியனுக்கு முடிசூட்டிய நாளன்று அடைந்த உற்சாகத்திற்குப் பிறகு, அவ்வீரர்களுக்கு அத்தகைய உற்சாகமும் மகிழ்ச்சியும் அன்றுதான் கிடைத்தது.

அப்படைக்கோட்டத்து வீரர்களில் சிங்களத்து வீரர்கள் பெரும்பான்மையாகவும், பாண்டிய வீரர்கள் சிறுபான்மையாகவும் கலந்திருந்தனர். உற்சாக உற்சவத்தில்– சிங்களத்தார் தமிழரையும், தமிழர்கள் சிங்களத்தாரையும் ஒருவரையொருவர் கேலி செய்து கொண்டனர். தமிழ் வீரர்கள் பாடுகின்ற போது சிங்களத்துக்காரர்களும், சிங்களத்தார் பாடும் போது தமிழ் வீரர்களும் விசித்திரமான ஓசைகளை எழுப்பிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தனர். வாடிக்கையான நகைச்சுவையாக இருந்த இவையெல்லாம் அன்று ஓர் எல்லையை மீறி வளர்ந்ததால் வம்பில் வந்து முடிந்தது!

சிங்கள வீரர்களும், வீரபாண்டியனுடைய வீரர்களும் ஒன்றுபட்டுப் போராடிக் கொண்டிருந்தாலும், உள்ளுக்குள் அவர்களிடையே குரோதம் புகைந்து கொண்டிருந்தது. மேலிடத்தில் ஏற்பட்டிருந்த கூட்டுறவு, சாதாரணப் படை வீரர்களின் உள்ளத்தில் சரியாக வேர்விடவில்லை. சிங்கள வீரர்கள் தங்களை எஜமான சமூகமாகவும், பாண்டிய மறவர்கள் தங்களை அடிமைப்படுத்தப்பட்டவர்களாகவும் கருதி வந்ததால்– உள்ளுக்குள் ஒருவர்மீதொருவர் வெறுப்புக் கொண்டிருந்தனர்.

அந்த வெறுப்பு அன்று வெளிப்படையாகவே வெளிப்பட்டுவிட்டது. ஒருவரையொருவர் கேலி செய்து கொண்டிருந்தபோது— சிங்களத்து வீரனொருவன், பாண்டிய நாட்டானை ஓங்கி உதைத்துவிட்டான். அவமானப்பட்ட பாண்டிய நாட்டான் அந்தச் சிங்களத்து வீரனை அடிஅடியென்று அடித்து நையப் புடைத்துவிட்டான். இதனால் அங்கிருந்த சிங்கள வீரர்களும் பாண்டிய வீரர்களும் தனித்தனி அணியாகப் பிரிந்து சண்டையிட ஆரம்பித்தார்கள்.

இந்தத் தகராறு பெரிதாக வளரத் தொடங்கிய போது ஈழநாட்டு மறப்படையின் உபசேனாதிபதி உதயசேனனுக்குச் செய்தி சென்று சேர்ந்தது. தன்னாலும் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடவே, உபசேனாதிபதி இந்த விபரீதமான நிலைமையைப் பற்றிச் சொல்லிவிடுவதற்காகத் தண்டநாயகர்கள் தங்கியிருந்த இடத்திற்குப் போனான்.

அவன் அங்கே போய்ச் சேர்ந்திருந்த நேரத்தில்தான்— சிங்கள அரசன் பராக்கிரமபாகு *பொல்லநறுவையிலிருந்து அனுப்பிய ஓலையைப் படித்து முடித்துவிட்டுத் தண்டநாயகர்கள் இருவரும் அவர்களுக்குள்ளேயே சீறிச் சினந்து கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த உதயசேனன், படைக்கோட்டத்திலிருந்த பாண்டிய வீரர்களும் சிங்கள வீரர்களும் சண்டையிட்டுக் கொண்டதைத் தெரிவிக்கவே இலங்காபுரித் தண்டநாயகனும், ஜெகத்விஜயத் தண்டநாயகனும் கொதித்தெழுந்தார்கள்.

கண்களில் கனல் பறக்க ஜெகத்விஜயத் தண்டநாயகன் கட்டளையிட்டான்.

“பேரிகைகளை முழங்கச் செய்! எக்காளம் ஒலிக்கட்டும். காலையில் நடந்ததைப் போல் மறுபடியும் அணிவகுப்பு நடக்கட்டும். முதலில் சண்டையிட்டானே அந்தத் தமிழ் வீரன், அவனைப் படைத்தள மேடையில் கொண்டு வந்து நிறுத்து. வெட்டுக் கத்திகளோடு கொலையாளிகளை வரச்சொல்.”

---

*பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் அனுராதபுரம் அழிந்து பாழ்பட்டிருந்ததால் ‘பொல்லநறுவை’ (பொலன்னருவா) ஈழத்தின் தலைநகராக விளங்கியது.

நடுக்கத்துடன் நகரத் தொடங்கிய உபசேனாதிபதியை இலங்காபுரித் தண்டநாயகனின் கர்ஜனை தடுத்தது.

"நில். இதையும் கேட்டுவிட்டுப் போ. தமிழ்வீரனை மட்டுமல்ல— அவனை முதலில் எட்டி உதைத்தானே சிங்களத்துக்காரன், அவனையும் சிண்டைப் பிடித்துக் கொண்டு வந்து நிறுத்து."

உதயசேனன் வெளியேறினான்.

பேரிகை முழங்கியது. எக்காளம் ஒலித்தது. திருப்பரங்குன்றப் படைக்கோட்டத்து வீரர்களனைவரும் படைத்தளத்திற்கு வந்து அணிவகுத்து நின்றார்கள்.

காலையில் அவர்கள் அணிவகுத்து நின்றதற்கும் இப்போது அவர்கள் அணிவகுத்து நிற்பதற்கும் பெரிய வித்தியாசமொன்று தெளிவாகப் புலப்பட்டது. காலைப்பொழுதில் நடைபெற்ற அணிவகுப்பில் சிங்கள, பாண்டிய வீரர்கள் கலந்து நின்றிருந்தனர். தற்போதைய அணிவகுப்பில் தனித்தனியே நின்றிருந்தனர். இருநாட்டு மறவர்களும் தனித்தனியே அணிவகுத்திருந்த காட்சி— களத்தில் அருகருகே எதிர்த்து நின்று போர்த் தொடக்கத்தை எதிர்பார்த்திருப்பது போலிருந்தது. சிங்களப் படைகளை மலைக்கு ஒப்பிட்டால் வீரபாண்டியனுடைய சேனை மடு என்று சொல்லத்தக்க அளவில் சின்னஞ் சிறியதாக இருந்தது.

படைத்தளத்தின் மேடையில் தகராறுகளுக்கு முதற் காரணமாக விளங்கிய பாண்டிய வீரனும், சிங்கள வீரனும் கைகள் பிணைக்கப்படாமல் வெறுமனே நிறுத்தப்பட்டிருந்தனர். ஆணவத்தோடு உதைத்தவனும், அவமானம் தாங்காமல் அடித்தவனும் அருகருகே நின்று தலை கவிழ்ந்திருந்தார்கள். அவர்களுக்குப் பின்புறத்தில் பெரிய வெட்டுக் கத்திகளைக் கையில் பிடித்துத் தோளில் சாத்திக் கொண்டு கொடிய கரிய தோற்றத்தோடு இரண்டு கொலையாளிகள் நின்றிருந்தனர். மேடையின் முகப்பில் உபசேனாதிபதி உதயசேனன் நின்றிருந்தான்.

தளத்தில் அணிவகுத்திருந்த சிங்கள பாண்டிய வீரர்களெல்லாம், தண்டநாயகர்களது விசாரணையும் தீர்ப்பும் எவ்வாறு அமையுமோ என்று கவலை படிந்த முகத்தினராகக் காணப்பட்டனர்.

படைத்தளதது வீரர்களிடையே திடீரென்று பரபரப்பு ஏற்பட்டது. ஜெகத்விஜயத் தண்டநாயகனும், இலங்காபுரித் தண்டநாயகனும் படைத்தள மேடைக்கு வந்து சேர்ந்தார்கள். அதன் கீழே இருந்த

பெரு முரசிற்குப் பக்கத்தில் நின்றிருந்த வீரன், அந்த முரசைப் பன்னிரண்டு முறை அடித்து ஒலியெழுப்பிவிட்டு நிறுத்தினான். அங்கே மயானத்தின் அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கலைத்துக் கொண்டு உதயசேனன் பேசினான்:

“திருப்பரங்குன்றப் படைக்கோட்டத்து வீரர்களே! நம்முடைய மதிப்பிற்குரிய மாதண்டநாயகர்கள் இருவரும் இன்று வருகை புரிந்து நம்மை மகிழ்வித்ததோடு, இந்த தினத்தை ‘உல்லாச நாளாக’ அறிவித்து நம் மகிழ்ச்சியை அதிகரித்தார்கள். உல்லாச நாளின் உற்சாகத்தில்— வரம்பு மீறி நடந்து உட்குழப்பம் ஏற்படக் காரணமாக இருந்த பாண்டிய வீரன் அழகன் நம்பியையும், சிங்கள வீரன் நந்தமித்தனையும் விசாரணை செய்து தீர்ப்புச் சொல்வதற்காக இப்போது நம் மாதண்டநாயகர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். கருணைமயமான அவர்களுடைய தீர்ப்பை வேண்டி, இந்தப் படைக்கோட்டத்தின் சார்பில் நான் அவர்களுக்குக் கைகுவிக்கிறேன்.”

உதயசேனனுடைய தந்திரமான பேச்சைக் கேட்டுவிட்டு ஜெகத்விஜயத் தண்டநாயகன் இடிஇடியென்று பேய்க் குரலில் சிரித்துவிட்டுச் சொன்னான்:

“உதயசேனா! பரவாயில்லை. பாண்டிய நாட்டிற்கு வந்து வேறெதையும் வெட்டி முறிக்காவிட்டாலும் சாமர்த்தியமாகப் பேசவாவது கற்றுக் கொண்டிருக்கிறாய்!”

அடுத்தபடி அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை உதயசேனனும் படைக்கோட்டத்து வீரர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், இலங்காபுரித் தண்டநாயகன் கூட எதிர்பாராத வகையில் ஜெகத்விஜயத் தண்டநாயகன் ஒரு காரியம் செய்தான். எந்த விசாரணையும் செய்யாமலும் எதுவும் பேசாமலும் மின்வெட்டும் நேரத்தில் பின்புறம் திரும்பி, கொலையாளியின் தோளிலிருந்த பெரிய வெட்டுக் கத்தியைப் பறித்துத் தமிழ் வீரன் அழகன் நம்பியின் கழுத்தை நோக்கி ஓங்கினான்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அழகன்நம்பியின் தலை துண்டாக மேடைக்குக் கீழே போய் விழுந்தது. உடல் மேடையிலேயே சாய்ந்து துள்ளியது.

அதே சமயத்தில் இலங்காபுரித் தண்டநாயகனும் உடனே பக்கத்திலிருந்த கொலையாளியின் வெட்டுக் கத்தியைப் பிடுங்கிச் சிங்கள வீரன் நந்தமித்தனின் தலையைத் துண்டாக்கித் தரையில் விழச் செய்தான்.

விசாரணை செய்யப்படுவதற்காகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட பாண்டிய வீரனும், சிங்கள வீரனும் வெட்டுக் கத்திகளால் விசாரிக்கப்பட்டு, துண்டுபட்ட தலைகளால் பணிவு காட்டி, துள்ளிப் பாய்ந்த குருதியால் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

விரலசைக்கும் நேரத்தில் நடந்து முடிந்துவிட்ட இந்த விபரீதங்களைப் பார்த்துப் பயந்து, இன்னது செய்கிறோமென்று தெரியாமல் முன்னும் பின்னும் நகர்ந்த சிங்கள வீரர்களும், பாண்டிய வீரர்களும் தனித்தனி அணிவகுப்புக் கலைந்து போய் ஒன்றாகக் கலந்து கூட்டமாக நின்று படைத்தள மேடையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

# 17. வீர சபதம்

கையில் வெட்டுக் கத்திகளோடு ஒருவரையொருவர் பார்த்து உறுமிக் கொண்ட ஜெகத்விஜயத் தண்டநாயகனும் இலங்காபுரித் தண்டநாயகனும் சற்று நேரத்தில் தங்கள் கத்திகளைத் தரையில் வீசியெறிந்துவிட்டு அங்கிருந்து வெளியேறினார்கள்.

அவர்கள் வெளியேறியதும் அங்கிருந்த வீரர்களனைவரும் தங்களுடைய கட்டுப்பாடுகள், இன உணர்வுகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டுத் துண்டாகிக் கிடந்த தலைகளையும் உடல்களையும் சுற்றிக் கூடிக் கண்கலங்கிக் கொண்டிருந்தனர்.

தங்களுடைய இருப்பிடத்திற்குச் சென்று எதிரெதிரே அமர்ந்த தண்டநாயகர்களுடைய உள்ளத்தில் உருவாகிய புயல்— கண்களின் வழியே எட்டிப் பார்த்து, வாய்களின் மூலம் வார்த்தைகளாக வெளியேறி வீசத் தொடங்கியது.

அப்போதுதான் அப்பாவித் தென்றல் அங்கே நுழைய முயன்று மிரண்டு திரும்பிக் கொண்டிருந்தது.

ஜெகத்விஜயத் தண்டநாயகன், இலங்காபுரித் தண்டநாயகனைப் பார்த்துச் சீறினான்.

“எதற்காகச் சிங்கள வீரன் நந்தமித்தனை வெட்டினாய்?”

இலங்காபுரித் தண்டநாயகன் அதே அளவு கோபத்தோடு பதில் சொன்னான்:

“நீ எதற்காகப் பாண்டிய வீரன் அழகன்நம்பியை வெட்டினாயோ அதற்காகத்தான்.”

“அடித்துப் புடைத்தவன் அழகன்நம்பி!”

“மிதித்து உதைத்தவன்— நந்தமித்தன்.”

“அணி பிரித்தவன்— அவன்.”

“ஆரம்பித்தவன்— இவன்.”

“ஆனாலும் நந்தமித்தன் நம்மவன். சிங்கள இனத்தைச் சேர்ந்தவன்.”

“ஜெகத்விஜயா கொஞ்சம் சிந்தித்துப் பார். நாம் தமிழ் மண்ணில் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். சிங்கள வீரர்களின்

தவறுகளையெல்லாம் மன்னித்துவிட்டுத் தண்டனை முழுவதையும் தமிழ் வீரர்களுக்கு மட்டுமே கொடுத்தால்— வீரபாண்டியன் முதற்கொண்டு நமக்கு விரோதியாகிவிடுவான்."

"ஓகோ! ஈழத்தின் மாதண்டநாயகர் இலங்காபுரியின் ராஜதந்திரக் கலையில் இதுவும் ஒன்றா?"— ஜெகத்விஜயத் தண்டநாயகனின் குரலில் இகழ்ச்சி தொனித்தது.

"ஆமாம்! அதற்கென்ன?" இலங்காபுரிக்கும் ஆவேசம் வந்தது.

ஆகா! அதற்கென்ன! அதைப்பற்றி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அதுதான் பொல்லநறுவையிலிருந்து அரசர் பராக்கிரமபாகு ஓலை அனுப்பியிருக்கிறாரே, அதுதான் சொல்கிறதே! உங்களுக்கெல்லாம் தலையில் இரும்புத் தொப்பியும், மார்பில் செப்புக் கவசமும், இடுப்புக் கச்சையில் வீரவாளும் எதற்கு? தலையை மழுங்கச் சிரைத்துவிட்டு, இடுப்புக் கச்சைக்குப் பதில் மார்பில் கச்சை கட்டிக் கொண்டு, கவசம் தரிப்பதற்குப் பதிலாக புடவை தரித்துக் கொண்டு— எங்காவது புத்த சைத்யங்களுக்குப் போய்விடுங்கள் என்று சொல்லாமல் சொல்கிறதே! அந்த ஓலை ஒன்று போதாதா— நம்முடைய சாதனைகளைச் சந்திக்குக் கொண்டு வருவதற்கு?"

"அதற்கு நானென்ன செய்வேன்?"

"ஆமாம். ஆமாம்! நீ என்ன செய்வாய்— இல்லை, உன்னுடைய ராஜதந்திரம்தான் என்ன செய்யும்?"

"ஜெகத்விஜயா..!"

"நிறுத்து. இந்த வெட்டிப் பயல் வீரபாண்டியனுக்கு முடிசூட்டி வைத்து, வேல்விழி மாதரோடு அவன் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து ரசிப்பதற்காகத்தான் ஈழத்திலிருந்து இவ்வளவு பெரிய படையைப் பராக்கிரமபாகு அனுப்பி வைத்திருக்கிறாரா? சோழப் படைகளிடையே சூறாவளியாய்ப் புகுந்து சூறையாடி, சிங்கள தேசம் அடைந்த பழைய அவமானங்களுக்கெல்லாம் பழி வாங்கிப் பரிகாரம் தேடுவது என்ன ஆயிற்று? நான் வருவதற்கு வெகு காலத்திற்கு முன்னதாகவே இங்கு வந்து முகாமிட்டிருக்கிறாயே! நீ இதுவரைக்கும் என்ன செய்து கொண்டிருந்தாய்?"

“வந்து இவ்வளவு காலமாகிவிட்டதே! நீதான் என்ன சாதித்துவிட்டாய்?”

“நான் அப்போதே சொன்னேன். வீரபாண்டியனுக்கு முடிசூட்டியதோடு மதுரையில் நம் வேலை முடிந்துவிட்டது. கங்கைகொண்ட சோழபுரத்தின் கதவுகளைப் போய் உடைப்போம் என்றேன்.”

“அதை நானா தடுத்தேன்? சோழ நாட்டில் ரகசியச் சுற்றுப் பயணம் நடத்திவிட்டு வந்த நம் மன்னரல்லவா தடுத்தார் அவர் கூறியது உனக்கு நினைவிருக்கிறதா? பல்லவராயன் மிகுந்த சாமர்த்தியசாலி! மதுரையைவிட்டு சிங்களப் படை கிளம்பிய மறுகணமே குலசேகரனைத் தூண்டிவிட்டு வீரபாண்டியனைத் துரத்தியடித்துவிடுவான். பாண்டி நாட்டுத் தலைவர்களும், கொங்கு நாட்டுப் படைகளும் குலசேகரனோடு ஒன்று சேர்ந்து கொள்வார்கள்.

“அதன்பின், வடக்கேயிருந்து சோழப் படையும் தெற்கேயிருந்து குலசேகரனுடைய படையும் ஈழத்துப் படையை நெருக்கித் திணறச் செய்யும். அதே சமயத்தில் ஈழத்திலிருந்தோ, மதுரையிலிருந்தோ படை வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் யுத்த தளவாடங்களும் வராமல் பல்லவராயன் வழியடைப்புச் செய்துவிடுவான். பட்டினியும் பலக் குறைவும் வசதியின்மையும் சேர்ந்து சிங்கள தேசத்தின் இலட்சியத்தைக் குழி தோண்டிப் புதைத்துவிடும்.

“அதனால் ‘பாண்டிய தேச அரசியலில் பல்லவராயனை எப்படியாவது நுழைத்துக் குறுக்கிட வைத்து முறியடித்துவிட்டு, பிறகுதான் கங்கைகொண்ட சோழபுரத்தை நோக்கிக் காலெடுத்து வைக்கவேண்டும்’ —என்று அரசியல் தந்திரக் கலையில் தலைசிறந்த நம் அரசர் பராக்கிரமபாகுவல்லவா உன் யோசனையைத் தடுத்தார்!”

“இலங்காபுரி! நம் அரசர் கடைசியாக ஈழத்திற்குக் கப்பல் ஏறும் போது நீ அவருக்குக் கொடுத்த வாக்கு நினைவிருக்கிறதா? உன்னுடைய மாயாஜால ராஜதந்திரத்தின் மகிமையால் எப்படியாவது பல்லவராயனைத் தானாக வரவழைத்துத் தரைமட்டமாக்கிவிடுவதாக வீர சபதம் செய்தாயே! பல்லவராயனை ஏன் இன்னும் வரச் செய்யவில்லை?”

இதற்குப் பதில் சொல்லும் போது, இலங்காபுரியின் குரல் தளர்ந்து வருத்தம் கலந்து வெளிப்பட்டது.

"நானும் எத்தனையோ ஏற்பாடுகள் செய்தேன். பல்லவராயனும் அவனுடைய படையும் இதற்குள் வந்திருக்க வேண்டும். இன்னும் ஏன் வரவில்லை என்பதுதான் எனக்கும் புரியவில்லை."

"அந்நிய தேசத்தின் உள்நாட்டு விவகாரத்தில் குறுக்கிடமாட்டேன் என்று அடம்பிடித்துக் கொண்டிருப்பவன் தானாக எப்படி வருவான்?"

"ஜெகத்விஜயா! அதை மட்டும் சொல்லாதே. பல்லவராயனைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவன் மாபெரும் ராஜதந்திரி. நம்மைப் பற்றியும், நம்முடைய பாண்டிய நாட்டுப் படையெடுப்பின் நோக்கத்தைப் பற்றியும் அவன் நன்கு அறிவான். கங்கைகொண்ட சோழபுரத்தில், ஒவ்வொரு கண்ணிமைப் பொழுதையும் போருக்கான ஏற்பாடுகளிலேயே அவன் செலவழித்துக் கொண்டிருக்கிறான் என்பதையும் நம்முடைய ஒற்றர்கள் மூலம் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால்— ஏற்பாடு, திட்டம், மகாசபைக் கூட்டம் இவற்றிலேயே அவன் நாளைக் கழித்துக் கொண்டிருப்பதன் மர்மம்தான் ஏனென்று புரியவில்லை."

இலங்காபுரித் தண்டநாயகன் பேசி நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்த போது— வாயிலில் உபசேனாதிபதி உதயசேனனின் தலை தெரிந்தது. அவனை இலங்காபுரித் தண்டநாயகன் உள்ளே வரச் சொல்லித் தலையசைத்தான்.

ஜெகத்விஜயத் தண்டநாயகனோ, "எங்கே வந்தாய்?" என்று எரிந்து விழுந்தான்.

"தெற்கே திருநெல்வேலிக்கு நாம் அனுப்பிய ஒற்றர்கள் திரும்பி வந்திருக்கிறார்கள். குலசேகர பாண்டியன் மறுபடியும் படை திரட்டிக் கொண்டு மதுரையை நோக்கி வந்து கொண்டிருப்பதாகத் தகவல்" என்று கூறிவிட்டு உதயசேனன் ஒதுங்கி நின்ற போது— "சரி, நீ போகலாம்" என்று சீறி ஜெகத்விஜயத் தண்டநாயகன் அவனைத் துரத்தினான்.

பிறகு இலங்காபுரித் தண்டநாயகனைப் பார்த்துச் சொன்னான்:

"ஆகா! இந்தச் சுண்டைக்காய்ப் பயல் குலசேகரனுக்குத்தான் என்ன துணிச்சல்! ஈழத்துப் படையோடு அவன் எத்தனை தடவை

முட்டிப் பார்க்கிறான்? அடிபட்டு ஓடுகிறான். மீண்டும் ஆள் சேர்த்துக் கொண்டு வந்துவிடுகிறான். சே! ஜெகத்விஜயத் தண்டநாயகனுடைய விஜயம் சிறுபிள்ளை விளையாட்டாகப் போய்விடுவதா?

"இதோ பார் இலங்காபுரி! இந்தக் குட்டி வீரன் குலசேகர பாண்டியனை நீயே கட்டிக் கொண்டு அழு. நான் கங்கைகொண்ட சோழபுரத்துக்குப் போய்ப் பல்லவராயன் என்ற புலியின் தலையைப் பறித்துக் கொண்டு வருகிறேன். சோழ சாம்ராஜ்யத்தைத் தூள் கிளப்பிவிட்டுத் திரும்புகிறேன். படைகளைப் பங்கு போட்டுக் கொள்வோம். குலசேகரனைச் சமாளிக்க ஒரு சிறிய படை போதும். படையின் பெரும்பகுதியை நான் அழைத்துச் செல்கிறேன்."

"ஜெகத்விஜயா! நம் அரசர் நமக்கிட்ட கட்டளையை மீறுவதா?"

"அதனால் தவறில்லை. சமயத்திற்குத் தகுந்தாற் போல் திட்டத்தை மாற்றிக் கொள்பவன்தான் தண்டநாயகனாக இருப்பதற்குத் தகுதியானவன்!"

"அதை நான் அனுமதிக்க முடியாது" என்றான் இலங்காபுரித் தண்டநாயகன்.

"அதையும்தான் பார்த்துவிடுகிறேனே!" என்று உறுமிவிட்டு எழுந்தான் ஜெகத்விஜயன்.

அப்போது வாயிலருகே தலையை மட்டும் நீட்டி உள்ளே நுழையாமலேயே உதயசேனன் கூறினான்:

"அய்யா! கங்கச் சிற்றரசர் ஆகவமல்லர் வந்திருக்கிறார்!"

இலங்காபுரித் தண்டநாயகன் மகிழ்ச்சியால் பூரித்து ஜெகத்விஜயத் தண்டநாயகனைக் கட்டிக் கொண்டான்.

"ஜெகத்விஜயா! ஆகவமல்லன் வந்திருக்கிறானாம். ஏதோ முக்கியமான செய்தி வந்திருக்கிறது. அநேகமாக நாம் எதிர்பார்க்கும் செய்தியாக இருக்கலாம், உட்கார்!"

ஆகவமல்லன் உள்ளே நுழைந்தான். இலங்காபுரித் தண்டநாயகன் வரவேற்றான்.

"வாருங்கள் கங்கச் சிற்றரசரே, வாருங்கள்! வெள்ளாற்றங் கரையில் சந்தித்து வெகு காலத்திற்குப் பிறகு வந்திருக்கிறீர்கள். இதோ, இந்தப் புதிய நண்பரை அறிமுகம் செய்து கொள்ளுங்கள். இவர்தான் நடக்கும் நடையால் பகைவர்களை நடுங்க வைப்பவர்.

சென்றவிடமெல்லாம் வென்று திரும்புகிற ஜெகத்விஜயத் தண்டநாயகர்.”

அறிமுகங்கள், நல விசாரிப்புகள் எல்லாம் முடிந்த பிறகு, “ஏன் இவ்வளவு நாளாக இந்தப் பக்கமே வரவில்லை? நீங்கள் போன காரியம் என்ன ஆயிற்று?” என்றான் இலங்காபுரித் தண்டநாயகன்.

கங்கச் சிற்றரசன் ஓர் ஓலையை எடுத்து இலங்காபுரித் தண்டநாயகனிடம் நீட்டிவிட்டுச் சொன்னான்:

“மற்ற செய்திகளையெல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம். முதலில் இந்த ஓலையைப் பாருங்கள். காவிரியின் கரையோரத்தில் பல்லவராயனது ஒற்றன் ஒருவனிடமிருந்து இதைக் கைப்பற்றினேன்.”

இலங்காபுரித் தண்டநாயகன் ஓலையைப் படித்து முடித்துவிட்டு மகிழ்ச்சி தாளாமல் குலுங்கினான்.

“ஜெகத்விஜயா! இதோ பார். பல்லவராயன், இராசேந்திர சோழ சதுர்வேதி மங்கலத்து நாடு காவல் அதிகாரிக்கு எழுதிய ரகசிய ஓலை இது. குலசேகர பாண்டியன் மதுரையைத் தெற்கிலிருந்து தாக்கப் போவதாகவும், அதே சமயத்தில் மதுரையை வடக்கிலிருந்து தானும் தன்னுடைய படையும் தாக்கப் போவதாகவும், நிலைக்கோட்டத்துப் படைகளோடு வந்து தன்னுடன் சேர்ந்து கொள்ளத் தயாராகுமாறும் இதில் எழுதியிருக்கிறான். என்னுடைய ராஜதந்திரத்தைப் பற்றி இப்போது என்ன சொல்கிறாய்?”

ஜெகத்விஜயத் தண்டநாயகன் ஆகவமல்லனிடம் எல்லா விவரங்களையும் நிதானமாகக் கேட்டான். கங்கைகொண்ட சோழபுரத்தின் நிலைமையையும், போர் ஏற்பாடுகளையும் பற்றி விசாரித்தான். ஆகவமல்லனோ, “இந்நேரம் பல்லவராயனுடைய படை தலைநகரைத் தாண்டிப் புறப்பட்டிருக்கும்” என்று அடித்துச் சொன்னான்.

“இலங்காபுரி! இப்போது உன்னைப் பாராட்டுவதைத் தவிர எனக்கு வேறு வழி ஏது?” என்று கூறிச் சிரித்துவிட்டு, ஜெகத்விஜயத் தண்டநாயகன் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

இலங்காபுரித் தண்டநாயகன் கூறினான்:

“ஜெகத்விஜயா! இதோ எதிர்பார்த்த போர் வந்துவிட்டது. நம் இலட்சியப் போர் வந்துவிட்டது. இந்த வீரப்போருக்கு நீயே

மாதண்டநாயகன். இனி என் ராஜதந்திரங்களுக்கு இடமில்லை. இந்தப் போரை நீ உன் விருப்பப்படியே நடத்து. நான் உன் கட்டளைப்படியே நடக்கிறேன். சம்மதந்தானா?"

"பூரண சம்மதம்."

இலங்காபுரித் தண்டநாயகனும் ஜெகத்விஜயத் தண்டநாயகனும் உறையிலிருந்து வாள்களை உருவி, உயர்த்திப் பிடித்து, பல்லவராயன்– குலசேகரன் இருவருடைய தலைகளையும் வெட்டி வீழ்த்தி– மதுரைக் கோட்டையின் வாயிலில் வைப்பதாக வீர சபதம் செய்து கொண்டார்கள்.

# 18. தலைக்குக் கேட்ட விலை

பொழுது புலர்ந்து பொழுது சாய்வதற்குள் போர்க்களத்தின் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டுவிட்டது. தெரியாத்தனமாகத் தலையை நீட்டிவிட்ட குலசேகர பாண்டியன், சிங்கள பாண்டிய வீரர்கள் இலங்காபுரித் தண்டநாயகனுடைய தலைமையில் திரள் திரளாய் வந்து தாக்கிய போது, செய்யும் வழியறியாது திகைத்துத் திண்டாடி உயிர் தப்புவதே பெரிய காரியமாகிவிட்டது. அவன் எதிர்பார்த்தபடி மழவச் சக்கரவர்த்தியோ கண்டதேவ மழவராயனோ உதவிக்குப் படையுடன் வரவில்லை.

இலங்காபுரித் தண்டநாயகனின் நோக்கமெல்லாம்— குலசேகர பாண்டியனை இந்த முறையாவது தப்பிப் போய்விடாதபடி தடுத்துப் பிடித்துவிட வேண்டும் என்பதாகவே இருந்தது. கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம் என்று நினைத்தபடி இருந்த இலங்காபுரித் தண்டநாயகனுக்கு இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியது.

ஏறக்குறைய போர் ஒரு முடிவிற்கு வரத் தொடங்கிக் குலசேகர பாண்டியனுடைய வீரர்கள் தோற்றோடத் தொடங்கிய சமயத்தில், எங்கிருந்தோ நாலைந்து குதிரைகள் உள்ளே ஊடுருவிக் குலசேகர பாண்டியன் இருந்த இடத்தை நெருங்கியதையும், கண்ணிமைக்கும் நேரத்தில் அந்தக் குதிரைகள் மறுபடியும் வெளியேறி விரைந்துவிட்டன என்பதையும், அந்தச் சந்தடியில் குலசேகர பாண்டியன் மாயமாகி மறைந்துவிட்டான் என்பதையும் இலங்காபுரியின் வீரர்கள் வந்து தெரிவித்தார்கள்.

போர்க்களத்திற்குள் திடீரென்று ஊடுருவிய குதிரைகளில் ஒரு வெள்ளைப் புரவியின் மீது மானவர்மன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததாகவும் சில வீரர்கள் தெரிவித்தார்கள்.

தான் மோசம் போய்விட்டதை அறிந்த போது இலங்காபுரித் தண்டநாயகனின் கண்களில் கனல் பறந்தது. குலசேகரனைக் கண்காணிப்பதற்கென்றே பல்வேறிடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தும் கோட்டை விட்டுவிட்ட வீரர்கள் சிலரை இலங்காபுரித் தண்டநாயகன் கண்டதுண்டமாக அந்த இடத்திலேயே வெட்டிப் போட்டான். போர்க்களத்தில் எஞ்சியிருந்த குலசேகரனுடைய வீரர்களில், சிறைப்பட்டவர்களைத் தவிர ஒருவனைக்கூட உயிரோடு தப்பவிடக் கூடாது என்று உபசேனாதிபதிக்குக் கட்டளை

போட்டுவிட்டு, பொறுக்கியெடுக்கப்பட்ட பத்துக் குதிரை வீரர்களோடு மானவர்மனையும் குலசேகர பாண்டியனையும் தேடிக் கண்டுபிடிப்பதற்காக இலங்காபுரித் தண்டநாயகன் புறப்பட்டான்.

அங்கே இரத்த வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. குன்றுகள் குடை சாய்ந்ததைப் போல் யானைகள் வீழ்ந்து பிளிறிக் கொண்டிருந்தன. குவிக்கப்பட்ட உயிரிழந்த உடல்கள் குருதி வெள்ளத்தில் அங்கங்கே திட்டுகளைப் போல் தென்பட்டன.

குத்தும் வெட்டும் பட்டுக் குலையுயிரும் குற்றுயிருமாகக் கிடந்த அழகிய குதிரைகளின் அந்திம காலக் காட்சி பரிதாபகரமாக இருந்தது. வேலும், வாளும், தோளும், காலும், தலையும், உடலும் எங்கும் இறைந்து கிடந்தன.

செத்துக் கிடந்தவர்களைக் காட்டிலும், செத்துக் கொண்டிருந்தவர்களின் தீனமான அலறல்களும், ஓலங்களும், விழிபிதுங்கலும், வாய்க்கோணலும், கைகால்களின் அசைவும், துண்டுபட்டுப் போன உடல் உறுப்புகளின் துடிப்பும், துள்ளல்களும்– ஒரே சமயத்தில் அருவருப்பையும் கழிவிரக்கத்தையும் உண்டாக்கிக் கொண்டிருந்தன.

எண்ணற்ற மனித மனங்களின் எண்ணங்களும், ஆசைகளும், அந்தக் கடைசி நேரத்தில் அவர்களுடைய கண்ணெதிரில் காட்சிகளாகத் தோன்றி வெளிப்பட முயன்று நாவிலும் நரம்பிலும் சுண்டிச் சுருண்டு உள்ளே இழுக்கப் பெற்று, நெஞ்சப் புதைகுழியில் அநித்திய நினைவுகளாகச் சமாதியடைந்தன.

ஜெகத்விஜயத் தண்டநாயகன் வகுத்துக் கொடுத்த திட்டத்தின்படியே அந்தப் போர் நடந்தது. வீரத்தையும் விவேகத்தையும் நம்புகின்ற இலங்காபுரித் தண்டநாயகன், வீரத்தையும் வேகத்தையும் மட்டுமே நம்புகின்ற ஜெகத்விஜயத் தண்டநாயகனுக்குவிட்டுக் கொடுத்து அவன் விருப்பம் போலவே அந்தப் போரை நடத்தச் சம்மதித்திருந்தான்.

ஜெகத்விஜயத் தண்டநாயகனுடைய திட்டத்தின்படியே ஒரு பகுதி சிங்களப் படையினரோடும், வீரபாண்டியனுடைய வீரர்களோடும் புறப்பட்ட இலங்காபுரித் தண்டநாயகன், மதுரைக்குத் தெற்கே குலசேகரப் பாண்டியனை எதிர்த்துச் சென்று முறியடித்தான். அதே சமயத்தில் மதுரைக்கு வடக்கே பத்துக் காதத் தொலைவு சென்று,

மாபெரும் படை வலிமையோடு சோழ நாட்டுப் படைகளின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தான் ஜெகத்விஜயன். ஆகவமல்லனும் அவனோடு இருந்தான்.

வீரபாண்டியன் வடதிசைப் போர்க்களத்திற்கோ தென்திசைப் போர்க்களத்திற்கோ வரவேயில்லை.

அவனுக்கு இராசேந்திர சோழ சதுர்வேதி மங்கலத்திலிருந்து வந்திருந்த ஆடற்கணிகை மோகனசுந்தரியின் அழகில் புதிய புதிய ரகசியங்களைப் புரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

வீரபாண்டியன் போர்க்களத்திற்கு வருவதைத் தண்டநாயகர்களும் விரும்பவில்லை. தலையில் கிரீடத்தைச் சுமந்து கொண்டு, தங்களுடைய வார்த்தைகளைத் தட்டாமலிருக்கக் கூடியதொரு தலையாட்டி பொம்மைதான் அவர்களுக்கும் தேவைப்பட்டது.

இலங்காபுரித் தண்டநாயகனின் படையினர் வில்லிபுத்துரில் குலசேகரனுடைய வீரர்களைச் சிதறடித்துக் கொண்டிருந்த சமயத்தில், வடதிசையில் காத்திருந்த ஜெகத்விஜயனுடைய வீரர்கள் காத்துக் காத்து அலுத்துக் கொண்டிருந்தார்கள். புலி வரப்போகிறது, புலி வரப் போகிறது என்று தாக்குதலுக்குக் காத்திருந்தவர்கள் கடைசி வரைக்கும் புலி வராமல் போய்விடவே சோர்ந்து போய்விட்டார்கள்.

தெற்கே அனுப்பப்பட்டிருந்த ஜெகத்விஜயனுடைய ஒற்றர்கள் வில்லிபுத்துரில் நடந்து கொண்டிருந்த போரைப் பற்றி அறிந்து வந்து கூறினார்கள். எனவே போர் பற்றிக் கிடைத்த செய்தி முழுதும் பொய்யில்லை என்பதை ஜெகத்விஜயன் அனுமானித்துக் கொண்டு, பல்லவராயனுடைய படைகளின் வருகையை எதிர்பார்த்துப் பொழுது சாயும் வரை காத்திருந்தான்.

இறுதிவரை சோழ நாட்டுப் படைகளின் வருகைக்கான எந்தவித அறிகுறியும் தென்படாமற் போகவே— ஜெகத்விஜயன் ஆகவமல்லனைத் தனியே அழைத்துக் கொண்டு போய் விசாரித்தான். அவன் கைப்பற்றிக் கொண்டு வந்ததாகக் கூறிய ஓலையின் வரலாற்றைத் தெளிவாகக் கேட்டான்.

ஆகவமல்லன் மோகனசுந்தரியின் பெயரை மட்டும் இழுக்காமல், அந்த ஓலை தனக்குக் கிடைத்த விவரத்தை விளக்கினான்.

காவிரிக் கரையில், ஒரு கன்னிப் பெண்ணின் காதல் சாகசங்களைப் பயன்படுத்திக் கொண்டு, பல்லவராயனுடைய கிழட்டு

ஒற்றனிடமிருந்து ஓலையைக் கைப்பற்றிய நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாமல் கூறினான். ஓலை கைப்பற்றப்பட்ட வரலாற்றை உன்னிப்பாக ஆராய்ந்து அதில் பல்லவராயனுடைய தந்திரம் ஏதோ பதிந்திருக்கிறது என்று ஆகவமல்லன் கூறிய போது, ஜெகத்விஜயனுடைய முரட்டு மூளைக்குக்கூட அது புரிந்தது.

தந்திரத்தைத் தந்திரத்தால் மட்டுமே முறியடிக்க முடியுமென்று ஆகவமல்லன் கூறினான். ஜெகத்விஜயனுக்குத் தந்திரம் செய்யத் தெரியவில்லை. கோபிக்க மட்டும்தான் தெரிந்தது. ஆகவமல்லன் மீது இரண்டு தடவை எரிந்து விழுந்தான். ஜெகத்விஜயனுடைய சீற்றத்தைப் பற்றி நன்கு தெரிந்திருந்த ஆகவமல்லன், அவனிடமிருந்து மெல்ல நழுவிப் படைகளோடு போய்க் கலந்துவிட்டான்.

ஏமாற்றத்தால் கொதித்துக் கொண்டிருந்த ஜெகத்விஜயத் தண்டநாயகன் தன்னுடைய துணைத்தளபதிகளை அழைத்துக் கட்டளையிட்டான்.

“பல்லவராயன் நம்மைப் போக்குக் காட்டி ஏய்த்துவிட்டான். நாளைக் காலை திருப்பரங்குன்றத்துப் படைக்கோட்டத்திற்கு அனைவரும் திரும்புங்கள். அப்படித் திரும்பும் வழியில் மதுரையை நெருங்கும் வரை உள்ள பத்துக் காதத் தொலைவு சுற்று வட்டாரங்களிலும் ஒரு கிராமத்தைக்கூட மிஞ்சவிடாமல் தீயிட்டுக் கொளுத்துங்கள். குழந்தைகள், பெண்கள், கிழவர்கள் என்று வேறுபாடு பார்க்காமல் எதிர்ப்பட்டவர்களையெல்லாம் எரியும் நெருப்பில் எடுத்து வீசுங்கள். விளைநிலங்களிலெல்லாம் யானை உழவு நடத்திப் பயிர் பச்சைகளையெல்லாம் நாசம் செய்யுங்கள். கட்டிடங்களை, மாளிகைகளையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்குங்கள். வணிகர்களையும், செல்வந்தர்களையும் கொள்ளையடித்துப் பொன்னையும் பொருளையும் மூட்டை மூட்டையாய்க் கட்டி யானைகளின் மேல் ஏற்றிக் கொண்டு வாருங்கள். நான் என் அந்தரங்கக் காவல் வீரர்களோடும் ஆகவமல்லனோடும் இப்போதே புறப்படுகிறேன்.”

பூமி இருளின் போர்வையைப் போர்த்திக் கொண்ட பிறகு ஜெகத்விஜயனும் ஆகவமல்லனும் திருப்பரங்குன்றத்துப் படைக்கோட்டத்தை நோக்கித் தங்கள் புரவிகளைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

அதே சமயத்தில்— ஜெகத்விஜயத் தண்டநாயகனுடைய படை வீரர்கள் அவனுடைய பயங்கரமான கட்டளைகளையெல்லாம் ஒன்றுவிடாமல் மிகுந்த உற்சாகத்தோடு நிறைவேற்றத் தொடங்கினார்கள்.

மறுநாள் பொழுது விடிந்து ஒன்றரை நாழிகைக்குப் பின் திருப்பரங்குன்றப் படைக்கோட்டத்தின் தனி மண்டபத்தில் அமர்ந்து, இலங்காபுரித் தண்டநாயகனும், ஜெகத்விஜயத் தண்டநாயகனும் அடுத்த நடவடிக்கைகளைப் பற்றிய ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார்கள்.

இலங்காபுரித் தண்டநாயகன் வருத்தத்தோடு கூறினான்:

“ஜெகத்விஜயா! முன்யோசனை இல்லாமல் இப்படி முரட்டுத்தனமான கட்டளைகளைப் பிறப்பித்துவிட்டு வந்திருக்கிறாயே! இதனால் என்னென்ன விபரீதங்கள் ஏற்படுமென்று உனக்குத் தெரியுமா? சோழ நாட்டில் நாம் நடத்திக் காட்ட வேண்டிய காரியங்களைப் பாண்டிய மண்டலத்தில் எதற்காக நடத்த வேண்டும்? இங்கிருக்கும் விளைநிலங்களையும் கிராமங்களையும் அழித்துவிட்டால் நம் வீரர்களுக்குக் கிடைக்கக் கூடிய தானியங்களும் உதவிகளும்தானே தடைபடும்? வீரபாண்டியனையும் நம்மையும் எதிர்த்துப் பாண்டிய மண்டலத்தின் பொதுமக்கள் புரட்சி செய்ய ஆரம்பித்தால் என்ன செய்வது?”

ஜெகத்விஜயத் தண்டநாயகன் சீறினான்.

“எல்லாம் அந்த ஆகவமல்லனால் வந்த வினை. நானும் ஏமாற்றப்பட்டேன். குலசேகர பாண்டியன் தப்பிவிட்டதால் நீயும் ஏமாற்றப்பட்டாய். ஆகவமல்லனை உடனே கண்டதுண்டமாய் வெட்டிப் போட்டிருப்பேன். நீ ஏதாவது சொல்வாயே என்பதற்காகத்தான்விட்டு வைத்தேன்.”

“அவன் என்ன செய்வான்? அவனை அறியாமலே பல்லவராயனால் மிகத் தந்திரமாக ஏமாற்றப்பட்டிருக்கிறான். இப்போது அவனைக் கொன்றுவிட்டால் சோழ நாட்டுப் படையெடுப்பு நடத்துமாறு நேர்ந்தால்— அப்போது அந்த நாட்டைப் பற்றிய விவரங்களையும், முக்கியமான படைக்கோட்டங்களைப் பற்றிய ரகசியங்களையும் நமக்குச் சொல்வதற்கு யார் இருக்கிறார்கள்?”

“அப்படியானால் சரி. வா. நாளைக்கே புறப்படலாம். குலசேகர பாண்டியன் உயிரோடு தப்பியிருந்தாலும் அவன் மறுபடியும் தலையெடுக்க வெகு நாளாகும். அதற்குள் கங்கைகொண்ட சோழபுரத்தின் கதவுகளை உடைத்து அந்தப் பல்லவராயனுடைய தலையைத் தேர்க்காலில் கட்டிக் கொண்டு திரும்பலாம். என்ன சொல்கிறாய்?”

“பொறு ஜெகத்விஜயா, பொறு. நேற்று நடந்த போரை உன்னுடைய விருப்பத்திற்கே நான் விட்டுவிடவில்லையா? எனக்கும் ஒரு வாய்ப்புக் கொடு. பல்லவராயன் ஏன் இப்படிப் பதுங்கி விளையாடுகிறான் என்பதற்குரிய சரியான காரணம் மட்டும் எனக்குத் தெரியவில்லை. அதில் ஏதோ பெரிய மர்மம் இருக்குமென்று கருதுகிறேன். அவன் இங்கே படையோடு வரப்போவது உறுதி. ஆனால் என்ன காரணத்தாலோ தாமதித்து வரவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறான். அவனை எவ்வளவுக்கெவ்வளவு இங்கே விரைந்து வரச் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நம் வெற்றி எளிதாகிவிடும். அதுமட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் பல்லவராயன் ஒருவனைத் தீர்த்துக் கட்டினாலும் போதும். பிறகு, சோழர் படை வெறும் சோற்றுப் பட்டாளம்தான். பல்லவராயனுடைய தலைக்கு விலை பேசத்தான் இப்போது ஆகவமல்லனை மழவச் சக்கரவர்த்தியிடமும் கண்டதேவ மழவராயனிடமும் அனுப்பி வைத்திருக்கிறேன்.”

“மழவச் சக்கரவர்த்தியும் கண்டதேவ மழவராயனும் நமக்குப் பகைவர்களாயிற்றே!”

“பகைவர்கள்தான். ஆனால் ஒரு காலத்தில் எனக்கு நண்பர்களாய் இருந்தவர்கள். இப்போது குலசேகரனுடன் வில்லிபுத்தூர்ப் போரில் அவர்கள் கலந்து கொள்ளாமலிருந்ததிலிருந்து, அவர்களுக்கு அவன் மீது ஏதோ அதிருப்தி இருக்குமென்று தெரிகிறது. அதை நாம் பயன்படுத்திக் கொள்ளலாமல்லவா? நம்முடைய இரண்டு பகைவர்களில் ஒரு பகைவனை அழிப்பதற்கு இன்னொரு பகைவனையே பயன்படுத்திக் கொள்வதுதான் மிகப் பெரிய ராஜதந்திரம் ஜெகத்விஜயா!”

மூளையைக் குழப்பும் இந்த ராஜதந்திர வித்தைகள் எதுவும் ஜெகத்விஜயத் தண்டநாயகனுக்குப் புரியவில்லை. குலசேகரன் மீது மழவச் சக்கரவர்த்திக்கும், கண்டதேவ மழவராயனுக்கும் இருக்கும்

அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டு பல்லவராயனுடைய தலைக்கு விலை பேசுவது எப்படி என்பது அவனுக்குப் பிடிபடவே இல்லை.

எதுவும் புரியாவிட்டாலும், தான் நினைத்ததற்கு மேல் இலங்காபுரித் தண்டநாயகன் பெரிய தந்திரசாலியாக இருக்கிறான் என்பது மட்டும் புரிந்தது.

சற்று நேரம் கழித்து இலங்காபுரித் தண்டநாயகனிடம் ஜெகத்விஜயத் தண்டநாயகன் கேட்டான்:

"சோழர் படையை இங்கே விரைவில் வரவழைக்க வேண்டுமென்றாயே– அதற்கு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறாயா?"

"ஆமாம்."

"என்ன திட்டம்?"

"சிறைபிடிக்கப்பட்ட குலசேகரப் பாண்டியனுடைய வீரர்களைச் சோழ வீரர்களென்று சொல்லி, உடையையும் வேடத்தையும் மாற்றி நம் சிங்கள மரக்கலங்களில் அனுப்பி வைக்கப் போகிறேன். சிறைப்பட்ட சோழ வீரர்களாக அவர்கள் ஈழத்தில் அறிமுகப்படுத்தப்படுவார்கள்; முன்னர் தமிழர்களால் அழிக்கப்பட்ட சமாதிகளையும் விகாரைகளையும் *புதுப்பிப்பார்கள்."

"இலங்காபுரி அரசர் பராக்கிரமபாகுவையே ஏய்க்கப் பார்க்கிறானா?" ஜெகத்விஜயத் தண்டநாயகன் எரிச்சலுடன் கேட்டான்.

"வேறு ஏதாவது திட்டமுண்டா?"

---

*பாண்டிய அரசர்களுடைய உள்நாட்டுக் குழப்பத்தில் தலையிட்டு வீரபாண்டியனுக்கு முடிசூட்டிய இலங்காபுரித் தண்டநாயகன் சோழரை வென்றதாகவும் சோழ வீரர்களைச் சிறைப்பிடித்து விகாரைகளைப் புதுப்பிக்க ஈழத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், சிங்கள வேந்தன் பராக்கிரமபாகுவே சோழ அரசன் என்ற முத்திரையோடு இராமேஸ்வரத்தில் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டதாகவும் இலங்கையின் வரலாற்றில் காணப்படுகிறது. (தமிழ் இலங்கைச்சரித்திரம்– டி.ஏ.இராசரத்தினம் பிள்ளை– பக்கம் 127). ஆனால் தமிழக வரலாற்றில் இதற்கு ஆதாரம் இல்லை.

"ஆமாம். இராமேஸ்வரத்தில் புதிதாக ஒரு நாணயச் சாலையை ஏற்படுத்தியிருக்கிறேன். பொன்னை உருக்கிப் புதிய நாணயங்களைத் தயாரித்து வெளியிடப் போகிறேன். பராக்கிரமபாகுவே சோழ அரசன் என்ற முத்திரையோடு, சிறகுச் சிங்கத்தின் காலடியில் புலி பணிந்து கிடப்பதைப் போன்ற இலச்சினையோடு அந்த நாணயங்களை வெளியிடப் போகிறேன்."

"சோழர்களைச் சந்திக்காமல், அவர்களை வெல்லாமல் இந்த நாடகங்கள் எதற்காக?"

"ஜெகத்விஜயா! யோசித்துப் பார். பாண்டிய வீரர்களைச் சோழ வீரர்களாக மாற்றி ஈழத்திற்கு அனுப்பி வைப்பதாலும், பராக்கிரமபாகுவே சோழ அரசன் என்ற முத்திரையுடன் நாணயம் வெளியிடுவதாலும்– சிங்களத்து மக்களிடம் என்ன ஏற்படும்?"

"முட்டாள்தனமான மகிழ்ச்சி ஏற்படும்."

"சரித்திரத்தில் என்ன விளைவு உண்டாகும்?"

"பொய்யான ஒரு செய்தி அழியாத உண்மையாகிவிடும்."

"அதெல்லாம் இருக்கட்டும்! இதைக் கேள்விப்படும்போது பல்லவராயன் என்ன செய்வான்?"

"சிங்கள வம்சத்தையே துவம்சம் செய்துவிட வேண்டுமென்று சீறிச் சினம் கொள்வான். நீ கட்டியிருக்கிற நாணயச் சாலையை நொறுக்கித் தகர்ப்பதற்கும், *ஊராத் துறைக்கு அனுப்பி வைக்கப் போகிற மரக்கலங்களை உடைத்துத் தூள் தூளாக்குவதற்கும் ஓடி வருவான்."

"அவன் அப்படி ஒடோடி வரவேண்டும் என்பதுதானே நம்முடைய நோக்கம்."

ஜெகத்விஜயத் தண்டநாயகனுக்கு, அவனுடைய முரட்டு மூளைக்கு மெல்ல மெல்ல எல்லாம் புரிந்தது. அவனுடைய கொடிய முகத்தில் புன்னகை மலர்கள் குலுங்கின. எழுந்து நின்று

---

*ஊராத்துறை– அந்நாளைய இலங்கையின் கடல்துறைப் பட்டினம். 'ஊர்க்காவல் துறை' என்பது ஊராத்துறை என்று மருவிற்றென்பர். யாழ்ப்பாணத்திற்கு மேற்கே ஒரு தீவில் (கயட்ஸ்) உள்ளது.

இலங்காபுரித் தண்டநாயகனை அப்படியே இரண்டு கரங்களாலும் கட்டித் தழுவிக் கொண்டு சொன்னான்:

"இலங்காபுரி! உண்மையாகவே நீ பெரிய ராஜதந்திரிதான். இதை மனப்பூர்வமாக இப்போது ஒப்புக்கொள்கிறேன்."

அடுத்த நாள் ஆகவமல்லன் வந்து சேர்ந்த போது– இலங்காபுரித் தண்டநாயகனும் ஜெகத்விஜயத் தண்டநாயகனும் அவனை ஆவலோடும் ஆர்வத்தோடும் கேட்டார்கள்:

"போன காரியம் என்ன ஆயிற்று? காயா? பழமா?"

"பழம்தான். ஆனால் பாதிதான் பழுத்திருக்கிறது. இன்னும் பாதி பழுக்க வேண்டுமென்றால்– மழவச் சக்கரவர்த்திக்கும் கண்டதேவ மழவராயனுக்கும் நீங்கள் ஓர் *ஒப்புரவுமொழி மாறா ஓலை எழுதிக் கொடுக்க வேண்டும்."

"என்னவென்று எழுதிக் கொடுக்க வேண்டும்?" –இலங்காபுரித் தண்டநாயகன் கேட்டான்.

"பல்லவராயனுடைய தலைக்குப் பதிலாகப் பாண்டி மண்டலத்தின் தென் பகுதியை முழுக்க வென்று அவர்களுக்குச் சாசனம் பண்ணிக் கொடுப்பதாய், உறுதி கூறி எழுதிக் கொடுக்க வேண்டும்."

"அவ்வளவுதானே! கொடுத்தால் போயிற்று. வீரபாண்டியனுக்கு மதுரையும் பாண்டிய மண்டலத்தின் வடபகுதியுமே போதுமானது. பல்லவராயனுடைய தலைக்கு ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தையே விலையாகக் கொடுக்கலாம். அப்படியிருக்க, பாண்டிய மண்டலத்தின் தென்பகுதியைக் கொடுப்பதுதானா பெரிய காரியம்?" என்று கூறிவிட்டு இலங்காபுரித் தண்டநாயகன் இடிக்குரலில் சிரித்தான்.

*ஒப்புரவுமொழி மாறா ஓலை– ஒப்பந்த ஓலை.

# 19. மர்மவர்மன்

கங்கைகொண்ட சோழபுரத்தின் அரண்மனை கண்விழித்துக் கொண்டிருந்தது.

நீராடி முடித்து நித்திய வழிபாடுகளை நிறைவேற்றிவிட்டு மாளிகையின் முகப்பிலிருந்த தன்னுடைய அலுவல் மண்டபத்திற்குப் பல்லவராயர் வந்து சேர்ந்த போது, மானவர்மனது ஒற்றர் படையைச் சேர்ந்த காடவராயன் அவசர அவசரமாகக் குதிரையைவிட்டிறங்கி அவரை நோக்கி ஓடிவந்தான்.

அவனையும் அவன் வந்த வேகத்தையும் பார்த்து ஏதோ தலையாய செய்தி வந்திருப்பதை அனுமானித்துக் கொண்ட பல்லவராயர், தன்னைப் பின்தொடருமாறு அவனுக்குச் சமிக்ஞை காட்டிவிட்டு மறுபடியும் மாளிகையில் நுழைந்து தன் அந்தரங்க மண்டபத்தை அடைந்தார்.

தெற்கேயிருந்து செய்தி கொண்டு வந்திருந்த காடவராயன் தானும் நான்கைந்து சோழ வீரர்களும் மானவர்மனும் வில்லிபுத்தூர்ப் போர்க்களத்திற்குச் சென்று குலசேகர பாண்டியனை மீட்டு, பத்திரமான இடத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்ததிலிருந்து நடந்ததையெல்லாம் விவரமாகக் கூறினான்.

மானவர்மன் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வடக்கே புறப்பட்டுவிட்ட பின் மதுரைக்கும் இராமேஸ்வரத்திற்கும் சென்று, கண்டு வந்த விவரங்களையெல்லாம் எடுத்துரைத்தான்.

இராமேஸ்வரத்தில் நாணயச்சாலையொன்று உருவாகியிருப்பதையும், பராக்கிரமபாகுவே சோழ அரசன் என்ற முத்திரையோடு நாணயங்கள் தயாரித்துக் கொண்டிருப்பதையும், சிறைபிடிக்கப்பட்ட குலசேகர பாண்டியனுடைய வீரர்களை— சோழ தேசக் கைதிகள் என்ற பெயரால்— சிங்களத்திற்கு ஏற்றிச் செல்லவிருக்கும் மரக்கலங்கள், வருகின்ற பௌர்ணமி நாளன்று புறப்படவிருப்பதையும் அவன் தெரிவித்த போது, சேனைநாயகரது கண்களில் தீப்பொறி பறந்தது.

பாண்டிய தேசத்துத் தென்பகுதியின் ஆட்சி உரிமையைப் பல்லவராயரது தலைக்கு விலையாக— மழவச் சக்கரவர்த்தியும் கண்டதேவ மழவராயனும் கோரியிருப்பதைக் காடவராயன் கூறிய

போது— அதுவரை இடையில் குறுக்கிட்டு எதுவும் பேசாமல் சிந்தனை வயப்பட்டிருந்த சேனைநாயகர் சிரித்தார். குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். அந்த இடிச் சிரிப்பின் எதிரொலி அந்தரங்க மண்டபத்தின் சுவர்களை அலற வைத்தது. தூண்களை நடுங்க வைத்தது.

பயபக்தியோடு தன்னெதிரே கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்த காடவராயனைப் பார்த்துக் கடைசியில் அவர் கூறினார்:

"இலங்காபுரித் தண்டநாயகன் என்னைக் காட்டிலும் தன்னைப் புத்திசாலியாகக் காட்டிக்கொள்ள முயற்சி செய்கிறான். இனியும் காரியம் கைமீறிப் போகுமாறுவிடக் கூடாது. காடவராயா, நகருக்கு வெளிப்புறத்திலிருக்கக் கூடிய இராசராசவிடுதியில் இன்று பிற்பகல் தயாராய் இரு. மானவர்மன் வருவான். இந்த முறை உங்களிடம் ஒப்படைக்கப் போகும் காரியங்கள் மிகவும் முக்கியமானவை. சரி, புறப்படு."

பல்லவராயரைப் பணிந்து வணங்கிவிட்டுக் காடவராயன் புறப்பட்டான்.

"இராசராசவிடுதிக்கு அருகிலுள்ள திருமால் திருக்கோயிலில் வழக்கம் போல்— உச்சியம் போதில் அடியார்களுக்கு உணவு வழங்குவார்கள். அங்கும் போய் வா. அண்மையில் அவர்கள் ஏதோ புதுவகையான பூஜை நடத்தப் போவதாகக் கேள்விப்பட்டேன். அதையும் விசாரித்து வை" என்று அவனுக்கு மறுபடியும் கட்டளையிட்ட பல்லவராயர், அவன் சென்று வெகு நேரம் வரை புதிய ஓலை நறுக்குகளையும் எழுத்தாணியையும் எடுத்து வைத்துக் கொண்டு திருமுக ஓலைகள் எழுதிக் கொண்டிருந்தார்.

அதன் பிறகு அந்தரங்க மண்டபத்தைவிட்டு அவர் வெளியில் வரவே இல்லை.

உச்சியம்போதைத் தாண்டி ஒரு நாழிகைக்குப் பிறகு காடவராயன் இராசராசவிடுதிக்குப் போய்ச் சேர்ந்தான். அவன் போய்ச் சேர்ந்த நேரத்தில் கங்கைகொண்ட சோழபுரத்திற்குப் போய்க் கொண்டும் அங்கிருந்து திரும்பிக் கொண்டும் இருப்பவர்களான வழிப்போக்கர் சிலர்— வயிற்றுக்குள் உணவு போய்விட்ட தெம்பில், வாய் வம்பு வளர்த்துக் கொண்டிருந்தனர். அந்த வழிப்போக்கருள் சோழ நாட்டுக் கூலவாணிகர், பாண்டி நாட்டு முத்து வாணிகர், சேர நாட்டுத் தந்த வாணிகர், பாலாவி போன்ற நூலாடையும் பட்டாடையும் தந்து

பாவையரைத் திருப்தி செய்ய ஆடவரின் அவசியத் தேவையாக விளங்கிய அறுவை வாணிகர்— இப்படிப் பல்வேறு நாடுகளின் பல்வேறு வகையான வியாபாரிகளும், புலவர்களும், பொதுமக்களும் இருந்தனர்.

இராசராச விடுதியின் மணியக்காரன் இடையிடையே வந்து, "இராஜரீக விஷயங்களைப் பேசக் கூடாது. விவாதம் சண்டையில் வந்து விடியும். குண்டாந்தடி மண்டையில் வந்து முடியும்" என்று எச்சரித்துவிட்டுப் போன போதும், அவனுடைய எச்சரிக்கையை நகைச்சுவையாக்கிவிட்டு, அந்த வழிப்போக்கர்கள் பெரிய பெரிய அரசியல் விவகாரங்களையெல்லாம் பிடித்துக் கொண்டு வந்து நிறுத்தி அந்த விடுதியின் முற்றத்தில் வைத்து விளாசு விளாசு என் விளாசித் தள்ளி வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு புலவர் கூறினார்:

"மதுரை மன்னன் குலசேகர பாண்டியனைப் பாடிப் பரிசு பெறுவதற்காக நூறு வெண்பாக்களை இயற்றிக் கொண்டு போனேன். அங்கே போய்ப் பார்த்தால், குலசேகரனைத் துரத்திவிட்டு வீரபாண்டியன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான்."

"அடடா..! அப்புறம் என்ன செய்தீர்கள்? சுவடிகளைச் சுருட்டிக் கொண்டு உடனே கிளம்பிவிட்டீர்களா?" ஒரு முத்து வணிகர் அனுதாபப்பட்டார்.

"விடுவேனா? ஏற்கனவே ஒருமுறை இதேபோல வீரபாண்டியனைப் புகழ்ந்து எழுதிக் கொண்டு போன போது, சிம்மாசனத்தில் குலசேகரன் கொலு வீற்றிருந்தான். அப்போது வீரபாண்டியனைப் பற்றி எழுதி வைத்த செய்யுள் அப்படியே பயன்படாமல் இருந்தது. அதை இந்தச் சந்தர்ப்பத்தில் பயன்படுத்திக் கொண்டேன்."

"ஆகா! நீங்கள் அற்புதமான வரகவியாக இருக்கிறீர்களே!" என்று அவரை ஒருவன் கேலி செய்தான். இன்னொருவன், "குலசேகர பாண்டியனைப் பற்றி இயற்றிய செய்யுள்களை எதற்கும் அப்படியே வைத்திருங்கள். பின்னர் உதவலாம்" என்றான்.

புலவர் கூறினார்:

“பாவம்! அந்த செங்கோட்டை சுப்பிரமணியக் கவிராயர்தான் பாண்டியனைப் பகைத்துக் கொண்டதால் மதுரையைவிட்டே துரத்தப்பட்டுவிட்டார்.”

“ஏன்?”

“வீரபாண்டியனுடைய சபைக்கு ஒருநாள் சிங்களத்துத் தண்டநாயகர்கள் வந்திருந்தார்கள். அவர்களைப் புகழ்ந்து பாடுமாறு அரசர் கவிராயருக்கு ஆணையிட்டார். அப்போது— பாடிய ஒரே ஒரு நாலடி வெண்பாதான் அந்தக் கவிராயரை நானூறு காதத்திற்கப்பால் துரத்தியடித்துவிட்டது” என்று கூறிய அந்தப் புலவர், “அந்தப் புலவனின் வார்த்தைகளுக்கு அவ்வளவு வலிமை” என்று சொல்லி விழுந்து விழுந்து சிரித்தார்.

அப்போது பின்புறத்தில் பெரிய தலைப்பாகை கட்டிக் கொண்டு கம்பீரமாக உட்கார்ந்திருந்த ஒரு வியாபாரி “ஆகா!” என்று ரசித்தவராய், “புலவரே! அப்புலவர் பெருமான் பாடிய வெண்பா உங்களுக்கு நினைவிருக்கிறதா?” என்று ஆர்வத்துடன் கேட்டார்.

“ஓகோ! நீங்களும் ஒரு கவிதைப் பைத்தியமா? எனக்கு எதுவும் மறப்பதே இல்லை. சொல்கிறேன், கேளுங்கள்” என்றபடி புலவர் அந்த வெண்பாவைக் கூறினார்:

“பண்டைப் பெருமை பலபடைத்த பாண்டியர்க்குள்
சண்டைஎன் றேதான் சதிராட வந்திருக்கும்
குண்டரைப் பாடேன் குனியா (து) எனது தலை
தண்டத்து நாயகர்தம் தாள்!”

இந்த வெண்பாவைப் பின்புறத்திலிருந்த அந்தப் பெரிய தலைப்பாகை வியாபாரி தலையை ஆட்டித் தாடியைத் தடவிப் பெரிதும் ரசித்தார்.

சேர நாட்டு வியாபாரியைப் பார்த்து ஒருவர் கேட்டார்:

“வஞ்சியில் ஏதாவது அற்புதங்கள் உண்டா?”

“நான் வஞ்சிமாநகரைவிட்டுப் புறப்பட்டு ஒரு வருடமாகிறது. எனக்கு எதுவுமே தெரியாது. இப்போதெல்லாம் வஞ்சியிலிருந்து வியாபாரிகள்கூட இந்தப் பக்கம் வருவதில்லை. வெகு காலத்திற்கு முன்னரே என்னை மதுரையில் வந்து சந்திக்க வேண்டிய என்

வணிகப் பணியாளர்கள் கூட இன்னும் வந்து சேரவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை.”

காடவராயன் அந்தச் சேர நாட்டு வியாபாரியின் பேச்சைக் கவனமாகக் கேட்டுக்கொண்டான்.

சோழ நாட்டுக் கூலவாணிகரைத் தணிந்த குரலில் ஒருவன் கேட்டான்:

“குலோத்துங்க சோழர் எப்போது முடிசூட்டிக் கொள்ளப் போகிறாராம்?”

“தெரியவில்லை. அவர்தான் தலைநகரிலேயே இல்லையே.”

“அவர் முறையாக ஆட்சிக்கு உரிமையுடையவரல்ல என்று பேசிக் கொள்கிறார்களே!”

“அப்படியா?”– கூலவாணிகர் ஆச்சரியப்பட்டார்.

“சேனைநாயகரே ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளப் பார்க்கிறாராமே!”

“அதற்கு அவசியமென்ன? இப்போதே அவருடைய கட்டளைப்படிதானே எல்லாம் நடந்து வருகிறது! சரி சரி, இதையெல்லாம் நாம் பேசக் கூடாது! வேறு பேச்சுப் பேசலாம்” என்றார் சோழ நாட்டு வியாபாரி.

“ஒரே ஒரு சந்தேகம். பாண்டி மண்டலத்தையே சிங்களத்துத் தண்டநாயர்கள் சூறையாடிக் கொண்டிருக்கிறார்களே! கிராமங்களையெல்லாம் எரித்துக் கொளுத்திக் கொண்டிருக்கிறார்களே! சோழ தேசத்தின் மேல் படையெடுக்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? இதையெல்லாம் பார்த்தும் பல்லவராயர் ஏன் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்?”

“அவரொன்றும் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கவில்லை. போருக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருக்கிறார்.”

“ஏற்பாடுகளைச் செய்து வைத்து என்ன பயன்? இந்நேரம் மதுரைக்குப் போய்க் குலசேகர பாண்டியருக்கு ஆதரவாகப் போராடித் தண்டநாயகர்களைத் தவிடு பொடியாக்கியிருக்க வேண்டாமோ?”

“இன்னொரு தேசத்தின் உள்நாட்டுக் குழப்பத்தில், அந்நியத் தலையீடு கூடாது என்பது பல்லவராயரது கொள்கை.”

கூலவாணிகளின் இந்தப் பேச்சை மறுத்துவிட்டுச் சேர நாட்டு வாணிகன் சொன்னான்:

“அப்படிச் சொல்லாதீர்கள். பல்லவராயர் பயப்படுகிறார் என்று சொல்லுங்கள். அதுதான் உண்மை. ஜெகத்விஜயத் தண்டநாயகனும் இலங்காபுரித் தண்டநாயகனும் சேர்ந்து ஜெகத்தையே நடுங்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை எதிர்ப்பதற்குப் பயந்து கொண்டுதான் பல்லவராயர் இப்படிப் பதுங்கிக் கொண்டிருக்கிறார்.”

இவ்வாறு பேசியவன் மீது கோபம் கொண்டு முஷ்டியை ஓங்கிக் காடவராயன் பாயப் போன போது, பின்னாலிருந்த பெரிய தலைப்பாகை வியாபாரி, காடவராயனது கையைப் பின்புறமிருந்து பிடித்து வளைத்து, முதுகில் ஓங்கி ஒரு குத்துவிட்டார். வீறாப்புப் பேசியவர்களெல்லாம் சண்டை வந்ததும் பயந்து விலகி நின்றார்கள்.

துள்ளிப் போய் விழுந்த காடவராயன், எழுந்து வந்து அவரைத் தாக்கத் தொடங்கினான். விடுதி மணியக்காரன் வந்து எல்லாரையும் பார்த்துச் சத்தம் போட்டான்.

“இதற்குத்தான் இராஜரீக விஷயங்களைப் பேசாதீர்கள் என்று சொன்னேன். கேட்டீர்களா? போடுகின்ற சண்டையை தயவு செய்து வெளியில் போய் போடுங்கள். இங்கே வேண்டாம்.”

காடவராயன் தன்னை முதுகில் குத்தியவரை இழுத்துக் கொண்டு வெளியே போனான்.

“காடவராயா!”

“எஜமான்!”

“ஏன் இவ்வளவு நேரம்?”

“திருமால் கோயிலில் கிடைத்த செய்திகளால் அதிர்ச்சியடைந்து தாமதித்துவிட்டேன்.”

“வா, வழியில் பேசிக் கொள்ளலாம். ஆட்கள் வருகிறார்கள்.”

உள்ளேயிருந்தவர்கள் விடுதிக்கு வெளியே வந்து பார்த்த போது, அவர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்த மல்யுத்தம் அங்கே நடந்து கொண்டிருக்கவில்லை.

குத்தப்பட்டவன், குத்துவிட்டவன் இரண்டு பேரையுமே காணவில்லை.

பௌர்ணமி நாளைக்கு மறுநாள்—

முழுமையின் ஒரு மூலையில் தேய்ந்து மூளியாகிப் போனதால், வெட்கப்பட்டுக் கொண்ட வெண்ணிலவு, மேகத்திரைகளால் தன் நாண முகத்தை மூடிக் கொள்ள முயன்று கொண்டிருந்தது. துறைமுகத்தின் அருகே, அலை வீசும் கடற்கரையோரத்தில் மாதண்டநாயகர்களான இலங்காபுரித் தண்டநாயகனும், ஜெகத்விஜயத் தண்டநாயகனும் பொங்கியெழும் அலைகளைப் போல் பூரித்துக் கொண்டிருந்த மனத்தோடு நின்றிருந்தார்கள்.

"நேற்று இதே நேரம் சிறைப்பிடிக்கப்பட்ட சோழ நாட்டு வீரர்களைச் சுமந்து கொண்டு இங்கிருந்து புறப்பட்ட மரக்கலங்கள்— இப்போது எவ்வளவு தூரம் போயிருக்கும்?" என்று கேட்டான் இலங்காபுரித் தண்டநாயகன்.

"வேடமிட்ட சோழ வீரர்களை என்று சொல்" என்றான் ஜெகத்விஜயத் தண்டநாயகன்.

"அப்படிச் சொல்லக் கூடாது. ஒரு பொய்யை உண்மையாக்கிவிட்ட பிறகு, அந்தப் பொய்யே நம் எதிரில் வந்து நின்று, 'நான் பொய்தான்' என்று சொன்னாலும், நாம் ஒப்புக் கொள்ளக் கூடாது" என்று இலங்காபுரித் தண்டநாயகன் சிரித்தான். ஜெகத்விஜயத் தண்டநாயகனும் சிரித்துவிட்டுக் கேட்டான்:

"சிங்களத்திலிருந்து வேந்தர் பராக்கிரமபாகுவால் அனுப்பப்பட்ட தூதுவன் வந்தானே— அவன் எங்கே?"

"முத்திரையில் மாறுதல் செய்ய வேண்டுமென்று மன்னர் ஓலையில் குறிப்பிட்டிருந்தாரல்லவா? அது பற்றி நாணயச்சாலை அதிகாரியோடும், தலைமைப் பொற்கொல்லனோடும் கலந்தாலோசிப்பதற்காக அவனை அனுப்பி வைத்திருக்கிறேன்."

"நாணயச்சாலைக்குத்தானே?"

"ஆமாம்!"

“சரி வா, நாமும் போகலாம். நாணயங்களை முத்திரையிட்டு வெளியிடப் போகின்ற இந்தக் கடைசி நேரத்தில் பக்கத்திலிருந்து பரவசம் அடையலாம்.”

இருவரும் நடந்தார்கள்.

நாணயச்சாலையில் பணிபுரியும் ஒரு சிங்கள வீரன் அவர்களை நோக்கி வேக வேகமாகக் குதிரையை விரட்டிக் கொண்டு அருகில் வந்து குதித்தான்.

“அய்யா! நாணயச்சாலைக்கு இந்த முத்திரை மோதிரத்தோடு நீங்கள் ஒரு தூதுவனை அனுப்பினீர்களா?”

இலங்காபுரித் தண்டநாயகன் அந்த முத்திரை மோதிரத்தை வாங்கிப் பார்த்துவிட்டுத் தலையசைத்தான்.

“ஆமாம்.”

“அவனுடைய நடவடிக்கைகள் எங்களுக்குச் சந்தேகத்தை உண்டாக்குகின்றன. தலைமைப் பொற்கொல்லன் ஒருவனைத் தவிர அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டுக் கதவுகளை உட்புறத்தில் தாழிட்டுவிட்டான்.”

இலங்காபுரித் தண்டநாயகனும் ஜெகத்விஜயத் தண்டநாயகனும் கலவரமடைந்தார்கள். இலங்காபுரித் தண்டநாயகன் சீறினான்.

“அவனுடைய பெயர் என்னவென்று சொன்னான்?”

“மானவர்மன்.”

“ஆ..! இது எப்படி நடந்தது? என் முத்திரை மோதிரம் அவனுக்கு எப்படிக் கிடைத்தது? ஓடு.. ஓடிப் போய் நாணயச் சாலையின் கதவுகளை வெளிப்புறத்தில் தாழிடு” என்று வீரனுக்குக் கட்டளையிட்டான். வீரன் குதிரையில் தாவி ஏறிக் கொண்டு விரைந்தான்.

“ஜெகத்விஜயா குதிரைகளை அவிழ்த்துக் கொண்டு உடனே புறப்படுவோம், வா.”

“ஏன் இப்படிப் பதறுகிறாய்? நாணயச் சாலைக்கு என்ன நேர்ந்துவிடும்?”

“அதற்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை. மானவர்மனை உடனே பிடிக்க வேண்டும்.”

"யார் அந்த மானவர்மன்?"

இலங்காபுரித் தண்டநாயகன் ஜெகத்விஜயத் தண்டநாயகனை நெருங்கி அவனுடைய காதோடு ஏதோ கூறினான்.

அலைகளின் ஆரவார இரைச்சலினால் அந்த வார்த்தைகள் காற்றுக்குக்கூட கேட்கவில்லை.

ஜெகத்விஜயத் தண்டநாயகன் மட்டும் அந்த ரகசியத்தை அறிந்து பிரமிப்பில் ஆழ்ந்தான்.

"உண்மைதானா?" என்று பரவசத்துடன் கேட்டவனுக்குப் பதில் சொல்லக்கூடத் தாமதிக்காமல் "ஆமாம்" என்று தலையை மட்டும் ஆட்டிய இலங்காபுரித் தண்டநாயகன் குதிரைகள் நிறுத்தப்பட்டிருந்த இடத்தை நோக்கித் தன் பெரிய உடம்பைத் தூக்கிக் கொண்டு ஓடினான்.

மானவர்மன் யாரென்பதை அறிந்து கொண்ட ஜெகத்விஜயத் தண்டநாயகனோ இலங்காபுரித் தண்டநாயகனுக்கும் முன்னதாகத் தன்னுடைய குதிரையில் தாவியமர்ந்து அதைத் தட்டிவிட்டான்.

ஜெகத்விஜயத் தண்டநாயகனும், இலங்காபுரித் தண்டநாயகனும் தங்கள் குதிரைகளில் போய்ச் சேர்ந்த போது, நாணயச் சாலை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. பரவிக் கொண்டிருந்த தீயிடையே பாய்ந்தபடி தண்டநாயகர்கள் இருவரும் வேகவேகமாய் உள்ளே நுழைந்தனர்.

காவல் வீரர்களில் சிலர் கட்டப்பட்டும், சிலர் வெட்டப்பட்டும் கிடந்தனர். திறந்து கிடந்த முன்புறத்துக் கதவுகளைத் தீயின் நாக்குகள் சுவை பார்த்துக் கொண்டிருந்தன. உள்ளே நுழைந்து பார்த்த போது, பொற்கட்டிகளும், முத்திரையிடுவதற்காக வார்த்து வைக்கப்பட்டிருந்த வட்ட வடிவமான தங்கத் துண்டுகளும் நெருப்பில் உருகி வழிந்து கொண்டிருந்தன. உருகும் பொற்கட்டிகளுக்குப் பக்கத்திலேயே பொற்கொல்லனது உடலும் சேர்ந்து உருகிக் கருகிக் கொண்டிருந்தது. தூண்களும் நிலைகளும் பற்றி எரிந்தன. புகை பரவிக் கொண்டிருந்தது.

எரிந்து கொண்டிருந்த நாணயச்சாலையைப் பற்றியோ, இறந்து கிடந்த வீரர்களைப் பற்றியோ எள்ளளவும் லட்சியம் செய்யாத அவர்களின் கண்கள், அந்த மனிதன் மட்டும் எப்படியாவது

அகப்பட்டுவிட வேண்டுமே என்ற கவலையோடு சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன.

“எங்கே அந்த மானவர்மன்?”

“இங்கேதான் எங்காவது ஒளிந்திருக்கிறானா? அல்லது மர்மவர்மனாகி மாயவர்மனாகி எங்கேயோ மறைந்துவிட்டானா?”

கோபமும் குமுறலுமாக அனல் நாக்குகளுக்கு நடுவில் அங்குமிங்கும் அலைபாய்ந்து கொண்டிருந்த தண்டநாயகர்கள் திடுதிடுவென்ற சத்தத்தைக் கேட்டுவிட்டுப் பின்புறம் திரும்பிப் பார்த்தார்கள்.

அங்கே அவர்களை நெருங்கி வந்து கொண்டிருந்தவனைப் பார்த்த போது ஆச்சரியத்தால் அவர்களுடைய விழிகள் விரிந்தன.

சரேலென்று தன் இடுப்பிலிருந்த உறைவாளை உருவினான் ஜெகத்விஜயத் தண்டநாயகன்.

# 20. பூவும் போர்வாளும்

தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த நாணயச்சாலையின் உட்புறத்தில் மானவர்மனைத் தேடித் தேடி எரிச்சலடைந்த தண்டநாயகர்கள் கோபத்துடன் திரும்பிப் பார்த்த போது, அவர்களை நெருங்கி வந்து கொண்டிருந்த சிங்கள நாட்டு மரக்கல வீரன் கிடுகிடுவென்று நடுங்கிக் கொண்டிருந்தான்.

ஈரம் படிந்த உடையும், சில்லென்று வீசிய கடலோரத்துக் குளிர்காற்றும் சேர்ந்து கொள்ளவே, எவ்வளவோ முயற்சி செய்தும் அந்த வீரனால் தன் உடலின் நடுக்கத்தைத் தடுக்க முடியவில்லை.

நெருப்பின் நாக்குகள் பரப்பிவிட்டுக் கொண்டிருந்த வெப்பத்தை நெருங்கிய போதாவது அவனுடைய நடுக்கம் நின்றிருக்க வேண்டும். ஆனால்— தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த நாணயச் சாலையைப் பார்த்ததும் அவனுக்கு ஏற்பட்ட திகைப்பு— அந்த உஷ்ண ஒத்தடங்களால் ஒரு பயனும் இல்லாமல் செய்துவிட்டது.

ஜெகத்விஜயத் தண்டநாயகன் சீற்றத்துடன் தன் உறைவாளை உருவியதைப் பார்த்தவுடன் அந்த மரக்கல வீரனின் உடல் மட்டுமின்றி, உயிரும் சேர்ந்து நடுங்கத் தொடங்கியது.

தங்களுடைய தண்டநாயகர்களின் அருமை பெருமைகளை அவன் ஏற்கெனவே அறிந்தவன்தான். அதோடு— அறியாமையால் செய்த தவறுக்காக அழகன் நம்பி, நந்தமித்தன் ஆகிய இரண்டு இளைய வீரர்களும் எவ்வாறு வெட்டுக் கத்திகளால் விசாரணை செய்யப்பட்டார்கள் என்பதையும் கேள்விப்பட்டிருந்ததால், அவனுடைய அச்சம் பன்மடங்கு அதிகரித்தது.

ஓங்கிய வாளுடன் ஜெகத்விஜயத் தண்டநாயகன் அவனை நோக்கி முன்னேறி வரவே என்ன செய்கிறோம் என்றே தெரியாமல் "ஆ..!" என்று அலறிய வண்ணம் அந்த மரக்கல வீரன் அப்படியே பின்புறமாக நகரத் தொடங்கினான்.

தீயின் ஜ்வாலைகள் தெளித்த வெளிச்சத்தில் அவனையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த இலங்காபுரித் தண்டநாயகன் வாளுடன் முன்னேறிய ஜெகத்விஜயத் தண்டநாயகனை இழுத்து நிறுத்தினான்.

ஜெகத்விஜயத் தண்டநாயகனோ இலங்காபுரியைப் பார்த்து முறைத்தபடி, "சிறைப்பிடிக்கப்பட்ட வீரர்களோடு சிங்களத்திற்குப் போக வேண்டியவன் இவன்!" என்று சீறினான்.

"உண்மைதான்" என்றான் இலங்காபுரி.

"இங்கு எதற்காக வந்தான்? இட்ட கட்டளையை நிறைவேற்றாத இவனை வெட்டிப் போட்டால் என்ன?"

"கட்டளையை நிறைவேற்றவில்லை என்பதை நீ எப்படிக் கண்டுபிடித்தாய்?"

"மரக்கலத்தில் போய்க் கொண்டிருக்க வேண்டிய மனிதன் இப்போது எதிரே நின்று கொண்டிருக்கிறான். இதற்கு என்ன அர்த்தம்?"

இந்த வார்த்தைகளைக் கேட்ட இலங்காபுரித் தண்டநாயகன் வேதனையோடு சிரித்தான்.

"ஜெகத்விஜயா! எனக்கு ஏற்கனவே இருக்கும் பிரச்சினைகள் போதாதென்று, உன் முன்கோபமும் ஒரு பிரச்சினையாகிவிட்டது."

"எப்படி?"

"மானவர்மனைத் தேடிப் புறப்பட வேண்டிய நாம் இங்கே வீணான விவாதத்தில் ஈடுபட்டிருக்கிறோம். கோபம் வந்துவிட்டால் நீ கொஞ்சம்கூட யோசிப்பதில்லை. சாதாரணமாக அனுமானிக்கும் சக்தியைக்கூட இழந்துவிடுகிறாய். இந்த வீரனைப் பார். இவனுடைய ஆடைகளின் ஈரம் இன்னும் காயவில்லை. ஈரம் படிந்த ஆடையின் நடுவே திட்டுத்திட்டாக இரத்தத் துளிகளும் தெரிகின்றன. ஆடையின் மேற்பகுதி கிழிந்து தொங்கிக் கொண்டிருக்கிறது."

அந்த வீரனை உற்றுக் கவனித்த ஜெகத்விஜயத் தண்டநாயகன் "ஆமாம்.." என்றான்.

"சிறைப் பிடிக்கப்பட்ட வீரர்களோடு சிங்களத்திற்குப் போய்க் கொண்டிருந்த மரக்கலங்கள், நடுவழியில் சோழ வீரர்களால் மடக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கு நடந்த சண்டையில் சோழ வீரர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் இவன் மட்டும் தகவல் சொல்வதற்காகத் தப்பி வந்திருக்க வேண்டும்" தன் அனுமானத்தை விவரித்தான் இலங்காபுரித் தண்டநாயகன்.

"அப்படியா?" என்று ஏமாற்றத்துடன் அந்த மரக்கல வீரனை ஏறிட்டுப் பார்த்தான் ஜெகத்விஜயன் தண்டநாயகன்.

சற்றே தைரியமடைந்த மரக்கல வீரன், "ஆமாம் அய்யா! இங்கிருந்து புறப்பட்ட நமது மரக்கலங்களை நான்காம் ஜாமத்தில் சோழ நாட்டு நாவாய்ப் படையினர் மறித்துக் கொண்டனர். நம் வீரர்களைச் சிறை செய்து மரக்கலங்களையும் கைப்பற்றிச் சென்றுவிட்டனர்" என்று தயங்கியபடியே சொன்னான்.

"நாணயச்சாலை எரிந்துவிட்டது. ஈழத்திற்கு அனுப்பி வைத்த மரக்கலங்கள் கைப்பற்றப்பட்டுவிட்டன. போடும் திட்டங்களெல்லாம் பல்லவராயனால் பொடிப் பொடியாகின்றன" என்று இலங்காபுரித் தண்டநாயகன் வருத்தத்துடன் கூறிக் கொண்டிருந்த போது வெளியே ஒரே ஆரவாரமும் கூச்சலுமாய் அமர்க்களப்படவே தண்டநாயகர்கள் இருவரும் விருட்டென்று வெளியேறி வாயிலுக்கு வந்தனர்.

நாணயச்சாலை தீப்பற்றி எரிகிற செய்தி தெரிந்தவுடன், உதயசேனனுடைய தலைமையில் ஓடி வந்திருந்த படைவீரர்கள் அங்கே நெருப்பை அணைக்கும் பணியில் அவசரமாக ஈடுபடத் தொடங்கியிருந்தனர்.

அவர்களைக் கையமர்த்தித் தடுத்த இலங்காபுரித் தண்டநாயகன் கட்டளையிட்டான்:

"வீரர்களே! நாணயச்சாலையைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஓடுங்கள்! மானவர்மன் நம்முடைய எல்லையைத் தாண்டிப் போயிருக்க முடியாது. எங்கிருந்தாலும் அவனைப் பிடித்து இழுத்து வாருங்கள்."

பல திசைகளிலும் வீரர்கள் பறந்தார்கள்.

ஏழு நாட்களுக்குப் பின் ஒரு காலைப்பொழுது. உல்லாசமான உதயம்.

பறவைகள் வானத்தில் நகர்ந்து நகர்ந்து பறந்து கொண்டிருந்தன.

மலர்கள் பூமியில் அசைந்து அசைந்து மலர்ந்து கொண்டிருந்தன.

பனித்துளிகளைப் பன்னீர்த்துளிகளாய்த் தெளித்துக் கொண்டிருந்தன— மரங்கள்.

சின்ன வயதுக் காற்று போலிருக்கிறது— சீழ்க்கையடித்தது.

அருவிகளுக்கு ஆனந்தம்— மலைப்பாறைகளின் முதுகில் மத்தளம்.

பூச்சூடிக் கொண்ட பூரிப்பு— நதிகளின் இடைகளில் நாட்டியம்.

கிராமங்களின் குதூகலத்திற்குக் கொடி தைத்துக் கொண்டிருந்த பச்சை வயல்!

வயல்வெளிகளில் வேலை செய்து கொண்டிருந்த இளம் பெண்கள் சிலர் கூடி நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

"உண்மைதானா?"

"ஆமாம்!"

"இளவரசரா?"

"இளவரசியும் வருகிறார்களாம்."

"எதற்காக இப்போது வருகிறார்கள்?"

"அறிவுகெட்டவளே! அவர்களுடைய தலைநகருக்கு அவர்கள் வருகிறார்கள். உன்னிடம் அனுமதி கேட்க வேண்டுமோ?"

"இல்லை! யுத்தம் வரப் போவதாகப் பேசிக் கொண்டார்கள். அதுதான் காரணமோ என்று நினைத்தேன்."

"அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன்."

"ராஜாங்க வேலையிலிருக்கும் உன் மாமன் மகனிடம் ரகசியம் பேசினாயாக்கும்..?"

"அடியே! மாமன் மகனைப் பார்த்துவிட்டால்— இவள் பேசவேமாட்டாள் என்பது உனக்குத் தெரியாதா?"

"ஏன்?"

"பொழுதை வீணாக்கக் கூடாது என்று புலவர் ஒருவர் இவளுக்குக் கற்பித்தாராம். மாமன் மகனைப் பார்க்கும் போது மட்டும் அதை இவள் மறப்பதில்லை."

"அப்படியா?"

"அதுவா.?"

"ஒஹோ..!"

"ஒஹோஹோ..!"

அந்தப் பெண்களின் கலகலப்பான சிரிப்புச் சத்தத்தை அடக்கிவிட்டு, ஒரு தேர் உருண்டு வரும் ஓசையும் குதிரைகளின் காலடிச் சத்தமும் வீரர்களின் ஆரவாரமும் கேட்கத் தொடங்கியது.

வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்களெல்லாம் ஓடி வந்து சாலையை அடைந்தனர். சாலையில் நடமாடிக் கொண்டிருந்தவர்களெல்லாம் அங்கங்கே திட்டுத் திட்டாய்த் தேங்கினர்.

முன்னும் பின்னுமாகப் பரிவாரத்து வீரர்கள் அணிவகுத்து வர, புலிக்கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருக்க, சூரியக் கதிரொளியில் தகதகவென்று மின்னிக் கொண்டு அந்தத் தேர் வந்து கொண்டிருந்தது.

அனந்தபாலன் தேரைச் செலுத்திக் கொண்டிருந்தான். தேரினுள் இருந்தபடி குலோத்துங்கனும் தியாகவல்லியும் எட்டிப் பார்க்கவே— குதூகலமடைந்த கூட்டத்தினர் அவர்களைக் கும்பிட்டபடி தேரை நோக்கி ஓடி வந்தனர்.

விழுந்தடித்துக் கொண்டு வந்த குடிமக்களைத் தேரின் அருகில் நெருங்க முடியாதபடி பாதுகாவல் வீரர்கள் தடுத்தனர்.

அவர்களோ இளவரசரையும் இளவரசியையும் தரிசிக்கும் ஆவலுக்கு அணைபோட முடியாதவர்களாய் அருகில் வந்து நெருக்கினர். அப்படி நெருக்கியவர்களை விரட்டுவதற்காகப் பாதுகாவல் வீரர்கள் தங்கள் வேல்களால் நெட்டித் தள்ளிய போது— மாமன் மகனோடு ரகசியம் பேசியவள் என்று மற்ற பெண்களால் கேலி செய்யப்பட்ட மங்கையின் நெற்றியில் வீரனொருவனின் வேல் கீறிவிட்டது. வலது கையால் நெற்றியை அழுத்தியபடி அவள் கீழே சரிந்தாள். அவளுடைய குங்கும நெற்றியிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாகக் குருதியும் வழியத் தொடங்கியது.

தேரினுள் அமர்ந்தபடி இதைக் கவனித்துவிட்ட குலோத்துங்கன் சடாரென்று கீழே குதித்தான்.

“விலகுங்கள்” என்று கட்டளையிட்டபடி கூட்டத்தின் நடுவே புகுந்தான். காயம்பட்டு விழுந்த அந்தப் பெண்ணின் அருகில் வந்தான். இளவரசன் நெருங்கி வரவே, தன் வேதனையைப் பொறுத்துக் கொண்டபடி அவள் மெல்ல எழுந்து கொண்டாள்.

அண்ணனைத் தொடர்ந்து வந்திருந்த தியாகவல்லி காயம்பட்டிருந்தவளுடைய நெற்றியில் கைவைத்து அழுத்தியபடி,

"அரும்பாக்கக் கிழாரைக் கூப்பிடுங்கள்" என்று அருகிலிருந்த வீரர்களுக்கு ஆணையிட்டாள். விரைந்து வந்த அரச வைத்தியர் அந்தப் பெண்ணின் நெற்றியைத் துடைத்துத் தூய்மை செய்துவிட்டுப் பச்சிலை வைத்துக் கட்டுப் போடத் தொடங்கினார்.

குலோத்துங்கன் பாதுகாவல் வீரர்களைச் சினத்துடன் பார்த்துச் சீறினான்.

"காயம்படாமல் நாட்டு மக்களை காப்பாற்றுவதற்காகத்தான் காவல் வீரர்கள்! காயங்களை உண்டாக்குவதற்கல்ல!"

குலோத்துங்கனுடைய கோபத்திற்கு ஆளான பாதுகாவல் வீரன் ஏதோ பதில் சொல்லத் தொடங்கினான். அவன் பேசத் தொடங்கும் முன்பாகவே குலோத்துங்கன் கூறினான்:

"எனக்கு வேண்டியது பதில் அல்ல; செயல். எதிர்காலத்தில் நம்முடைய வீரர்களில் யாரும் இப்படி நடந்து கொள்ளக் கூடாது."

"ஆயுதங்களும் அதிகாரங்களும் ஆபத்தானவை. செலுத்தப்படுகிற இடங்களை மட்டுமல்ல— செலுத்துகிற இடங்களையும் சேதப்படுத்திவிடும்" என்று, மௌனமாக நின்று கொண்டிருந்த வீரர்களிடம் மறுபடியும் கூறினான் இளவரசன்.

கொஞ்சங் கொஞ்சமாய் அதிகரித்துக் கொண்டிருந்த கூட்டத்தில் யாரோ ஒருவன், "குலோத்துங்கர் வாழ்க!" என்று குரலெழுப்பினான். அவ்வளவுதான். அங்கிருந்த அனைவரும், "இளவரசர் குலோத்துங்கர்— வாழ்க! வாழ்க!" என்று முழக்கமிட்டார்கள்.

தேரில் ஏறுவதற்கு முன்பு, நெற்றிக் காயத்திற்குக் கட்டுப் போட்டிருந்த பெண்ணை அருகில் அழைத்துக் குலோத்துங்கன் அன்போடு கூறினான்:

"பெண்ணே! நாங்கள அரசகுலத்தைச் சேர்ந்தவர்கள். எங்கள் வீரத்தையும், கீர்த்தியையும் கல்வெட்டுக்களில் செதுக்கி வைக்கிறவர்கள். இப்படித்தான் சில சமயங்களில் அவசரப்பட்டு, எங்கள் மெய்க்கீர்த்தியைக் குடிமக்களின் மேனியின் மீதும் செதுக்கிவிடுகிறோம். மன்னித்துக் கொள்."

அவனுடைய வார்த்தைகளைக் கேட்டுவிட்டு அவளும் மற்றவர்களும் நெகிழ்ந்து போய் நின்றிருந்தனர். அப்போது, "விலகுங்கள்— விலகுங்கள். புலவருக்கு வழிவிடுங்கள்" என்று

கூட்டத்தினர் சத்தமிட, அவர்களைத் தாண்டிக் கொண்டு முன்னே வந்தார் ஒரு பெரியவர். "எங்கோ போய்க் கொண்டிருந்தேன். இங்கே நடந்த ஆரவாரங்களைப் பார்த்து வந்தேன். உன் பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன்" என்றார்.

"நீங்கள் யார்?" என்று கேட்டான் குலோத்துங்கன்.

"வீரபாண்டியனால் நாட்டைவிட்டு விரட்டப்பட்டவன். செங்கோட்டை சுப்பிரமணியக் கவிராயர் என்று அடியேனை அழைப்பார்கள்."

"தண்டநாயகர்களைக் கிண்டல் செய்து வெண்பாப் பாடிய தமிழ்ப் புலவர் நீங்கள்தானா? உங்கள் அஞ்சாமையைப் பற்றித் தாத்தா ஓலையில் எழுதியிருந்தார். தங்கை கூட உங்களைத் தரிசிக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தாள்.." என்று குலோத்துங்கன் கூறி முடிக்குமுன், தியாகவல்லி அவரை வணங்கிவிட்டு, "கவிஞர் பெருமானே! நீங்களும் எங்களுடன் புறப்படலாமே! அழகிய உங்கள் கவிதைகளால் சோழ அரசவையை அலங்கரித்தாலென்ன?" என்று கேட்டாள்.

"நன்றி பெண்ணே! அலங்கரிப்பவர்களாக மட்டும் நாங்கள் இருப்பதில்லை. ஆர்ப்பரிக்கிறவர்களாகவும் மாறிவிடுவதுண்டு. அதனால் அரச பதவியில் இருப்பவர்கள் யாரும் என்னைப் போன்றவர்களை நிரந்தரமாக நேசிக்க முடிவதில்லை" என்றார் புலவர்.

குலோத்துங்கன் குறுக்கிட்டான்:

"காவிரிப் பெண்ணைப் பற்றிக் கவிஞர் அறியாதது ஒன்றுமில்லை. அவளுக்கு வரவேற்கத் தெரியுமே தவிர, வழியனுப்பத் தெரியாது."

"மகிழ்ச்சி குலோத்துங்கா, மகிழ்ச்சி! அரசவையில் வீற்றிருக்க எனக்கு ஆசையில்லை. மக்களுக்கு மத்தியில் வலம் வருவதுதான் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. என்னை விட்டுவிடு. இந்த அன்பும், பெருந்தன்மையும்— மன்னனாக முடிசூட்டிக் கொண்ட பிறகும் உன்னிடம் மாறாதிருக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்."

“அழியாத புகழ் பெற வேண்டும் என்று என்னை வாழ்த்துங்கள் கவிஞரே!” என்று சுட்டும் விழிச்சுடரோடு கேட்ட குலோத்துங்கனைத் தட்டிக் கொடுத்தபடி புலவர் கூறினார்:

“உன்னுடைய புகழ் ஒருபோதும் அழியாது. ஏனென்றால், உன்னுடைய முன்னோர்கள் தங்கள் புகழைக் கல்வெட்டுகளில் எழுதினார்கள். நீயோ உன்னுடைய கீர்த்தியை ஏழை மக்களின் இதயங்களில் எழுதுகிறாய்!”

புலவரும் குடிமக்களும் விடைகொடுக்கவே, புறப்பட்டது தேர்.

சிறிது தொலைவு சென்ற பிறகு, குலோத்துங்கன் தங்கையிடம் கேட்டான்:

“ஆமாம், அறிமுகப்படுத்தப்பட்ட உடனேயே கவிராயரைச் சோழ அரசவைக்கு அழைத்தாயே! பாண்டிய நாட்டுக்காரர்களென்றால் மட்டும் ஏன் உனக்குப் பாசம் வந்துவிடுகிறது?”

“போங்கள் அண்ணா!” என்று தியாகவல்லி சிணுங்க, “விக்கிரம புராணம் பிறந்த ஊர் என்பதாலா?” என்று குலோத்துங்கன் மீண்டும் கேலி செய்ய, ஆற அமர யோசித்துவிட்டு, அனந்தபாலனும் தன் இதழ்களில் புன்முறுவலைப் படரவிட்டான்.

அவர்கள் இராசராச விடுதியைத் தாண்டிச் சிறிது தொலைவு சென்றவுடன், எதிரே சாலையின் ஓரத்தில் வைணவ பக்தர்கள் திரண்டு நின்றிருப்பது தெரிந்தது. அனந்தபாலனின் முகத்தில் திடீரென்று கவலையின் ரேகைகள் படர ஆரம்பித்தன.

நெற்றியில் நாமமிட்டிருந்த அந்த வைணவ பக்தர்கள் பெருத்த ஆரவாரத்துடன், “இளவரசர் குலோத்துங்கர் வாழ்க! வாழ்க!” என்று சத்தமிட்டுக் கொண்டு திடுதிடுவெனத் தேரை நோக்கி விரைந்து வந்த போது– அனந்தபாலன் அண்மையிலிருந்த பாதுகாவல் வீரர்களைப் பார்த்துக் கூறினான்.

“அவர்களை அருகில் நெருங்கவிடாதீர்கள்.”

“பாலா! பக்தர்களிடம் உனக்கென்ன பயம்?” என்றான் குலோத்துங்கன்.

படை வீரர்களால் தடுத்து நிறுத்தப்பட்ட பக்தர்கள் தொலைவிலிருந்தே சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். ஓர் இளம் வயது பக்தன் உரத்த குரலில் கத்தினான்.

"இளவரசே! இங்கே பாருங்கள்— எளிய பக்தர்களுக்கும் உங்களுக்குமிடையில் எத்தனை நந்திகள் என்று!"

"நீங்கள் ஒன்றும் பேச வேண்டாம்" என்று குலோத்துங்கனைக் கேட்டுக் கொண்டான் அனந்தபாலன்.

தொலைவிலிருந்த வைணவ அடியார்களின் பெருங் கூட்டத்தைப் பார்த்துவிட்டு, "அண்ணா! இதில் ஏதோ மர்மம் இருக்கும் போலிருக்கிறது" என்று தியாகவல்லியும் மெல்லிய குரலில் கூறினாள்.

அவர்கள் தடுக்கத் தடுக்க ஆர்வம் அதிகரிக்கவே குலோத்துங்கன் தேரில் இருந்தபடியே வீரர்களுக்குக் கட்டளையிட்டான்: "அருகில் வரட்டும், அவர்களைத் தடை செய்ய வேண்டாம்."

குலோத்துங்கனிடம் ஏற்கனவே குட்டுப்பட்டிருந்த படை வீரர்கள் அவனுடைய வார்த்தைகளை மறுத்துப் பேசத் துணிவில்லாமல்— பக்தர்களை அருகில் வர அனுமதித்தார்கள்.

வெகு வேகமாக நெருங்கிய பக்தர்களின் கூட்டம். "இளவரசர் வாழ்க! குலோத்துங்கர் வாழ்க!" என்று முழக்கம் எழுப்பியபடி தேரினைச் சூழ்ந்து கொண்டது.

கூடைகளிலும் கைகளிலும் கொண்டு வந்திருந்த மலர்களைத் தூவிக் குலோத்துங்கனையும் அவனுடைய தேரினையும் பூக்களால் நிறைத்து அர்ச்சித்து அவர்கள் வரவேற்பளித்தார்கள்.

எதிர்பாராமல் கிடைத்த அந்த வரவேற்பில் தன்னை மறந்த குலோத்துங்கன், புன்னகை பூத்தபடி அவர்களிடம் உரையாடத் தொடங்கினான்.

திருமாலின் அருள் பெறுவதற்காக அருகிலிருந்த கோயிலுக்குள் தன்னந்தனியாக வருமாறு அவர்கள் தன்னிடம் வேண்டு கோள்விடுப்பார்களென்றோ, அதில் வெற்றியும் பெறுவார்களென்றோ அப்போது அவனுக்குத் தெரியாது. கைகளில் மலர் கொண்டு வந்த அந்தப் பொய் வேடக்காரர்களின் ஆடைகளுக்குள் போர் வாட்கள் ஒளிந்திருக்குமென்றும் அவன் எதிர்பார்க்கவில்லை.

# 21. வைணவ வெறுப்பா? அரசியல் நெருப்பா?

வைணவ அடியார்களையும் அவர்களுடைய நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த தேரோட்டி அனந்தபாலனும் தியாகவல்லியும் இடையிடையே ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

குலோத்துங்கனோ வெகு குதூகலமாக அவர்களுடன் உரையாடலில் ஈடுபட்டிருந்தான்.

"இளவரசே! தங்களை வரவேற்பதில் பூப்போன்ற எங்கள் இதயங்களெல்லாம் புளகாங்கிதம் அடைகின்றன. அருகிலிருக்கும் *விண்ணகரத்தில் அபூர்வமான வழிபாடு ஒன்று நடத்துகிறோம். செடியாய வல்வினைகள் தீர்க்கும் பெருமாளைச் சேவிக்க —ஆட்சிபீடம் ஏறப் போகிறவராகிய நீங்கள் அவசியம் வரவேண்டும்" என்று அவர்கள் விநயமாக விண்ணப்பித்தார்கள்.

"ஆகட்டும்!" என்று கூறியபடியே குலோத்துங்கன் தேரிலிருந்து குதித்துவிடவே, வேறு வழியில்லாமல் தியாகவல்லியும் உடன் இறங்க வேண்டியதாயிற்று. கைகளைப் பிசைந்து கொண்ட அனந்தபாலன் காவற்படை வீரர்களின் தலைவனை நோக்கிச் சைகை காட்டினான்.

தியாகவல்லி பின்தொடர, வீரர்கள் புடைசூழ விண்ணகரத்தின் வாயிலை நெருங்கிய இளவரசனிடம் கூட்டத்திலிருந்த வயதில் முதிர்ந்த அடியார் ஒருவர் ரகசியமாக ஏதோ கூறினார்.

"என்ன அண்ணா?" என்று கேட்டாள் தியாகவல்லி.

"ஒன்றுமில்லையம்மா. திருமாலைச் சேவிக்க நான் மட்டும் விண்ணகரத்திற்குள் தனியாக வர வேண்டுமென்கிறார்கள். இது சிறப்பு வழிபாடு ஆகையால் அரசகுமாரனைத் தவிர வேறு யாரையும் உள்ளே அனுமதிக்க இயலாதென்று சொல்கிறார்கள்" என்று குலோத்துங்கன் உரத்த குரலிலேயே கூறினான்.

"வீரர்களுடன் உள்ளே போவோம். இல்லாவிட்டால் வேண்டாம். திரும்பிவிடுவோம்" என்றாள் தியாகவல்லி.

---

*விண்ணகரம் —திருமால் கோயில்.

“ஆமாம்! அரசிளங்குமாரரைத் தனியே உங்களுடன் அனுப்ப முடியாது” என்று அடியார்களிடம் கண்டிப்பான குரலில் அறிவித்தான் பாதுகாவல் வீரர்களின் தலைவன்.

வைணவ பக்தர்கள் தங்களுக்குள் வாதமிட்டுக் கொண்டனர். “வீரர்களும்தான் வரட்டுமே” என்று ஒரு சிலர் விவாதித்தனர். “அபசாரம். அபசாரம். அரச குமாரனுக்காக ஆலய விதிகளை மாற்றுவது அழகல்ல” என்று மறுத்தார் முதியவர். அவர்களுக்குள்ளேயே விவாதம் கடுமையாகத் தொடங்கியது.

“கொற்றவன் மகனுக்காக நெடுமால் கோயிலின் நெறிமுறைகளை மாற்ற வேண்டாம். நான் மட்டும் தனியாகவே வருகிறேன்” என்று கூறிவிட்டுத் திரும்பிய குலோத்துங்கன், தங்கையிடமும் பாதுகாவல் தலைவனிடமும் “இங்கேயே இருங்கள். என்னைத் தொடர வேண்டாம்” என்று கட்டளையிட்டான்.

அடியார்கள் புடைசூழ விண்ணகரத்துக்குள்ளே அவன் விரைந்து சென்றதையும், தியாகவல்லியும் வீரர்களும் வாயிலிலேயே நின்று கொண்டிருப்பதையும் தொலைவிலிருந்தபடியே கவனித்துவிட்டுத் தேரினைவிட்டுக் கீழே இறங்கி வேகமாக ஓடிவந்த அனந்தபாலன் பாதுகாவல் தலைவனிடம் கோபித்துக் கொண்டான்.

“நாங்கள் என்ன செய்ய முடியும்? இளவரசர் போக்கே விநோதமாக இருக்கிறது. அவரைப் பாதுகாப்பதற்காக ஏதாவது செய்தோமானால் அவர் எங்கள் மீதே எரிந்து விழுகிறார்!” என்றான் பாதுகாப்பு வீரர்களின் தலைவன்.

வெகு மரியாதையுடன் குலோத்துங்கனை உள்ளே அழைத்துச் சென்ற திருமால் பக்தர்கள் திமுதிமுவென்று அவனைச் சூழ்ந்து நடந்து கொண்டிருந்தனர். திடீரென்று அவர்களில் ஒரு பகுதியினர் மட்டும் அவனைச் சுற்றிக் கொள்ளவும் மற்றவர்கள் வழியிலேயே தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டனர்.

நல்ல ஆகிருதியும் உடல் வலிமையும் கொண்ட பத்துப் பன்னிரண்டு பக்தர்களுக்கு மத்தியில் எவ்வித அச்சமும் இல்லாமல் ஓர் இளைய புலியாய் நடந்து கொண்டிருந்தான் இளவரசன்.

கொஞ்சங் கொஞ்சமாக வெளிச்சம் குறைந்து கொண்டே வந்து, உட்பிரகாரத்தின் வடக்கு மூலையை நெருங்கிய போது, அங்கே அடர்ந்த இருள் அவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தது.

சட்டென்று ஒரு தீவட்டியின் வெளிச்சம் மேலே உயர, இளம் பெண் ஒருத்தியின் இனிய குரல் அமுதப் பிரவாகமாக இசை பரப்பியது.

"சிற்றஞ் சிறுகாலே
வந்துன்னைச் சேவித்து உன்
பொற்றா மரைஅடியே
போற்றும் பொருள் கேளாய்.."

ஆண்டாளின் பாசுரமும் அதைப் பக்தி சிரத்தையோடு பாடிக் கொண்டிருந்தவளின் இனிய குரலும் அந்தச் சூழ்நிலைக்குக் கொஞ்சமும் பொருத்தமில்லாதது போல் குலோத்துங்கன் உணர்ந்தான்.

என்ன காரணமென்று தெரியவில்லை. ஏதோ எதிர்பாராதது நடக்கும் போல் ஓர் உள்ளுணர்வு.

"எற்றைக்கும் ஏழேழ்
பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம்;
உனக்கே நாம் ஆட்செய்வோம்!"

நெஞ்செல்லாம் நெகிழ்ந்தது. எங்கே வந்தோம்? என்ன சூழ்நிலை? எல்லாம் மறந்தது. இதயம் இலவம் பஞ்சாகி எங்கே வேண்டுமானாலும்– யாருடன் வேண்டுமானாலும் – பறப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

எங்கிருந்து அந்தக் குயில் கூவுகிறது? எந்தப் பவழ இதழ்களிலிருந்து இந்த இசைத் தென்றல் புறப்படுகிறது?

குலோத்துங்கன் திரும்பிப் பார்த்தான். தீவட்டி காட்டிக் கொண்டிருந்த வெளிச்சத்தில் தேடினான். பாடும் குயில் தன் பார்வையில் படக்கூடாதா என்று ஏங்கினான். காணவில்லை. இருண்ட பிரகாரத்தை மட்டுமல்லாது– இதயங்களையும் வெளிச்சத்தால் விசிறிவிட்டுக் கொண்டிருந்த இனிய குரலுக்குரியவள் எவளென்று தெரியவில்லை.

'எற்றைக்கும்– ஏழேழ் பிறவிக்கும்– உன்னோடு உற்றோமே யாவோம்– உனக்கே நாம் ஆட்செய்வோம்' –ஆ! எதன் இனிமையால் தன்னுடைய மதி இப்படி மயங்குகிறது? பாடும் குரல் ஏற்படுத்தும் பரவசத்திலா? ஆயிரம் ஆயிரம் அர்த்தச் செறிவுகளோடு வெளிப்படும் அழகிய ஆண்டாளுடைய அன்பின் விண்ணப்பத்திலா?

இப்போதும்— இனி எப்போதும்— ஏழு பிறவியிலும்— ஏழேழ் பிறவியிலும் உன்னுடையவளாகவே இருப்பேன். உனக்கு மட்டுமே நான் ஆட்படுவேன்.

பாவை ஒருத்தியால் இப்படிப் பாடப்படுகிறவன் எத்தனை பாக்கியசாலியாக இருக்க வேண்டும்?

"உனக்கே நாம் ஆட் செய்வோம்
உனக்கே நாம் ஆட்செய்வோம்"

பத்துப் பன்னிரண்டு அடியார்களும் சேர்ந்து திடீரென்று கத்தவே பாடிக் கொண்டிருந்த பெண் குரல் நின்றுவிட —

குலோத்துங்கனுடைய பிரமை கலைந்தது.

எதிரே கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது.

'உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்று வெறிபிடித்தது போல் சத்தமிட்டுக் கொண்டே ஓங்கிய வாளுடன் அவனை வளைத்துக் கொண்டிருந்தது அடியார் திருக்கூட்டம். பூக்களைத் தூவி வரவேற்ற அவர்களின் கைகளிலே போர்வாட்கள் மின்னிக் கொண்டிருப்பதைக் கண்டான் குலோத்துங்கன்.

அப்போதுதான் எத்தனை பெரிய தவறு செய்துவிட்டோம் என்பதை அவன் உணர்ந்தான். இதைக் கேள்விப்பட்டால் பல்லவராயருக்குத் தன் மீது எவ்வளவு கோபம் வரும் என்ற எண்ணமே அந்த அபாயகரமான சூழலிலும் அவன் மனத்தில் ஓடியது.

கண்ணிமைப் பொழுது செய்வதறியாது திகைத்துவிட்டுச் சட்டென்று கீழே குனிந்து அவர்களிடமிருந்து நழுவிய குலோத்துங்கன், அவர்களுடன் சண்டையிடுவதற்காக இடையிலிருந்த வாளை உருவப் போனான்.

அந்த நேரத்தில்— பெரியதொரு தூணின் பின்புறத்திலிருந்து வலிமையான கையொன்று சரேலென்று அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு அங்கிருந்த இருண்ட பகுதிக்குள் போய் மறைந்தது.

"எங்கே? எங்கே?"

"பிடியுங்கள். பிடியுங்கள்.." என்று பின்புறத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்த சத்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து மறைந்தது.

இருட்டில் தன்னை இழுத்துக் கொண்டு ஓடிய ஆளிடம் குலோத்துங்கன், "யார் நீ?" என்று கேட்டான்.

"இளவரசே! அஞ்ச வேண்டாம். இப்படி நடக்கும் என்று எதிர்பார்த்து, இவர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றுவதற்காகவே இங்கு காத்திருந்தேன். நான்தான் மானவர்மன்" என்ற மிக மெதுவான குரல் மட்டும் கேட்டது.

அந்த இருளில் உருவமோ, முகமோ ஒன்றும் புலப்படவில்லை.

கங்கைகொண்ட சோழபுரத்தின் பிரதானக் கோட்டை வாயில். அன்று வெகு அழகாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. கோட்டையின் பிரம்மாண்டமான இரண்டு பனை உயரக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன.

பெரிய மலையொன்று தன் வாயைத் திறந்து கொண்டிருப்பது போல் அது காட்சியளித்தது.

பச்சிலைகளாலும் தோரணங்களாலும் வில்வளைவாய் அமைக்கப்பட்ட மலர்ப் பந்தல்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தக் கோட்டை வாயில், அழகுபடுத்தப்பட்ட திருமண மேடை போல் திகழ்ந்தது. கோட்டை மதிலுக்கும் அகன்ற பெரிய அகழிக்கும் இடையில், வேல்களைத் தங்கள் கைகளில் உயர்த்திய வீரர்கள் அணிவகுத்திருந்தனர்.

கோட்டையின் வாயிலில் மாமன்னர் இராசாதிராசர், பல்லவராயர், மந்திரி மண்டலத்தார், உடன் கூட்டத்து அதிகாரிகள், நாற்படைத் தலைவர்கள் ஆகியோர் கையில் ஆத்தி மாலைகளோடு காத்திருந்தனர்.

நின்று கொண்டிருந்த வீரர்கள் மகிழ்ச்சியால் பரபரப்படைந்தார்கள். கையை நெற்றியுடன் சேர்த்து வைத்துத் தொலை தூரத்தில் பார்வையைச் செலுத்திவிட்டுத் தலையசைத்தான் கோட்டை மதிலின் உச்சியில் நின்றிருந்த வீரன்.

முரசுகள் மெல்ல அதிர்ந்தன!

ஆவல் கலந்த வேகத்துடன் அனைவரும் திரும்பினார்கள்.

தூரத்தில் ஒரு புழுதிப் படலம் தோன்றியது. முன்னும் பின்னுமாக வந்த பாதுகாவல் வீரர்களுக் கிடையில், நினைவுகளால் புனிதம் பெற்ற ஓர் இளம்பெண்ணின் நெற்றித் திலகம் ஜொலிப்பது போல் ஜொலித்துக் கொண்டு ஓர் அழகிய தேர் வந்து கொண்டிருந்தது.

தேர் கோட்டை வாயிலை நெருங்க நெருங்க வாயிலில் கூடியிருந்தவர்களிடையே உற்சாகமும் குதூகலமும் பொங்க ஆரம்பித்தன.

முரசுகள் அதிர்ந்தன!

எக்காளம் முழங்கியது!

துந்துபி இசைத்தது!

"இளவரசர் குலோத்துங்கர்—"

"வாழ்க!"

"இளவரசர் குலோத்துங்கர்—"

"வாழ்க!"

வாழ்த்து முழக்கமும் வரவேற்புக் குரல்களும் மண்ணின் காதுகளைச் செவிடாக்கிவிட்டு வானத்தின் செவிகளைச் சேதப்படுத்திக் கொண்டிருந்தன.

தேருக்குள் அமர்ந்திருந்த தியாகவல்லி, குலோத்துங்கனின் காதோடு மெல்லிய குரலில் சொன்னாள்:

"பார்த்தாயா அண்ணா! பெருமையும் புகழும் வரவேற்பும் ஆண்களுக்கு மட்டும்தான் கிடைக்கின்றன."

வீரர்களின் அடுத்த முழக்கம் விண்ணை அளாவியது:

"உலகம் முழுதுடைய சோழகுல தேவி இளவரசி தியாகவல்லி—"

"வாழ்க!"

குலோத்துங்கன் தங்கையைக் கேலி செய்தான்.

"பார்த்தாயா— பெண்களுக்கென்றால்— பெருமையும் புகழும் வரவேற்பும் அதிகமாகிவிடுகின்றன."

தேர் கோட்டையின் முன்புறத்தில் வந்து நின்றது. குலோத்துங்கனும் தியாகவல்லியும் தேரைவிட்டு இறங்கினார்கள். மறுபடியும் வாழ்த்து முழக்கங்களும் வரவேற்பு முழக்கங்களும் வானைத் தொட்டன.

மாமன்னரும் சேனைநாயகரும் மற்றவர்களும் சற்று தூரம் நடந்து அவர்களை எதிர்கொண்டு வரவேற்றார்கள். ஆத்தி மாலைகள் குலோத்துங்கனுடைய கழுத்தை நிறைத்தன.

மாமன்னரும் சேனைநாயகரும் குலோத்துங்கனை மார்புறத் தழுவிக் கொண்டார்கள்.

அரசகுல வரவேற்பில் தன்னை கவனிக்கத்தான் ஆளே இல்லை என்று அனந்தபாலன் வருத்தப்பட்டான். அவனை அவனுடைய குதிரை கவனித்தது; கனைத்தது.

வசந்த மண்டபம், நீராழி மண்டபம், நீரூற்றுப் பொய்கைகள், தாமரைத் தடாகங்கள், பளிங்கு மேடைகள், பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கும் புதுப்புது மலர்களும் அந்தப் பருவ மலர்களைச் சுற்றி வந்து பாடிக் கொண்டிருக்கும் வண்டுகளும் நிறைந்த நந்தவனம்— இத்தகைய அழகுகளோடும் வசதிகளோடும் தங்களுக்காகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரண்மனை மாளிகையைத் தியாகவல்லியும் குலோத்துங்கனும் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

“தியாகவல்லி! எல்லாம் வசதியாக இருக்கிறதா? உனக்குப் பிடித்திருக்கிறதா?” என்று கேட்டார் பல்லவராயர்.

அவளை முந்திக் கொண்டு குலோத்துங்கன் பதில் சொன்னான்:

“பிரியமான மனிதர் இல்லாவிட்டால் எத்தனை அழகிய இடமும் பிடித்தமானதாக இருக்காது தாத்தா!”

பல்லவராயர் ஒன்றும் புரியாதது போல் கேட்டார்:

“பிரியமான மனிதர் இல்லையா? என்னிடமும் உன்னிடமும் தியாகவல்லிக்குப் பிரியம் இல்லையென்றா சொல்கிறாய்?”

“அய்யோ, தாத்தா! பெண்களுடைய பிரியமெல்லாம் ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல் இடம் மாறிவிடும். இடம் மாறும் போது ஆட்களும் மாறிவிடுவார்கள். உங்களுக்கு வயதாகிவிட்டது. அதனால்தான் இதெல்லாம் உங்களுக்குப் புரியமாட்டேன் என்கிறது.”

குலோத்துங்கன் கூறியதை அப்படியே ஒப்புக்கொண்ட பல்லவராயர், “ஆமாம். உண்மைதான்” என்று தலையை ஆட்டிவிட்டு, “குலோத்துங்கா! காடவராயனை மணப்படையூர் மாளிகைக்கு அனுப்பியிருந்தேன். இன்னும் காணவில்லையே!” என்றார்.

“எதற்குத் தாத்தா?” என்றாள் தியாகவல்லி.

“அவசரப்படாதே தியாகவல்லி! விக்கிரமனை அழைத்து வருவதற்குத்தான். இந்தத் தாத்தா இருக்கிறாரே, இவரைப் போலப் பொல்லாதவரை இந்த பூமியிலேயே பார்க்க முடியாது. ஓர் இளம் பெண்ணின் இதயத்திற்குள்ளே நுழைந்து, அங்கே இவருடைய அனுமதியில்லாமல் உட்கார்ந்து கொண்டிருக்கக் கூடியவனைத் தேடிக் கண்டுபிடித்து, வெளியே கொண்டு வந்து நிறுத்தி விசாரணை செய்துவிடுவார்” என்றான் குலோத்துங்கன்.

“போங்கள் அண்ணா!” என்று சிணுங்கிவிட்டு வெட்கம் தாளாமல் அவ்விடத்தைவிட்டு வெளியேறினாள் தியாகவல்லி.

அவள் வெளியேறிய பின் அவர்கள் மனம்விட்டுப் பேசிக் கொண்டார்கள்.

“தாத்தா! விக்கிரமனை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?”

“உனக்குப் பிடித்திருக்கிறதா?”

“தங்கைக்குப் பிடித்ததெல்லாம் எனக்கும் பிடிக்கும் தாத்தா.”

பல்லவராயர் சிரித்துக் கொண்டார்.

“குலோத்துங்கா! விக்கிரமனுடைய தந்தை குலசேகர பாண்டியர் அஞ்சுகோட்டை நாடாழ்வானோடு இங்கே வந்து கொண்டிருக்கிறார். இன்னும் சற்று நேரத்தில் வந்துவிடுவார். அவர் வந்த பிறகு விக்கிரமனை அரச மரியாதைகளோடு அழைத்து வர ஏற்பாடு செய்திருக்கிறேன்.”

குலோத்துங்கன் மகிழ்ச்சியடைந்தான்.

“குலோத்துங்கா! காலையில் திருமால் கோயிலில் மானவர்மனைச் சந்தித்தாயாமே?”

அதைப் பற்றிச் சொல்லி அவரை வருந்தச் செய்ய வேண்டாமென்று நினைத்த குலோத்துங்கன், அவராகவே கேட்டதும் நடந்ததையெல்லாம் கூறினான். தன்னைக் கொலை செய்ய நடந்த முயற்சியைப் பற்றித் தியாகவல்லிக்குக் கூட தெரிவிக்கவில்லையென்று சொல்லிவிட்டுக் கேட்டான்:

“தாத்தா! திருமால் பக்தர்களுக்கு என் மீது என்ன கோபம்?”

பல்லவராயர் சற்று நேரம் அமைதியாக இருந்தார். பிறகு தணிந்த குரலில் வருத்தத்துடன் பேசினார்:

"அதுதான் இந்த நாட்டைப் பிடித்த தீவினை குலோத்துங்கா! உன்னுடைய பாட்டனாராகிய குலோத்துங்க சோழ தேவர் சிறந்த சிவபக்தர் என்பது உனக்குத் தெரியும். அவர் தில்லையம்பதியில் தேவர்கோன் வீதிகள் போல் தெருக்களமைத்தும், மண்டபங்கள் கட்டியும் அந்நகரைச் சிறப்பித்தார்.

"திருப்பணியை அவர் விரிவாகச் செய்து வந்த போது தில்லைச் சிற்றம்பலத்திற்கு இடம் போதாதவாறு— தில்லையம்பல முன்றிலில் நந்திவர்மப் பல்லவனால் நிறுவப்பட்டிருந்த திருமால் மூர்த்தம் தடை செய்தது. அதே சமயத்தில் தில்லைக் கோவிந்தராசரை வழிபட்டு வந்த வைணவர்களும் உன் பாட்டனார் செய்த திருப்பணிக்கு இடையூறாய் இருந்தனர்.

"அதனால் சினங்கொண்ட உன் பாட்டனார் அத்திருமால் மூர்த்தத்தைப் பெயர்த்துக் கடலோரத்தில் வைத்து, அங்கே கோயில் கட்டிக் கொள்ளுமாறு ஆணையிட்டுவிட்டுத் தன் திருப்பணியை நிறைவேற்றினார். இதனைக் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் காவியச் சுவைக்காக— '*மன்றிற்கு இடங்காண வேண்டிக் குலோத்துங்கன், திருமாலை அவருக்கே உரிய பழைய கடலுக்கே அனுப்பிவிட்டான்' என்று தம் தக்கயாகப் பரணியில் பாடினார்.

"இதையே பெரிய ஆதாரமாகக் காட்டிய வைணவப் பெரியார்களும் புலவர்களும், 'குலோத்துங்கன் திருமால்

---

*'முன்றிற் கிடந்த கருங்கடல் போய்
முன்னைக் கடல்புகப் பின்னைத் தில்லை
மன்றிற் கிடங்கண்ட கொண்டன் மைந்தன்
மரகத மேருவை வாழ்த்தினவே.'
— தக்கயாகப் பரணி
'தில்லைத் திருமன்றின் முன்றில் சிறு தெய்வத்
தொல்லைக் குறும்பு தொலைத் தெடுத்து.'
— குலோத்துங்க சோழன் உலா.

பிற்காலத்தெழுந்த திவ்விய சூரிசரிதம், கோயிலொழுகு முதலிய வைணவ நூல்கள், இரண்டாம் குலோத்துங்கன் மீது நிறையப் பழி சுமத்துவதோடு, அவனைக் கிருமி கண்ட சோழன் என்றும் இழித்துரைக்கின்றன.

மூர்த்தத்தைக் கடலில் தூக்கி எறிந்துவிட்டான்' என்ற குற்றச்சாட்டை நாடெங்கும் பரப்பித் திருமால் பக்தர்களுடைய மனங்களில் தீயை வளர்த்துவிட்டனர்.

"பிறகு உன்னுடைய தந்தை ஆட்சிக்கு வந்த போதும் இப்போது இராசாதிராசன் ஆட்சியிலும், வைணவ சமயத்தாருடைய நல்லெண்ணத்தைப் பெறுவதற்கு எவ்வளவோ முயற்சிகள் நடந்தன. இருப்பினும் சில திருமால் பக்தர்களுடைய வெறுப்பை இன்னும் முழுமையாக நீக்க முடியவில்லை. என்ன செய்வது?"

"வைணவக் கோயில்களின் உள்ளே வாளும் வேலும் சேகரித்து வைத்திருக்கிறார்களா தாத்தா?" என்று குலோத்துங்கன் கேட்டான்.

"இல்லை. புனிதமான திருமால் ஆலயங்களில் அத்தகைய அபசாரங்கள் ஒரு நாளும் நடைபெற்றதில்லை. இன்று உன்னைக் கொலை செய்ய நடந்த முயற்சியில், வைணவர்களுக்கு நம்மீது இருக்கக்கூடிய வெறுப்பைப் பயன்படுத்திக் கொண்ட வேறு ஏதோ அரசியல் சூழ்ச்சி மறைந்திருக்கிறதென்று நினைக்கிறேன்."

"சொல்லி வைத்தது போல தக்க சமயத்தில் வந்து என்னை மானவர்மர் காப்பாற்றினாரே— அது எப்படி நடந்தது தாத்தா?"

இந்தக் கேள்விக்கு பதில் சொல்லாமல் பல்லவராயர் அவனை வேறொரு கேள்வி கேட்டார்.

"மானவர்மனை அறிமுகம் செய்துகொள்ள வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தாயே! அவனைப் பார்த்ததில் உனக்கு மகிழ்ச்சிதானே?"

"அவருடைய முகத்தைக் கூடச் சரியாகப் பார்க்க முடியவில்லை. இருளில் என் கையைப் பிடித்து அழைத்துப் போனவர், 'ஆலயத்திற்குள் சண்டை போடுவது அழகல்ல' என்று சொல்லி, ரகசிய வழியில் என்னை நடத்திப் போய் வாயிலில் நின்று கொண்டிருந்த வீரர்களிடம் ஒப்படைத்தவுடன் மறுபடியும் மண்டபத்திற்குள் மறைந்துவிட்டார்" என்று வருத்தத்துடன் கூறிய குலோத்துங்கனைப் பார்த்து, "மானவர்மன் யாரென்று உன்னால் கண்டுபிடிக்க முடியவில்லையா?" என்று கேட்ட பல்லவராயர், பொருள் பொதிந்த புன்னகையை இதழ்களில் பூக்கவிட்டார்.

# 22. பதுங்கிய புலி பாய்ந்தது!

மாமன்னர் இராசாதிராசர் தன்னுடைய மாளிகையில் வீற்றிருந்தார். அவரெதிரில் பல்லவராயர் அமர்ந்திருந்தார்.

"சேனைநாயகரே! குலசேகர பாண்டியரும் அஞ்சு கோட்டை நாடாழ்வானும் என்னைச் சந்தித்தார்கள். தண்டநாயகர்களையும் வீரபாண்டியனையும் முறியடித்து பாண்டிய மண்டலத்தின் ஆட்சியைத் தனக்குப் பெற்றுத்தர வேண்டுமென்று குலசேகர பாண்டியர் வேண்டிக் கொண்டார். தங்களைச் சந்திக்குமாறு அவர்களை அனுப்பி வைத்தேன். வந்தார்களா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"வந்து சந்தித்தார்கள். அரசரைக் கலந்து கொண்டு என் முடிவைத் தெரிவிப்பதாகக் கூறியிருக்கிறேன்."

"உதவுவது என்பது நீங்கள் ஏற்கனவே தீர்மானித்ததுதான். ஆனால் அவர்கள் உதவி கேட்டு வந்திருக்கும் நேரம் சரியில்லையே! சற்றுத் தாமதிக்கலாமா?"

"உதவி கேட்டு வந்ததற்குப் பிறகும் நாம் தாமதித்தால் அது நம் வீரத்திற்கு அழகில்லை வேந்தே!"

"உண்மைதான்! ஆனால், சேர நாட்டின் நிலையில் இன்னும் ஒரு முடிவு பிறக்கவில்லையே! என்ன செய்வது? இந்த நேரம் பார்த்து இவர்களும் வந்துவிட்டார்கள்."

"இந்த நேரம் பார்த்து இவர்களை வரவழைத்ததே நான்தான் அரசே!"

"என்ன!" –இராசாதிராசர் சேனைநாயகரை வியப்புடன் பார்த்தார். அவருடைய முகத்தில் சற்றே ஏமாற்றம் தென்பட்டது.

பல்லவராயர் இராசாதிராசருக்கு விளக்கினார்:

"அரசே! குலசேகரன் இங்கு உதவி கேட்டு வருவதைத் தடுத்துத் தாமதித்ததும் நான்தான். இப்போது உடனடியாகச் சென்று தண்டநாயகர்களைத் தண்டிக்க வேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் குலசேகரனை வரவழைத்தேன். நாம் வரவழைத்தது போல் இல்லாமல் அவர்களாகவே வரவேண்டும் என்பதற்குத்தான் மானவர்மன் மூலம் ஏற்பாடு செய்தேன்.

"சிங்களத்துத் தண்டநாயகர்களின் எல்லை மீறிய செயல்தான் உடனடியாக நாம் படையெடுக்க வேண்டிய அவசியத்தை உண்டாக்கியிருக்கிறது" என்று கூறிவிட்டுச் சிறிது நேரம் யோசனை செய்த பல்லவராயர், இலங்காபுரித் தண்டநாயகர்களின் திட்டங்களையும் சதிகளையும் விரிவாக எடுத்துரைத்தார்.

அரசர் ஆச்சரியப்பட்டுப் போனார். இலங்காபுரித் தண்டநாயகர்களின் தந்திரங்களும், அவற்றை எதிர்த்து முறியடிக்கும் பல்லவராயரது நுணுக்கங்களும் அவரை பிரமிக்க வைத்தன. வெகு நேரம் கழித்துப் பல்லவராயரின் கைகளை அன்புடன் பற்றிக் கொண்டு அவர் கூறினார்:

"சேனைநாயகரே! இந்த தேசத்தையும் இதன் கீர்த்தியையும் காப்பாற்றி, இந்நாட்டின் இதயமாக விளங்குவது நீங்கள்தான். சூரிய வம்சத்தைச் சேர்ந்த சோழ குலத்தின் புகழ் அணைந்து போய்விடாமல் சுடர் கொடுக்கும் தீபம் நீங்கள்தான். சோழகுல தீபமே! நானும் இந்த நாடும் உங்களை முழுக்க முழுக்க நம்புகிறோம். எதை எப்படிச் செய்ய வேண்டுமோ அதை அப்படியே செய்யுங்கள்."

நெகிழ்ந்த குரலில் சொல்லி முடித்த இராசாதிராசரைத் தன்னுடைய நெடிய கரங்களால் நெஞ்சோடு சேர்த்துத் தழுவிக் கொண்டார் பல்லவராயர்.

சக்கரவர்த்தி சம்மதம் தெரிவித்துவிட்டார் என்று சேனைநாயகர் கூறியதைக் கேட்ட குலசேகர பாண்டியர், தன்னுடைய கனவுகளெல்லாம் நனவாகிவிட்டது போல் மகிழ்ச்சியடைந்தார்.

"அய்யா! உங்களுடைய கீர்த்தியையும் பெருமையையும் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். என் கோரிக்கையை நீங்கள் ஏற்றுக் கொண்ட இக்கணத்திலேயே, இழந்த நாட்டை நான் மறுபடியும் பெற்றுவிட்டதைப் போல மகிழ்ச்சியடைகிறேன்" என்று அந்த மகிழ்ச்சியை வார்த்தைகளிலும் வெளிப்படுத்தினார்.

பல்லவராயர் பதிலொன்றும் சொல்லாமல் சிரித்தார்.

"அய்யா! மானவர்மரை நான் சந்திக்க முடியுமா?" என்று குலசேகர பாண்டியர் கேட்ட போது, புன்னகையை மேலும் படரவிட்டவராய், "எதற்காக?" என்று கேட்டார்.

"என் மகன் விக்கிரமனைப் பற்றி விசாரிக்க வேண்டும்."

"பத்திரமாக இருக்கிறான். இன்னும் சிறு பொழுதில் இங்கு வந்துவிடுவான்."

சேனைநாயகர் பேசிவிட்டுத் திரும்பிய போது ஒரு வீரன் வந்து அவரைப் பணிந்து வணங்கிவிட்டு மெல்லிய குரலில் கூறினான்:

"அய்யா! பாண்டிய குமாரர் வந்து கொண்டிருக்கிறார். இராசராச விடுதியை நெருங்கிவிட்டதாகத் தகவல்."

அவனை அனுப்பிவிட்டுக் குலசேகர பாண்டியரிடம் கேட்டார்:

"இளவரசன் விக்கிரமன் வந்துவிட்டானாம். கோட்டை வாயிலில் அவனை வரவேற்கப் போகிறேன். வருகிறீர்களா?"

குலசேகர பாண்டியர் குதித்துக் கொண்டு புறப்பட்டார்.

கோட்டை வாயிலில்— இளவரசன் குலோத்துங்கன், சேனைநாயகர் ஆகியோரால் அரச மரியாதையுடன் வரவேற்கப்பட்ட தன் மகனை நெடுங்காலத்திற்குப் பிறகு நெஞ்சோடு சேர்த்து ஆரத் தழுவிக் கொண்ட போது குலசேகர பாண்டியரது கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

திருமுக ஓலை எழுதிச் சேர நாட்டிற்கு ஓர் அவசரத் தூதுவனை அனுப்பி வைத்துவிட்டுத் தன் மாளிகையில் ஓய்வாக உட்கார்ந்திருந்த பல்லவராயர், "நான்தான் போருக்குப் போவேன்" "நான்தான் போருக்குப் போவேன்" என்று தங்களுக்குள் வாதமிட்டு வழக்காடிக் கொண்டு வந்த விக்கிரமனையும் குலோத்துங்கனையும் பார்த்துக் கேட்டார்:

"உங்கள் இருவரில் தியாகவல்லியின் மீது அதிகமான பிரியம் வைத்திருப்பவர் யார்?"

விக்கிரமன், குலோத்துங்கன் இருவருமே இதற்குப் பதில் சொல்லாமல் புன்னகைத்தார்கள்.

"இதோ பாருங்கள். நீங்கள் இருவரும் அவள் மீது அதிகமான பிரியம் வைத்திருக்கிறீர்கள். தியாகவல்லி பாவம்! தனியாக இருப்பாள். அதனால் நீங்கள் இருவருமே இங்குதான் இருக்க வேண்டும். அவள் மீது பிரியமே இல்லாத நான்தான் போருக்குப் போகப் போகிறேன்" என்று விளையாட்டுத்தனமாகச் சொல்லிக் கலகலவென்று சிரித்துவிட்டுப் பல்லவராயர் உள்ளே எழுந்து போய்விட்டார்.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு ஒருநாள் கங்கைகொண்ட சோழபுரத்தை எட்டிப் பார்த்த கதிரவன் கண்ணயர்ந்து போனான். யுத்த பேரிகைகள் முழங்கிக் கொண்டிருந்தன. 'போர் போர் போர்!' என்று போர் முரசங்கள் ஒலித்தன. முழவுகள் அதிர்ந்தன.

தாரை தப்பட்டைகள் அடித்தன.

யானைகள் பிளிறின. குதிரைகள் கனைத்தன!

கொம்பும் சங்கும் ஊதின. எக்காளமும் தமருகமும் இசைத்தன.

மனிதர்களின் காதுகளைச் செவிடாக்கி வானத்தைக் கிழிக்கும் ஜயகோஷங்கள் கேட்டன.

மண் நடுங்க, மரம் நடுங்க, மாளிகைகள் நடுங்க மாற்றார் கண் நடுங்க, உயிர் நடுங்க— சோழ நாட்டு வீரமறவர்கள் வில்லும் வாளும் வேலுமேந்தி நடந்து சென்றார்கள்.

லட்சக் கணக்கான மான மறவர்களின் நடையால் பூமிப்பெண் அதிர்ந்து புல்லரித்துக் கொண்டிருந்தாள்.

ஊரெல்லாம் தோரணங்கள்; உணர்வெல்லாம் சரித்திரங்கள்; வீதியெல்லாம் உற்சவங்கள்; விழிகளெல்லாம் பரவசங்கள்!

முன்னால் சென்ற யானையின் அம்பாரியில் போரின் பிரதம தளகர்த்தர் பெருமான் நம்பிப் பல்லவராயர் கம்பீரமாக பவனி வந்தார்.

அடுத்துச் சென்ற யானையில் குலசேகர பாண்டியர் அமர்ந்திருந்தார்.

மாளிகையின் உச்சியில் ஏறி நின்று கூடை கூடையாய் மலர்களைத் தூவினர் வாள்விழி மாதர்கள்.

பொன்விரல் மேகங்கள் பூமழை பொழிந்தன.

"மாமன்னர் இராசாதிராசர்.."

"வாழ்க!"

"சேனைநாயகர் பெருமான் நம்பிப் பல்லவராயர்.."

"வாழ்க!"

"வீரவேல்!"

"வெற்றி வேல்!"

இலட்சக்கணக்கான வீரர்கள் முழக்கமிட்டவாறே கோட்டையைத் தாண்டி வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய

கைகளில் உயர்த்திப் பிடிக்கப்பட்டிருந்த புலிக் கொடிகள் காற்றிலாடிய போது— அவை பகைவர் மீது பாய்வது போல் தோன்றின.

ஆம் பதுங்கிய புலி பாய்ந்துவிட்டது!

அங்கயற்கண்ணியின் ஆலயத்திற்குள் நடந்து கொண்டிருந்த ஆடல் அழகியின் மோகன முகத்தில் வழக்கத்திற்கு மாறாக வாட்டம் தெரிந்தது.

மதுரைக்கு வந்த நாள் முதலாக அவளுக்கு ஒரு குறையும் இல்லை. வீரபாண்டியனுடைய விருந்தாளியாக இருந்தாள். தனிமையில் சந்தித்த சந்தர்ப்பங்களிலெல்லாம் வீரபாண்டியன் அவளுடைய விருந்தாளியாக இருந்தான்.

ஆனாலும் ஆகவமல்லனுடைய போக்கும், சோழ நாட்டுக்கு எதிராக அவன் செய்து கொண்டிருக்கும் சூழ்ச்சிகளும்தான் அவளுடைய மனத்தை அரித்துக் கொண்டிருந்தன.

ஒரு குடைக்கீழ் உலகாண்ட சோழ நாட்டின் செல்வாக்கு மிகுந்த சிற்றரசன் ஒருவன்— சிங்களத்துத் தண்டநாயகர்களின் உதவியாள் போல் செயல்பட்டுக் கொண்டிருந்த நிலையை எண்ணி அவள் மனங்குமைந்தாள்.

தேவி மீனாட்சி அம்மையின் திருச்சந்நிதியில் அவள் விழிகளில் நீர் மல்க விண்ணப்பித்துக் கொண்டாள்.

“உலகையெல்லாம் காக்கும் உமையவளே! பாண்டிய நாட்டின் சக்தி வாய்ந்த தெய்வம் நீ! சோதனைகளில் சிக்கியிருக்கும் எங்கள் சோழ நாட்டைக் காப்பாற்றுவதும் உன்னுடைய பொறுப்புத்தான்!”

ஆலயத்திலிருந்து வெளியேறித் தன்னுடைய இருப்பிடத்தைச் சென்றடைந்து பல்லக்கைவிட்டு அவள் இறங்கிய போது அவளுடைய பணிப்பெண் தெரிவித்தாள்:

“அக்கா! தங்களைக் காண்பதற்காக இளந்தேவன் என்ற வீரர் வந்து காத்திருக்கிறார்.”

இளந்தேவனைக் கண்ட போது உள்ளத்திலிருந்த கவலைகளிலிருந்து விடுபட்டு, ஒரு குழந்தையைப் போல அவள் உற்சாகமடைந்தாள்.

“என் இனிய வீரனே! இப்போதாவது வழி தெரிந்ததா? உன்னுடைய எஜமானர்தான் நாட்டையும் மறந்துவிட்டார்; இந்த

நாட்டியக்காரியையும் மறந்துவிட்டார். உனக்காவது என் ஞாபகம் வந்ததா?" என்று கேட்டபடி அவனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

"தேவி! மிகக் கடுமையான பொறுப்புகளை கங்கச் சிற்றரசர் என்னிடம் ஒப்படைத்திருக்கிறார். கங்க நாட்டிலிருந்து இங்கு ஏன் வந்தோம் என்று ஆகிவிட்டது. தலைக்கு மேல் வேலை. எல்லாம் தலைபோகிற வேலை."

"தலைக்கு விலை சொல்லும் வேலை— என்பதையும் சேர்த்துக் கொள்."

"எல்லாம் உங்களுக்குத் தெரியும் போலிருக்கிறது" என்றான் இளந்தேவன்.

"எனக்குத் தெரியாமலிருக்குமா?" என்ற மோகனசுந்தரி அவனை நெருங்கி வந்து, "இந்த விழிகளைப் பார்" என்றாள். ஒன்றும் புரியாத இளந்தேவன் அவளுடைய கண்களை உற்றுப் பார்த்தான்.

"ஒன்றும் தெரியவில்லையா?" என்றாள்.

"தெரியவில்லையே தேவி!"

"இப்போது தெரிந்து கொள். இந்த விழிகளுக்குள்ளேதான் வீர தீர பராக்கிரம வீரபாண்டிய மன்னர் விழுந்து கிடக்கிறார்" என்று சோகமாகச் சிரித்தாள்.

"என்னைக் குழப்பாதீர்கள் தேவி!" என்றான் இளந்தேவன்.

"உன்னைக் குழப்பவில்லை. குழப்பத்திலிருந்து நான்தான் இப்போது தெளிவடைந்திருக்கிறேன்."

"தேவி..!" என்று மெதுவாகப் பேச ஆரம்பித்தவனைத் தடுத்து நிறுத்திவிட்டு, "பாண்டிய அரசர்தான் என்னிடம் கூறினார்— பல்லவராயருடைய தலைக்குப் பாண்டிய நாட்டின் தென்பகுதியை விலையாகத் தருவதாக எழுதப்பட்ட ஒப்பந்த ஓலையை இளந்தேவன் எடுத்துச் சென்றிருப்பதாக."

"உண்மைதான் தேவி! மழவச் சக்கரவர்த்தியையும் மழவ ராயனையும் சந்தித்து ஓலையைக் கொடுத்துவிட்டு நேற்றுத்தான் திரும்பினேன்!"

"ஆகா! என்ன அற்புதமான காரியத்தில் நீயும் உன் எஜமானரும் ஈடுபட்டிருக்கிறீர்கள்..!" என்று ஏளனமாகக் கூறினாள் மோகனசுந்தரி.

"தேவி! என்னைக் குறை சொல்ல வேண்டாம். நான்.." என்று இளந்தேவன் தடுமாறினான்.

"சரி.. சரி. வந்த விவரத்தை முதலில் கூறிவிடு! இல்லாவிட்டால் மறந்துவிடுவாய்" என்று கண்களைச் சிமிட்டியபடியே கேட்டாள்.

"கங்கச் சிற்றரசர் இன்று மாலையில் தங்களைச் சந்திக்க வருவதாகத் தகவல் கூறியனுப்பினார்" என்றான்.

"ஓகோ! ஆடல் அழகியின் நினைப்பு ஆகவமல்லருக்கு வந்துவிட்டதாக்கும்?" என்று பரிகாசமாகச் சிரித்தாள்.

"கங்கச் சிற்றரசருக்கு மிகவும் தாராள மனது" என்று தொடர்ந்தாள்.

இளந்தேவன் நிமிர்ந்து பார்த்தான்.

"சாதாரணச் சிற்றரசருக்குத்தான் நான் வேண்டியவளாக இருந்தேன். எவ்வளவு பெரிய மனது இருந்தால் அவர் என்னைப் பேரரரசர் வீரபாண்டியருக்கே பிரியமானவளாக ஆக்கியிருப்பார்?"

இளந்தேவன் தலை குனிந்தான்.

உல்லாசமாகப் பணிப்பெண்ணிடம் உரையாடியபடியே உள்ளே நுழைந்த ஆகவமல்லன், வந்ததும் வராததுமாய் வாயிற்கதவுகளைச் சாத்தித் தாழிட்டான்.

மலர்க் குவியலுக்கு மத்தியில் ஒரு புதிய அழகின் புதையலைப் போல் சரிந்து கிடந்த மோகனசுந்தரி, மயக்கம் தரும் புன்னகையைத் தூவி அவனை வரவேற்றாள்.

மஞ்சத்தில் அவளுடைய அருகில் அமர்ந்தபடி அவன் பேசியதையெல்லாம் சிரித்தபடியே கேட்டுக் கொண்டிருந்தாள்.

"தாக்குதல் இல்லாமல், படையெடுப்பில்லாமல்— இப்போது அமைதியாக ஓர் ஆட்சி மாற்றம் நடைபெறுகிறது" என்று அவன் கூறிய போதும், அவள் அது என்ன என்று கேட்கவில்லை.

"சிறிது காலமாக வீரபாண்டியருடைய ஆட்சியில் இருக்கும் இந்த அழகிய பூமியில் இப்போது மீண்டும் என்னுடைய ஆட்சி

ஏற்படுகிறது" என்று கூறியபடி, அவளுடைய தோளில் தன் கைகளை வைத்தான் ஆகவமல்லன்.

புன்னகை மாறியது. கொஞ்சங் கொஞ்சமாக ஆடல் அழகியின் முகத்தில் கோபம் குடியேறத் தொடங்கியது. ஆகவமல்லனுடைய கைகளை உதறிவிட்டுச் சட்டென்று எழுந்து நின்றாள்.

"இவ்வளவு காலம் வரவில்லையென்று கோபமா?" என்று கேட்டபடி அவளைத் தன் இரண்டு கைகளாலும் அள்ளிக்கொள்ள முற்பட்டான் ஆகவமல்லன்.

"என்னைத் தொடாதீர்கள்" என்று பலமான குரலில் சீறிவிட்டு விலகினாள் மோகனசுந்தரி. திகைப்படைந்த ஆகவமல்லனைப் பார்த்து அவள் மறுபடியும் சீறினாள்:

"என்னைத் தொடுவதற்குரிய உரிமையை நீங்கள் எப்போதோ இழந்துவிட்டீர்கள்."

கோபத்துடன் அப்படிக் கூறிய போது, முற்றிலும் புதியதொரு மோகனசுந்தரியாக அவள் தெரிந்தாள்.

அவளுடைய தோற்றத்தில் பெண் புலியொன்று எதிரே நின்று சீறிப் பாய்வது போல் சிற்றரசனுக்குத் தோன்றியது.

ஆமாம்.

பதுங்கிய புலி பாய்ந்துவிட்டது.

# 23. பரிசில் மண்டபம்!

கங்கைகொண்ட சோழபுரத்தின் அருகில் 'சோழகங்கம்' என்ற அழகிய பெரிய ஏரியொன்று அமைந்திருந்தது. தெற்கு வடக்கில் பதினாறு கல் தொலைவு நீளத்தையும் உயர்ந்த வலிமையான கரைகளையும் பெற்று, ஒரு குட்டிக் கடல் போல் அது காட்சியளித்தது.

கங்கைகொண்ட சோழராகிய இராசேந்திர சோழர் தம் வீரத்தின் நினைவாகவும், வெற்றியின் சின்னமாகவும் அந்த ஏரியை வெட்டுவித்திருந்தார். எனவே, புலவர் பெருமக்களால் அது 'நீர்மயமான வெற்றித்தூண்' என்று போற்றப்பட்டது.

மாலைக் கதிரவனின் பொற்கரங்கள் சோழகங்கத்தின் தண்ணீர்ப் பரப்பையெல்லாம் தங்கத் தகடுகளாக்கி மின்னச் செய்து கொண்டிருந்தன. சூரியனின் பொற்சுடர்களுக்கு மத்தியில், ஏரிக்கரையின் ஓரமாகத் தங்கள் குதிரைகளைச் செலுத்திக் கொண்டு சோழ இளவரசன் குலோத்துங்கனும் பாண்டிய இளவரசன் விக்கிரமனும் போய்க் கொண்டிருந்தார்கள்.

அரண்மனையில் அவர்களுக்குப் பொழுது போகவில்லை. ஆண் பிள்ளையாய் லட்சணமாய்ப் போருக்குப் போகாமல் அரண்மனைக்குள் அடைந்து கிடப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. தண்டநாயகர்களைத் துண்டு துண்டாக்கி, வீரபாண்டியனை விரட்டியடித்துவிட்டு வெற்றி தேவியை மாலையிட வேண்டும் என்று அவர்கள் துடித்தார்கள்.

பல்லவராயர் அவர்களிருவரையும் போருக்கு வரவே கூடாதென்று கண்டிப்பாகக் கூறித் தடுத்துவிட்டார். சோழ அரசியலில் பயிற்சி பெற வேண்டுமென்று குலோத்துங்கனுக்கும், குலோத்துங்கனுக்குத் துணையிருந்து அவனைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று விக்கிரமனுக்கும் அவர் ஆணையிட்டிருந்தார்.

மாமன்னர் இராசாதிராசர் போருக்குப் போகாமல் அரண்மனையிலேயே இருந்த போதும், அன்றாட அரசியல் நிர்வாகத்தில் முழுக்க முழுக்க மூழ்கிப் போயிருந்தார். சேனைநாயகர் இல்லாதிருந்ததால் பல்வேறு பொறுப்புக்களை அவரே கவனிக்க வேண்டியிருந்தது. அதோடு சேர நாட்டிற்கு அடிக்கடி செய்தியனுப்பிக்

கொண்டும், அங்கிருந்து ஏதோ ஒரு செய்தியை எதிர்நோக்கிக் கொண்டுமிருந்தார் அவர்.

குலோத்துங்கனும் விக்கிரமனும் அரண்மனையிலேயே அடைந்து கிடந்து அலுத்துப் போகவே, கோட்டையைத் தாண்டிக் கொஞ்ச தூரம் குதிரைப் பயணம் செய்து வரலாமென்று கிளம்பினார்கள்.

சோழகங்கத்திற்கு வந்து சேர்ந்த போது விரிந்து பரந்து கடல் போல் விளங்கிய அந்த ஏரியை விழியசைக்காமல் பார்த்து வியப்படைந்தான் விக்கிரமன். நீர் மயமான வெற்றித்தூண் என்று அந்த ஏரி பாராட்டப்படுவதையும் அதனுடைய வரலாற்றையும் எடுத்துக் கூறிய குலோத்துங்கனிடம் அவன் கேட்டான்:

"கங்கைகொண்ட சோழரைப் பற்றிக் கேள்விப்படும் போது என் நெஞ்சம் பூரிக்கிறது குலோத்துங்கா! உன் முன்னோர்களைப் போலவே நீயும் புகழ் பெறுவாயா?"

"அதுதான் என் இலட்சியம் விக்கிரமா!"

இளைய நெஞ்சங்கள் சிறிது நேரம் எதிர்காலத்தைப் பற்றிய எண்ணங்களில் மூழ்கின.

சற்று நேரம் கழித்து விக்கிரமன் கேட்டான்:

"இன்றைக்கு அறங் கூறும் அவைக்கு நான் வரவில்லை. ஏதாவது சுவையான வழக்கு உண்டா?"

"உண்டு" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் குலோத்துங்கன்.

"இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒருவன் தன்னுடைய நிலத்தை இன்னொருவனுக்கு விற்றானாம். அப்படி விற்றவன், தான் நிலத்தை மட்டும் விற்றதாகவும், நிலத்திலுள்ள மரங்கள் தனக்கே சொந்தமென்றும் அந்த மரங்களிலிருந்து கிடைக்கக் கூடிய பயன் தன்னையே சேர வேண்டுமென்றும் வழக்குக் கொண்டு வந்தான்."

"அதென்ன நியாயம்? நிலத்தைக் கிரயத்திற்கு வாங்கியவனுக்குத்தானே அதிலுள்ள மரங்களும் உரிமையாகும்?"

"அப்படித்தான் வாங்கியவனும் வாதாடினான்."

"அரசர் என்ன தீர்ப்புரைத்தார்?"

"விற்றவன் சொல்வதுதான் சரி. மரங்களும் மரங்களால் கிடைக்கக் கூடிய பயன்களும் விற்றவனுக்கே சேர வேண்டும் என்று தீர்ப்பளித்துவிட்டார்."

"அதெப்படி?"

"*நிலத்தைக் கிரயம் செய்து வாங்கும் போதே— நிலத்தின் நான்கு எல்லைகளையும் வரையறுத்து, அந்த நிலத்திலிருக்கும் மரம் கிணறு முதலிய அந்நான்கு பக்க எல்லைக்குள் நடுவுபட்டதெல்லாம் சேர்த்துக் கிரயம் செய்து கொள்வதாகச் சாசனம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டுமாம். அப்படிச் சாசனம் பண்ணிக் கொள்ளாவிட்டால் நிலம் விற்றவன் பல நாள் கழித்து, நிலத்தைக் கிரயம் செய்தேனேயொழிய அதிலுள்ள மரத்தைக் கிரயம் செய்யவில்லையென்று வழக்காட உரிமை உண்டென்று அரசர் கூறினார்."

"அடடா..!"

"தீர்ப்பைக் கேட்டதும் நிலத்தை வாங்கியவனுடைய முகத்தைப் பார்க்க வேண்டுமே..!" என்று சொல்லிக் குலோத்துங்கன் சிரித்த போது, "பரிதாபமாகத்தான் இருந்திருக்கும்" என்று கூறிவிட்டு விக்கிரமனும் சேர்ந்து சிரித்தான்.

இருவரும் அரண்மனையை அடைந்த போது, தியாகவல்லி குலோத்துங்கனைக் கேட்டாள்:

"அண்ணா! பதினாறுகால் மண்டபத்தைப் பார்க்க வேண்டும். நாளைக்கு உறையூருக்குப் போகலாம். வருகிறீர்களா?"

"நாளைக்கு மந்திரி மண்டலத்தாருடைய கூட்டத்தை அரசர் கூட்டியிருக்கிறார். முதல் முறையாக நானும் அதில் கலந்து கொள்ளப் போகிறேன். என்னால் வர இயலாது."

தியாகவல்லி முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டாள். பிறகு கேட்டாள்:

---

*நிலம் வாங்கும் போது சாசனம் பண்ணிக் கொள்ள வேண்டிய முறை பற்றி— இரண்டாம் இராசேந்திர சோழனுடைய மண்மங்கலம் கல்வெட்டில் காணப்படுகிறது.

"சோழ இளவரசருக்கு ராஜ காரியம் இருக்கிறது. வரமாட்டார். பாண்டிய குமாரராவது என்னுடன் வருவாரா?"

ஒப்புதல் தரவேண்டுமென்று அவளுடைய விழிகள் மிக ரகசியமாக அவனை வேண்டிக் கொண்டன.

ஓர் அழகிய இளம்பெண்ணின் வேண்டுதலில் நெகிழாத ஆண்பிள்ளை யாராவது உண்டா?

இருந்தாலும், விக்கிரமன் அவளுக்குப் பதிலெதுவும் சொல்லாமல் குலோத்துங்கனைப் பார்த்தான்.

"அனந்தபாலனிடம் தேரை ஆயத்தப்படுத்தி வைக்கச் சொல்கிறேன். தங்கையுடன் நீ போய் வா! சோழ நாட்டின் அழகிய இடங்களை நீயும் சுற்றிப் பார்க்க வேண்டுமல்லவா?" என்றான் குலோத்துங்கன்.

தியாகவல்லி, விக்கிரமன் இருவரது முகங்களும் செந்தாமரைகளாய் மலர்ந்தன.

அனந்தபாலன் தேரைச் செலுத்திக் கொண்டே தியாகவல்லியிடம் பேச்சுக் கொடுத்தான்.

"இளவரசி! பதினாறு கால் மண்டபத்தைப் பார்த்தே தீர வேண்டுமென்று இவர் ஒற்றைக் காலில் நின்றாராமே! பாண்டிய குமாரர் பெரிய ரசிகரோ?"

"நான் மதுரையில் இருந்த போது சாதாரணமானவனாகத்தான் இருந்தேன். சோழ நாட்டிற்கு வந்த பிறகுதான் மிகப் பெரிய ரசிகனாக மாறியிருக்கிறேன்" என்று கூறிவிட்டு, அருகில் அமர்ந்திருந்த தியாகவல்லியின் மீது பொருள் பொதிந்த பார்வையைக் குறும்புத்தனமாகப் படரவிட்டான் விக்கிரமன்.

அந்த இளம் பெண்ணின் இதய யாழில் இன்ப நரம்புகள் சுருதி கூட்டின.

"அப்படியானால் என்னைப் பார்த்துவிட்டுத்தான் பெரிய ரசிகராக மாறியிருக்கிறீர்களென்று சொல்லுங்கள்" —அனந்தபாலன் கேட்டான்.

"உன்னைப் பார்த்தல்ல, உன்னுடைய குதிரைகளைப் பார்த்து!" என்று விக்கிரமன் சிரித்தான். தியாகவல்லியும் சிரித்தாள்.

குதிரைகளுக்குக் கோபம் வந்தது.

'இவர்களுக்குள் நடக்கும் பேச்சு வார்த்தையில் அநாவசியமாக நம்மை எதற்காக இழுக்க வேண்டும்?'

கோபங் கொண்ட குதிரைகள் திடீரென்று வேகமாக ஓடவே தேர் குலுங்கியது.

அந்தக் குலுங்கலில் ஒரு மென்மையான தேகமும் கொஞ்சம் வன்மை படிந்த தேகமும் மெல்லத் தீண்டிவிட்டு வேகமாக விலகிக் கொண்டன.

மன்மதன் கரும்பு வில் வளைத்தான்.

தேவர்கள் மலர்களைத் தூவினார்கள்.

தேர் சொர்க்கத்தில் நுழைந்து கொண்டிருந்தது.

'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி, வளி தொழில் ஆண்ட உரவோன் மருகனும், களிகொள்யானைக் கரிகால் வளவனுமாகிய சோழன் கரிகாற் பெருவளத்தான்– பட்டினப்பாலை பாடிய புலவருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசு வழங்கிக் கௌரவித்ததோடு, அந்நூல் அரங்கேற்றப்பட்ட பதினாறுகால் மண்டபத்தையும் அவருக்கே பரிசளித்துவிட்டான்.

அத்தகைய சிறப்புமிகுந்த மண்டபத்திலிருந்த பதினாறு தங்கத் தூண்களும் மங்கையின் பருவ வயதை மனக்கணக்குப் போட்டு எண்ணி எடுத்துரைத்து, இனக்கணக்குப் போடுகின்ற வாலிபர்களின் விழிகளில் இன்பக் கணக்குகளை எழுதி வைத்துக் கொண்டிருந்தன.

தனிக்கணக்காக வராமல் அங்கே துணைக்கணக்கோடு வந்து சேர்ந்திருந்த விக்கிரமன், மணக்கணக்கோ மலர்க்கணக்கோ பார்க்காமல், தியாகவல்லியின் விழிக்கணக்கிற்கு விடைகாண வழிக்கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

பதினாறு கால் மண்டபத்தில், தியாகவல்லியும் விக்கிரமனும் உட்கார்ந்து கண்களால் எழுதி முடித்த கவிதைகளை வாய்விட்டு வாசித்துப் பார்க்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

"தியாகவல்லி!" அவன் அழைத்தான்.

அவள் பேசவில்லை. விழிகளைத் திருப்பி மண்டபத்தின் படிக்கட்டுகளில் பதித்தாள்.

"தியாக.. வல்லி!" –அவன் மீண்டும் அழைத்தான்.

தன்னுடைய பெயரை அவன் அழைத்த இனிமையில் வெட்கம் தாங்காமல் முகமலரை விரல் இதழ்களால் மூடிக் கொண்டாள் அவள்.

அவன் சொன்னான்:

"இளவரசி! உன்னை, உன் அழகை, உன் அன்பை அழிந்து போகக் கூடிய சாதாரணப் பொருளாக இந்த உலகில் விட்டுவிட எனக்குச் சம்மதமில்லை. கால காலத்திற்கும் நிலைத்து நிற்கக்கூடிய கவிதையாக்கிவிடப் போகிறேன். உனக்குச் சம்மதம்தானா?"

அவள் பதில் சொல்லவில்லை.

கிண்கிணி நாதம் போல் சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவனைக் கிளுகிளுக்க வைத்தது.

அவன் சொன்னான்:

"அன்புக்கு வானம்– இந்த
அழகியின் நெஞ்ச மெல்லாம்–"

அவள் திரும்பினாள்.

"அன்பர்க்கு தானம்..!"

விக்கிரமனின் கவிதை அவளை நாண வைத்தது.

அவன் தொடர்ந்தான்:

"ஆகா! அணி செய்யும் முகத்தில் நாணம்!"

பார்த்ததை உடனே பாட்டாக்கும் விக்கிரமனைப் பார்த்து அவள் இப்போது வியந்தாள்.

அவன் மேலும் கூறினான்:

"பண்புக்கு மேடை.. இந்தப்
பாவையின் உள்ளமெல்லாம்.."

பக்கத்திலிருந்த நீர்ப்பரப்பில் அவன் பார்வை பதிந்தது.

"பளிங்கு நீர் ஓடை..!"

அந்த ஆண் மகனின் வர்ணிப்பில் இன்பப் பரபரப்பையும் இதயத் துடிதுடிப்பையும் அன்புக் குறுகுறுப்பையும் ஆசைக் கதகதப்பையும் சேர்த்து தியாகவல்லி ஒரே சமயத்தில் அனுபவித்தாள்.

உடலெங்கும் ஓடிக் கொண்டிருந்த அந்த உணர்வுகளின் வெம்மையில் அவள் உருகிக் கொண்டிருந்தாள். கைகளால்

கால்களைக் கட்டிக் கொண்டு, முழங்கால்களுக் கிடையில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அவன் தன்னுடைய கவிதைக்கு முத்தாய்ப்பு வைத்தான்.

“..முத்துப் பதித்திட்ட தங்கக் கூடை!”

அவளால் நிமிர முடியவில்லை; பேச முடியவில்லை; மூச்சுக் கூடச் சரியாகவிட முடியவில்லை. வெட்கம் அவளைப் பிய்த்துத் தின்று கொண்டிருந்தது.

வெகு நேரம் வரை தன்னை மறந்திருந்த அந்தக் கன்னிப் பெண்ணின் தங்கக் கழுத்தில், தன் விரலால் விக்கிரமன் மெல்ல வருடிய போது அவள் சிலிர்த்தாள்!

அவன் கேட்டான்:

“பட்டினப்பாலை பாடிய புலவருக்கு வழங்கப்பட்ட பரிசில் மண்டபம்தானே இது?”

அவள் தலையை அசைத்து ஆமோதித்தாள்.

“கவிதைகளுக்குப் பரிசளித்துக் கௌரவிக்கும் பழக்கம் சோழ நாட்டில் கரிகாற் பெருவளத்தாரோடு முடிந்துவிட்டது போலிருக்கிறது.”

அவள் அவனுடைய வார்த்தைகளைப் புரிந்து கொண்டாள்.

“கவலைப்படாதீர்கள்! நீங்கள் பாடிய கவிதைக்கு அண்ணனிடம் கூறிப் பரிசளிக்கச் செய்கிறேன்.”

“எனக்கு வேண்டிய பரிசு உன் அண்ணனிடம் கிடைக்காது” என்று ஏக்கத்துடன் கூறியபடி, அவளுடைய இதயத்தையே துளைத்துவிடுவது போல ஒரு பார்வை பார்த்தான் விக்கிரமன்.

அந்தப் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன. அந்த ஆயிரம் அர்த்தங்களிலும் ஒரே ஓர் அபாயம் ஒளிந்து கொண்டிருந்தது.

# 24. துயர ஊர்வலம்

அபாயமான பாதையில் விரைந்து கொண்டிருந்த அவனுடைய பார்வைப் பயணத்தைத் தடை செய்யுமாறு அறிவு ஆணையிட்டுக் கொண்டிருந்தது.

ஆனால்— அவளுடைய உணர்வுகளோ— அந்த வாலிப விழிகளின் வசந்த யாத்திரைக்கு வரவேற்புக் கொடுத்துக் கொண்டிருந்தன.

தலையைத் தாழ்த்தியபடி அவள் கேட்டாள்:

"அண்ணனிடம் கிடைக்காதா?"

"ஆமாம். ஆடவனுக்கு மற்றோர் ஆடவன் கொடுக்க முடியாதது அது."

"அப்படியானால்..?"

"பெண்ணிடம்தான் கிடைக்கும்."

"அதாவது..?"

"எனக்கு— உன்னிடம்தான் கிடைக்கும்."

அவள் அவனைப் புரிந்து கொண்டாள்.

எதுவுமறியாதவள் போல் பாவனை செய்துவிட்டுக் கேட்டாள்:

"என்னிடமா?"

"ஆமாம், உன்னிடம்தான்! கேட்டால் கிடைக்குமா?"

"கேளுங்கள். முடிந்தால் கொடுக்கிறேன்."

அவன் கேட்கப் போவதை அனுமானித்து ரகசியமாக அனுபவித்த போது அந்தப் பேதையின் உடலெல்லாம் புல்லரித்தது.

அவன் கேட்டான்:

"இந்த ஏழைக்கு வேண்டியது இளவரசியின் இதயம்."

"அதை மட்டும் இப்போது கொடுக்க என்னால் இயலாது."

"ஏன்?"

"ஏற்கனவே கொடுத்துவிட்ட ஒன்றை மறுபடியும் கேட்டால்— எப்படிக் கொடுக்க முடியும்?"

அவன், அவளைப் புரிந்து கொண்டான்.

அதற்குப் பிறகு அவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது எதுவும் இருக்கவில்லை. வேறெதையும் புரிந்து கொள்ளவும் அவர்கள் விரும்பவில்லை.

கண்கள் கலந்தன. கைகள் இணைந்தன. தென்றல் அவர்களைச் சீராட்டியது. தேவதைகள் அவர்களைப் பாராட்டினார்கள்— இல்லை— பொறாமைப்பட்டார்கள்.

அவர்கள் தங்கியிருந்த பழைய அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தவுடன் தியாகவல்லி அனந்தபாலனிடம் கூறி, ஓலை நறுக்குகளையும் எழுத்தாணியையும் வரவழைத்தாள். பின்னர் அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டுத் தானே சென்று தாழையின் மடலொன்றை எடுத்து வந்தாள். வண்ணக் குழம்பைத் தானே பிழிந்து தயாரித்தாள். சயன மண்டபத்தின் கதவுகளை அடைத்துவிட்டுப் பஞ்சணையில் வெகு நளினமாகச் சாய்ந்து கொண்டு, தூரிகையை வண்ணக் குழம்பில் தோய்த்தெடுத்துத் தாழை மடலில் எதையோ மெல்ல மெல்ல ஞாபகப்படுத்தி எழுதி வைத்தாள்.

அப்படி எழுதப்பட்டதைத் தன் மார்போடு சேர்த்து அழுந்த அணைத்துக் கொண்டு சற்று நேரத்தில் தூங்கிப் போனாள். அவள் புரண்டு படுத்த போது தனித்து விழுந்த தாழை மடலில் எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் தூண் விளக்கின் ஒளியில் துல்லியமாகத் தெரிந்தன.

'அன்புக்கு வானம்—இந்த
அழகியின் நெஞ்சமெல்லாம்
அன்பர்க்கு தானம்—ஆகா
அணி செய்யும் முகத்தில் நாணம்!
பண்புக்கு மேடை—இந்தப்
பாவையின் உள்ளமெல்லாம்
பளிங்கு நீர் ஓடை!— முத்துப்
பதித்திட்ட தங்கக் கூடை!'

—பாண்டிய குமாரர்.

உறையூரைவிட்டுப் புறப்பட்டுத் தலைநகரை நோக்கி அவர்கள் பிரயாணப்பட்ட போது, வழியில் தென்பட்ட நகரங்களிலும் கிராமங்களிலும் இருந்த மக்களிடையே கலகலப்புக் குறைந்து கொஞ்சங் கொஞ்சமாகக் கலவரம் அதிகரித்து வருவதைக் கவனித்தார்கள். சில இடங்களில் பொதுமக்கள் அங்கங்கே சிறு சிறு

கூட்டமாகக் கூடிக் கவலையோடு எதைப் பற்றியோ விவாதித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தார்கள். நேரம் ஆக ஆக இது அதிகரித்தது.

தேர் வரும் போது அந்தத் தேரில் யார் வருகிறார்களோ என்று மருண்டு போய்ச் சிலர் ஓடினார்கள். சிலர் அருகில் வந்து பார்த்துவிட்டு, யாரோ அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அமர்ந்திருப்பதை அனுமானித்துக் கொண்டு, "அய்யோ பாவம்!" என்று அனுதாபம் காட்டிவிட்டுப் போனார்கள். அங்கங்கே சிலர் வீட்டைப் பூட்டிவிட்டு மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக் கொண்டு எங்கேயோ பயணப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

தியாகவல்லிக்கோ, விக்கிரமனுக்கோ, அனந்தபாலனுக்கோ இதற்குரிய காரணம் எதுவும் புரியவே இல்லை. தேரை நிறுத்தச் சொல்லி என்னவென்று விசாரிக்குமாறு விக்கிரமன் அனந்தபாலனுக்குக் கட்டளையிட்டான். அனந்தபாலன் இறங்கிப் போய் அவர்களிடம் கேட்ட போது, அவர்கள் அவனையும் தேரையும் ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுச் சிறிது தயங்கினார்கள்.

தேரில் பறந்து கொண்டிருந்த புலிக்கொடியைக் கண்டு சற்றே தெம்படைந்த பின்னர், "தேரில் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டனர்.

"சோழ இளவரசி இருக்கிறார்கள். அவர்களோடு ஒரு விருந்தினர் வந்திருக்கிறார்" என்று அனந்தபாலன் கூறினான்.

உடனே அவர்கள் தேருக்குப் பக்கத்தில் வேகமாக ஓடிவந்து ஓலமிட்டனர்.

"இளவரசி, உங்களுக்குத் தெரியாதா? சிங்களத்துத் தண்டநாயகர்கள் சோழ நாட்டுப் படைகளைச் சூறையாடிக் கொண்டிருக்கிறார்களாம். பல்லவராயரால் கூடத் தாக்குப் பிடிக்க முடியவில்லையாம். தாயே, உண்மைதானா? கங்கைகொண்ட சோழபுரத்தை வந்து தாக்கித் தகர்த்துத் தரைமட்டமாக்கப் போவதாகத் தண்டநாயகர்கள் சபதம் செய்திருக்கிறார்களாமே! நிஜந்தானா தாயே? எங்களுக்கு இனி விமோசனமே கிடையாதா?"

அவர்களில் ஒருவன் தனித்து முனகினான்.

"மதுரைப் பாண்டியனுக்கு உதவி செய்யப் போய் விதி நம்முடைய தலையிலேயே விடிந்துவிட்டதே!"

விக்கிரமன் ஏதோ பேசப் போன போது தியாகவல்லி அவனைத் தடுத்துவிட்டுத் தன்னிடம் ஓடி வந்து ஓலமிட்டவர்களுக்கு ஆறுதல் கூறினாள்!

"கவலைப்படாதீர்கள்! யுத்த காலத்தில் இப்படி வதந்திகள் பரவுவது சகஜம். நம்முடைய சேனைநாயகர் பல்லவராயரை வெல்வதற்கு இந்த பூமியில் இதுவரை மனிதர்கள் பிறக்கவில்லை. அவர் இருக்கும் வரை இந்த மண்ணில் அந்நியர் யாரும் காலெடுத்து வைக்க முடியாது. அவரவர் வீடுகளுக்குத் தைரியமாகச் செல்லுங்கள்."

அவளுடைய பேச்சில் ஆறுதல் பெற்ற அவர்கள், இப்போது அவர்களுடைய கவலையை விட்டுவிட்டு, அவளுக்காகக் கவலைப்பட்டார்கள்.

"இளவரசி! இந்த நெருக்கடியான சமயத்தில் இப்படிப் பரிவாரத்து வீரர்கள்கூட இல்லாமல் தேரில் செல்லலாமா?"

"ஆபத்தொன்றும் வராது. அப்படியே வந்தாலும் இதோ என்னருகில் இருக்கிறாரே, இந்த மாவீரர் என்னைக் காப்பாற்றுவார்."

"இவர் யார்?"

"இவர் அயல் தேசத்துக்காரர். நம் விருந்தினர்."

அந்த விருந்தினரைக் கூட்டத்திலிருந்தவர்கள் எட்டிப் பார்த்தார்கள்.

அவர் மீதும் அவர் மாவீரத்தின் மீதும் கூட்டத்தினருக்கு அத்தனை நம்பிக்கை விழவில்லை போலிருக்கிறது! அவர்கள் கேட்டார்கள்:

"இளவரசி! வீட்டிலிருக்கும் வேல் கம்புகளை எடுத்துக் கொண்டு நாங்கள் வேண்டுமானால் தேரோடு உங்களுக்குப் பாதுகாப்பாக வருகிறோம்."

தியாகவல்லி கூறினாள்:

"வேண்டியதில்லை. நீங்கள் அஞ்சுவது போல் இப்போதைக்கு எந்தச் சூழ்நிலையும் வந்துவிடவில்லை. தைரியமாகச் செல்லுங்கள். அங்கங்கே இருக்கக் கூடிய மற்றவர்களுக்குத் தைரியம் சொல்லுங்கள்."

அவர்கள் கலைந்து சென்றார்கள்.

தேர் மறுபடியும் புறப்பட்டது.

"உடனே தலைநகருக்குச் செல்ல வேண்டும்" என்று கூறிய விக்கிரமன், "அனந்தபாலா, எவ்வளவு வேகமாக ஓட்ட முடியுமோ அவ்வளவு வேகமாக ஓட்டு" என்று ஆணையிட்டான். அனந்தபாலன் மிதமிஞ்சிய அச்சத்தால் வாயை மூடிக் கொண்டு தேரை விரைந்து செலுத்தினான்.

வீடுகளைக் காலி செய்துவிட்டு, ஊரைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்த சிறு கூட்டமொன்றை வழியில் சந்திக்க நேர்ந்தது.

மூட்டை முடிச்சுகளைத் தூக்கிச் சுமந்து கொண்டு, பெண்களும், வயதான கிழவர்களும், சின்னஞ்சிறு குழந்தைகளும் வெகு தொலைவு நடந்து களைப்போடு மூச்சு வாங்கிக் கொண்டு சென்ற காட்சியைப் பார்த்த போது– தியாகவல்லியின் இதயம் இலேசாக வலிக்கத் தொடங்கியது.

நோய் வாய்ப்பட்ட தன் வயதான தந்தையைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு, கக்கத்தில் சில பொருள்களை இடுக்கிக் கொண்டு ஓர் இளைஞன் நடந்து செல்ல, அவனுக்குப் பின்னால்– இடுப்பில் கைக்குழந்தையும், தலையில் தட்டுமுட்டுச் சாமான்களுமாக அவன் மனைவி நடந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் அவளுடைய எட்டுவயதுச் சிறுமியொருத்தி தன் இரண்டு வயதுத் தம்பியைத் தூக்கி இடுக்கிக் கொண்டு தடுமாறியபடி நடந்தாள்.

பார்க்கப் பார்க்கப் பரிதாபமாக இருந்த இந்தக் காட்சி தேரில் வந்து கொண்டிருந்தவர்களுடைய உள்ளங்களையெல்லாம் உருக்கிவிட்டது.

இவர்கள் யார்? இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போருக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம்? அமைதியான ஊரை– வீட்டை– வாழ்க்கையை விட்டுவிட்டு, இவர்கள் ஓட வேண்டிய அவலம் ஏன்?

இவர்கள் இப்படித் தங்களைத் தாங்களே சுமைகளாக மாற்றிக் கொண்டும், சுமந்து கொண்டும் ஓட வேண்டிய அவசியம் இப்போது ஏற்படவில்லையாயினும், இந்த அச்சத்திலிருந்து இவர்களைக் காப்பாற்ற முடியாமல் போனது எது?

எதற்காக இந்தத் துயரங்களின் ஊர்வலம்? எதற்காக இந்தப் போர்?

—மூவருடைய உள்ளங்களும் கவலையில் மூழ்கின. தியாகவல்லியும் விக்கிரமனும் சிந்தித்துச் சிந்தித்துக் கவலைப்பட்டார்கள். தேரோட்டிக்குச் சிந்திக்கத் தெரியவில்லை. கவலைப்பட மட்டுமே தெரிந்திருந்தது.

இராஜபாட்டையில் இடையிடையே சில இடங்களில் படை வீரர்கள் நின்று பரிசோதனை நடத்திக் கொண்டிருந்தார்கள். யுத்த நெருக்கடிக் கால ஏற்பாடுகள் தீவிரமாகி நடைமுறைக்கு வந்திருப்பதைத் தியாகவல்லியும் விக்கிரமனும் உணர்ந்து கொண்டார்கள்.

நாட்டின் எதிர்காலம் கேள்விக்கு இலக்காகியிருக்கும் இந்தச் சமயத்தில், உறையூரில் இத்தனை நாட்கள் உல்லாசமாகத் தங்கியிருந்துவிட்டோமே என்று இருவருமே உள்ளூர வருந்திக் கொண்டிருந்தார்கள்.

தங்களுக்கு உதவி செய்வதற்காகத் தலையிட்டு, சோழர்களும் தங்களைச் சோதனைக்கு ஆளாக்கிக் கொண்டார்களே என்றும் விக்கிரமன் வருந்தினான். போர் நிலை எப்படியுள்ளதோ— தன் தந்தையும் பல்லவராயரும் எப்படியிருக்கிறார்களோ என்று நினைத்துக் கவலைப்பட்டான்.

ஏதோ ஒரு வகையில் தான் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டது போல அவனுக்குத் தோன்றியது. இத்தனை நாட்கள் உறையூரில் தங்கியிருந்திருக்கக் கூடாது என்று அவன் நினைத்துக் கொண்டான். ஓர் இளம் பெண்ணின் அழகில் மதி மயங்கிப் போய், தேசத்தையும் சூழ்நிலைளையும் மறந்துவிடக் கூடிய அளவிற்குத் தான் எங்கே எப்போது இடறி விழுந்தோம் என்று யோசித்து யோசித்து அவன் கவலை கொண்டிருந்தான்.

தியாகவல்லி அவனுடைய மன உணர்வுகளை ஓரளவு அனுமானித்துக் கொண்டவளாக அவனைத் தேற்றினாள்.

"கவலைப்படாதீர்கள்! தாத்தா எதையும் திட்டமிட்டே செய்வார். ஆகையால் உங்களால்தான் இந்தப் போர் ஏற்பட்டதென்று நினைக்க வேண்டாம். போரின் நிலவரம் சரியாகத் தெரியாத போது நாம் உறையூரில் தங்கியிருந்ததனால் தவறில்லை."

பின்னர் தேரோட்டியும் திரும்பிச் சொன்னாள்:

“அனந்தபாலா! இவரைப் பாண்டிய குமாரர் என்று யாரிடமும் சொல்லிவிடாதே! கலவரமடைந்த பொதுமக்களுடைய கோபம் எப்போது யார் மீது திரும்புமென்று சொல்ல முடியாது.”

விக்கிரமனுக்கு அந்தப் பெண்ணின் நடவடிக்கைகள் வியப்பை ஏற்படுத்தின. ‘தனிமையில், தியாகவல்லி, என்று அழைத்த ஒரே ஒரு அழைப்பில் உருகிப் போய், நாணித் தலை கவிழ்ந்து பேச்சு வராமல் நின்ற இவள்தானா– இந்த நெருக்கடியான கட்டத்தில் இத்தனை நிதானத்தோடும் முன்யோசனையோடும் செயல்படுகிறாள்?’ என்று ஆச்சரியப்பட்டான்.

திடீரென்று ஏற்படக்கூடிய நெருக்கடிகளின் போது ஆண்கள் திகைத்து நின்றுவிடுவதும், பெண்கள் தீவிரமாகச் செயல்படுவதும் இயல்பு போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான்.

அவள் அனந்தபாலனுக்கு இட்ட கட்டளையின் இன்றியமையாமை, போகப் போக அவனுக்குப் புரிந்தது. அங்கங்கே இருந்த கூட்டத்தில் சில பகுதியினர் குலசேகர பாண்டியர் மீது ஆத்திரம் கொண்டிருந்தனர்.

“குலசேகரன் குடிகெடுத்துவிட்டான்” என்று கோபமாக ஒருவன் திட்டியதைக் கேட்ட போது விக்கிரமனுடைய விழிகள் சிவப்பதைத் தியாகவல்லி கவனித்தாள்.

# 25. கண்ணீர்க் காவிரி

விக்கிரமனுடைய கண்கள் சிவந்ததையும், உள்ளத்தில் கோபம் குமுறவே, அவன் உணர்ச்சிவசப்படத் தொடங்கியதையும் தியாகவல்லி உணர்ந்தாள்.

அந்தச் சூழ்நிலையை அப்படியே நீடிக்கவிட்டால் ஏற்படக் கூடிய விளைவுகளை எண்ணிப் பார்த்தவளாக, அவனுடைய தோளில் தன் வலது கையை வைத்து அவனுடைய கவனத்தைத் தன் பக்கம் திருப்பினாள்.

"சாதாரணக் குடிமக்கள் அச்சத்திலும் ஆத்திரத்திலும் பேசும் வார்த்தைகளுக்கு அர்த்தமே கிடையாது" என்றாள்.

அவளுடைய தளிர் விரல்கள் மிக மென்மையாகத் தன் தோளில் பதிந்த போது– அபூர்வமாக மீட்டத் தெரிந்தவருடைய கைகள் பட்டவுடன் அடங்கிக் கட்டுப்பட்டுவிடுகிற யாழ் போல் அவன் அமைதியடையத் தொடங்கினான்.

தியாகவல்லி தொடர்ந்தாள்:

"யுத்த காலத்தில் சிறிய வதந்திக்குக் கூடச் சிறகு முளைத்துவிடும். பாண்டிய இளவரசர் சோழ நாட்டுக் குடிமக்களுடன் சண்டையிட்டார் என்ற செய்தி பரவினால் போதும்– போர்க்களத்தின் போக்கே மாறிவிடலாம்."

"உண்மைதான்! எங்களுக்காகப் போர் புரிந்து கொண்டிருக்கும் சோழ வீரர்கள் எங்கள் மீது அதிருப்தியடைவார்கள்" என்று ஒப்புக்கொண்ட விக்கிரமன், தியாகவல்லியைப் பெரிதும் பாராட்டினான்.

"இத்தனை முன் யோசனையும் அரசியல் நுணுக்கமும் உன்னிடம் இருப்பது கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன்."

"தாத்தாவிடம் ஒரு நாள் பழகினால் போதும், ராஜதந்திரம் வந்துவிடும். தாத்தாவின் செயல்களை ஒரு நாள் கவனித்தால் போதும். வீரம் பிறந்துவிடும். ஊரெல்லாம் கலங்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் கூடச் சற்றும் தளராமல் நான் தைரியமாக இருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா?

“கங்கைகொண்ட சோழரும், கரிகால் வளவரும் பிறந்த இந்த வீர பூமியில்கூட— பல்லவராயரைப் போல் இணையற்ற ராஜதந்திரமும், ஈடற்ற வீரமும் இணைந்த ஒருவர் இதுவரை தோன்றவில்லை. அவர் இருக்கும் வரைக்கும் சோழ தேசத்தை யாரும் அசைக்க முடியாது. அவருடைய நடவடிக்கைகளை அத்தனை எளிதில் யாரும் புரிந்து கொள்ள முடியாது. நான்கூட ஒருமுறை..” என்று தொடங்கிப் பல்லவராயர் மீது தான் சந்தேகப்பட்ட சந்தர்ப்பத்தை எடுத்துரைத்தாள் தியாகவல்லி.

பல்லவராயர் என்கிற அந்த மாமனிதர் மீது விக்கிரமன் வைத்திருந்த மரியாதை இப்போது பலபடி உயர்ந்து கொண்டிருந்தது. அவர் இருக்கும்வரை தன் தந்தைக்கோ தன் நாட்டுக்கோ, சோழ தேசத்திற்கோ எவ்வித ஆபத்தும் வராது என்ற தைரியமும் உண்டாகியது.

வழியில் தென்பட்டவர்களுக்கெல்லாம் அவனும் ஆறுதல் கூறத் தொடங்கினான்.

இராசேந்திரப் பட்டணத்தைத் தாண்டித் தேர் சென்று கொண்டிருந்த போது— நூற்றைம்பது இருநூறு குதிரை வீரர்கள் அடங்கிய ஒரு சிறுபடை வெகு வேகமாகக் காற்றைக் கிழித்துக் கொண்டு விரைந்தது. அப்படையின் தலைவன் புலிக்கொடி பறக்கும் தேரைப் பார்த்துவிட்டுச் சற்றுத் தயங்கிய போது, விக்கிரமன் கம்பீரமாகத் தனது கையை அசைத்து அவனை அருகே வருமாறு ஆக்ஞையிட்டான். அவன் கட்டளையிட்ட தோரணைக்குக் கட்டுப்பட்டு அருகில் வந்த படைத்தலைவனிடம், புலி இலச்சினை பொறித்த முத்திரை மோதிரத்தைக் காட்டிவிட்டு, “நீங்கள் சோழப்படையின் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள்?” என்று அதிகாரமாகக் கேட்டான்.

“இராசேந்திரப் பட்டணத்து நாடுகாவல் நிலைப்படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அய்யா!”

“எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்?”

“தலைநகரில் இருக்கும் கோட்டைப் பாதுகாப்புப் படையினரைத் தவிர இதரப் படையினர் அனைவரையும் உடனே அனுப்புமாறு சேனைநாயகர் ஓலை அனுப்பியுள்ளாராம். சக்கரவர்த்திகள் ஆணை வந்தது. அதன்படி போர்க்களத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம்!”

"போரின் நிலைமை எப்படியிருக்கிறதாம்?"

"நம்முடைய சோழ நாட்டு மறவர்கள் வீரமாகப் போராடிக் கொண்டிருப்பதாகத் தகவல்!"

"சரி, நீங்கள் புறப்படுங்கள். வெற்றி நமதே! சிங்களரை வென்று ஜெயக்கொடி நாட்டுவோம்" என்று கூறிவிட்டு "வீரவேல்.." என்று உரத்த குரலில் முழக்கமிட்டான் விக்கிரமன்.

"வெற்றிவேல்" என்று அனைவரும் குரல் எழுப்பினார்கள். குதிரைப் படையினர் கிளப்பிவிட்டுப் போன புழுதிப் படலம் அடங்குவதற்காகச் சற்றுக் காத்திருந்துவிட்டு அனந்தபாலன் தேரைச் செலுத்தினான்.

"போர்க்களத்தின் நிலைமையில் ஏதாவது அதிருப்தி ஏற்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் துடைத்தெடுத்தது போல் இப்படி நாடுகாவல் நிலைப் படையினரைக்கூட வரவழைக்கமாட்டார் சேனைநாயகர்" என்று தியாகவல்லியும் விக்கிரமனும் பேசிக் கொண்ட போது, அனந்தபாலன் குறுக்கிட்டு ஒரு சந்தேகம் கேட்டான்.

"குதிரைப் படைத் தலைவர்— நம்முடைய சேனை, வீரமாகப் போராடிக் கொண்டிருப்பதாகத்தானே கூறினார். போரின் நிலைமையில் அதிருப்தியென்றால் அவர் சொல்லியிருக்கமாட்டாரா?"

"வீரமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறியதே அதிருப்தியின் அடையாளம்தான். சாதாரணச் செய்திகளுக்கும் போர்க்களத்துச் செய்திகளுக்கும் வேறுபாடு உண்டு" என்று தெரிவித்த விக்கிரமன் மேலும் விளக்கம் கூறினான்:

"'நம்முடைய படை பகைவர்களை முறியடித்துவிட்டது' என்று கூறினால்— படை வெற்றி பெற்றுவிட்டது என்று பொருள். 'வெற்றிகரமாக முன்னேறுகிறது' என்றால்— போரில் இருதரப்புப் படைகளும் சமபலத்தோடு இருக்கின்றன. 'வீரமாகப் போராடுகிறது' என்றால்— நிலைமையில் அத்தனை திருப்தி இல்லை. 'போராட்டம் தொடர்ந்து நடக்கிறது' என்றால்— நமது படை தோற்றுக் கொண்டிருக்கிறது என்று பொருள். சோழ தேசத்துக்கும் எங்களுக்கும் பெரிய சோதனை வந்திருக்கிறது அனந்தபாலா."

சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு, தீர்மானமான குரலில் கோபம் குமுற அவன் கூறினான்.

"தேரை வேகமாகவிடு. தலைநகருக்குப் போனவுடன் நான் போர்க்களத்துக்குப் புறப்பட வேண்டும்!"

அவனுடைய வீர வார்த்தைகளைக் கேட்டுத் தியாகவல்லி மெய்சிலிர்த்தாள்.

தலைநகரை நெருங்க நெருங்கப் புதிது புதிதாக ஏதேதோ செய்திகள் காதில் விழுந்து கொண்டிருந்தன. பொது மக்களுடைய கலவரமும் குழப்பமும் கூக்குரலும் அதிகரித்துக் கொண்டிருந்தன.

தேர் நின்று நின்று போய்க் கொண்டிருந்தது.

பயந்திருந்த மக்களை ஒரு சில மாவீர மாமணிகள் மேலும் பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். தெருவோரத்தில் நின்று கொண்டிருந்த ஒரு வழுக்கைத் தலையன் தன்னைச் சுற்றிலுமிருந்தவர்களிடம் வெகு சுவாரஸ்யமாக விவரித்துக் கொண்டிருந்தான்.

"அடடா, அதை என்னவென்று சொல்வது? கன்னியாகுமரியில் மூன்று கடல்களும் மொத்தமாகச் சந்தித்தது போல், மாதண்டநாயகர்களான இலங்காபுரியும் ஜெகத்விஜயனும் வீரபாண்டியரும் சேர்ந்து பாய்ந்து புகுந்து புறப்பட்ட போது, நம்முடைய சோழர் படை தூள் தூளாகி, இருந்த இடம் தெரியாமல் போய்விட்ட காட்சியை எப்படி வர்ணிப்பேன்? குலசேகர பாண்டியனும் பல்லவராயனும் போர்க்களத்தில் தலைகாட்டவே பயப்பட்டுக் கொண்டு– கூடாரத்தில் ஒளிந்து கொண்டார்கள். 'அந்தக் கோழைகளுடைய தலைகளைப் பறித்துக் கோட்டை வாயிலில் வைக்கும் வரை வாளைக் கீழே போடமாட்டேன்' என்று இலங்காபுரித் தண்டநாயகனும் ஜெகத்விஜயத் தண்டநாயகனும் வீரசபதம் எடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய படையில் இரண்டில் ஒருபங்கு கூடத் தேறாது நமது படை. ஆகா! அவர்களுடைய யானைகளும் குதிரைகளும் நான்கு லட்சம் வீரர்களும். அப்பப்பா..! அவ்வளவுதான். நம்முடைய சோழ நாடு இனிமேல் தலைதூக்க முடியாது. அந்தக் கிழட்டுப் பல்லவராயன் எதற்காக இப்படிப் பைத்தியக்காரத்தனமாக இதில் தலையைக் கொடுத்தான்?"

ஓர் அறிவாளியைப் போல் நின்று பேசிக் கொண்டிருக்கும் அந்த முட்டாளை உடனே வெட்டிப் போட வேண்டும் போல் விக்கிரமனுக்குக் கோபம் வந்தது. அப்பாவி அனந்தபாலனே மிகுந்த சீற்றமடைந்து தன்னுடைய தேரைவிட்டுக் கொண்டு அவன் மீது மோதப் போனான்.

வழுக்கைத் தலையன் விலகிக் கொண்டு சத்தமிட்டான்.

"அய்யோ! இவன் வேண்டுமென்றே என் மீது தேரை மோதவிடுகிறான் பாருங்கள்."

"மொட்டைத் தலையனே! முட்டாளே! தேசபக்தியற்ற நாசகாரா! பல்லவராயரைப் பற்றிக் கண்டபடி பேசிய உன் தலையைத் துண்டாக்காமல்விடமாட்டேன்" என்று கூறிவிட்டு அனந்தபாலன் தேரிலிருந்து குதித்தான்.

நெட்டை மரம் போல் நின்று கொண்டிருந்த அந்த மொட்டைத் தலை மனிதனைக் கோபத்துடன் பார்த்துவிட்டு, "விட்டுவிடு அனந்தபாலா பாவம்— அவனுக்குத் தலையின் வெளி பாகத்திலும் ஒன்றுமில்லை. உள்பாகத்திலும் ஒன்றுமில்லை" என்றாள் தியாகவல்லி.

"இப்படிப்பட்ட நீசர்களைச் சும்மாவிடக் கூடாது" என்று உறைவாளை உருவிக் கொண்டு விக்கிரமனும் இறங்கிச் செல்லவே, கூட்டத்திலிருந்தவர்களுக்கும் திடீரென்று கோபம் ஏற்பட்டது. அறிவாளியைப் போல் நடிக்கும் அந்த முட்டாளின் மேல் பாய்ந்து அவனை அடி அடியென்று அடித்து நொறுக்கினார்கள்.

தேர் விக்கிரம சோழபுரத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது— தொண்டியில் நடந்த சண்டையில் சோழர் படை தோல்வியடைந்துவிட்டதாகக் கேள்விப்பட்டார்கள். தண்டநாயகர்களின் பெயர்கள் சோழ மக்களை நடுநடுங்கச் செய்து கொண்டிருந்ததை கவனித்தார்கள். "என்ன இருந்தாலும் பல்லவராயர் இப்படி ஏமாந்திருக்கக் கூடாது" என்று பரவலாகப் பேசிக் கொள்வதைக் கேட்டு வருந்தினார்கள்.

உறுதிப்படுத்தப்படாதவரை, எந்தச் செய்தியையும் நம்ப வேண்டிய அவசியமில்லையென்று பிடிவாதமாக இருந்த விக்கிரமனும் தியாகவல்லியும், அவர்களை உடனே அழைத்து வருமாறு குலோத்துங்கனால் அனுப்பப்பட்டிருந்த காடவராயனை எதிரே

சந்தித்த போது— அவன் என்ன செய்தி சொல்லப் போகிறான் என்பதை ஆர்வத்துடன் எதிர்பார்த்தார்கள்.

குதிரையிலிருந்து இறங்கி அவர்களை நெருங்கிய காடவராயன், "இளவரசி! தங்களிருவரையும் உடனே தலைநகருக்கு வந்து சேரச் சொல்லி இளவரசர் கட்டளையிட்டிருக்கிறார்" என்றான். சற்றுத் தயங்கிய பின் "தொண்டியில் நம்முடைய படை தோற்றுவிட்டது" என்று இரங்கிய குரலில் சொன்னான்.

விக்கிரமன், தியாகவல்லி, அனந்தபாலன் மூவருடைய உள்ளங்களிலும் கூரிய வேல் பாய்ந்து குத்திக் கிழித்தது.

"சேனைநாயகருடைய தலைக்கே விலை பேசிய மழவச் சக்கரவர்த்தியையும், மழவராயனையும் சேர்த்துக் கொள்ள வேண்டாமென்று ஆரம்பத்திலேயே சொன்னேன். சேனைநாயகர் கேட்கவில்லை. நம் ஆதரவுப் படையாக நின்று கொண்டிருந்த மழவச் சக்கரவர்த்தியுடைய படைகளும், மழவராயனின் படைகளும் திடீரென்று நம்முடைய படைகளையே தாக்கியிருக்கின்றன. போர்க்களத்தில் குழப்பம் ஏற்பட்டு நம் வீரர்கள் திகைத்துப் போய்விட்டார்களாம். தண்டநாயகர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜெயித்துவிட்டார்கள்" என்றான் காடவராயன்.

"சரி, புறப்படு" என்று காடவராயனுக்கு ஆணையிட்டு, "அனந்தபாலா! குதிரைகளைத் துரத்து" என்றான் விக்கிரமன்.

துடித்துக் கொண்டிருந்த மூன்று இதயங்களைச் சுமந்து கொண்டு போன அந்தத் தேர் வழியில் தென்பட்ட கற்களையும் சிறிய பாறைகளையும் உடைத்துக் கொண்டு ஓடியது. காடவராயனின் குதிரை தேரைத் தொடர்ந்து சென்றது.

கங்கைகொண்ட சோழபுரத்திற்கு இரண்டு காதத் தொலைவில் வந்து கொண்டிருந்த போது, வெகு வேகமாக விரைந்து வந்த ஒரு குதிரை வீரன், காடவராயனைப் பார்த்தவுடன் குதிரையை நிறுத்தி அவன் காதோடு ஏதோ கூறிவிட்டுக் குதிரையை முன்னால்விட்டுக் கொண்டு போனான்.

காடவராயன் துள்ளிக் குதித்தான். மகிழ்ச்சி பிடிபடாமல் பேச்சுத் திணறியபடி விக்கிரமனிடமும் தியாகவல்லியிடமும் சொன்னான்:

"வஞ்சியிலிருந்து நமது படைகள் வந்து கொண்டிருக்கின்றனவாம். வெகு காலமாகக் காப்பாற்றிய ரகசியத்தை இப்போது உங்களுக்குச்

சொல்லுகிறேன். நம் படையில் ஒரு பகுதி இவ்வளவு காலம் சேர நாட்டில் இருந்தது. இப்போது வந்துவிட்டது. இனிமேல் தண்டநாயகர்களைத் துண்டாடுவது சுலபம். சேனைநாயகர் வெல்வார். தர்மம் வெல்லும். வெற்றி, வெற்றி!"– அவன் மகிழ்ச்சியில் துள்ளினான்.

"வீரவேல்!"

"வெற்றிவேல்!"

பொழுது இருட்டி அரை நாழிகைக்குப் பிறகு கங்கைகொண்ட சோழபுரத்தின் கோட்டை வாயிலில் சென்று அவர்களுடைய தேர் நின்றது.

வெற்றி உறுதி என்ற உற்சாகத்துடன் அவர்கள் வந்த போது, கோட்டை வாயில் மூளியாகிப் போய்விட்டது போல் காட்சியளித்தது.

தீபங்கள் ஏற்றப்படவில்லை. மங்கள வாத்தியங்களின் ஓசை கேட்கவில்லை. மணிகள் ஒலிக்கவில்லை. சோழ இளவரசி, பாண்டிய இளவரசன் இவர்களுடைய வருகைக்காகத் துந்துபி ஊதவில்லை. முரசுகள் முழங்கவில்லை.

கதவுகள் மட்டும் அழுது வடிந்து கொண்டு திறந்தன.

இழவு விழுந்துவிட்ட வீடு போல், மங்கல நாணிழந்த மங்கையர் கழுத்துப் போல், கங்கைகொண்ட சோழபுரம் காட்சியளித்தது.

காரணத்தை விசாரித்த போது எல்லாருடைய தலையிலும் இடி இறங்கியது. பூமி பிளந்தது. பூகம்பம் எழுந்தது.

"சேனைநாயகர் பல்லவராயர் தொண்டிப் போர்க்களத்தில் வீரமரணமடைந்துவிட்டார்" என்ற செய்தியைக் கண்ணீரோடு கலந்து வீரர்கள் கூறினார்கள். கேட்டவர்களெல்லாம் அழுது புலம்பி அரற்றித் துடித்தார்கள்.

அன்றைக்குக் காவிரியில் ஓடியது– தண்ணீர் அல்ல– கண்ணீர்!

# 26. சோழ தீபம்

'தொண்டியில் சோழர் படை தோற்றுவிட்டது' என்ற செய்தி வந்த போது தேச மக்களின் தேகம்தான் பதறியது.

'சேனைநாயகர் பெருமான் நம்பிப் பல்லவராயர் தொண்டிப் போர்க்களத்தில் வீரமரணம் அடைந்துவிட்டார்' என்ற செய்தி வந்து சேர்ந்த போதோ— தேசமே பதறியது.

சோழ குலத்திற்குச் சுடர் கொடுத்துக் கொண்டிருந்த தீபம் அணைந்து போனதென்பதை அறிந்த பிறகு மாளிகைகளிலும் மண்டபங்களிலும் தீபங்கள் எரியவில்லை.

இருண்ட வீடுகளும் எரிந்த இதயங்களுமாகக் கங்கைகொண்ட சோழபுரமே கதறித் துடித்தது; கண்ணீர் வடித்தது.

அரண்மனையில் இராசாதிராசர் சொல்ல முடியாத சோகத்தில் மௌனச் சிலையாகச் சமைந்திருந்தார். பேச்சு மூச்சற்றுத் தியாகவல்லி பிரக்ஞையிழந்து கிடந்தாள். அரச மருத்துவர் அரும்பாக்கக் கிழார் அவளுக்குப் பக்கத்தில் கவலையோடு அமர்ந்திருந்தார். குலோத்துங்கனும் விக்கிரமனும் ஒரு மூலையில் நின்று கலங்கிக் கொண்டிருந்தனர்.

அரசியல் உடன் கூட்டத்து அதிகாரிகளும், மந்திரி மண்டலத்தாரும், "சோழ தேசத்திற்கு ஏற்பட்டுள்ள சொல்லொணா இழப்பை, இனி எத்தனை பேர் சேர்ந்தாலும் ஈடுகட்ட முடியாது" என்று கூறிவிட்டு, 'இனி அடுத்துச் செய்ய வேண்டியது என்ன? அந்தப் புனித மனிதர் ஏற்றிவிட்டுப் போன தேச தீபத்தை அணையாமல் காப்பது எப்படி?' என்ற ஆலோசனைகளில் ஈடுபட்டிருந்தார்கள். துக்கச் செய்தியைக் கொண்டு வந்த ஒற்றன் ஒரு மூலையில் துவண்டு கிடந்தான். அவனைக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக் காடவராயன் கதறிக் கொண்டிருந்தான். 'இந்தச் செய்தி பொய்யாக இருந்துவிடக் கூடாதா?' என்று அவன் ஆசைப்படுவது போலிருந்தது.

தொண்டியில் சோழர் படை தோற்ற செய்தியைக் கேட்ட போதே மக்கள் சோர்ந்துவிட்டார்கள். சேனைநாயகர் பல்லவராயர் இருந்துமா இப்படி நிகழ்ந்தது? என்று திகைத்தார்கள். அத்தகைய சேனைநாயகர் மறைந்துவிட்டார் என்ற செய்தி வந்த பிறகு அவர்களுக்கு

எதிர்காலமே இருண்டு தென்பட்டது. பொய்யாய்ப் பழங்கதையாய்க் கற்பனையாய் மெல்லப் போய்க் கொண்டிருக்கும் சோழ தேசத்தின் நிகழ்காலமோ ஒரே சூனியமாகத் தெரிந்தது.

கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வந்து தங்கியிருந்த அயல் தேசத்தவர்களெல்லாம், தண்டநாயகர்களின் வெற்றியையும், சோழரது தோல்வியையும் கேட்டு மிரண்டு போய்த் தங்கள் சொந்த நாடுகளுக்கு ஓட்டம் பிடித்தார்கள். அப்படி ஓட்டம் பிடித்தவர்கள் சிங்களத்துத் தண்டநாயகர்களின் சூறாவளிப் பெரும்படை தமிழ் நிலத்தைச் சூறையாடிக் கொண்டிருப்பதைப் பற்றி அவரவர்களுடைய நாடுகளிலும் சொல்லி வைத்தார்கள். இதனால் சோழ தேசத்தைப் பற்றிக் கொண்டிருந்த அச்சமும் கலவரமும் சுற்றியுள்ள நாடுகளிலும் பரவிக் கொண்டிருந்தன. ஜெகத்விஜயத் தண்டநாயகன், இலங்காபுரித் தண்டநாயகன் என்ற பெயர்கள் அனைவருக்கும் சிம்ம சொப்பனமாயின. 'தண்டநாயகர்களின் பிடியிலிருந்து இனிமேல் தமிழ் பூமி தப்பவே முடியாது' —என்பது ஏற்க விரும்பாத— அதே சமயத்தில் மறுக்க முடியாத உண்மையாக மனக்கண்களில் தெரிந்தது.

கோட்டைப் பாதுகாவற் படைக்குப் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த எதிரிலிச் சோழ சம்புவராயனை அழைத்துக் குலோத்துங்கன் கர்ஜித்தான்.

"கோயிலே இடிந்த பிறகு கோட்டையைப் பற்றிக் கவலையில்லை. பாதுகாப்புப் படையைத் தயார்படுத்து. நாளை வைகறையில் நானும் விக்கிரமனும் புறப்படுகிறோம். சேர நாட்டிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கும் நம் படையில் ஐந்நூறு வீரர்கள் மட்டும் இங்கு வருவார்கள். அவர்களை வைத்துக் கொண்டு கோட்டைக் காவலைக் கவனித்துக் கொள். நேரே போர்க்களத்துக்குப் போய்க் கொண்டிருக்கும் படையோடு நாங்களும் சேர்ந்து கொள்கிறோம். தாத்தாவின் உயிர் குடித்த தண்டநாயகர்களின் குருதியைப் பிடித்துத்— தலைநகருக்கு அனுப்பி வைக்கிறேன். இந்த தேசத்துப் பெண்களெல்லாம் அதைப் பார்த்த பிறகு திலகம் வைத்துக் கொள்ளட்டும்."

கோட்டைத் தளபதி இந்தக் கட்டளையை ஏற்பதா மறுப்பதா என்று முடிவுகட்ட முடியாமல் மாமன்னர் இராசாதிராசரைப் பார்த்தான். அதுவரை கண்கலங்கி வாயடைத்துப் போயிருந்த இராசாதிராசர்,

குலோத்துங்கனுடைய பேச்சைக் கேட்டுவிட்டு எழுந்து நின்று கூறினார்.

"சம்புவராயா! இளவரசர் கட்டளையை இக்கணமே நிறைவேற்று, படைகளைத் தயார் செய்! போர்க்களத்திற்கு நானும் புறப்படுகிறேன். பல்லவராயரைக் கொன்றவர்களைப் பழி வாங்கியே தீர வேண்டும்."

சம்புவராயன் பாதுகாப்புப் படைக்கோட்டத்தை நோக்கி விரைந்தான்.

இராசாதிராசர் குலோத்துங்கனைத் தேற்றினார்.

"குலோத்துங்கா! 'இராஜ குலத்தில் பிறந்தவர்களுக்குக் கடமைகளை முடித்துக் காரியங்களைச் சாதிப்பதற்கே காலம் போதாமலிருக்கும் போது, நினைத்து நினைத்து உருகவும், நெஞ்சம் கலங்கிக் கண்ணீர் வடிக்கவும் நேரம் ஏது?' —என்று பல்லவராயர் அடிக்கடி சொல்வார். நாம் அனைவரும் இப்போது அந்த வாசகங்களைத்தான் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். கடமை நமக்காகக் காத்திருக்கிறது. படைக்கோட்டத்திற்குச் செல்! நமக்கெல்லாம் சேர்த்துக் காவிரி அழுது கொண்டிருக்கிறாள். நாம் அழ வேண்டியதில்லை."

எந்தக் கூர்வாளும் பிளந்துவிட முடியாத பேரிருள்! பாதங்கள் பூமியில் பதிந்தும் பதியாமலும் தயங்கித் தயங்கி நடந்து கொண்டிருந்தான் இளந்தேவன். எவரும் தன்னைக் கவனிக்கிறார்களா— எந்த ஓசையாவது கேட்கிறதா என்று அடிக்கடி சுற்றிலும் பார்த்துக் கொண்டான்.

குருட்டு இருட்டுத்தான் எதிரே கும்மென்றிருந்தது.

குளிர் காற்று மட்டும்தான்— சிரித்தபடியே மரங்களில் இலைக் கூந்தல்களுக்குச் சிணுக்கெடுத்துக் கொண்டிருந்தது.

ஆடல் அழகி மோகனசுந்தரியின் மாளிகை முன்பு வந்து நின்ற இளந்தேவன், தாழிடப்பட்டிருந்த கதவுகளை மெதுவாகத் தட்டினான். சற்று நேரத் தாமதத்திற்குப் பிறகு திறந்த கதவுகள், அவன் உள்ளே நுழைந்ததும் சட்டென்று மூடிக் கொண்டன. மோகனசுந்தரி ரகசியமான குரலில் அவனை வரவேற்று உட்புறத்தில் அழைத்துச் சென்றாள்.

"யாருக்காவது தெரிந்திருக்குமா?" என்று கேட்ட மோகனசுந்தரி, பதில் சொல்வதற்கு அவன் தயங்குவதைப் பார்த்துவிட்டு,

"பணிப்பெண்களை மாளிகையின் பின்புறத்தில் தூங்கச் சொல்லியிருக்கிறேன். இங்கு பேசுவது அவர்களுக்குக் கேட்காது" என்றாள்.

"இல்லை தேவி! இதுவரை யாருக்கும் தெரியவில்லை" என்றான் இளந்தேவன்.

"தெரிந்தால் சிரச்சேதம்தான்!" என்று அவள் சோகமாகச் சிரித்தாள்.

"செய்த பணிக்காகச் சிரச்சேதம் கிடைத்தால்— அது எனக்குச் சிம்மாசனம் கிடைத்த மாதிரி" என்று இளநகை செய்தான் இளந்தேவன்.

"எனக்காக நீ எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறாய்!"

"உங்களுக்காக மட்டுமில்லை. நானும் உங்களைப் போன்று சோழ நாட்டில் பிறந்தவன்தான். காவிரிச் சோற்றுக்கு நானும் கடன்பட்டிருக்கிறேன்.."

"நீ இல்லாவிட்டால் நான் நினைத்த காரியத்தை நிறைவேற்றியிருக்க முடியாது."

"நான் உங்களுக்குத் துணையாக வந்தேன். அவ்வளவுதான். உங்கள் சாகசம்தான் காரியத்தைச் சாதித்துக் கொடுத்தது."

"இந்த ஒருமுறைதான் என்னுடைய சாகசம் உன்னதமான காரியத்திற்குப் பயன்பட்டிருக்கிறது."

"தேவி..!"

"தேவி என்று கூப்பிடாதே. பாவியாகவே வாழ்ந்தவள் நான். என்னைப் பெயரைச் சொல்லியே கூப்பிடு. உன்னைப் போன்ற ஓர் உண்மையான சோழ வீரனால் உச்சரிக்கப்பட்டால் என் பெயராவது தூய்மை பெறும்" என்று கூறிய மோகனசுந்தரி— கண்கள் கலங்கவே, அவனுடைய பார்வையில் படாதபடி திரும்பிக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் மனத்தைத் தேற்றிக் கொண்டு அவள் கேட்டாள்:

"புறப்படலாமா?"

"ஆகட்டும் தேவி!"

"மறுபடியும தேவியா? மோகனா.."

இளந்தேவன் முகத்தில் ஓர் ஒளி படர்ந்தது. அந்த அன்பின் அங்கீகாரத்தை ஏற்றுக் கொண்டான். தடுமாற்றத்தோடு கூடிய குரலில் "ஆகட்டும் மோகனா" என்றான் ஒரு தயக்கத்திற்குப் பிறகு.

"ஆபத்தான பாதையில் நான் போகிறேன்" என்று மெல்லச் சிரித்தாள் மோகனசுந்தரி.

கொஞ்சமும் தயங்காமல் இளந்தேவன் கூறினான்:

"மரணமடைவதென்றாலும் உங்களுடன் வருகிறேன்."

அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு அவள் நெஞ்சு நெகிழ்ந்தாள். பரவசத்தோடும் பெருமிதத்தோடும் அவனைப் பார்த்தாள். அவனுடைய கைகளை மிகுந்த அன்புடன் பற்றிக் கொண்டு கூறினாள்:

"வீரனே, காலத்தையெல்லாம் ஆகவமல்லனுக்காகக் கழித்தேன். அந்த தேசத்துரோகியின் அரசியல் சதுரங்கத்தில் நானறியாமலே பருவப் பகடையாகப் பயன்படுத்தப்பட்டேன். அவனுக்காகவே—வீரபாண்டியன் என்ற பெண் வேட்டைக்காரனுக்கு விளையாடும் களமானேன். ஆகவமல்லனோ என்னையும் என் உணர்வுகளையும் மண்ணில் போட்டு மிதித்தான். நீ நெஞ்சில் தூக்கிச் சுமக்கிறாய்!"

இளந்தேவனுடைய தலைமுடியைத் தன் விரல்களால் வருடியபடி, "வீரபாண்டியனுக்கு விருப்பமானவள் என்பதால்தான் அந்தக் கொடியவன் என்னை இன்னும் உயிருடன்விட்டு வைத்திருக்கிறான். நீயோ எனக்காக உயிரைவிடுவதற்கும் உடன் வருகிறேன் என்கிறாய்" என்று கூறிவிட்டுப் 'பொல பொல'வென்று கண்ணீர் சிந்தியபடி விம்மினாள்.

அவள் அழுவதைப் பார்த்து அவனும் கண் கலங்கினான்.

"என் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும்படி நாட்டுக்காக ஒரே ஒரு நல்ல காரியத்தை நிறைவேற்றினேன். இந்த மகிழ்ச்சியின் இனிமையிலேயே இறந்துவிட ஆசைப்பட்டேன். அதற்குமுன் என் அம்மாவைப் பார்க்கத்தான் அழைத்துச் செல்லுமாறு உன்னிடம் வேண்டினேன். இப்போது என் மனம் மாறிவிட்டது. வாழ வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. உன்னோடு வாழ வேண்டும். உனக்காக வாழ வேண்டும்" என்று கூறி இளந்தேவனை ஏக்கத்துடன் பார்த்தாள்.

உணர்ச்சிப் பெருக்கில் திகைத்துப் போய், என்ன பேசுவதென்று தெரியாமல் அவன் திண்டாடிக் கொண்டிருந்தான்.

"சாவதற்கு வருகிறேன் என்று சம்மதித்தாய். வாழ அழைக்கிறேன், வரமாட்டாயா?" என்று அவள் தாபத்தோடு கேட்டாள்.

இளந்தேவன் தன் கைகளிரண்டையும் நீட்டி அவள் கன்னங்களில் வழிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்தான்.

ஆதரவாக அவளுடைய முகத்தை ஏந்திக் கொண்ட அவனுடைய கைகள்— நெற்றி, கூந்தல் என்று மேலே சென்று பின்புறம் சரிந்து, கழுத்தில் வருடி, முதுகில் இறங்கின. வெகு வேகமாக அவளை இழுத்து நெஞ்சோடு சேர்த்துத் தழுவிக் கொண்டான்.

இளமையின் வெறிமிகுந்த இறுக்கத்தின் நெருக்கத்தில் அவள் கட்டுண்டாள்.

உலகுக்கெல்லாம் பொதுவானதொரு மொழியில் இரண்டு இதயங்கள் உரையாடிக் கொண்டிருந்ததால்— வெளியே யாரோ கதவுகளைத் தட்டும் சப்தம் அவர்கள் காதில் விழவில்லை.

ஆத்திரம் பொங்க ஓங்கி ஓங்கிக் கதவுகளை உதைத்துக் கொண்டிருந்தான் ஆகவமல்லன்.

விடிந்ததும் போருக்குப் புறப்படப் போகிற வீரர்களைத் தேற்றி உற்சாகப்படுத்திவிட்டு, விக்கிரமனும் குலோத்துங்கனும் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது நடுயாமம் ஆகியிருந்தது. ஆந்தையொன்று எங்கிருந்தோ அலறியது. மரக்கிளைகள் சலசலத்தன.

திடீரென்று விக்கிரமன் குலோத்துங்கனைப் பிடித்து இழுத்தான்.

விர்ரென்று பாய்ந்து வந்த அம்பொன்று மண்ணில் குத்திக் கொண்டு நின்றது.

குலோத்துங்கன் திகைத்துப் போய் நின்றான்.

"மழவராயா! உன்னுடைய வேலையை யாரிடம் காட்டுகிறாய்?" என்று ஒரு கம்பீரமான குரல் இருளில் எழுந்தது.

விக்கிரமன் வாளை உருவிக் கொண்டு ஓடினான்.

மானவர்மனும் மழவராயனும் மரங்களின் மறைவிலிருந்து வெளிப்பட்டார்கள்.

மழவராயன் கூறினான்:

“விக்கிரமா! இதோ இருக்கிறானே மானவர்மன், இவன் செத்துப் போன பல்லவராயனது கையாள். பல்லவராயன் இராசாதிராசரையும் இளவரசரையும் கொன்றுவிட்டுச் சோழ சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொள்ளச் சூழ்ச்சி செய்தான். அதற்கு இவன் உடந்தையாக இருந்தான். இப்போது குலோத்துங்கரைக் கொல்வதற்கு அம்பெய்தவனும் இவன்தான். கையும் களவுமாக என்னிடம் பிடிபட்டுவிட்டதால் இப்போது கதையை மாற்றப் பார்க்கிறான். இவனை நம்பாதீர்கள். உடனே இவன் மீது வாளைப் பாய்ச்சுங்கள்!”

அப்போது மானவர்மன் குறுக்கிட்டான்:

“பலே மழவராயா, பலே! நான் எதிர்பார்த்ததற்கும் மேலே நீ புத்திசாலியாக இருக்கிறாய். ஆனால் உன்னுடைய ஆட்களுக்கும் இந்த அளவு புத்தி இருந்திருக்குமேயானால் நீ என்னிடம் அகப்படாமல் தப்பியிருக்கலாம்” என்று கூறிவிட்டு, “யாரங்கே?” என்று அதிகாரமாகக் குரல் கொடுத்தான். அவனுடைய குரல் கம்பீரமாக எழுந்து வெகு தொலைவிற்குக் கேட்டது. அரண்மனைக் காவல் வீரர்கள் அலறியடித்துக் கொண்டு வந்து சேர்ந்தார்கள்.

மானவர்மன் குலோத்துங்கனைப் பார்த்துக் கூறினான்:

“இளவரசே! நான்தான் மானவர்மன். கண்டதேவ மழவராயனைச் சிறைப்படுத்துமாறு வீரர்களுக்குக் கட்டளையிடுங்கள்.”

மானவர்மனை, அவன் முகத்தை, அவன் செயல்களை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த குலோத்துங்கன் கொஞ்சங் கொஞ்சமாக எதை எதையோ ஞாபகப்படுத்திக் கொண்டு ஆச்சரியத்திற்கும் திகைப்பிற்கும் பரபரப்பிற்கும் ஆளானான்.

கையை அசைத்து வீரர்களுக்கு ஆக்ஞையிட்டு மழவராயனைச் சிறை செய்தான்.

மழவராயனை இழுத்துக் கொண்டு வீரர்கள் சென்ற பிறகு, குலோத்துங்கன் மானவர்மன் மீது வேகமாகப் பாய்ந்து அவனுடைய தாடையைப் பிடித்து இழுத்தான்.

விக்கிரமன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

மானவர்மனுடைய தாடி பிய்க்கப்பட்டுத் தரையில் விழுந்தது.

# 27. முடிவு தெரியாத மோக நிலா

தாடி பியக்கப்பட்டுத் தரையில் விழுந்தது. மாயவர்மனாகவும் மர்மவர்மனாகவும் பகைவர்களைக் கலக்கிப் பதற வைத்துக் கொண்டிருந்த மானவர்மனின் வேடம் வெளிப்பட்டது.

வியப்பும் திகைப்பும் மேலிட விக்கிரமன் பிரமை பிடித்துப் போய் நின்றிருந்தான்.

"தாத்தா!" என்று உரத்த குரலில் தன்னை மறந்து சத்தமிட்டுக் கொண்டே, குலோத்துங்கன் விரிந்து பரந்த அந்த மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

விக்கிரமனை நோக்கிப் புன்னகையைப் படரவிட்ட சேனைநாயகர் பெருமான் நம்பிப் பல்லவராயர், தன்னுடைய நெடிய கைகளால் குலோத்துங்கனைக் கட்டித் தழுவிக் கொண்டு அவனுடைய முதுகில் ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தார்.

– பல்லவராயர் மரணமடையவில்லை– உயிருடன் இருக்கிறார் என்ற செய்தி காற்றோடு காற்றாகக் கலந்து கங்கைகொண்ட சோழபுரமெங்கும் பரவியது.

புனர்ஜென்மம் எடுத்து வந்த அந்தப் புனித மனிதரைத் தரிசிக்க வேண்டுமென்பதற்காக அலை அலையாய்த் திரண்ட மக்கள் வெள்ளம் அரண்மனையைச் சூழ்ந்து கொண்டது.

ஆனந்தப் பரபரப்பும் ஆரவாரமும் அதிகரித்துக் கொண்டேயிருந்தன.

வீடுகளில், வீதிகளில், மாட மாளிகைகளில், கூட கோபுரங்களிலெல்லாம் விளக்கேற்றப்பட்டன.

&&&

தேசமெங்கும் ஒரு தீபத்திருவிழா நடந்து கொண்டிருந்தது.

மாளிகையின் உட்புறமெங்கும் இருள் மண்டிக் கிடந்தது.

காதலியின் அரவணைப்பில் கட்டுண்டிருந்த ஆடல் அழகியும் இளந்தேவனும் கொஞ்சங் கொஞ்சமாகச் சுய நினைவுக்கு வந்த போதுதான் கதவுகள் தட்டப்படும் சத்தம் காதில் விழுந்தது.

"யாராக இருக்கும்?" என்று பரபரப்படைந்தான் அவன். "இங்கேயே இரு" என்று மெல்லிய குரலில் கூறிய மோகனசுந்தரி,

மெதுவாக நடந்து முன்புறம் சென்று சாளரத்தின் வழியே எட்டிப்பார்த்துவிட்டுத் திரும்பினாள்.

"யார் கதவைத் தட்டுவது?" என்று கேட்டான் இளந்தேவன்.

"என்னுடைய மரண தேவன்."

"மரண தேவனா?"

"ஆம், செய்தி தெரிந்துவிட்டது போலிருக்கிறது. ஆகவமல்லன் வந்திருக்கிறான்."

"அப்படியானால்— நம்முடைய மரணதேவன் வந்திருக்கிறான் என்று சொல்."

"இல்லை— நீ சாகப் போவதில்லை. உன்னை நான் சாகவிடப் போவதில்லை. நீ இங்கிருந்து தப்பிச் செல்கிறாய்.."

"முடியாது. நான் மட்டும் தப்பிச் செல்லமாட்டேன். திட்டமிட்டபடி இங்கிருந்து இருவருமே தப்பிச் செல்வோம். இயலாவிட்டால் இருவரும் சேர்ந்தே மரணத்தை எதிர்கொள்வோம்."

அந்த இளைஞனுடைய முகத்தைத் தன் இரண்டு கரங்களிலும் ஏந்திக் கொண்ட ஆடல் அழகி ஒரு பெருமூச்சுக்குப் பின் பேசினாள்:

"காலம் கடந்துவிட்டது. இந்த நேரத்தில் நானும் தப்பி வர முயற்சி செய்தால் இருவருமே அகப்பட்டுக் கொள்வோம்."

"அப்படியானால் கதவுகளைத் திறந்துவிடு. என் கடந்த கால எஜமானனை வாள் முனையால் நான் வரவேற்கிறேன்."

"வேண்டாம். என்னையும் உன்னையும் பிடிப்பதற்காக பத்துப் பன்னிரண்டு வீரர்களோடு அவன் படை நடத்தி வந்திருக்கிறான். இருவரும் அகப்பட்டுக் கொண்டு சாவதைவிட, நம்முடைய அன்பின் கதையை உலகுக்குச் சொல்ல ஒருவராவது உயிர் வாழ வேண்டும்."

"இல்லை மோகனா! உன்னுடன் சேர்ந்து வாழ முடியாத போது உன்னுடன் சேர்ந்து சாகவாவது எனக்கு அனுமதி கொடு."

"முடியாது" என்று மறுத்த மோகனசுந்தரி, அவனுடைய கலங்கிய கண்களைத் துடைத்துவிட்டபடி பேசினாள்:

"வீரனே! ஒரு சுயநலத்தோடுதான் உன்னை உயிர் வாழச் சொல்கிறேன். நம்முடைய சோழ நாடு யுத்தத்தில் ஜெயித்த பிறகு,

நாட்டு மக்களெல்லாம்— பெற்ற வெற்றியின் பெருமைகளைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள். சாதாரணமான இந்த நாட்டியக்காரியைப் பற்றி யார் நினைக்கப் போகிறார்கள்? என்னை அன்போடு நினைத்துப் பார்ப்பதற்கும், இந்த எளிய நடனக்காரியின் சோகக் கதையை அவ்வப்போது ஞாபகப்படுத்திக் கொள்வதற்கும் இந்த பூமியில் யாராவது இருக்க வேண்டும்" என்று கூறிவிட்டு அவனுடைய மார்பில் புதைந்து கொண்ட மோகனசுந்தரி, மெல்ல விசும்பத் தொடங்கினாள்.

மெதுவாகத் தலையை நிமிர்த்தி, "என் ஆசையை நிறைவேற்றமாட்டாயா?" என்று கேட்டாள்.

கண்ணீர் பெருகும் தன்னுடைய கண்களை அவனுடைய கன்னத்தில் பதித்துக் கொண்டு வேண்டினாள்:

"எனக்காக நீ உயிர் வாழ வேண்டும்!"

&&&

"எனக்குச் சாவு அவ்வளவு சீக்கிரம் வருமா?" என்று கேட்டார் பல்லவராயர்.

கொள்ளைமலர்ச் சிரிப்பின் குதூகலத்தோடு தியாகவல்லியும் குலோத்துங்கனும் விக்கிரமனும் கூடியிருந்தார்கள். காடவராயன் ஓர் ஓரத்தில் கையைக் கட்டிக் கொண்டு பணிவுடன் நின்றிருந்தான். அரச வைத்தியர் அரும்பாக்கக்கிழார், அங்கே தனக்கினிமேல் வேலையில்லை என்பதை அனுமானித்துக் கொண்டவராக நடையைக் கட்டிவிட்டார்.

பல்லவராயர் தொடர்ந்து பேசினார்:

"எல்லோரும் இப்படி ஏமாந்துவிட்டீர்களே! எனக்குச் சாவு அவ்வளவு சீக்கிரம் வந்துவிடுமா? செய்ய வேண்டிய கடமைகளெல்லாம் அப்படி அப்படியே பாக்கியிருக்கும் போது, செத்துப் போக எனக்குத்தான் மனம் வருமா? அநியாயமான சிங்களப் படையெடுப்பை முறியடிக்காமல் என் ஆவி என்னைவிட்டுப் பிரியுமா? அப்படிப் பிரிந்தால்— என் ஆத்மா அமைதி கொள்ளுமா?"

"அப்படியானால் செய்தி கொண்டு வந்த ஒற்றனுடைய வேலையா இது?" என்று சீறினான் குலோத்துங்கன்.

"இல்லை, என்னுடைய வேலைதான்."

"உங்களுடைய வேலையா?"

"ஆமாம். அது ஒரு வேடிக்கையான கதை. ஆதியோடு அந்தமாகச் சொன்னால்தான் அனைவருக்கும் புரியும். சொல்லட்டுமா?" என்று தொடங்கினார் பல்லவராயர். எல்லோரும் வெகு சுவாரஸ்யமாகக் கேட்டார்கள். பல்லவராயர் விவரித்தார்:

"தண்டநாயகர்கள் பெரும்படைகளோடு பாண்டிய மண்ணில் காலெடுத்து வைத்த போதே, அவர்களுடைய இறுதி இலட்சியம் என்னவென்பதை நான் ஊகித்துவிட்டேன். அதே சமயத்தில், நமக்கு அடங்கிக் கப்பம் செலுத்திக் கொண்டிருந்த சேரன், வீரபாண்டியனுக்கு ரகசிய உதவிகள் செய்ததோடு வடமேற்கே புதிய பேரரசை நிறுவத் தலைப்பட்டுக் கொண்டிருக்கும் கொடிய *ஹொய்சளரோடு கூட்டுறவு வைத்துக் கொண்டு, சோழ சாம்ராஜ்யத்திற்கு எதிராகச் சூழ்ச்சி புரிந்து வருவதும் தெரிய வந்தது. அதனால், முதலில் சேரனுக்குப் பாடம் கற்பித்து ஹொய்சளரை அச்சுறுத்திவிட்டு, அதன் பிறகு சிங்களரை நோக்கி முழு வலிமையையும் காட்ட வேண்டுமென்று தீர்மானித்தேன்.

"நம்முடைய சேனைகளைச் சரிபாதியாகப் பிரித்து ஒரு பகுதியைச் சேர நாட்டிற்கு அனுப்பினேன். ஆனால் சேர நாட்டிற்குப் படையனுப்பியிருக்கும் செய்தி மட்டும் வெளியில் பரவாமல் கவனமாகத் தடுத்தேன். அப்படித் தடுப்பதற்காகச் சேர நாட்டின் எல்லாத் திக்குகளிலும் ஆயிரக்கணக்கான சோழ வீரர்கள் கண்ணிமைக்காமல் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். வெளியிலிருந்து எந்தச் செய்தியும் உள்ளே செல்லவோ, உள்ளே வஞ்சி நகரத்திலிருந்து வெளி தேசங்களுக்குச் செய்தி செல்லவோ முடியாத வண்ணம் அவர்கள் தடுத்தார்கள். வணிகர்களைக் கூட வழிமறித்துத் திருப்பியனுப்பினார்கள். சேர தேசத்திற்குள் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை வெளி தேசங்கள் தெரிந்து கொள்ள முடியாமல் அவர்கள் தடுத்துவிட்டார்கள். நம் தேசத்திற்குள் செய்தி பரவாமல் நான் தடுத்துவிட்டேன்.

---

*ஹொய்சளரால் பிற்காலத்தில் சோழ தேசத்திற்குப் பெரிதும் இடையூறுகள் நேர்ந்தன.

“அப்படித் தடுக்காமலிருந்திருந்தால் தண்டநாயகர்கள் இங்கே தைரியமாகப் புகுந்து இந்நேரம் கங்கைகொண்ட சோழபுரத்தைத் தரைமட்டமாக்கியிருப்பார்கள்” என்று சொல்லிவிட்டுப் பல்லவராயர் நிறுத்தினார்.

எல்லோரும் அவர் அடுத்துச் சொல்லப் போவதை ஆர்வத்துடன் எதிர்பார்த்தார்கள்.

“சேர நாட்டிற்குச் சென்ற நம் படை விரைவில் திரும்பிவிட முடியுமென்று நம்பியிருந்தேன். ஆனால் சேரர்கள் ஹொய்சளரின் உதவியோடு நம் வெற்றியைத் தந்திரமாக வெகு காலம் தாமதப்படுத்திவிட்டார்கள். சிங்களர்களுடைய செயல்கள் எனக்குச் சீற்றம் விளைவித்த போதெல்லாம், பாதிப் படையை வைத்துக் கொண்டு பலம் மிகுந்த சிங்களப்படையோடு மோதக் கூடாதென்று முடிவு கட்டினேன். மானவர்மன் என்ற கிழட்டுப் படை வீரனின் வேடத்தோடு தேசமெல்லாம் சுற்றி வந்தேன்” என்று கூறிய பல்லவராயர், வழுவழுப்பான தன் தாடையைத் தடவிக் கொண்டார்.

“தாத்தா! தாடி இங்கேயிருக்கிறது” என்று மறைத்து வைத்திருந்த ஒட்டுத் தாடியை எடுத்துக் காட்டினாள் தியாகவல்லி.

எல்லோரும் சிரித்தார்கள்.

“என்னுடைய திட்டங்களையெல்லாம் தண்டநாயகன் செய்த தந்திரங்கள் தவிடு பொடியாக்கிவிட்டன” என்று இரங்கிய குரலில் கூறிவிட்டுப் பல்லவராயர் நிறுத்திய போது, அங்கே இருந்தவர்கள் கண்ணிமைக்காமல் அவரைப் பார்த்தார்கள்.

“ஜெகத்விஜயன் வெறும் முரடன். இலங்காபுரி அப்படியல்ல. சிங்களத்து வேந்தர் பராக்கிரமபாகுவின் ராஜதந்திரக் கலைகளை அவனும் நன்கு பயின்றிருக்கிறான். என்னைப் படையோடு வரவழைக்க அவன் சாமர்த்தியமான காரியங்களைச் செய்ய ஆரம்பித்தான்— சரித்திரத்தில் கைவைத்தான்.”

“சரித்திரத்தில் கை வைத்தானா?” என்றான் விக்கிரமன்.

“ஆமாம்! என்னால் வேறெதையும் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் சரித்திரத்தில் களங்கம் உண்டாக மட்டும் நான் ஒரு நாளும் இடம் கொடுக்கமாட்டேன். இதை நன்றாகப் புரிந்து கொண்ட இலங்காபுரி, குந்தூரகாலத்தில் பராக்கிரமபாகுவின் பெயரால் கோட்டை கட்டினான். சோழர்களை வென்றதாகப் பொய்யான

நாணயம் தயாரித்தான். பாண்டிய வீரர்களைச் சோழ நாட்டுக் கைதிகள் என்ற பெயரில் ஈழநாட்டிற்கு அனுப்பி வைத்தான்.

“இதற்கு மேல் அவனைவிட்டு வைக்கக் கூடாதென்று முடிவெடுத்தேன். சேர நாட்டிற்கு அவசரமாகச் செய்தியனுப்பிவிட்டுத் தெற்கே படையோடு புறப்பட்டேன். தொண்டியில் தண்டநாயகர்களுடைய படைகளை நம்முடைய படைகள் சந்தித்தன. சிங்களப் படையில் நம்முடைய சேனை மூன்றில் ஒரு பங்குக்கூடத் தேறாது. முழு வலிமையையும் காட்டி உடனே போரிட்டால் சர்வ நாசமடைவது உறுதியென்று தோன்றியது. இதனால் போரின் இறுதி முடிவை இன்னும் கொஞ்ச நாளைக்குத் தள்ளிப் போட முடிவு செய்தேன். போர்க்களத்திற்குப் போன பிறகும் கூட, சேர நாட்டிலிருந்து நம்முடைய படையின் வருகைக்காகப் போரைத் தாமதப்படுத்தினேன். தோற்றுக் கொடுத்து வெற்றியடையத் திட்டமிட்டேன். தொண்டியில் நம்முடைய படை தோற்றது.

“துரோகிகளான கண்டதேவ மழவராயனையும் மழவச் சக்கரவர்த்தியையும் இதற்குப் பயன்படுத்திக் கொண்டேன். நண்பர்கள் போல் நடித்துக் கொண்டிருந்த அவர்களை நம்புவதாக நானும் நடித்தேன். அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டேன். என்னுடைய தலைக்குத் தென்பாண்டி மண்டலத்தை விலை பேசியிருந்த அந்தப் பைத்தியக்காரர்கள், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட பின் என்னைத் தண்டநாயகர்களிடம் ஒப்படைப்பதற்காகத் தனி மாளிகையில் சிறை வைத்தார்கள்.

“அவர்களிடமிருந்து தப்புவது அத்தனை கடினமாக இருக்குமென்று ஆரம்பத்தில் நான் நினைக்கவில்லை. விளையாட்டுத்தனமாகச் சிறைப்பட்டுவிட்டு அங்கிருந்து வெளியேற முடியாமல் திண்டாடினேன். என்னுடைய வாழ்நாளில் என் ராஜதந்திரம் அங்குதான் முதல் முறையாகத் தோற்றுப் போனது” என்றார் பல்லவராயர்.

“ஆ!”– கூடியிருந்தவர்கள் ஆச்சரியமும் வருத்தமும் தொனிக்க அர்த்தமில்லாத ஓசையை எழுப்பினார்கள்.

“அத்தகைய இக்கட்டான கட்டத்தில்தான், அந்தப் பெண் தன் உயிரைப் பணயம் வைத்து என்னைக் காப்பாற்றினாள்” என்று பல்லவராயர் மீண்டும் கூறினார்.

குலோத்துங்கன் ஆவலுடன் கேட்டான்:

"தங்களைக் காப்பாற்றியது யார்?"

&&&

"நான்தான் காப்பாற்றினேன்" என்றாள் மோகனசுந்தரி.

"ஆமாம்! பல்லவராயரை நான்தான் காப்பாற்றினேன். கங்கச் சிற்றரசரே! ஓடுங்கள். ஓடிப் போய்ச் சிங்களத்துத் தண்டநாயகர்களிடம் கூறுங்கள்" என்று தொடர்ந்து கூறிவிட்டு ஆகமவல்லனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தாள்.

சினம் பொங்கும் குரலில் ஆகவமல்லன் சீறினான்:

"தண்டநாயகர்களிடம் கூறுவதாக இருந்தால் செய்தி தெரிந்த உடனேயே கூறியிருப்பேன். உன்னையும் இளந்தேவனையும் கொன்று, உங்கள் பிணங்களோடு சென்று தண்டநாயகர்களுக்குத் தகவல் சொல்ல வேண்டுமென்பதால்தான் இங்கே வந்தேன்."

"கங்கச் சிற்றரசர் மிகவும் கருணையுள்ளவர். எங்களைப் போன்ற வெள்ளை உள்ளம் கொண்டவர்கள் இந்த உலகத்தில் உயிருடன் இருப்பதைக் காட்டிலும் பிணமாகிவிடுவதே உத்தமம் என்பதை உணர்ந்து கொண்டிருக்கிறார்" என்றாள் மோகனசுந்தரி.

"நேர்த்தி மிகுந்த உன் வார்த்தைகளைக் கேட்டு என் நெஞ்சு நெகிழ்ந்துவிடாது" என்று கூறிய பின், உடன் வந்திருந்த வீரர்களைப் பார்த்து அவன் உத்தரவிட்டான்.

"இங்கேதான் எங்காவது ஒளிந்து கொண்டிருப்பான். இழுத்து வாருங்கள் அந்த இளந்தேவனை!"

வீரர்கள் மாளிகையின் உட்புறம் விரைந்தார்கள்.

"தொடக்கூடாது என்று எனக்குத் தடை போட்டவளே! இப்போது பார்– மரணம் உன்னைத் தொடப் போகிறது. தழுவப் போகிறது. தூக்கிச் செல்லப் போகிறது" என்று ஆடல் அழகியைக் கேலி செய்துவிட்டு ஆகவமல்லன் கேட்டான்:

"தப்பிச் சென்ற பல்லவராயன் எங்கே போனான்?"

# 28. அவமானமும் வெகுமானமும்

“தப்பிச் சென்றபின் நேரடியாக நம் பாசறைக்குப் போனேன்” என்றார் பல்லவராயர்.

“நம் படைத்தலைவர்களுடைய ரகசியக் கூட்டத்தைக் கூட்டினேன். வேதவனமுடையான் அம்மையப்பனிடமும் குலசேகர பாண்டியரிடமும் விவரங்களைக் கூறிவிட்டு ஒரு பொய்யான செய்தியை நானே பரப்பிவிட்டேன். போர்க்களத்தில் நான் இறந்துவிட்டதாகவும், மழவராயனும் மழவச்சக்கரவர்த்தியும் என் தலையை வெட்டியெடுத்துச் சென்றதாகவும் செய்தி பரவியது.

“தண்டநாயகர்கள் தலையைக் கேட்டார்கள். இல்லாத காரணத்தால் மழவராயனும் மழவச்சக்கரவர்த்தியும் தர மறுத்தார்கள். ஒருவரையொருவர் சந்தேகித்தார்கள். கவனங்கள் திசை திரும்பின. ஆதரவுப் படைகளே ஒன்றையொன்று அடித்துக் கொண்டன. நம்முடைய படை பின் வாங்கியது. தொண்டிப் போருக்குப் பின் தாமதிக்க நமக்கு வாய்ப்புக் கிடைத்தது.

“இதற்கிடையில் உருத்தெரியாமல் சிதைந்து போன தலையொன்றைச் சிங்களத்துத் தண்டநாயகர்களிடம் கொண்டு போய் ‘இதுதான் பல்லவராயருடைய தலை’ என்று ஒப்படைத்து எங்கள் திட்டங்களுக்கு உறுதுணை புரிந்தான் இளந்தேவன் என்ற மாவீரன்.”

“அது யார் தாத்தா?” என்றான் விக்கிரமன்.

பல்லவராயர் பதிலுரைத்தார்.

“மோகனசுந்தரியின் காதலன்.”

&&&

“காதலன் அல்ல— கள்ளக் காதலன்” என்று பரிகாசமாகச் சிரித்தான் ஆகவமல்லன்.

“அவனுடைய காதலில் கள்ளம் இருக்கலாம். ஆனால் களங்கம் கிடையாது” என்றாள் மோகனசுந்தரி.

“உண்மைதான்! களங்கம் அவனிடம் கிடையாது. உன்னிடம்தான்” என்ற ஆகவமல்லன் மாளிகையின் உள்ளே

தேடிவிட்டுத் திரும்பிய வீரர்களைப் பார்த்து "எல்லா இடங்களிலும் தேடினீர்களா?" என்று கேட்டான்.

"தேடிவிட்டோம். காணவில்லை."

"பணிப்பெண்கள் என்ன சொல்கிறார்கள்?"

"இளந்தேவன் இங்கு வரவில்லை என்று சொல்கிறார்கள்?"

"பணிப்பெண்களில் எவளாவது ஒருத்தியை இழுத்து வாருங்கள். விசாரிக்கிற விதத்தில் நான் விசாரிக்கிறேன்" என்றான் ஆகவமல்லன்.

கலையாத தூக்கக் கலக்கத்துடனும் அச்சத்துடனும் தொலைவில நின்று கொண்டிருந்த பணிப்பெண்களை நோக்கி இரண்டு வீரர்கள் நகர்ந்தார்கள்.

"நில்லுங்கள்!" என்று அவர்களைத் தடுத்துவிட்டு ஆகவமல்லனை நோக்கித் திரும்பிய மோகனசுந்தரி கூறினாள்:

"ஒரு பாவமும் அறியாத பணிப்பெண்களைத் தொல்லை செய்ய வேண்டாம்."

"அப்படியானால் நீயே சொல்! இளந்தேவன் எங்கே?"

"பத்திரமாக இருக்கிறான்."

"எங்கே?"

"இங்கே.." என்று தன்னுடைய நெஞ்சைச் சுட்டிக்காட்டினாள் மோகனசுந்தரி.

ஆகவமல்லனுடைய கண்களில் அனல் பறந்தது.

"சாகப் போகும் போதுமா சரசமாடுகிறாய்? எங்கே இருக்கிறான் இளந்தேவன்?"

"ஜெகத்விஜயனிடம் கொண்டு போய்த் தலையைச் சேர்ப்பித்த பின் அவன் சோழ நாட்டுக்குப் பயணமாகிவிட்டான்."

"இருக்காது. அவன் சோழ நாட்டுக்குப் போயிருக்க முடியாது. அவனுக்காகத்தான் என் கைகளில் கைலாச நாடு காத்திருக்கிறதே!" என்று வெறியோடு முழங்கிய ஆகவமல்லன்—

“தக்க சமயத்தில் தெரிந்திருந்தால் பல்லவராயன் உட்பட உங்கள் அனைவருக்குமே கூண்டோடு கைலாசம் கொடுத்திருப்போம். கெடுத்துவிட்டான்..” என்று நறநறவென்று பற்களைக் கடித்தபடி—

“மழவராயன் என்ற முட்டாள்” என்று முடித்தான்.

&&&

“மழவராயன் ஒரு முட்டாளல்ல” என்றார் பல்லவராயர்.

“சிறைப்படுத்தியவுடன் என்னைத் தண்டநாயகர்களிடம் ஒப்படைத்திருந்தாலும் அவர்கள் ஒப்பந்தப்படி நடந்து கொண்டிருக்கமாட்டார்கள். நான் தப்பிய பிறகு தகவல் தெரிவித்திருந்தாலும் அவர்கள் நம்பியிருக்கமாட்டார்கள். முன்யோசனையில்லாததால்தான் மழவச் சக்கரவர்த்தியின் தலை மண்ணில் உருண்டது. தண்டநாயகர்களிடமிருந்து மழவராயன் மட்டும் தப்பிவிட்டான்.”

“தண்டநாயகர்களிடமிருந்து தப்பித்தும் பயனில்லாமல் போய்விட்டதே! மானவர்மரிடம் வந்தல்லவா மாட்டிக் கொண்டான்” என்று சிரித்தான் விக்கிரமன்.

“எப்படியோ.. நீங்கள் திட்டமிட்டபடி போரைத் தாமதப்படுத்துவதற்கு, துரோகிகள்கூட உங்களுக்குத் துணை செய்திருக்கிறார்கள்” என்றான் குலோத்துங்கன்.

சிந்தனை வயப்பட்டவராக இருந்த பல்லவராயர் சிறிது நேரம் கழித்து பதில் கூறினார்:

“மோகனசுந்தரி இல்லாவிட்டால் என்னுடைய திட்டங்களெல்லாம் நிறைவேறியிருக்காது!”

&&&

“நீ இல்லாவிட்டால் என்னுடைய திட்டங்களெல்லாம் நிறைவேறியிருக்கும்” என்று ஆவேசத்துடன் மோகனசுந்தரியைப் பார்த்துக் கூறினான் ஆகவமல்லன்.

அவள் புன்னகை செய்தபடி கேலியாகக் கூறினாள்:

“நல்லவேளை, சோழ நாடு பிழைத்துக் கொண்டது.”

&&&

"ஆமாம். சோழ நாடு பிழைத்துக் கொண்டது" என்றார் பல்லவராயர்.

"நமக்குத் தெரிந்து, குலோத்துங்கனைக் கொலை செய்ய நடந்த இரண்டாவது முயற்சி இது. முதல் முயற்சி வைணவ அடியார்களைப் போல் வேடமிட்ட சோழ நாட்டுச் சதிகாரர்களால் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது முயற்சியில் மழவராயன் ஈடுபட்டான்."

"மழவராயன் இங்கு எதற்காக வந்தான்?" என்று குறுக்கிட்டான் குலோத்துங்கன்.

"உன்னைக் கொல்வதற்காகத்தான் வந்தான். தொடர்ந்த தோல்விகளும் மழவச்சக்கரவர்த்தியின் மரணமும் அவனை விரக்தியடைய வைத்தன. உன்னைக் கொலை செய்வதன் மூலம், சோழ குலத்தைப் பழிவாங்க வேண்டுமென்று திட்டமிட்டு, ஆட்களுடன் வந்தான். அவனைப் பின்தொடருமாறு ஒற்றர் சிலரை அனுப்பி வைத்தேன். அப்போதும் மனம் சமாதானப்படவில்லை. உனக்கு ஆபத்து எதுவும் ஏற்படக் கூடாதென்பதற்காகவே அந்த அவசரமான யுத்த பூமியைவிட்டு நானும் இங்கே ஓடி வந்தேன். குலோத்துங்கா! சோழ குலத்தின் எதிர்காலம் உன்னை நம்பித்தான் இருக்கிறது. உன்னைக் காப்பாற்ற வேண்டியது மற்றெல்லாவற்றையும்விட முக்கியமானதல்லவா?"

"தாத்தா!" என்று எதுவும் பேச முடியாமல் குலோத்துங்கன் குரல் நெகிழ்ந்தான்.

"ஆனால், குலோத்துங்கனைக் காப்பாற்றிய பெருமையை விக்கிரமன் பெற்றுக் கொண்டான்" என்ற பல்லவராயர் தியாகவல்லியின் மீது விழிகளைப் பதித்தபடி குறும்புப் புன்னகையோடு கூறினார்:

"விக்கிரமனுக்கு அதற்காக ஒரு அபூர்வப் பரிசு காத்திருக்கிறது."

&&&

"கங்கச் சிற்றரசனுக்குப் பயங்கரமான தண்டனை காத்திருக்கிறது" என்றாள் மோகனசுந்தரி.

"தோல்விமேல் தோல்வியடைந்து கொண்டிருக்கிறது சோழர் படை. தங்களையே காப்பாற்றிக் கொள்ள முடியாமல் தடுமாறிக்

கொண்டிருக்கும் சோழர்கள்தானா எனக்குத் தண்டனை தரப் போகிறார்கள்?” என்று சிரித்தான் ஆகவமல்லன்.

“யுத்தத்தில் இறுதி வெற்றி சோழர்களுக்கே!”

“அதைத் தீர்மானிக்க வேண்டியது வாள்களின் வீச்சு! உன் வாய்மொழிப் பேச்சல்ல.”

“இருக்கட்டும். வென்றாலும் தோற்றாலும் உன்னை தண்டிக்கப் போகிறவர்கள் சோழர்கள் அல்ல” என்று கூறிவிட்டு, மேற்கொண்டு சொல்லத் தயங்கியவளாக மோகனசுந்தரி, அருகில் நின்று கொண்டிருந்த வீரர்களைப் பார்த்தாள்.

வீரர்களைச் சற்றுத் தொலைவில் விலகியிருக்குமாறு சைகை காட்டிவிட்டு ஆகவமல்லன் கேட்டான்:

“வேறு யார்?”

“தண்டநாயகர்கள்” என்று தணிந்த குரலில் பதிலுரைத்தாள் மோகனசுந்தரி.

“அவர்கள் என் நண்பர்கள்.”

“நண்பர்கள்தான். ஆனால் நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்லர்.”

“எப்படி?”

“இலங்காபுரி மிகப் பெரிய ராஜதந்திரி. யுத்தத்தில் வெற்றி பெற்றால்– வெற்றிக்குப் பிறகு– சோழ நாட்டின் செல்வாக்கு மிகுந்த சிற்றரசன் ஒருவனைச் சுதந்திரமாகவிட்டு வைத்திருப்பது ஆபத்து என்பதை அவன் அறிவான். போரில் தோற்றாலோ, தோல்விக்கெல்லாம் ஆகவமல்லன்தான் காரணம் என்று ஜெகத்விஜயன் சீறுவான்.”

“பல்லவராயனையே சமாளித்துவிட்ட எனக்குத் தண்டநாயகர்களைச் சமாளிப்பது கடினமல்ல. போர் முடிந்த பிறகு பார்த்துக் கொள்கிறேன்.”

“போர் முடிவதற்கு முன்பிருக்கும் நிலைமையோ இன்னும் மோசமானதாக இருக்கிறது” என்று புதிர் போட்டாள் அவள்.

“சீக்கிரம் சொல்லித் தொலை!” என்று சீறினான் ஆகவமல்லன்.

“பல்லவராயர் தப்பிவிட்ட செய்தி வெளியே பரவாமலிருக்கும் வரைதான் உன்னுடைய உயிருக்குப் பாதுகாப்பு. இளந்தேவனும் நானும் உன்னுடைய ஆட்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். பல்லவராயரைத் தப்பிக்க வைக்கும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டோம் என்று தெரிந்தால் தண்டநாயகர்கள் எங்களைத் தேடிக் கொண்டிருக்கமாட்டார்கள். அருகிலிருக்கும் உன்னைத்தான் அம்மானை ஆடுவார்கள்.”

“அதையெல்லாம் யோசித்ததால்தான், தப்பிவிட்டான் பல்லவராயன் என்று எனக்குத் தகவல் கிடைத்தவுடன் தாமதிக்காமல் இங்கு வந்து சேர்ந்தேன். உன்னுடைய பிணத்தோடு சென்றுதான் தண்டநாயகர்களிடம் பேசப் போகிறேன்” என்றான் ஆகவமல்லன்.

“நாட்டியக்காரிக்குத் தெரிந்த அரசியல் நுட்பம் நாடாளப் பிறந்தவனுக்குத் தெரியாமல் போய்விடுமா?” என்று தொடர்ந்து அவளைக் கிண்டல் செய்தான்.

“நாடாளப் பிறந்தவருக்குத் தெரியாத ஒரு ரகசியத்தை நான் கூறட்டுமா?” என்று அவளும் கிண்டலாகவே கேட்டபடி, “மானவர்மன் யாரென்று தெரியுமா?” என்றாள்.

“யார்?”

“பல்லவராயர்!”

“என்ன?”

“ஆமாம்! பல்லவராயர்தான் மானவர்மன்.”

“யார் கூறியது?”

“அவரே என்னிடம் கூறினார். எனக்காக எந்தச் சமயத்திலும் எத்தகைய உதவியையும் செய்வதாகவும் அவர் எனக்கு வாக்களித்திருக்கிறார். அதனால்— உன் உயிருக்கும் நான் உத்தரவாதம் வழங்க முடியும். உன்னைக் காப்பாற்ற முடியும்— இனிமேலாவது சோழ நாட்டுக்கு எதிராகச் செயல்படுவதில்லை என்று நீ முடிவு செய்தால்..”

“முடியப் போகிறவள் நீ.. என்னை முடிவு செய்யச் சொல்கிறாய்..”

“கடந்த காலக் காதலை உத்தேசித்தாவது உன்னைக் காப்பாற்ற வேண்டுமென்றுதான் முடிந்தவரை முயற்சி செய்கிறேன்.”

“குழப்பாதே என்னை! உன்னைக் கொல்லாமல்விடப் போவதில்லை” என்று கர்ஜித்தான் ஆகவமல்லன்.

“உன்னைப் போன்ற தேசத்துரோகியின் கைப்பாவையாகக் காலம் கழித்த எனக்கு இனிமேல் வாழ்வதில் விருப்பமும் இல்லை.”

“என்னையா துரோகி என்கிறாய்? இளந்தேவனுடன் கொஞ்சிக் குலாவிய பாதகி!” என்று சத்தமிட்டபடி அவளை நெருங்கினான் ஆகவமல்லன்.

“வீரபாண்டியன் தொட்டால்— நான் உனக்கு நாயகி! இளந்தேவன் தொட்டால் மட்டும் பாதகியா?” என்று இளக்காரமாகக் கேட்டாள் மோகனசுந்தரி.

ஆத்திரம் பொங்க அவளுடைய கன்னத்தில் ஓங்கி அறைந்தான் ஆகவமல்லன்.

விண்ணென்று வலித்த கன்னத்தைத் தடவிவிட்டுக் கொண்டே கொஞ்சமும் அச்சமில்லாமல் அவள் கூறினாள்:

“இந்தக் கன்னத்தில் ஆசையோடு நீ எத்தனையோ முறை முத்தமிட்டிருக்கிறாய்.. அதெல்லாம் என்னுடைய அவமானம். இப்போது கிடைத்ததே— இதுதான் எனக்கு வெகுமானம்.”

“அப்படியானால்— இந்தா இன்னொரு வெகுமானம்” என்று சீறியபடி மறுபடியும் அறைந்தான் அவன்.

கண்ணீர் படிந்திருந்த அவளுடைய இரண்டு கன்னங்களிலும் அவனுடைய கைவிரல்கள் ஆழமாகப் பதிந்தன.

தண்ணீரைத் தேக்கி வைப்பதற்காக வெட்டப்பட்ட கால்வாய்களைப் போல் அவை காட்சியளித்தன.

அன்பின் ஈரத்தைப் பற்றி அறிந்திராத ஆகவமல்லன் கேட்டான்:

“வெகுமானம் இன்னும் வேண்டுமா?”

&&&

“வேண்டாம். தங்கள் அபிமானமே எனக்கு வெகுமானம்” —என்றான் விக்கிரமன் பல்லவராயரைப் பார்த்து.

“விக்கிரமா! நன்றாக யோசித்துவிட்டுச் சொல். அப்புறம் தியாகவல்லி கோபித்துக் கொள்ளப் போகிறாள்” என்றான் குலோத்துங்கன்.

"தாத்தா! இந்த இடைவெளியில் அங்கே மறுபடியும் சண்டை நடந்திருக்காதா?" என்று கேட்டான் விக்கிரமன்,

"சண்டை நடந்து கொண்டுதான் இருக்கும். அநேகமாக மீண்டும் ஒருமுறை நம் படை தோற்றிருக்கலாம். ஆனால் சேதம் அதிகமிருக்காது. இதோ சேர நாட்டிலிருந்த நமது படை திரும்பித் தெற்குப் போர்க்களத்திற்குப் போய்க் கொண்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. நானும் புறப்படுகிறேன். எண்ணிச் சில நாட்களுக்குள் தலைநகருக்கு வெற்றிச் செய்தி வரும்" என்றார் பல்லவராயர்.

மாமன்னர் இராசாதிராசர் உள்ளே நுழைந்து "சேனைநாயகரே! சேர நாட்டிலிருந்து திரும்பிய படையில் ஐநூறு வீரர்கள் இங்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். மற்றவர்கள் மதுரைக்கு நாற்பது காதத்தில் நெருங்கிக் கொண்டிருப்பதாகத் தகவல்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

"வெற்றி நெருங்கிவிட்டது" என்று மகிழ்வுடன் கூறிய பல்லவராயர், எழுந்து கொண்டார்.

"தாத்தா! இந்த வெற்றிப் போருக்கு நாங்களும் வருவோம்!" என்று விக்கிரமனும் குலோத்துங்கனும் பிடிவாதம் பிடித்தார்கள்.

"அதெல்லாம் முடியாது. சிங்களரைத் துரத்தியடித்த சரித்திரப் பெருமை சேனைநாயகனுக்கே சேரட்டும். அரசரோ, இளவரசரோ, மற்றவர்களோ அதில் பங்கு கேட்பதை நான் அனுமதிக்கமாட்டேன்" என்று சிரித்தார் பல்லவராயர்.

மாமன்னர் கேட்டார்:

"சேனைநாயகரே! எதிரிலிச் சோழ சம்புவராயன், சிங்களப் படை தோற்றோட வேண்டுமென்று உமாபதி தேவராகிய *ஞானசிவ தேவரிடம் வேண்டிக் கொண்டானாம். அப்பெருந்தகையாரும் அதன் பொருட்டு– அன்ன ஆகாரமின்றி இறைவன் சந்நிதானத்தில் இரவும் பகலும் தவம் செய்து வருகிறார். போர்க்களத்திற்குப் போகும் முன் அவரைத் தரிசித்துவிட்டுப் புறப்படுகிறீர்களா?"

---

*ஆர்ப்பாக்கத்துக் கல்வெட்டில் ஞான சிவதேவர் செய்த தவத்தைப் பற்றிய செய்தி செதுக்கப்பட்டுள்ளது.

"ஆகட்டும்" என்ற பல்லவராயர், அரசருடன் சேர்ந்து நடக்கத் தொடங்கினார்.

அப்போது பல்லவராயரைக் காண்பதற்காக அரண்மனைக்கு வெளியே அலைகடல் போல் திரண்டிருந்த ஜனத்திரளின் வீர முழக்கமும் ஆரவாரமும் விண்ணைப் பிளந்து கொண்டிருந்தன.

அரண்மனை முகப்பு மண்டபத்தின் உச்சிக்கு வந்து சேர்ந்த பல்லவராயர், உற்சாகத்துடன் அந்தக் கடலைப் பார்த்துக் கையசைத்தார்.

தங்களுடைய நம்பிக்கைகளின் நாயகனைத் தரிசித்த மகிழ்ச்சிப் பெருக்கு– குமுறிக் கொந்தளித்துத் திமிறிக் கொப்பளித்துக் கும்மாளமிட்டுக் குதூகலித்தது அந்த மக்கள் கடல்.

&&&

குமுறிக் கொந்தளித்துத் திமிறிக் கொப்பளித்துக் கலங்கிப் படபடத்தது– அவளுடைய மனக்கடல்.

கன்னத்தில் அறை விழுந்ததைப் பற்றி மோகனசுந்தரி கவலைப்படவில்லை.

எப்போதோ அறை விழுந்துவிட்டது இதயத்தில்!

ஆகவமல்லனை வெகு அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் அப்படிப் பார்க்கப் பார்க்க அவனுடைய கோபம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

சினம் எதிரொலிக்கும்படி இரண்டு கைகளையும் சேர்த்துத் தட்டினான். விலகியிருந்த வீரர்கள் அனைவரும் அருகில் வந்தார்கள்.

"வாள் பேச வேண்டிய நேரம் வந்துவிட்டது. வாருங்கள் வீரர்களே! உங்கள் ஒவ்வொருவருடைய போர் வாளும் இந்த நாட்டியக்காரியின் உடலுக்குள் புகுந்து நடனமாடட்டும்" என்று கொடூரமான கட்டளையைப் பிறப்பித்துவிட்டுக் குரூரமாகச் சிரிக்கத் தொடங்கினான் அந்தக் கொடியவன்.

அந்தச் சமயத்தில்– அவனுடைய ஆணவச் சிரிப்பொலியை அடக்கிவிட்டு வெகு கம்பீரமாக எழுந்தது ஒரு குரல்:

"மகாமண்டலாதிபதியவர்களே! நலமாக இருக்கிறீர்களா?"

குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்த ஆகவமல்லன் அதிர்ச்சியடைந்தான்.

# 29. தியாக நிலா

"மகாமண்டலாதிபதியவர்களே! நலமாக இருக்கிறீர்களா? உங்களை உடல்நலம் விசாரித்து வரும்படி பல்லவராயர் உத்தரவு!" என்று கூறியபடி உள்ளே வந்து கொண்டிருந்தான் வேதவனமுடையான்.

அவனைப் பின்தொடர்ந்து வந்த இளந்தேவனைப் பார்த்ததும் பெரிதும் ஆத்திரமடைந்த ஆகவமல்லன், "துரோகி!" என்று சத்தமிட்டான். இளந்தேவனைப் பிடிப்பதற்காக அவனுடைய வீரர்கள் விரைந்தார்கள்.

"நில்லுங்கள்!" என்று அந்த வீரர்களைப் பார்த்துக் கர்ஜனை செய்தான் வேதவனமுடையான்.

"இளந்தேவனையோ, மோகனசுந்தரியையோ யாராவது நெருங்கினால் இப்போதே பிணமாவீர்கள். இந்த மாளிகையைச் சுற்றிலும் என்னுடைய வீரர்கள் முற்றுகையிட்டிருக்கிறார்கள்" என்று எச்சரித்த வேதவனமுடையான் வாயிலை நோக்கிக் கையை அசைக்கவும், திமுதிமுவென்று உள்ளே நுழைந்த சோழ வீரர்கள் ஆகவமல்லனையும் அவனுடைய வீரர்களையும் சுற்றிச் சூழ்ந்து கொண்டார்கள்.

ஏராளமான அந்த வீரர்களை எதிர்த்துச் சண்டையிட்டால்—வெற்றிபெற முடியாது என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. அடுத்துச் செய்யக் கூடியது என்ன என்று யோசித்தபடி நின்றிருந்தான் ஆகவமல்லன்.

கலகலவென்று நகைத்தாள் மோகனசுந்தரி.

"எதற்குச் சிரிக்கிறாய்?" —அவன் உறுமினான்.

அவள் கூறினாள்:

"கங்கச் சிற்றரசருடைய திட்டங்களெல்லாம் பல்லவராயரிடம் பலிக்காமல் போய்விட்டது!"

"என்னுடைய திட்டங்கள் பலிக்காமல் போனதைப் பற்றிக் கவலையில்லை. நீங்கள் நினைப்பதும் நிறைவேறப் போவதில்லை."

"ஏன்?" என்று சிரித்தான் வேதவனமுடையான்.

"நான் உங்களிடம் சிறைப்பட்டிருக்கிறேன். நீங்கள் எல்லோருமே மதுரையில் சிறைப்பட்டிருக்கிறீர்கள்."

"எப்படி?"

"பூட்டப்பட்டுவிட்டன கோட்டைக் கதவுகள். போர் முடியும் வரை நீங்கள் மதுரையைவிட்டுப் போக முடியாது."

"கோட்டையின் கிழக்கு வாசலைக் காவல் செய்கிறவர்கள் குலசேகர பாண்டியரை அந்தரங்கமாக ஆதரிப்பவர்கள். இதைக் காட்டினால் போதும், கதவுகள் வழிவிடும்" என்று கச்சையிலிருந்த கணையாழி ஒன்றை எடுத்துக் காட்டினான் வேதவனமுடையான்.

"குலசேகர பாண்டியனுடைய இந்த முத்திரை மோதிரத்தை வாங்கி அவர்கள் குப்பையில் வீசுவார்கள்" என்று சிரித்தான் ஆகவமல்லன்.

"ஏன்?"

"மதுரைக் கோட்டையின் காவல் பொறுப்பு நேற்று மாலை முதல் சிங்கள வீரர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. தண்டநாயகர்களின் அனுமதி ஓலையில்லாமல் உள்ளே வரவோ, வெளியே போகவோ ஒருவராலும் முடியாது!"

வேதவனமுடையான் கூறினான்:

"அஞ்சு கோட்டை நாடாள்வான் இருக்கும்வரை அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. நேரான வழிகளைக் காட்டிலும் அவனுக்கு அதிகமாகத் தெரிந்தது— மதுரையின் ரகசிய வழிகள்தான்."

இதன் பிறகு ஆகவமல்லன் இடிந்து போனான். தனக்கிருந்த அனைத்து நம்பிக்கைகளும் தகர்ந்துவிட்ட நிலையில் வெகுநேரம் கழித்து உடைந்து போன குரலில் அவன் உரைத்தான்:

"தனாதிகாரியவர்களே! எல்லாவிதமான தயாரிப்புகளோடும் வந்திருக்கிறீர்கள். உங்களை வெற்றிபெற நினைப்பது வீண் முயற்சி" என்றான்.

"தோற்றுப் போவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் சேனைநாயகர் பல்லவராயரிடம்— தோல்வியடைந்திருந்தால் என்னுடைய கௌரவமாவது காப்பாற்றப்பட்டிருக்கும். அந்த

அந்தஸ்தைக்கூட அவர் எனக்கு அளிக்கவில்லை” என்று கூறிவிட்டுத் தலை குனிந்தான்.

“முடிந்துவிட்டது எல்லாம்..” என்று முணுமுணுத்தான்.

சற்று நேரத்திற்கு முன் சவடாலாகப் பேசிக் கொண்டிருந்த ஆகவமல்லன், சட்டென்று இப்படிச் சோர்ந்துவிட்டதைப் பார்த்த போது சுற்றிலுமிருந்த அனைவருக்கும் அவன் மீது இரக்கம் ஏற்பட்டது.

“வீரர்களே! உங்கள் வாள்களை வேதவனமுடையானிடம் ஒப்படைத்துவிட்டுச் சரணடையுங்கள்” என்று ஆகவமல்லன் தன் வீரர்களுக்கு ஆணையிடவே, அவர்கள் தங்கள் வாள்களையெல்லாம் கீழே போட்டார்கள்.

பத்துப் பன்னிரண்டு வாள்களும், சோழர் படைத்தலைவனின் காலடியில் ‘ணங்’ ‘ணங்’கென்று சொல்லிக் கொண்டு விழுந்தன.

தன்னுடைய உறைவாளையும் உருவிக் கொண்டு நடந்த ஆகவமல்லனுக்கு விலகி வழிவிட்டார்கள் சோழ வீரர்கள்.

“தங்களுடைய காலடியில் நான் போடுவது கத்தியை மட்டுமல்ல— என்னுடைய கனவுகளையும் சேர்த்துத்தான்” என்று கூறியபடி வேதவனமுடையானை நெருங்கி வாளைக் கீழே போடுவதற்காகக் குனிந்தவன், “அதற்கு முன் என்னுடைய கடைசிக் கடமையை மட்டும் நிறைவேற்றிக் கொள்கிறேன்” என்று மெல்லிய குரலில் கூறிவிட்டுத் திடீரென்று— யாருமே எதிர்பார்த்திராத வகையில்— வெகு வேகமாகத் தாவி— தொலைவில் நின்று கொண்டிருந்த மோகனசுந்தரியின் மீது பாய்ந்து— கூர்மையான தன் வாளை அவளுடைய மென்மையான வயிற்றில்— வெகு ஆழமாகப் பாய்ச்சினான்.

உள்ளே பூரணமாக வாள் ஊடுருவும் வரைக்கும், வீரர்களால் அந்த வெறி பிடித்தவனை அவளிடமிருந்து விலக்கிப் பிரிக்க முடியவில்லை.

அலறாமல், சத்தமிடாமல், வாளின் கூர்மையையெல்லாம் தன் வயிற்றுக்குள் வாங்கிக் கொண்ட மோகனசுந்தரி பொங்கிக் கொப்பளித்த இரத்தம் புனலாய்ப் பெருகியோட, ஒரு பூங்கொடி சாய்வது போல் பூமியில் சாய்ந்தாள்.

'ஆ!'வென்று பணிப்பெண்கள் அலற, வீரர் சிலர் பிரமையிலிருந்து விடுபடாமல் திகைத்து நிற்க, ஈவிரக்கமில்லாமல் குத்தப்பட்ட அந்த இளங்கிளியைத் தன் மடி மீது இளந்தேவன் ஏந்திக்கொள்ள, ஓடி வந்த வேதவனமுடையான் கொடுத்த உதையில் ஆகவமல்லன் உருண்டு சுருண்டான்.

குருதி பெருக்கெடுத்து ஓடும் போதும், தன் மந்தகாசப் புன்னகை மாறாமல் இளந்தேவனுடைய மடியில் கிடந்த மோகனசுந்தரி, தன் ஆசைகளின் நாயகனிடம் ஏதோ பேச முயன்றாள்; முடியவில்லை.

அரிய முயற்சியின் பேரில் இளந்தேவனுடைய கைகளிரண்டையும் இழுத்துத் தன் கழுத்தைச் சுற்றி மாலையைப் போல் வளைத்துப் போட்டுக் கொண்டாள்.

மன்மத மலர் போன்ற அவளுடைய அகன்ற பெரிய விழிகள்— கொடிய இந்த உலகத்தின் தர்ம நியாய வெளிச்சப் பகட்டினைக் காண நாணிக் கூசுவன போல் கொஞ்சங் கொஞ்சமாகக் குவிந்து கொண்டிருந்தன.

கண்மூடித் திறப்பதற்குள் அந்தக் காவியக் கனவு கலைக்கப்பட்டுவிட்டது.

உற்றுக் கவனிப்பதற்குள் அந்த ஓவிய கோபுரம் சரிந்துவிட்டது.

தொண்டியிலும், பாசிப்பட்டணத்திலும் சோழர் படைகளைத் தோற்கடித்த இலங்காபுரித் தண்டநாயகனும், ஜெகத்விஜயத் தண்டநாயகனும் வெற்றி மிதப்பில் விழிகளை மூடிக் கொண்டிருந்தார்கள். ஆகவமல்லனை வேதவனமுடையான் சிறைப்படுத்திவிட்டதால், பல்லவராயர் உயிருடன் தப்பிவிட்ட செய்தி தண்டநாயகர்களுக்குத் தெரியவே இல்லை.

"பல்லவராயன் மாண்டுவிட்டான். சோழர் படைகளைத் துவம்சம் செய்து கொண்டிருக்கிறோம்" என்று ஈழ மன்னன் பராக்கிரமபாகுவிற்கு அவர்கள் ஓலை அனுப்பி வைத்தார்கள்.

ஓலை அனுப்பி வைத்த நாளன்று மாலையில், சோழர் படை முகாமிட்டிருந்த பகுதியிலிருந்து ஏதேதோ ஆரவாரங்கள் தொடர்ந்து எழுந்து கொண்டிருப்பதை அவர்கள் கேட்டார்கள். சிங்கள வீரர்கள் உயரமான பனைமரங்களின் உச்சியில் ஏறிப் பார்த்துவிட்டு, சோழ வீரர் சிலர் இங்கும் அங்குமாகப் போய்க் கொண்டும் வந்து

கொண்டும் கட்டிப்பிடித்துச் சத்தமிட்டுக் கொண்டுமிருப்பதைத் தெரிவித்தார்கள்.

"சாவதற்குமுன் சந்தோஷம் கொண்டாடிவிட்டுச் சாகலாம் என்று நினைக்கிறார்கள் போலிருக்கிறது" என்றான் ஜெகத்விஜயத் தண்டநாயகன்.

இலங்காபுரித் தண்டநாயகன் பதில் பேசவில்லை.

சிங்களத்து ஒற்றர் சிலரை அனுப்பி விவரமறிந்து வருமாறு கூறினான்.

சிறு சிறு கூட்டமாக வடக்கிலிருந்து சோழ வீரர்கள் வந்து கொண்டிருப்பதாகவும், அதே போலத் தெற்கிலிருந்து வடக்கில் போய்க் கொண்டிருப்பதாகவும் ஒற்றர்கள் தெரிவித்த போது, 'போக்குக் காட்டுகிறார்கள்' என்று நினைத்து அவன் பேசாமலிருந்துவிட்டான்.

மேலும் மேலும் ஆரவாரம் அதிகரித்துக் கொண்டிருந்தது. தெற்கில் இருந்த படையினர் அப்படியே இருப்பதாகவும், வடக்குப் பகுதியில் புதிதாக வீரர்களின் கூட்டம் அதிகமாகியிருப்பதாகவும் செய்தி வந்தது.

இலங்காபுரித் தண்டநாயகன் இமைகளை நெறித்தான்.

நடுயாமம் கழித்து ஒரு நாழிகைக்குப் பிறகு, சோழர் படை முகாமிலிருந்து கிளம்பிய முழக்கங்கள் வானை இடித்துக் கடலைப் புடைத்துக் கொண்டு மேலெழுந்த போது— தூங்கிக் கொண்டிருந்த தண்டநாயகர்கள் துள்ளி எழுந்தார்கள். இலங்காபுரித் தண்டநாயகன் திடீர்த் தாக்குதலைச் சமாளிப்பதற் கேற்பத் தன்னுடைய பட்டாளத்தைத் தயார் செய்தான். துணைத் தளபதிகளை அழைத்து அவசரக் கட்டளைகள் போட்டான். உபசேனாதிபதி உதயசேனனை முன்னணிப் படைக்குத் தலைமை ஏற்கச் செய்தான். ஜெகத்விஜயத் தண்டநாயகன் குதிரையில் ஏறிக் கொண்டு கடல் போல் பரந்திருந்த சிங்களப் படைகளைச் சுற்றி வந்து முன் விழிப்பை உண்டாக்கினான். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி எந்தத் திடீர்த் தாக்குதலும் நடக்கவில்லை.

விடியற்காலைப் பொழுதில் வந்து சேர்ந்த சிங்கள ஒற்றர்கள் விபரீதமான ஒரு செய்தியைச் சொன்னார்கள்.

“பல்லவராயர் சாகவில்லை. உயிருடன் இருக்கிறார். படை முகாமிற்கு வந்துவிட்டார்.”

“ஏமாந்து போய்விட்டோம்” என்றான் இலங்காபுரித் தண்டநாயகன்.

“ஏமாற்றிவிட்டார்கள்” என்று கத்தினான் ஜெகத்விஜயத் தண்டநாயகன்.

“எங்கே ஆகவமல்லன்?” என்று கைகளைப் பிசைந்தான் இலங்காபுரித் தண்டநாயகன்.

“எங்கே இளந்தேவன்?” என்று பற்களைக் கடித்தான் ஜெகத்விஜயத் தண்டநாயகன்.

படை முகாமிற்கு வந்து சேர்ந்திருந்த பல்லவராயர், சினம் பொங்கிட வேதவனமுடையானிடம் சீறிக் கொண்டிருந்தார்.

“உங்களையெல்லாம் நம்பிச் சிங்களரோடு யுத்தத்தில் இறங்கியிருக்கும் என் புத்தியை என்னென்று சொல்வது? அபலை ஒருத்தியைக் காப்பாற்றக் கூட அருகதையற்றவன் என்ற பழியை எனக்கு ஏற்படுத்திவிட்டீர்கள்!”

“எல்லா ஏற்பாடுகளும் செய்து வைத்திருந்தேன். மாளிகையைச் சுற்றி நம் வீரர்கள் எப்போதும் காவல் இருந்தார்கள். தக்க சமயத்தில் நானும் போய்ச் சேர்ந்துவிட்டேன்! சரணடைவது போல் தந்திரம் செய்த ஆகவமல்லன்..” என்று வேதவனமுடையான் பேச்சை முடிக்கும் முன்பாகவே, “நிறுத்துங்கள்!” என்று கர்ஜித்தார் பல்லவராயர்.

“உங்கள் காரணங்களும் சமாதானங்களும் அந்த உத்தமியை மறுபடியும் உயிருடன் கொண்டு வரப் போவதில்லை! ஆகவமல்லனை என்ன செய்தீர்கள்?”

“இங்கேயே சிறை வைத்திருக்கிறோம்.”

“கங்கைகொண்ட சோழபுரத்தின் நடு வீதியில் நிறுத்தி அந்தத் துரோகியின் கைகளிரண்டையும் வெட்ட வேண்டும். தேர்க்காலில் கட்டி அவனைத் தெருத் தெருவாக இழுத்துச் செல்ல வேண்டும்!”

ஓர் ஓரத்தில் கலங்கிய கண்களுடன் நின்றிருந்த இளந்தேவனுக்குப் பக்கத்தில் வந்த பல்லவராயர், அவனுடைய தோளில் தன் கையை வைத்து, மெல்லத் தேற்றுவது போல்

ஆதரவாகத் தட்டிக் கொடுத்தார். சற்று நேரம் கழித்துத் தனக்குத் தானே பேசிக்கொள்வது போல்— "மகளே! என்னை மன்னிப்பாயா?" என்றார். அவருடைய கண்கள் கலங்கியிருந்தன.

உற்சாகமாக அப்போது உள்ளே நுழைந்த குலசேகர பாண்டியர், பல்லவராயர் இருந்த சூழ்நிலையைக் கவனித்துவிட்டுத் தயங்கி ஒருபுறமாக ஒதுங்கி நின்றார்.

"தொண்டியும் பாசிப்பட்டணமும் தோல்வியல்ல— மோகனசுந்தரியைக் காப்பாற்ற முடியாமல் போனதுதான் என்னுடைய தோல்வி!" என்று குலசேகர பாண்டியரைப் பார்த்துக் கூறினார் பல்லவராயர்.

அவருடைய கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர்த் துளிகள், முடிந்து போய்விட்ட அந்த மோக நிலாவுக்கு அஞ்சலி செய்யும் உதிரிப் பூக்களைப் போல் தரையில் சிந்திய போது— உணர்ச்சிகளெல்லாம் மரத்து வறண்டு காய்ந்து போயிருந்த அந்த யுத்த பூமியின் இதயமும் ஈரமாகிவிட்டது போலிருந்தது.

"தொண்டியும் பாசிப்பட்டணமும் என்னை ஜெயிக்க வைக்கிற தோல்விகள். இந்தத் தோல்விதான் என்னைத் தோற்க வைக்கிற தோல்வி" என்று தொடர்ந்து கூறினார் பல்லவராயர்.

பல்லவராயருடைய துக்கமோ— மோகனசுந்தரியின் மரணமோ ஏற்படுத்தாத அதிர்ச்சியை— குலசேகர பாண்டியருடைய மனத்தில் ஏற்படுத்தின பல்லவராயரின் கடைசி வார்த்தைகள்!

பல்லவராயருடைய மனநிலை— போர்க்களத்தின் முடிவினைப் பாதித்துவிடக் கூடாதே என்று அந்த முன்னாள் மன்னர் முகம் வாடத் தொடங்கினார்.

# 30. விலை பேசிய தலைகள்

கதிரவன் எழும் முன்பே படைகளை அணிவகுத்து நிறுத்திப் போர்க்களத்திற்கு வந்து சேர்ந்த இலங்காபுரித் தண்டநாயகனும் ஜெகத்விஜயத் தண்டநாயகனும் வீரபாண்டியனும் ஓர் ஆச்சரியமான காட்சியைக் கண்டார்கள்.

வில்லும் வாளும் வேலும் ஏந்திக் கொண்டிருந்த வீர மறவர்களின் கடல்— அதன் முன்னே பல்லவராயர் குதிரையின் மீது வெகு கம்பீரமாக ஆரோகணித்திருந்தார்.

சோர்ந்து போன வீரர்களுடைய முகங்களில் எங்கிருந்தோ புத்தொளி வந்து பூத்திருந்தது.

ஆ! பல்லவராயன் வந்துவிட்டான்!

இலட்சக்கணக்கான காலாட் படையினரைத் தாண்டி இலங்காபுரித் தண்டநாயகன் தன் கண்களை ஓட்டினான்.

குதிரைப் படைகளின் கூட்டம்—

ஆயிரமாயிரம் புலிக் கொடிகள் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்த தேர்கள்—

வலது ஓரத்தில் வரிசை வரிசையாக மலைத்தொடர்களைப் போல் யானைகள்—

முன்னர் இருந்த படைகளைக் காட்டிலும் இப்போது இரண்டு பங்கு படை அதிகரித்திருப்பது போல் தோன்றியது.

இவ்வளவு வீரர்கள் எங்கிருந்து வந்தார்கள்? செத்துப்போன பல்லவராயன் திடீரென்று எப்படி முளைத்தான்? —ஜெகத்விஜயத் தண்டநாயகனுக்கும் இலங்காபுரித் தண்டநாயகனுக்கும் வயிற்றில் பிடித்த நெருப்பு நெஞ்சில் பற்றிக் கண்ணில் எரிந்தது.

இருதரப்புப் படைகளும் எதிரெதிரே சந்தித்தன.

சங்குகள் ஊதின.

போர் முரசுகள் முழங்கின.

யுத்த பேரிகைகள் அதிர்ந்தன.

ஜெய கோஷங்கள் கேட்டன.

படைகள் நகர்ந்தன.

கடல்கள் கலந்தன.

கடல்கள் கை கலந்தன.

யானையும் யானையும் மோதி ஒன்றையொன்று உருட்டிவிட்டன. குதிரையும் குதிரையும் சீறிப் பாய்ந்தன. வாளும் வாளும் மோதின. வேலும் வேலும் சீறின– அம்பும் அம்பும் சந்தித்தன.

போர் போர்! போர்!

சோழ அன்னைக்கு வெற்றி!

சிங்கள மாதாவிற்கு ஜே!

வீரபாண்டியர் வெல்க!

தொண்டை கிழியச் சத்தமிட்டார்கள். உடல் கிழியப் போராடினார்கள்.

பல்லவராயர் கையிலிருந்த வாள் பகைவர்களுக்கு மத்தியில் சூரியன் போலச் சுடர்விட்டு மின்னியது. அவர் வாளை நீட்டிய பக்கமெல்லாம் தலைகள் விழுந்தன. உடல்கள் பிளந்தன; உயிர்கள் பறந்தன.

அவருடைய குதிரை திரும்பிய திசையெல்லாம் பகைவர் பட்டாளம் திணறியது; மிரண்டு பின் வாங்கியது; சேதப்பட்டுச் சின்னா பின்னமாகியது.

இதையெல்லாம் பார்த்து மேலும் மேலும் கோபம் கொண்ட இலங்காபுரித் தண்டநாயகனும், ஜெகத்விஜயத் தண்டநாயகனும் சோழர்களின் படை நடுவே ஊழித்தீயாய்ப் புகுந்து உடல்களைக் கூறு போட்டுக் குவித்துக் கொண்டிருந்தார்கள். வீரபாண்டியனும் இடையிடையே தலையை நீட்டினான்.

முடிவே இல்லாத யுத்தமாய் அது நடந்து கொண்டேயிருந்தது. இரவும் பகலும் மாறி மாறி வந்தன.

இடமும் பொழுதும் மாறி மாறி அமைந்தன.

அணிவகுப்பும் அணித் தலைவர்களும் மாறினார்கள்.

வியூக முறைகளும் விவேக வழிகளும் புதிது புதிதாய் மாற்றப்பட்டன.

போர் மட்டும் நடந்து கொண்டிருந்தது.

பல நாள் நடந்து கொண்டிருந்தது.

தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

வரலாறு தன் தீர்ப்பை வழங்கத் தொடங்கியது.

மாறன் மங்கலத்தில் நடந்த அந்த யுத்தம் மிகச் சிறந்த போர் நுணுக்கங்களை வெளிப்படுத்தியது.

தெற்கு வடக்காக நீண்டு கிடந்த பெரிய சாலையின் இடது ஓரத்தில் சிங்களப் படைகள் வடக்குப் பகுதியிலும், சோழர் படைகள் தெற்குப் பகுதியிலுமாக அணிவகுத்திருந்தன.

தண்டநாயகர்கள் தங்களுடைய அணிகளை ஒன்றன் பின் ஒன்றாக வரிசைப்படுத்தி நிறுத்தியிருந்தனர். படையின் அளவு தெரியாமலிருக்க இந்த ஏற்பாடு செய்திருந்தனர். பின்புறத்தில், வடமேற்கிலிருந்த பெரிய மலையொன்றில் ஆயிரம் கண்காணிப்பு வீரர்களை நிறுத்தியிருந்தனர். மேற்குத் திசையில் சோழர் படை முன்னேறினால் அதை அறிந்துரைப்பதற்காக அவர்கள் காத்திருந்தனர்.

சாலையின் வலதுபுறம் சிறு பகுதி காடும், பெரும் பகுதி நீர் நிலைகளுமாக அமைந்திருந்தது. ஒரே ஒரு சாலையாக இருந்ததனால், சோழர் படை— ஒன்று நேரடியாக வரவேண்டும், அல்லது அந்தச் சாலையில் வரவேண்டும் என்று தண்டநாயகர்கள் கருதினர்.

அவர்கள் நேருக்கு நேராகத் தாக்கினால் முன்வரிசைப் படைகள் இலங்காபுரித் தண்டநாயகன் தலைமையில் அவர்களுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் போதே, ஜெகத்விஜயத் தண்டநாயகன் பின் வரிசைப் படைகளோடு மேற்குத் திசையில் வடக்கு முகமாகச் சுற்றிப் போய்ச் சோழர் படையை வளைத்துக் கொள்வதென்றும், சுற்று முற்றுகை நடத்தி அவர்களைச் சூறையாடிவிடுவதென்றும் தண்டநாயகர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

ஒருகால், சோழர் படை புத்திகெட்டுப் போய்ச் சாலை வழியாகவே வருமானால் அவர்கள் வரவரச் சுலபமாக வழிமடக்கிக் கொன்று குவித்துவிடலாம் என்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். எப்படியிருந்தாலும் சிங்களப் படையை முன்னே நகர்த்தாமல், சோழர்களை முதலில் வரவிட்டு, அவர்களுடைய போர் முறையைப் புரிந்து கொண்ட பிறகுதான் தங்களுடைய படையை நகர்த்துவதென்று அவர்கள் தீர்மானித்திருந்தார்கள்.

அதே சமயத்தில் பல்லவராயர், படைகளை அணிவகுத்து நிறுத்தியிருந்த முறையைப் பற்றி அவருடைய சோழர்

படைத்தலைவர்களும் பாண்டிய நாட்டுப் படைத்தலைவர்களும் அதிருப்தி தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

பல்லவராயர் தன்னுடைய படைகளைச் சாலையில் இடது ஓரத்திலேயே அங்கங்கே சிதறல் சிதறல்களாக நிறுத்தியிருந்தார். மேற்கில் வரிசையாக இவ்வாறு அவர் நிறுத்தியிருந்த முறையானது, படைகளின் முழு பலத்தையும் எதிரிகளுக்குத் துல்லியமாகக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது.

இதனால் அதிருப்தியடைந்திருந்த அவர்களை மேலும் எரிச்சலடைய வைத்தது பல்லவராயர் செய்த இன்னொரு செயல்.

எங்கேயோ படைகளின் பின்னே ஒரு மூலையிலிருந்த இளந்தேவனை உடனே அழைத்து வருமாறு ஆணையிட்டார். அவன் வந்து சேர்ந்ததும் அவனிடம், “இளந்தேவா! எந்தச் சமயத்திலும் என்னை நீ தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும். இரண்டு வீரர்களை உன்னுடன் வைத்துக் கொள். தண்டநாயகர்கள் இருவரது தலைகளையும் நான் வெட்டி வீழ்த்துவேன். வெட்டுண்ட தலைகளைப் பத்திரப்படுத்திக் கொண்டு வந்து மதுரைக் கோட்டையின் வாயிலில் மாட்டி வைப்பது உன்னுடைய பொறுப்பு” என்றார் பல்லவராயர்.

“இது என்னுடைய பாக்கியம்!” என்று பெருமிதத்துடன் கூறினான் இளந்தேவன்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சாசனங்களிலெல்லாம் இடம்பெறப் போகிற இந்தப் பணியைப் பல்லவராயர் இளந்தேவனிடம் ஒப்படைத்தது பற்றி அனுபவம் மிகுந்த படைத்தலைவர்கள் பலரும் ஆத்திரமடைந்தனர்.

ஆனால் அவரை எதிர்த்துக் கேட்கும் துணிவு மட்டும் எவருக்கும் வரவில்லை.

இராசகம்பீர அஞ்சுகோட்டை நாடாள்வான், ஒரு பகுதிப் படையை நேருக்கு நேர் இலங்காபுரித் தண்டநாயகனோடு மோத விட்டுவிட்டு, இன்னொரு பகுதியை மேற்குத் திசையின் ஓரமாகவே வடக்கு முகமாகக் கொண்டு சென்று, பின் வரிசையிலிருக்கும் ஜெகத்விஜயத் தண்டநாயகனுடைய படைகளைத் தாக்க வேண்டும் என்று கூறினான். அதைப் பல்லவராயர் ஒப்புக் கொள்ளவில்லை. பல்லவராயர் என்ன செய்யப் போகிறார் என்பது எல்லோருக்கும் ஒரே குழப்பமாக இருந்தது

போர்ச் சங்கை ஊதி யுத்த பேரிகைகளை முழக்கினார்கள். பல்லவராயர் படைகள் முன்னேறத் தொடங்கின. தண்டநாயகர்களுடைய படைகளோ அசையாமல் அப்படியே நின்றன. பல்லவராயர் தம் படைகளைக் கையமர்த்தித் தடுத்தார். அப்போதும் சிங்களப் படைகள் அசையவில்லை.

பல்லவராயர் இடது கோடியிலிருந்த வேதவனமுடையானது படைகளை மட்டும் முன்னேறிச் சென்று எதிரிகளைத் தாக்குமாறு கட்டளையிட்டார். தன்னுடனிருந்த வலது கோடி முன்னணிப் படையை மெல்ல நகர்த்திப் போக்குக் காட்டினார். சிங்களப் படைகள் அசைந்தன.

இலங்காபுரித் தண்டநாயகனின் படையோடு வேதவனமுடையானுடைய படை போர் தொடங்கியது. சற்று நேரத்தில் சிங்களப் படை அணிவகுப்பின் கடைசியிலிருந்த ஜெகத்விஜயத் தண்டநாயகனுடைய படை மேற்கு முகமாக மெல்ல நகர்ந்து தெற்கில் முன்னேற ஆரம்பித்தது.

சுந்தரபாண்டியன், கண்டர் சூரியச் சம்புவராயன், இராசராசக் கற்குடி மாராயன், குலசேகர பாண்டியன் ஆகியோரது தலைமையிலிருந்த படைகளை ஒவ்வொன்றாகச் சாலையைத் தாண்டிக் கிழக்கிலிருக்கும் காடுகளின் ஊடே புகுந்து, சிங்களப் படைகளின் வாலைச் சந்திக்குமாறு பல்லவராயர் ஆணையிட்டார்.

சாலையில் நேரே போகக் கூடாதென்றும், சாலையைத் தாண்டிக் காடுகளை ஊடுருவிச் செல்வது எதிரிகளுக்குப் புலப்பட்டுவிடக் கூடாதென்றும் கட்டளையிட்டார்.

அவர்கள் சென்ற பிறகு, ஆடையூர் நாடாள்வானுடைய யானைப் படையில் ஒரு பகுதியை மட்டும்– இலங்காபுரித் தண்டநாயகனின் படைகளை நேருக்கு நேர் தாக்குமாறு அனுப்பி வைத்தார். யானைப் படையில் இன்னொரு பகுதியையும், குதிரை, காலாட்படை இவற்றில் ஒரு பகுதியையும் தன்னுடனேயே வைத்துக் கொண்டார்.

சோழர் படை வலதுபுறமாகக் கிழக்குத் திசையில் சென்று காடுகளின் வழியே ஊடுருவி சிங்களப்படையின் வாலைச் சந்தித்துக் கொண்டிருப்பதை அறியாத ஜெகத்விஜயத் தண்டநாயகன், தன்னுடைய படையை நேர் தெற்கே கொண்டு வந்து பல்லவராயரைச் சந்தித்தான்.

அவனுடைய படையில் பெரும் பகுதி குதிரைகளே இருந்தன.

அவற்றைப் பல்லவராயருடன் நின்ற யானைப் படைகள் சிதற அடித்துத் துவம்சம் செய்தன. முரட்டுத்தனமாகப் பல்லவராயர் மீது ஜெகத்விஜயத் தண்டநாயகன் சீறிப் பாய்ந்த போது, பல்லவராயர் இளந்தேவனைப் பார்த்து, "எடுத்துக்கொள்" என்று கூறிவிட்டுத் தன்னுடைய வாளை ஓங்கி வீசினார். தண்டநாயகன் ஜெகத்விஜயனுடைய தலை துண்டாகி விழுந்தது.

அதிர்ச்சியடைந்த அவனுடைய படைகள் சிதறி ஓடின. அப்படி ஓடியவர்களையெல்லாம் தடுத்துப் பிடித்துப் பல்லவராயருடைய படைகள் வெட்டி வீழ்த்தின. மலைமீதிருந்த சிங்களக் கண்காணிப்புப் படையினர் அடுத்து வந்து அடிபட்டு வீழ்ந்தனர்.

இலங்காபுரித் தண்டநாயகனின் படைகளோடு வேதவனமுடையான் படைகளும், ஆடையூர் நாடாள்வானுடைய யானைப் படைகளும் வீரப் போர் புரிந்து கொண்டிருந்த போது, சிங்களப் படையினரின் வாலைச் சோழர் படை வளைத்துக் கொண்டிருந்தது.

முன்புறத்திலும் பின்புறத்திலும் சோழர்கள் தாக்க இடையில் அகப்பட்டுக் கொண்டது இலங்காபுரித் தண்டநாயகனின் படை. வீரபாண்டியன், உதயசேனன் ஆகியோரது படைகளும் பல்லவராயரால் இரண்டு ஓரங்களிலும் வளைத்துக் கொள்ளப்பட்டு, சோழர் படையின் வட்டத்திற்குள் சிக்கிச் சுற்று முற்றுகைக்கு உள்ளானார்கள்.

எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட இந்த நெருக்கடியில் என்ன செய்வதென்று புரியாமல் சிங்களப் படை திண்டாடியது.

சுற்று முற்றுகையை ஊடுருவி வெளியே சென்று சோழர் படையைப் பிளந்துவிடுமாறு இலங்காபுரித் தண்டநாயகன் உதயசேனனுக்குக் கட்டளையிட்டான். ஆனால் பல்லவராயர் அவர்களுடைய முயற்சியை முறியடித்தார். அங்கங்கே முற்றுகை குலைந்துவிடாமல் வரிசை வட்டமாக யானைகளை நிறுத்தி அவர் அணைபோட்டார்.

வேறு வழியில்லாமல் உள்ளுக்குள் சிக்கிக் கொண்டபடியே போராடினான் இலங்காபுரித் தண்டநாயகன். வெகு நேரம் அந்தப் போராட்டம் நீடித்தது.

திடீரென்று தன்னுடைய படைகளைச் சுற்று முற்றுகைக்குள்ளே செலுத்திய பல்லவராயர், இலங்காபுரித் தண்டநாயகனை நேருக்கு

நேர் சந்தித்தார். குவியலாக வந்த பல்லவராயர் படைகளையும் சோழ வீரர்களது சுற்று முற்றுகையையும் தாக்குப்பிடிக்க முடியாமல் இலங்காபுரித் தண்டநாயகன் தளர்ந்தான். ஜென்மப்பகைவரான பல்லவராயரை நோக்கித் தன் குதிரையைச் செலுத்திய இலங்காபுரி தண்டநாயகன் அவரை எதிர்த்து ஆவேசமாகப் போராடினான். அவனுடைய வாள் அவரை நோக்கி நீண்டு நீண்டு வந்து கொண்டிருந்தது. இடதுபுறமாகத் தன் குதிரையை இழுத்துத் திரும்பிய பல்லவராயர், இளந்தேவனைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

அடுத்த கணத்தில் அவருடைய கத்தி இலங்காபுரித் தண்டநாயகனின் கழுத்தில் இறங்கியது. தமிழ் நிலத்தையே நடுநடுங்க வைத்தவனுடைய தலை துண்டாகித் துடித்தது. அறுபட்டுத் தனித்து விழுந்த உடல் கொஞ்ச நேரம் கடைசித் துள்ளல் துள்ளியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வீரபாண்டியன் மட்டும் எப்படியோ தப்பித்து நழுவியிருந்தான்.

தண்டநாயகர்களுடைய சரித்திரங்கள் முடிந்த பிறகு சிங்களப் படைகளுக்குச் சண்டையிடத் தைரியம் வரவில்லை. உயிரைப் பற்றிய கவலை அவர்களைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தது.

அதன் பிறகு பல்லவராயருடைய வெற்றிக்குப் பட்டயம் போட வெகு நேரமாகவில்லை.

குவிந்த உடல் மலைகளில்— குருதி நதியாகி, சோழர்களுக்கு வெற்றிக் குளியல் நடத்திக் கொண்டிருந்தது.

வீரபாண்டியன் மதுரையின் எல்லையைவிட்டே ஓடிக் கொண்டிருந்தான்.

மறுநாள் வைகறையில், மதுரைக் கோட்டையின் வாயிலில் வைக்கப்பட்டிருந்த தண்டநாயகர்களுடைய தலைகளைக் கண்டு மகிழ்வதற்காகவும், உண்டு மகிழ்வதற்காகவும் கழுகுகளும் காக்கைகளும் கூட்டம் போடத் தொடங்கின.

வேதவனமுடையான் ஒருபுறமும் இளந்தேவன் இன்னொரு புறமும் நிற்க, இருவருடைய தோள்களிலும் தம்முடைய தாள்தோய் தடக்கைகளைத் தவழவிட்டபடி, வெகு நேரமாக அந்தத் தலைகளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் பல்லவராயர்.

"தங்கள் தலைக்கே விலை பேசிய தலைகள்!" என்றான் இளந்தேவன்.

"ஆயிரமாயிரம் மனிதர்களின் தலைகளை அநாவசியமாகவும் அநியாயமாகவும் தரையில் உருட்டிய தலைகள்" என்று பெருமூச்சுவிட்டார் பல்லவராயர்.

"ஒரு புயல் ஓய்ந்தது!" என்றான் வேதவனமுடையான்.

"மற்றொரு புயல் ஆரம்பமாகிறது!" என்று கூறிவிட்டுச் சிந்தனை வயப்பட்டார் சேனைநாயகர்.

# 31. புதிய புயல்

மதுரையின் வீதிகளில் தோரணங்கள் தொங்கின. மலர்கள் குலுங்கின. வில் வளைவாய் அமைக்கப்பட்ட மலர்ப் பந்தல்கள் காட்சியளித்தன.

பல்லவராயரும் அவருடைய படைகளும் குலசேகர பாண்டியரும் வாகை சூடி வந்த போது, மதுரைத் தெருக்களில் வழி நெடுகக் கூடியிருந்த மக்கள் கூட்டம் வாழ்த்து முழக்கமிட்டு அவர்களுக்கு வரவேற்பு கொடுத்தது.

ஊர்வலத்தின் மத்தியில் பாண்டிய நாட்டுப் பட்டத்து யானையின் அம்பாரியின் மேல் பல்லவராயர் கம்பீரமாக பவனி வந்தார். அவருக்குப் பக்கத்தில் குலசேகர பாண்டியர் வீற்றிருந்தார். அதையடுத்து யானைகளும் குதிரைகளும் தேர்களும், வாள் வல்லார்களும், வேல் வீரர்களும் பின் தொடர்ந்த அலங்கார அணிவகுப்பு நடந்தது.

வழியெல்லாம் வரவேற்பு.

வாயெல்லாம் மங்கலப் பண்.

துந்துபி நாதம்.

தொடர்ந்த சங்கீதம்.

எக்காள முழக்கம்.

இன்பத்தின் புது விளக்கம்!

வென்று திரும்பிய வீர ஊர்வலம் பாண்டியர்களின் அரண்மனையைப் போய் அடைந்தது.

அரண்மனையில் கால் வைத்தவுடன், போர்க்களத்தில் வீர மரணமடைந்த வீரர்களுக்கும், படைத்தலைவர்களுக்கும் பல்லவராயர் அஞ்சலி செலுத்தினார்.

மாவீரம் காட்டிப் போர்க்களத்தில் மாண்டு போனவர்களுக்குப் 'பள்ளிப்படை' கட்டுமாறு ஆக்ஞை பிறப்பித்தார்.

ஆடல் அழகி மோகனசுந்தரியின் நினைவாக நாட்டிய மண்டபம் ஒன்று நிறுவுமாறு கட்டளையிட்டார்.

காலைப் பொழுதெல்லாம் உற்சாக உற்சவங்களிலேயே கழிந்தது.

அன்று மாலைதான் அந்தப் புயல் ஆரம்பித்தது. சேனைநாயகர் பல்லவராயர் தங்கியிருந்த மாளிகைக்கு அஞ்சுகோட்டை நாடாள்வானும், பாண்டியராசன், சுந்தரபாண்டியன் முதலிய பாண்டிய நாட்டுத் தலைவர்களும் வந்திருந்தார்கள்.

அஞ்சுகோட்டை நாடாள்வான் ஆரம்பித்தான்:

"கூடல் நகரமே உங்களைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது."

சுந்தரபாண்டியன் தொடர்ந்தான்:

"உங்கள் பெருமையைப் பற்றித்தான் மன்னர் ஓயாமல் பேசிக் கொண்டிருக்கிறார்."

பாண்டியராசன் கூறினான்:

"தங்களைத் தரிசிக்க வேண்டுமென்று மதுரை மக்கள் தவமிருக்கிறார்கள்."

பல்லவராயர் அவர்களுக்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் அருகிலிருந்த வேதவனமுடையானைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். அஞ்சுகோட்டை நாடாள்வான் சற்றுத் தயங்கிவிட்டு, "மக்கள் மத்தியில் இன்னொரு கேள்வி எழுந்திருக்கிறது" என்றான்.

"ஆமாம்! முடிசூட்டு விழா எப்போது நடைபெறும் என்று கேட்கிறார்கள்" என்றான் பாண்டியராசன்.

"இந்தக் கேள்வியை மக்கள் கேட்கிறார்களா? அல்லது குலசேகர பாண்டியர் கேட்கிறாரா?" என்று சிரித்தபடியே கேட்டார் பல்லவராயர்.

பாண்டியப் படைத்தலைவர்களுக்கு இதற்கென்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

"பாண்டிய நாட்டின் அரியணை தனக்கொரு அரசர் வேண்டும் என்று அவசரப்படலாம். ஆனால் சோழ நாட்டின் ராஜதந்திரிகள் என்ன சொல்கிறார்களென்று தெரியுமோ?" என்று நிறுத்தினார் பல்லவராயர். பாண்டிய நாட்டுத் தலைவர்கள் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதில் அவசரப்பட வேண்டாம் என்று அபிப்பிராயப்படுகிறார்கள்."

அவருடைய வார்த்தைகளைக் கேட்டு அஞ்சுகோட்டை நாடாள்வானும் மற்றவர்களும் அதிர்ச்சியடைந்தார்கள்.

அவர்களுடைய அதிர்ச்சியை அதிகரிக்கும் விதத்தில் பல்லவராயர் மீண்டும் பேசினார்:

"அதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. முடிசூட்டு விழாவை உடனே நடத்திவிட வேண்டுமென்றுதான் முடிவு செய்திருக்கிறேன். ஆனால் யாருக்கு முடிசூட்டுவது?"

வேதவனமுடையான் உட்பட எல்லாருமே இதைக் கேட்டு விழித்தார்கள்!

"இதிலென்ன சந்தேகம்? குலசேகர பாண்டியருக்குத்தான்!" என்று அவசரமாகப் பதில் சொன்னான் அஞ்சுகோட்டையான். அவனுடைய குரலில் ஆவேசம் இருந்தது.

"அதை நான் முடிவு செய்ய முடியாது. குலசேகர பாண்டியருக்கா? வீரபாண்டியருக்கா? மகுடம் யாருக்கு உரியது என்பதைப் பாண்டிய நாட்டு மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்!"

பல்லவராயருடைய வார்த்தைகளைக் கேட்டவுடன் பாண்டிய நாட்டுத் தலைவர்களின் முகம் பேயறைந்தது போல் ஆகிவிட்டது. எப்போதும் சேனைநாயகருடனேயே இருக்கிற சோழ ராஜதந்திரியும், பல்லவராயருக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படுகிற படைத்தலைவனுமாகிய வேதவனமுடையான் அம்மையப்பனே வியப்பிலும் திகைப்பிலுமிருந்து விடுபட முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தான்.

குலசேகர பாண்டியருடைய மனம் கோபத்திலும் குழப்பத்திலும் கொதித்தது. வேண்டுமென்றே புதிதாக ஒரு சிக்கலைப் பல்லவராயர் தொடங்கி வைத்திருப்பது ஏனென்று விளங்கவில்லை. விக்கிரமனை மட்டுமல்லாமல் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து குலோத்துங்கனையும் அழைத்து வருவதற்குப் பல்லவராயர் ஏற்பாடு செய்திருந்தார். எல்லாவற்றையும் சேர்த்து யோசித்த போது மனத்தில் பலவிதமான சந்தேகங்கள் படியத் தொடங்கின.

பாண்டிய மகுடத்தைக் குலோத்துங்கனுக்குச் சூட்ட வேண்டுமென்று பல்லவராயர் திட்டமிடுகிறாரோ? அல்லது சோழ சாம்ராஜ்யத்தின் எதிர்காலச் சக்கரவர்த்தியாகிய குலோத்துங்கனுடைய சம்மதத்தின் பேரில்— மதுரைக்குத் தானே மன்னராகிவிட விரும்புகிறாரோ?

போர் முடிந்தவுடன் புறப்பட வேண்டிய சோழர்களின் பெரும் படை இன்னும் மூட்டையைக் கட்டாமல் மதுரையிலேயே இருந்தது— முற்றுகையிட்டுக் கொண்டிருப்பது போல். முடிசூட்டு விழா இன்னும் நடைபெறாததால் ஆட்சிப் பொறுப்பும் அரசியல் நிர்வாகமும் தற்காலிகமாகப் பல்லவராயரிடமே இருந்தன. எரிச்சல் எரிச்சலாக வந்தாலும் குலசேகரரால் எதுவுமே செய்ய இயலவில்லை.

அடுத்த நாள் அவருக்கு அழைப்பு வந்தது. பாண்டிய நாட்டுப் படைத்தலைவர்கள் புடைசூழச் சென்று பல்லவராயரைச் சந்தித்தார். எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டு எல்லோருமே உம்மென்று உட்கார்ந்திருந்ததைப் பார்த்துவிட்டுப் பல்லவராயர் குலசேகரரிடம் கேட்டார்:

"ஏன் இப்படிப் பதறுகிறீர்கள்? உங்களுடைய மக்கள் உங்களை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கே இல்லையா?"

"நேற்று நகருக்குள் பிரவேசித்த போது மக்கள் கொடுத்த வரவேற்பிலிருந்தே— அவர்களுடைய ஆதரவு எனக்குத்தான் என்பதை அறிந்து கொள்ளலாம். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.."

"வேறு எதைப்பற்றிக் கவலைப்படுகிறீர்கள்?"

"வீரபாண்டியனா— நானா? மதுரையின் மன்னர் யார் என்பது பற்றி மக்கள் கருத்து அறிவதாக இருந்தால், கங்கைகொண்ட சோழபுரம் வந்து உங்களிடம் நான் உதவி கேட்டதில் அர்த்தமே இல்லை. என் மக்களிடத்திலேயே நான் உதவி கேட்டிருக்கலாம்!"

குலசேகர பாண்டியருடைய குரலில் சீற்றம் சேர்ந்து கொண்டிருப்பதைக் கவனித்த சேனைநாயகர், "கேட்டிருக்கலாமே!" என்றார் கிண்டலாக.

"மக்கள் அப்போது வலிமையற்றிருந்தார்கள். சிங்களரின் இரும்புக் கைகளில் சிக்கியிருந்தார்கள்" என்ற குலசேகரர், சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

"கேட்டிருந்தால்— சிங்களரின் உதவிகூட எனக்குக் கிடைத்திருக்கும்!" என்று அவர் மேலும் கூறியவுடன் பல்லவராயருக்குக் கோபம் வந்துவிட்டது. சேனைநாயகர் சீறினார்:

"அவர்கள் நம்முடைய பொது எதிரிகள்!"

"நாமே இப்போது நமக்குள் எதிரிகளாகிவிட்டோமே!"

"இன்னும் நான் அப்படி எண்ணத் தொடங்கவில்லை" என்று பல்லவராயர் சிரித்தார்.

கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து வெற்றிக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காகக் குலோத்துங்கனும் தியாகவல்லியும் விக்கிரமனோடு வந்து சேர்ந்திருந்தார்கள். மதுரைக்கு வந்தவுடன் விக்கிரமன் அடியோடு மாறிப் போய்விட்டதையும், தியாகவல்லியிடம் கூட அவன் முகம் கொடுத்துப் பேசவில்லை என்பதையும் கவனித்த குலோத்துங்கன், வேடிக்கையாகவே கேட்டான்:

"விக்கிரமா! உங்களுடைய தலைநகருக்கு வந்திருக்கிறோம். உற்சாகமாக எங்களை உபசரிக்க வேண்டாமா?"

"இந்தத் தலைநகர் எங்களுடையதுதானா என்று இன்னும் தீர்மானமாகவில்லையே! உங்களைப் போலவே நானும் என் தந்தையும் இங்கு இப்போது அந்நியர்கள்தான். நாளை அரசவை கூடிய பிறகுதான் தெரியும்– நான் உங்களை உபசரிப்பதா அல்லது நீங்கள் என்னை உபசரிப்பதா என்பது" என்று வெடுக்கென்று கூறிவிட்டு விக்கிரமன் வெளியேறிவிட்டான்.

அவனைத் தொடர்ந்து ஓடிய தியாகவல்லி, தனக்காகக் கூட அவன் தயங்கி நிற்காமல் விரைந்து சென்றுவிட்டதைப் பார்த்து மனமுடைந்து போனாள். காதல் மலர்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த அவளுடைய இதயச் சோலையைப் பல்லவராயர் கிளப்பிவிட்டிருந்த புயல் அப்படியே பறித்தெறிந்துவிட்டது போலிருந்தது.

காதலை அவள் தேடிச் செல்லவில்லை. அதுதான் அவளைத் தேடி வந்தது. நாடுவிட்டு நாடு தேடி வந்தது. கதைகள் பேசியது. கவிதை எழுதியது. ஆனந்தமயமான அத்தியாயங்களை வாழ்க்கையில் ஆரம்பித்து வைத்தது.

உல்லாசமான தென்றலின் ரதத்தில் உட்கார வைத்து சொர்க்க வானத்தின் சுக வீதிகளில் தூக்கிச் சென்றது. உயர உயரத் தூக்கிச் சென்று– சட்டென்று கீழே உதறிவிட்டதே!

அவள் யாரிடமும் பேசவில்லை. மௌனமாக உட்கார்ந்து சத்தமாக அழத் தொடங்கினாள்.

தங்கை படுகிற அன்பின் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல், தாத்தாவிடம் அதைப்பற்றிப் பேச வேண்டுமென்று குலோத்துங்கன் அவருடைய மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான். அப்போது சோழ ராஜதந்திரிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டிருந்த பல்லவராயர், உள்ளிருந்தவாறே சொல்லியனுப்பிவிட்டார்.

"முக்கியமான ஆலோசனைகள் செய்து முடிவெடுக்க வேண்டியிருக்கிறதாம். இளவரசரையும் தியாகவல்லியையும் நாளை மாலை, தானே வந்து சந்திப்பதாகச் சேனைநாயகர் தகவல் கூறினார்" என்று வேதவனமுடையான் வந்து வெகு விநயமாக விவரித்தான்.

குழப்பங்களும் கேள்விகளும் சந்தேகங்களுமாய் நிம்மதியைக் குலைத்து உறக்கத்தைக் கெடுத்த நெடிய இரவு முடிந்தது. புலர்காலைப் பொழுது ஒரு புன்முறுவலோடு விடிந்தது.

பாண்டிய தேசத்தின் அரச சபை கூடியிருந்தது. என்ன நடக்கப் போகிறதோ என்ற எதிர்பார்ப்புகளோடு பொதுமக்கள் ஏராளமாகத் திரண்டு வந்திருந்தனர். இடம் போதாததால் மண்டபத்தின் வெளிப்புறத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர்.

சித்திர வேலைப்பாடுகளும் வண்ணத்திரைத் துகில்களும் முத்துத் தொங்கல்களும் அலங்கரித்துக் கொண்டிருந்த அழகு மயமான அந்த அரச சபையின் பொற்சிங்காதனம் காலியாக இருந்தது.

சிங்காதன மேடையில் குலசேகர பாண்டியரும் பல்லவராயரும் வீற்றிருந்தனர். அவர்களுக்கு அருகில் பல்வராயருக்கு அடுத்தாற் போல் காலியான ஓர் இருக்கை யாருக்காகவோ காத்திருந்தது. மேடையின் கீழே முன் வரிசையில்— தியாகவல்லி, குலோத்துங்கன், விக்கிரமன் முதலியோரும் தமிழ்ப் புலவர்களும், அதை அடுத்து சோழ—பாண்டியப் பிரமுகர்களும் முக்கிய அதிகாரிகளும், படைத்தலைவர்களுமாக அமர்ந்திருந்தனர். அடுத்துக் காணப்பட்ட ஆசனங்களில் பொதுமக்கள் குழுமியிருந்தனர்.

பாண்டிய மன்னரின் பரம்பரை மகுடத்தையும் உடை வாளையும் திறந்த பொற்பேழையில் ஏந்திக் கொண்டு பல்லவராயரின் அருகில், முதிர்ந்த பெரியவர் ஒருவர் நின்றிருந்தார்.

பல்லவராயர் எழுந்தார்.

"எத்தனையோ அன்பான எதிர்ப்புகளுக் கிடையில் இந்த அரசவையைக் கூட்டியுள்ளேன். எதற்காக என்பதை எல்லோரும் அறிவீர்கள். இதோ– எனக்கு இடதுபுறமாகப் போடப்பட்டிருக்கும் ஆசனம் வீரபாண்டியருக்காகக் காத்திருக்கிறது. வருகை புரிந்திருந்தால் அவர் இங்கு வந்து அமரலாம். துரும்புகூட அவர் மீது படாதபடி சோழ நாட்டுப் படை வீரர்கள் அவருக்குப் பாதுகாப்புக் கொடுப்பார்கள்!" என்று கூறிவிட்டு உட்கார்ந்தார்.

அரசவையில் பரபரப்பு ஆரம்பமாகிவிட்டது. ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்துக் கொண்டார்கள். உற்றுப் பார்த்துக் கொண்டார்கள். நெடுநேரம் வரை காத்திருந்த பல்லவராயர், "வரவில்லை போலிருக்கிறது மதுரையின் பழைய மன்னர். பரவாயில்லை!" என்று கூறிவிட்டு மீண்டும் எழுந்து நின்று பேசினார்:

"பாண்டிய நாட்டுப் பெரியோர்களே! அரசியல் அதிகாரிகளே! வெற்றிப் பயிரை விளைவித்துக் கொடுத்த வீர மாமணிகளே! குலசேகர பாண்டியர் சோழ நாட்டிற்கு வந்து சிங்களரைத் துரத்திவிட்டுப் பாண்டிய நாட்டைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு எங்களிடம் கேட்டுக் கொண்டார். சிங்களரிடமிருந்து தமிழ் நிலத்தைக் காப்பாற்ற வேண்டியது எங்கள் கடமை! இணையற்ற நம்முடைய சோழ– பாண்டிய வீர மறவர்களின் தோள் வலியாலும் வாள் வலியாலும் நாங்கள் அதை நிறைவேற்றிவிட்டோம். இப்போது பாண்டிய மன்னரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை உங்களிடமே விட்டுவிடுகிறேன். குலசேகர பாண்டியர் எங்களுக்கு வேண்டியவராக இருந்தாலும், அவர் எங்களை வேண்டிக் கொண்டிருந்தாலும், பாண்டிய தேசத்தின் ஆட்சி யாருக்கென்று தீர்மானிக்கும் அதிகாரம் மட்டும் எங்களுக்கு இல்லை. அதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்! உங்களுக்கு வேண்டியவர் வீரபாண்டியரா, குலசேகர பாண்டியரா என்பதை நீங்கள் கூறினால்தான் இந்த அரச சபையின் அடுத்த நடவடிக்கையினை நான் தொடர முடியும். எந்தவிதமான தயக்கமும் இல்லாமல், உங்கள் விருப்பத்தை வெளியிடலாம். இந்த மகுடம் யாருக்கு உரியது? குலசேகரருக்கா– வீரபாண்டியருக்கா?"

அரசவை மண்டபத்தின் வாயிற்புறத்திலிருந்து அவசரமான ஒரு குரல் எழுந்தது:

"வீரபாண்டியருக்கே உரியது!"

மண்டபம் முழுக்கக் குரல் வந்த திசையில் தன் விழிகளைத் திருப்பியது.

# 32. காலம் நடக்கிறது.. கடமை அழைக்கிறது..

வீரபாண்டியருக்கே மகுடம் உரியது என்ற குரல் எழுந்தவுடன் குலசேகர பாண்டியருடைய முகம் வாடத் தொடங்கியதையும், விக்கிரமனின் விழிகள் சிவந்ததையும், தியாகவல்லி சோர்ந்து தளர்ந்துவிட்டதையும், கூடியிருந்த பொதுமக்களில் பலர் முணுமுணுக்க ஆரம்பித்ததையும் குலோத்துங்கன் கவனித்துக் கொண்டிருந்தான்.

"ஆமாம்! வீரபாண்டியருக்கே உரியது!" என்று முதலில் கேட்ட குரலைத் தொடர்ந்து இன்னும் இரண்டு பேர் சத்தமிடவே, விக்கிரமன் ஆவேசம் பொங்கத் தன் இருக்கையைவிட்டு எழத் தொடங்கினான்.

அவனைத் தன் கடுமையான பார்வையினாலேயே அடக்கி மீண்டும் இருக்கையில் அமரச் செய்த பல்லவராயர், "ஏன்?" என்ற சிம்ம கர்ஜனையோடு குரல் வந்த திசையில் திரும்பினார்.

"பராக்கிரம பாண்டியருடைய மகுடம்— அவருடைய குமாரர் வீரபாண்டியருக்குச் சேர வேண்டுமே தவிர, குலசேகர பாண்டியருக்கு அதை எப்படிக் கொடுக்க முடியும்?" என்றான் முதலில் குரல் கொடுத்தவன்.

"உரிமை யாருடையது என்பது என் கேள்வியல்ல. இப்போது இதற்கு உரியவர் யார் என்றுதான் கேட்கிறேன்?" என்றார் பல்லவராயர்.

"வீரபாண்டியர்தான்!" என்று நான்கைந்து பேர் மீண்டும் சத்தமிட்டார்கள்.

"அதை நீங்கள் மட்டும் கூறினால் போதாது. ஆயிரக்கணக்கில் திரண்டிருக்கிற இந்தப் பொதுமக்களும் கூற வேண்டும்!" என்று முழங்கிய பல்லவராயர், சபையின் பக்கம் திரும்பி, "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"குலசேகர பாண்டியரே!" என்று கூட்டம் முழுக்கக் குரல் எழுப்பியது.

வீரபாண்டியருக்காகக் குரல் கொடுத்தவர்களின் பக்கம் விழிகளைத் திருப்பினார் பல்லவராயர்.

"குலசேகரரை நீங்கள் ஆதரிக்கிறீர்கள். அதனால்தான் கூட்டமும் அவருக்காக கோஷம் போடுகிறது!" என்றான் அவர்களில் ஒருவன்.

"குலசேகரரை நாங்கள் ஆதரிப்பதாக இருந்தால்— போர் முடிவுபெற்ற அடுத்த நாளே அவருக்கு முடிசூட்டியிருப்போம். இப்படி மக்கள் கருத்தைக் கேட்டுக் கொண்டிருக்கமாட்டோம். அன்பு வேறு; ஆதரவு வேறு. தனிப்பட்ட முறையில் குலசேகரர் மீது எங்களுக்கு அன்பு உண்டு. ஆனால் ராஜரீக அரசியல் ஆதரவு என்பதைத் தேசத்தின் சூழ்நிலைகளை வைத்துத்தான் தீர்மானிக்க முடியும்" என்றார் பல்லவராயர்.

வீரபாண்டியரை ஆதரித்துப் பேசியவர்கள் அங்கிருந்து வெளியேறத் தொடங்கினார்கள்.

பொதுமக்களைப் பார்த்துப் பல்லவராயர் மீண்டும் பேசினார்:

"மன்றத்தைக் கூட்டி நான் மக்கள் கருத்தினைக் கேட்பதற்குக் கட்டாயமாக ஒரு காரணம் உண்டு. இந்த வெற்றிக்கு எவ்வளவு விலை கொடுத்திருக்கிறோம் என்பதை எண்ணிப்பாருங்கள். தன்னுடைய படையில் பாதியைச் சோழ நாடு இந்த யுத்தத்தில் பலி கொடுத்திருக்கிறது. நிராதரவாக எத்தனையோ குடும்பங்கள் கங்கைகொண்ட சோழபுரத்தின் வீதிகளில் கண்ணீரோடு நிற்கின்றன. என் தேசத்தின் எளிய குடிமக்களெல்லாம், யுத்த அச்சத்தில் தங்கள் அமைதியான வாழ்க்கையைவிட்டு அண்டை அயல் தேசங்களுக்கு அநாதைகளைப் போல ஓடியிருக்கிறார்கள்" என்று ஆவேசமாகக் கூறிய பல்லவராயர், சட்டென்று உணர்ச்சிவயப்பட்டவராகத் தொண்டை அடைத்துப் போய் வார்த்தை வராமல் நின்றார்.

மக்கள் கூட்டம் 'ஆ!' என்று ஒலி எழுப்பியது. முகங்களைத் தொங்கப் போட்டுக் கொண்டது.

"மோகனசுந்தரி என்ற வீராங்கனை என்னைக் காப்பாற்றுவதற்காகத் தன்னுடைய உயிரையே தந்தாள்.." என்று பல்லவராயர் தொடர்ந்து கூறிய போது அவருடைய கண்களே கலங்கியிருந்தன.

கூட்டத்திலிருந்தவர்கள் விழிகளைத் துடைத்துக் கொண்டார்கள்.

“ஒரு தேசத்தின் சரித்திரம் ஆயிரக்கணக்கான வீரபுருஷர்களின் தியாகத்தாலும், ஆயிரமாயிரம் அபலைகளின் கண்ணீராலும்தான் உருவாக்கப்படுகிறது. ஆனால் அதில் அந்தப் பேதைகளின் பெயர் கூட இடம் பெறுவதில்லை!” —பல்லவராயருடைய வார்த்தைகளைக் கேட்டுவிட்டுக் கூட்டத்திலிருந்தவர்களுக்கு ஆவேசம் வந்துவிட்டது.

“ஆமாம்! ஆமாம்!” என்று ஆமோதித்தார்கள். “உண்மை, உண்மை!” என்று உரத்த குரலில் சத்தம் போட்டார்கள்.

பல்லவராயர் தொடர்ந்தார்:

“இன்னொரு நாட்டுக்காக இத்தனை தியாகங்களையும் நாங்கள் எதற்காகச் செய்தோம்? எங்களை நாங்களே நெருப்பில் எதற்காக நீராட்டிக் கொண்டோம்? தமிழ் வழங்கும் இந்தப் பெருநிலத்தில் அந்நியரின் ஆதிக்கம் தலையெடுத்துவிடக் கூடாது என்பதற்காகத்தான். அதற்கு இங்கு இப்போது தேவைப்படுவது என்ன? நிலையான ஆட்சி! ஒவ்வொரு குடிமகனும் ஒரு சேனை வீரனாக நிமிர்ந்து நின்று தேசத்தைக் காக்கிற சிறப்பான ஆட்சி. மக்கள் ஆதரவு என்ற மகத்தான பலம் பெற்ற ஆட்சி. எங்களுடைய மேலாதிக்கத்தில் நீங்கள் இருக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பமல்ல. யாருடைய மேலாதிக்கத்திற்கும் பாண்டிய நாடு ஆட்படக் கூடாது என்பதே எங்கள் ஆசை.

“குலசேகர பாண்டியரா, வீரபாண்டியரா என்பது எங்களுக்கு முக்கியமல்ல. பெருத்த மக்கள் ஆதரவு என்ற பின்பலத்தோடு —அரசு நிலையானதாக அமைய வேண்டும் என்பதுதான் முக்கியம். அப்போதுதான் இந்தத் தமிழ் மண்ணின் சரித்திரத்தில் களங்கம் என்ற கறைபடியாமல் காப்பாற்ற முடியும்!

“இனிமேலாவது சிங்களருக்கு இடம் கொடாதவர்கள் இந்தச் சிம்மாசனத்தில் அமரட்டும். மக்களுடைய மனத்தில் அமர்ந்திருப்பவர்கள் யாரோ அவர்கள் இந்த மகுடத்தைச் சூடட்டும்!”

“இப்போது சொல்லுங்கள்— உங்கள் மன்னர் யார்? குலசேகரரா? வீரபாண்டியரா?”

அலை அலையாகக் கிளம்பிய பல்லவராயருடைய வாத விவாதங்களில் ஆழ்ந்து மூழ்கிப் போயிருந்த கூட்டத்தின் பிரமை இன்னும் கலையாததால் அரசவையில் அமைதியே நிலவியது.

"யார் உங்கள் மன்னர்?" என்று பல்லவராயர் மீண்டும் பலத்த குரலில் கேட்டார். கூட்டமே திடீரென்று விழித்துக் கொண்டது போல் குரல் கொடுத்தது.

"குலசேகரரே எங்கள் மன்னர்."

மங்கல வாத்தியங்கள் முழங்க, நாத கீதங்கள் ஒலிக்க, அரச சபையில் கூடியிருந்தவர்களெல்லாம் மலர்களை அள்ளித் தூவ, பாண்டிய நாட்டின் மகுடததைக் குலசேகர பாண்டியரது தலையில் சூட்டி அவரைப் பொற்சிங்காதனத்தில் அமர்த்தினார் பல்லவராயர்.

வாழ்த்தொலிகள் அரசவை மண்டபத்தையே அதிர வைத்தன.

அதன் பிறகு தமிழ்ப் புலவர்கள் கவிதைகள் புனைந்து மன்றத்தை மயங்க வைத்தார்கள். பல்லவராயரது வீரத்தையும், மன்னர் குலசேகரரின் மாட்சியையும், அற்புதமான தமிழ்ச் சொற்களால் அழகுபடுத்திப் பாராட்டினார்கள்.

சேனைநாயகர், தண்டநாயகர்களை வென்ற சிறப்பினை செங்கோட்டை சுப்ரமணியக் கவிராயர் நயம்படப் பாடினார்:

"தண்டநாயகர் தலை
துண்டு துண்டாக்கிடத்
தாவிய தலைவர் வாழ்க!
பண்டைத் தமிழகம்
பழிபடா மற்காத்த
பாண்டிய தீபம் வாழ்க!
சண்டைக் களத்தினில்
சரித்திரம் சமைத்திட்ட
தலைமையின் வீரம் வாழ்க!
சுண்டு விரலினால்
பகைவரைத் துரத்திடும்
சோழரின் தெய்வம் வாழ்க!"

மலர் மழையிலும் தமிழ் மழையிலும் நனைந்து மகிழ்ந்தபடி மண்டபத்திலிருந்து வெளியேறித் தன்னுடைய மாளிகையைச் சென்றடைந்ததும், குலசேகர பாண்டியர் பல்லவராயருடைய நெடிய கைகளிரண்டையும் பற்றித் தன்னுடைய கண்களில் ஒற்றிக் கொண்டார்.

“பாண்டிய நாட்டில் விளக்கேற்றி வைத்த சோழ தீபத்துக்கு நான் எவ்வாறு நன்றி சொல்வதென்றே தெரியவில்லை!”

பல்லவராயர் பதிலெதுவும் சொல்லாமல் புன்னகையைப் படரவிட்டார்.

“தங்களைத் தவறாகப் புரிந்து கொண்டதற்காக என்னை மன்னிக்க வேண்டும்!” என்று குலசேகரர் மீண்டும் கூறவே, “நீங்கள் மட்டுமா? ‘தாத்தா’ என்று ஆசையோடு ஓடிவருகிற விக்கிரமன் கூட என் மீது விரோதம் பாராட்டத் தொடங்கிவிட்டானே!” என்று பதிலுரைத்த பல்லவராயர், சற்று நேரம் மேல்விதானத்தில் செய்யப்பட்டிருந்த சித்திர வேலைப்பாடுகளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“அந்நிய தேசத்தாரிடம் அடைக்கலம் தேடாத அரசனே தேவை என்பதைப் பொதுமக்களே தீர்மானிக்க வேண்டும். சிங்களர்களின் உதவியை நாடாத வேந்தனே சிம்மாசனம் ஏற வேண்டும் என்பதைப் பாண்டிய நாட்டின் பிரஜைகள் உணர வேண்டும். அவர்களுடைய வாயிலிருந்தே அத்தகைய கருத்தினை வரவழைக்க வேண்டும். அதனால்தான் இப்படி.. எல்லோரும் குழப்பமடையும்படி.. என்னைப் புரிந்து கொள்ள முடியாமல் திகைக்கும்படி.. இந்தக் காரியத்தை நடத்தினேன்” என்று கூறிவிட்டுச் சிரித்த பல்லவராயர், “எல்லாம் நல்லபடியாக முடிந்தது!” என்றார். “விக்கிரமனும் தியாகவல்லியும் இனிமேல் என்னுடன் சமாதானமாகிவிடுவார்கள்” என்று புன்னகைத்தார். குலசேகர பாண்டியரும் கலகலவென்று நகைத்தார்.

“அரசே! பாண்டிய நாட்டின் மகுடம் இப்பொழுதுதான் யாராலும் அசைக்க முடியாதபடி வலிமை பெற்றிருக்கிறது. அரசவை மன்றத்தில் பொதுமக்கள் எழுப்பிய குரல்— வெறும் ஆரவாரமல்ல! இலட்சிய உறுதியோடு இந்த ஆட்சிக்குத் துணை நிற்பதாக அவர்கள் எடுத்துக் கொண்ட விசுவாசப் பிரமாணம்!” என்று உணர்ச்சியுடன் கூறிய பல்லவராயர், “மக்களின் நம்பிக்கைகளைக் காப்பாற்றுகிற மன்னனாக எப்போதும் நீங்கள் திகழ வேண்டும்” என்று குலசேகர பாண்டியரை வாழ்த்தினார்.

தியாகவல்லியோடும் விக்கிரமனோடும் அரண்மனைக்குத் திரும்பியவுடன், குலோத்துங்கன் கிண்டலாக விக்கிரமனைக் கேட்டான்:

“அரசவைக் கூட்டம் முடிந்த பிறகுதான் —யாரை யார் உபசரிப்பதென்று தெரியும் என்று கூறினாயே! இப்போது என்ன சொல்கிறாய்?”

கலகலவென்று சிரித்த விக்கிரமன், “நான்தான் உபசரிக்க வேண்டும். உபசரிக்கத்தான் போகிறேன். ஆனால் முதல் உபசரிப்பு உனக்கல்ல” என்று இதழ்களில் குறும்பு தவழக் கூறிவிட்டுத் தியாகவல்லியைத் திரும்பிப் பார்த்தான்.

அவள் அதையொன்றும் காதிலேயே போட்டுக் கொள்ளாதவள் போல் வேறெங்கோ கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவனுக்குத் தெரியும்—

காதலின் சொற்கள் பத்திரப்படுத்தப்படுவது காதுகளில் அல்ல—நெஞ்சில்!

பொதிகைத் தென்றல் மதுரைக்கு வந்தது. வையை என்னும் பொய்யாக் குலக்கொடியை வாழ்த்தி நடந்தது. சின்னச் சின்ன மரக்கிளைகளில் சென்று தலை சீவிக் கொண்டது. சோலைகளிளெல்லாம் புகுந்து புதிய புதிய பூக்களைச் சூடிக் கொண்டது. அரண்மனை நந்தவனத்துக்குள் நளினமான நறுமணப் பெண்ணாக நடந்து புகுந்தது.

இரண்டு இளஞ்சிட்டுகள் அங்கே இன்பக் காவியங்களை இசைத்துக் கொண்டிருப்பதைக் கேட்டுவிட்டு, அந்த மாலைப் பொழுதிலும் வேர்த்திருந்த அவர்களுடைய மன்மத மேனிகளுக்கு விசிறியாக மாறி வீசத் தொடங்கியது.

“பாண்டிய இளவரசர் ஏதோ உபசரிக்கப் போவதாகக் கூறினாரே!” என்றாள் தியாகவல்லி.

“உண்மைதான்! என்னுடைய உபசரிப்பு ஆரம்பமாகிவிட்டது” என்று கூறியபடி, அவளுடைய செழித்த மேனியைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தன் கைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான் விக்கிரமன்.

“அதிகமாகத்தான் நீங்கள் ஆக்கிரமிக்கப் பார்க்கிறீர்கள்” என்று சிணுங்கினாள் தியாகவல்லி.

“உரத்துப் பேசாதே! சோழர் பட்டாளம் ஓடி வந்துவிடப் போகிறது” என்றான் விக்கிரமன்.

"எதற்கு?"

"சிறைப்படுத்துவதற்கு?"

"யாரை?"

"என்னை!"

"ஏன்?"

"பாண்டிய குலம் சோழ குலத்தை ஆக்கிரமித்தால்— படை வீரர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்களா?"

அவன் கூறியதைக் கேட்டு வெட்கத்துடன் சிரித்த தியாகவல்லி, "ஆச்சரியமாகத்தான் இருக்கிறது!" என்றாள்.

"எது?"

"மீனை அடக்கி வைக்காமல்— மீனுக்குள் அடக்கமாகிவிடப் புலி ஆசைப்படுவது!"

அவளுடைய வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட விக்கிரமன், "ஆகா! அனுமதி கிடைத்துவிட்டது!" என்று ஆரவாரம் செய்தான்.

தென்றல் எவ்வளவோ முயன்று பார்த்தது. முடியவில்லை. இருவருக்கும் ஊடே புக முடியவில்லை. துவண்டு பின்வாங்கியது தன் தோல்வியை ஒப்புக் கொண்டு.

சோழ நாட்டிலிருந்து தூதுவன் வந்திருந்தான். உடனே புறப்பட்டு வருமாறு மாமன்னர் இராசாதிராசர் பல்லவராயருக்கு ஓலை அனுப்பியிருந்தார்.

"பாண்டிய நாட்டைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு ஒரு சில நாட்கள் ஓய்வு எடுக்கலாம் என்று நினைத்திருந்தேன். அரச கடமை என்னை அழைக்கிறது" என்றார் பல்லவராயர்.

சில நாட்கள் கழித்துக் குலோத்துங்கனையும் தியாகவல்லியையும் பாதுகாப்புடன் பத்திரமாக அனுப்பி வைக்குமாறு குலசேகர பாண்டியரிடம் கூறிவிட்டு, வேதவனமுடையானுடன் பல்லவராயர் புறப்பட்டுவிட்டார்.

வைகறைப் பொழுதில்— அவரை வழியனுப்பி வைப்பதற்காக மன்னர் குலசேகர பாண்டியரும் மற்றவர்களும் கோட்டை வாயிலில் வந்து கூடியிருந்தார்கள்.

துருதுருவென்ற விழிகளால் கூட்டத்தைத் துளைத்த பல்லவராயர், "இளந்தேவன் எங்கே?" என்றார். ஓர் ஓரத்தில் ஒதுங்கி நின்றிருந்த இளந்தேவன் அவருக்கு அருகில் வந்தான். "புறப்படலாமா?" என்று கேட்டார் பல்லவராயர்.

"அய்யா! என்னை மன்னித்துவிடுங்கள். காலமெல்லாம் உங்களுடன் பணியாற்றத்தான் விரும்புகிறேன். ஆனால் என் மனம் மதுரையைவிட்டு நகர மறுக்கிறது" என்று பணிவுடன் பதிலுரைத்தான்.

"மோகனசுந்தரியின் நினைவாகக் கட்டப்படுகிற நாட்டிய மண்டபத்தின் வாசலிலேயே உட்கார்ந்து என் வாழ்நாட்களைக் கழித்துவிடுகிறேன்" என்று தொடர்ந்து கூறினான் இளந்தேவன்.

அவனுடைய கண்கள் கலங்கியிருந்தன.

"கடமைகளை முடித்துக் காரியங்களைச் சாதிப்பதற்கே காலம் போதாதிருக்கும் போது, நினைத்து நினைத்து உருகவும் நெஞ்சம் கலங்கிக் கண்ணீர் வடிக்கவும் நேரம் ஏது? என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு" என்றார் பல்லவராயர்.

"அது அரசகுலத்தில் பிறந்தவர்களுக்கு அய்யா! என்னைப் போன்ற சாதாரணமானவர்களின் பெயர்கள் சரித்திரத்தில் இடம் பெறுவதில்லையென்றும் நீங்கள்தான் கூறினீர்கள்."

"உலகத்தால் சாதாரணமானவர்கள் என்று கருதப்படுகிற உன்னைப் போன்றவர்களின் பெயர்களெல்லாம் சரித்திரத்தில் இடம் பெறாமல் போகலாம். ஆனால், என்னைப் போன்றவர்களின் இதயத்தில் நிச்சயமாக இடம் பெறும்" என்று கூறிவிட்டுப் பல்லவராயர் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

"அன்பான உன் மனத்துக்கு அமைதி கிடைக்குமென்றால் இங்கேயே இரு. எப்போதாவது, இந்தக் கிழவனின் ஞாபகம் வந்தால் என்னிடம் வா" என்று அவனைத் தட்டிக் கொடுத்தபடியே குதிரையில் தாவி ஏறிக் கொண்டார் பல்லவராயர்.

புரவி புறப்பட்டது.

அவருடைய பயணம் ஆரம்பமாகியது.

காலம் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

இலட்சியங்களோடு புறப்படுகிற எந்த மனிதனையும், கடமைகள் தொடர்ந்து அழைத்துக் கொண்டுதான் இருக்கின்றன!


(முற்றும்)



## மு.மேத்தா

இவரது நூல்கள்
இதுவரை
32-க்கு மேல்
வெளிவந்துள்ளன.

'ஆனந்தவிகடன்'
பொன்விழா சரித்திர
நாவல் போட்டியில்
'சோழ நிலா'
முதற்பரிசு பெற்றது
கவிஞரின் புகழ்
கோபுரத்திற்கு
கிடைத்த
வைரக்கிரீடமாகும்.




CHOZHA NILA
INR 100.00
TAM 5809
08MADRAS07E